விலை 10.00

Registered as a Newspaper at G.P.O.

பக்கங்கள்: 32

THAMILTHANTHI
# தமிழ்த்தந்தி
தමිල්ත්තන්ති

உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..

www.facebook.com/thamilthanthi

Follow@thamilthanthi

★ விளம்பரங்கள்
★ வாழ்த்துகள்
மற்றும் இதர வணிக தொடர்பாடலுக்கு:
Tel: 0114 - 369411
Fax: 0114 - 641294
e-mail: thamilthanthi@gmail.com

தமிழ் 07 தந்தி 11 ஞாயிற்றுக்கிழமை 10.02.2019 Sunday 10th February 2019 e-mail: thamilthanthi@gmail.com www.thamilthanthi.com



# வடக்கு, கிழக்கில் எதிர்ப்பும் பாராளுமன்றத்தில் ஆதரவும்

## கூட்டமைப்பு போடும் இரட்டை வேடம்

## குமுறுகிறார் அனந்தி சசிதரன்

### கூட்டமைப்பை அரசியல் அரங்கிலிருந்து அகற்ற வேண்டும்

### தங்களின் கதிரைகளை காப்பாற்றவே முயல்கிறார்கள்

தமிழ் மக்களை ஏமாற்றும் அரசியலையே கூட்டமைப்பினர் செய்து வருகின்றனர். ஆகவே இவர்களை மக்கள் தொடர்ந்தும் நம்பாமல் அரசியல் அரங்கை விட்டே அகற்ற வேண்டும்.

இவ்வாறு முன்னாள் வடமாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் தமிழ்த்தந்திக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமிழ் தேசிய கூட்டமைப்பினர் காலம் காலமாக இவ்வாறான ஏமாற்று வேலைகளையே செய்து வருகின்றனர். வடகிழக்கில் மக்களுக்கு ஆதரவாக போராட்டங்களை நடத்தியும் அவர்களுடன் அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தங்களை மக்களின் மீட்பர்களாக காட்டும் அதேவேளையில் தென்பகுதியில் பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு ஆதரவாக குறிப்பாக தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவாக பேசுவதும் வாடிக்கையாகிவிட்டது.

இவர்களின் இவ்வாறான பம்மாத்து அரசியலை தமிழ் மக்களில் பெரும்பாலானோர் உணர்ந்திட்ட அதேவேளை சிறுபகுதியினர் அவர்களை நம்புகின்றனர். அவர்களும் விரைவில் இவர்களின் கபடத்தனங்களை புரிந்து கொள்ளக்கூடிய காலம் வெகு தூரத்தில் இல்லை.

இன்றைக்கு இந்த அரசாங்கத்தின் ஆட்சியில் பங்கு வகித்துக் கொண்டு எங்கள் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் தங்கள் கதிரைகளைக் காப்பாற்றுவதற்காக அவர்களுடன் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்கின்றார்கள்.

இப்படியான இரட்டை நடிப்பு வெகுகாலம் நிலைக்காது. எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் சம்பந்தன் இருந்தகாலத்திலும் தன்பதவிக்குரிய எந்தவொரு கடமையையும் ஆற்றவில்லை.

02 ஆம் பக்கம் பார்க்க



# வழங்கப்படும் கால அவகாசத்தினால் தமிழர்களுக்கு எதுவித நன்மையுமில்லை

## கொந்தளிக்கும் முன்னாள் வடமாகாண முதலமைச்சர்

காலஅவகாசம் இரண்டு வருடத்திற்கு முன்னர் கொடுக்கும்போதே அமெரிக்காவில் இருந்து வந்த நிசா பிஸ்வாசிடம் சொன்னேன் நீங்கள் கால அவகாசம் கொடுக்கின்றீர்கள். என்ன என்ன வேலை இதுவரை நடைபெற்றுள்ளது என்று கவனிக்கவில்லை குறிப்பிட்ட ஒரு கால எல்லைக்குள் செய்யச்சொல்ல வேண்டும் என்று சொன்னபோது ஓம் என்று ஒரு கருத்தினை வெளியிட்டுள்ளார்.

அதனை விட இன்னும் ஒன்று சொன்னேன் நீங்கள் இதுவரைக்கும் சொல்லிவிட்டு போவீர்கள் அவர்கள் செய்யாமல் விட்டால் என்ன செய்யப்போறீங்கள் என்று கேட்டேன். இல்லை இல்லை எப்பொழுதும் நாங்கள் உங்களுடன் இருப்போம் என்று சொல்லிவிட்டு அமெரிக்க போய்விட்டது இப்பொழுதும் அமெரிக்கா இங்கு இல்லை

இதனை இழுத்துக்கொண்டு செல்வதால் தமிழர்களின் பிரச்சனைகளை உலகம் மறந்துவிடும் எத்தனையோ பிரச்சனைகள் எத்தனையோ நாடுகளுக்கு வந்து இழுத்தடிப்பு செய்து அதனால் ஒரு நன்மையும் நடைபெறவில்லை அதனால் நாங்கள் கால அவகாசம் கொடுப்பதற்கு முற்றிலும் எதிர் இது தொடர்பில் உடன் நடவடிக்கைகளை ஐ.நா எடுக்க வேண்டிய அவசியம் உள்ளது.

கால அவகாசத்தினால் இவ்வளவு காலமும் ஒன்றும் செய்யவில்லை பயங்கரவாத தடைச்சட்டத்தினை எடுப்பது என்பது மாற்றீடு செய்வது என்றுசொன்னார்கள் இதுவரையும் ஒன்றும் செய்யவில்லை கால அவகாசம் என்பது அரசாங்கத்திற்கு ஒரு நன்மையினை பெற்றுக்கொடுப்பதாக அமையும் தமிழ்மக்களுக்கு எந்த நன்மையும் கிடையாது என்பது எனது கருத்து.

### ஊடகத்துறை அமைச்சு ருவான் வசம்?



ஊடகத்துறை அமைச்சராக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன நியமிக்கப்படவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நியமனத்திற்கான பரிந்துரையை ஜனாதிபதிக்கு, பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஏற்கனவே, அனுப்பி வைத்துள்ளார் என கூறப்படுகிறது.

அமைச்சரவையில் அங்கம் வகிக்காத அமைச்சராக ருவான்

02 ஆம் பக்கம் பார்க்க



# ஏரிஎம் பாவனையில் அவதானம்!

## மக்களை விழிப்புடனிருக்குமாறு மத்திய வங்கி அறிவுறுத்தல்

தன்னியக்க இயந்திரமூடான கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும்போது அவதானத்துடன் செயற்படுமாறு இலங்கை மத்திய வங்கி மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

மின்னணு சிப் (Electronic Chip) உடனான அட்டைகளை மாத்திரம் கொடுக்கல் வாங்கலில் பயன்படுத்துமாறு மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

சிப் உடனான அட்டைகள் மிகவும் பாதுகாப்பானது எனவும் கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் பிரிவின் பணிப்பாளர் தர்மஸ்ரீ குமாரதுங்க தெரிவித்தார்.

பாதுகாப்பான அட்டைகளை அனைவருக்கும் வழங்குமாறு வங்கிகளுக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், வாடிக்கையாளர்கள் பணத்தை மீளப்பெறும் போது, குறுந்தகவல் மூலம் அறிவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தர்மஸ்ரீ குமாரதுங்க கூறினார்.

இதேவேளை, ATM இயந்திர மூடாக கொடுக்கல் வாங்கலில்

02 ஆம் பக்கம் பார்க்க

# மைத்திரியின் திட்டத்திற்கு சந்திரிக்கா கடும் எதிர்ப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மகிந்த ராஜபக்சவை மையப்படுத்திய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியோடு இணைந்து பாரிய அரசியல் கூட்டணி ஒன்றை அமைக்கும் திட்டத்திற்கு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவரும் கட்சியின்

02 ஆம் பக்கம் பார்க்க



# மழையுடனான காலநிலை நீடிக்கும்

தற்போது காணப்படும் மழையுடனான வானிலையில் மேலும் அதிகரிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

சப்ரகமுவ, மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் 150 மி.மீக்கும் அதிக

02 ஆம் பக்கம் பார்க்க




அலுகோசு பதவிக்காக திங்கட்கிழமை (11) முதல் விண்ணப்பங்களை கோரப்படவுள்ளன என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மரண தண்டனை தொடர்பில் ஜனாதிபதியினால் எடுக்கப்படவுள்ள தீர்மானத்தை

02 ஆம் பக்கம் பார்க்க

# 2800ரூபாவை அதிபருக்கு வழங்க முடியாமல் கல்வியை இடைநடுவில் கைவிட்ட மாணவன்

**மஸ்கெலியா நிருபர்**

பாடசாலை அதிபருக்கு ரூபா 2800 பணம் வழங்க முடியாத நிலையில் சுமார் 3 வருட காலமாக பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப முடியாது போய் உள்ளது என இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

பெருந்தோட்ட சிறார்களில் ஒரு சிலர் பாடசாலை சென்று இடைநடுவில் நின்று விட்டதாகவும், அத்தோடு பாரிய அளவில் சிறார்கள் பாடசாலைக்கு

02 ஆம் பக்கம் பார்க்க

# போதிய இடவசதி இன்மையால் தவிக்கும் தாய்மார்கள்



**சுஜீவன்**

நுவரெலியா மாவட்டத்தின் கொட்டக்கலை பொது சுகாதார வைத்திய பிரிவுக்குட்பட்ட கொட்டக்கலை நகரின் பிரதேச சபை கட்டிடத்திற்கு அருகில் இயங்கி வரும் பொது சுகாதார மத்திய நிலையமொன்றில் காணப்படும் பல்வேறு குறைபாடுகள் காரணமாக சிகிச்சைக்காக அங்கு வரும் நோயாளிகள் பல்வேறு சிரமங்களுக்கு தினமும் முகங்கொடுத்து வருவதாக தெரிவிக்கின்றனர். அத்தோடு வைத்திய அதிகாரிகளும் உரிய நேரத்திற்கு வராது காலதாமதகவே வருவதாகவும் பொது மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

தமது குழந்தைகளுடன் மாதாந்த சிகிச்சைக்காக கொட்டக்கலை பிரதேச சபை கட்டிடத்திற்கு அருகாமையில் அமைந்திருக்கும் பொது சுகாதார

02 ஆம் பக்கம் பார்க்க

# எங்கள் போராட்டத்தை மலினப்படுத்தும் சுமந்திரன்!




## தமிழர் தாயகத்தில் காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் செயலாளர் ராஜ்குமார்

எங்களின்தாய்மார்களுக்கும் இலங்கைஅரசாங்கத்தரப்பிற்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்று இன்றுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகியுள்ளது. சுமந்திரன் இடைத்தரகராக இருந்து இந்தப் பேச்சுவார்த்தைகளை நடத்தி எங்களுக்கு பல வாக்குறுதிகளைத் தந்தார். ஆனால் அவை அனைத்தும் காற்றில் பறந்து போய்விட்டது.

ஆனால் அவர் இன்று தனது பிறந்த

02 ஆம் பக்கம் பார்க்க

## தடம்புரண்டது ஆட்டோ



**மஸ்கெலியா நிருபர்**

ஹட்டன் கொழும்பு நெடுஞ்சாலையில் சென்ற முச்சக்கர வண்டி ஒன்று வீதியில் தடம் புரண்டதால் முச்சக்கர வண்டியில் பயணித்த வரும் சாரதியும் காயங்களுக்கு உள்ளாகி வட்டவளை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு பின் வெளியேறினர் என வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

## விசமிகளால் காட்டுக்கு தீவைப்பு

**மஸ்கெலியா நிருபர்**

கடந்த இரண்டு மாத காலமாக கடும் வரட்சி நிலவி வந்தபோது, ஒரு சில விசமிகளால், மலையக பகுதிகளில் உள்ள பல்வேறு வனப்பகுதிக்கு தீவைக்கப்பட்ட நிலையில், வனப்பகுதியில் உள்ள பல்வேறு விலங்குகள் மற்றும் பல்வேறு வகையான பறவைகள், வனக்கோழிகள் அழிவடைந்துள்ளன.

மேலும் விசமிகளால் தீவைக்கப்பட்ட நிலையில,; அருகில் உள்ள பொலிஸார் மற்றும் இராணுவத்தினர், அதிரடிபடையினர், மற்றும் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் தீயை கட்டுபாட்டிற்கு கொண்டுவந்த போதிலும், ஒரு சில உயிரினங்கள் அழிவடைந்தன.

இனிவரும் காலங்களில் அந்தந்த பகுதிகளில் உள்ள சமய குருமார்கள், கிராமசேவகர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் ஏனைய அனைவரும் முன்வந்து அந்தந்த பகுதியில் வாழும் இளைஞ்சர்கள், மற்றும் சிறார்களுக்கு, இவ்வாறு வன பகுதிக்கு தீவைப்பதால் ஏற்படும் தீமைகளை பற்றி எடுத்து கூறுதல் இன்று கட்டாயம் என வன பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## மகா கும்பாபிஷேகம்

மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை ஸ்ரீ கண்ணகாதேவி ஆலய மஹாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா இன்று காலை 6.50-7.50 மணிக்குள் இடம்பெறவுள்ளது.


இதனைத் தொடர்ந்து மண்டலாபிஷேகத்தில் கலந்துகொண்டு உபயம் செய்ய விரும்பும் அடியார்கள் பின்வரும் இலக்கங்களுடன் மட்டும் தொடர்பினை மேற்கொண்டு தங்களுடைய உபயங்களினை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

திருமதி குமாரசாமி கலாநந்தினி - 0774717296

திரு. நவமணி ரவிச்சந்திரன் ஐயா - 0777075390

திருமதி நிவேதிகா பாஸ்கரன்:- 0778742055

## இந்த வருடத்தில் கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் பற்றாக்குறை தீர்க்கப்படும்



**வாழையூர் ந.குகதர்சன்**

இந்த ஆண்டிலே சகல ஆசிரியர் பற்றாக்குறைகளையும் தீர்ப்பதற்கு சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றோம். ஆசிரியர்களைக் கொடுக்க வேண்டியது இன்றைய ஆளுநர் என்ற வகையில் எனது பொறுப்பாக இருக்கின்றது என கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

காத்தான்குடி மத்திய கல்லூரியின் 89வது வருடாந்த இல்ல விளையாட்டு நிகழ்வு வெள்ளிக்கிழமை மாலை பாடசாலை மைதானத்தில் பாடசாலை முதல்வர் எஸ்.எச்.பிர்தெளஸ் தலைமையில் இடம்பெற்ற போது கலந்து கொண்டு மேற்சொன்னவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்!

எதிர்வரும் நாட்களில் கல்வியை முன்னேற்றுவதற்காக நாங்கள் பல்வேறு தீர்மானங்களை எடுக்கவிருக்கின்றோம். நான் கடந்த வாரம் 50 மில்லியன் ரூபாய்களை விசேட நிதியாக ஒதுக்கிடு செய்து கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற சகல பாடசாலைகளுக்கும் தளபாடங்கள் கொள்வனவிற்காக வழங்கியிருக்கின்றேன். சவூதி அரேபியா தூதுவரை அழைத்து வந்து கிழக்கு மாகாணப் பாடசாலைகளின் சகல தளபாடப் பற்றாக்குறையை நீக்குவதற்கு அந்த அரசுடன் இணக்கம் காணப்பட்டுள்ளது.

கல்வியில் எமது மாகாணம் ஒன்பதாவது நிலை பெறுவதற்குப் பல காரணம் இருக்கின்றது. கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களை எடுப்பவர்கள் மிகப் பின்னடைவிலே இருக்கின்றார்கள். உயர்தரம் விஞ்ஞானப் பிரிவில் நாங்கள் மிகப் பின்னடைவில் இருக்கின்றோம். எனவே இந்த மாகாணத்தில் அவற்றை நாங்கள் மாற்றாத வரை வேறு யாரையும் குறை சொல்ல முடியாது. பாடசாலைகளிலே ஆசிரியர் பற்றாக்குறைகளை வைத்துக் கொண்டு வலயக் கல்விப் பணிப்பாளர், அதிபர்களைக் குறை கூறுவதில் எந்த பயனும் இல்லை என்பதை இந்த ஆளுநர் பதவியைப் பெறுப்பேற்றதில் இருந்து நான் புரிந்து கொண்டேன்.

எனவே இந்த ஆண்டிலே சகல ஆசிரியர் பற்றாக்குறைகளையும் தீர்ப்பதற்கு சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றோம். ஆசிரியர்களைக் கொடுக்க வேண்டியது இன்றைய ஆளுநர் என்ற வகையில் எனது பொறுப்பாக இருக்கின்றது. ஆசிரியர் பற்றாக்குறை இடம்பெறும் பாடசாலைகளில் அப்பகுதியில் படித்த இளைஞர்களைக் கொண்டு தற்காலிக ஆசிரியர்களை நியமித்து கல்வியைக் கொடுக்க வேண்டிய பொறுப்பு ஆளுநரின் கடமை என்று நான் கருதுகின்றேன்.

அதற்காக நாங்கள் விசேட வேலைத்திட்டங்களை அமுல்ப்படுத்த இருக்கின்றோம். அதற்கான விசேட உடன்படிக்கைகளும் எதிர்வரும் வாரத்தில் கைச்சாத்திட இருக்கின்றோம். ஒவ்வொரு பாடசாலை அதிபர் மற்றும் பாடசாலை சமூகத்திற்கும் இதற்கான அதிகாரங்களை நான் வழங்க இருக்கின்றேன்.

ஒவ்வொரு அதிபர் மற்றும் பிரதேசக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்குத் தேவையான அதிகாரங்களை வழங்கி ஒவ்வொரு பிரதேசத்தினுடைய கல்வித் திட்டங்களை அவர்களிடம் ஒப்படைக்க இருக்கின்றோம். அதனை அவர்கள் ஒவ்வொருவரும் பொறுப்பெடுக்க வேண்டும். அப்போது தான் நாம் கல்வியை ஒரு முன்னேற்றகரமான இடத்திற்குக் கொண்டு செல்ல முடியும் என்றார்.

## நூல் வெளியீடு

சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தின் அரசியல் சிந்தனைகள் 13 நூல்கள் வெளியீட்டு விழா கொழும்பு தமிழ் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை 4.30 மணிக்கு இடம்பெறும்.

இந்நிகழ்வை அருட்தந்தை மா.சக்திவேல் தலைமை தாங்குகிறார். கிழக்கு பல்கலைக்கழக அரசியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கிருஷ்ணமோகனின் வெளியீட்டுரை இடம்பெறும்.

நூல்களின் விமர்சன உரையை சுங்க அத்தியட்சகர் செ.சக்திதரனும் ஆசிரியர் பொன்.பிரபாகரனும் நிகழ்த்துவார்கள்.

நூல்களை பிரமுகர்களிடம் வெளியிடப்படுவதைத் தொடர்ந்து இறுதியாக ஏற்பாட்டளர் சட்டத்தரணி சி.அ.யோதிலிங்கம் ஏற்புரை நிகழ்த்துவார்.

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் கலந்துரையாடல்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் விசேட கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையில் இடம்பெற்றது. குறித்த கலந்துரையாடல் நேற்றுஆனைக்கோட்டை, உயரப்புலம் பாரதி சனசமுக நிலைய மண்டபத்தில், பிரதேச சபை உறுப்பினர் அ.கேதுசன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இலண்டன் கிளையின் இணைப்பாளர் திரு.ச.அரவிந்தன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிர்வாக செயலாளர் இரா.சங்கையா, இளைஞர் அணி செயலாளர் திரு. ந.மதிஅழகராசா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### போதிய...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

நிலையத்தின் முன்பாக தாய்மார்கள் அமர்வதற்குக்கென ஒரு கதிரை கூட இல்லாமல் வெயிலில் கால் கடுக்க சுமார் 3 மணி நேரம் நின்று கொண்டிருந்ததாக தெரிவித்தனர். குறித்த நிலைய்தில் நோயாளிகளின் நலன் கருதி அவர்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்களை போக்கும் வகையிலான எவ்வித செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுவதாக இல்லை என்றும் விசனம் தெரிவித்தனர்.

மேலும் சிகிச்சைக்காக வரும் நோயாளிகளுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது பொறு சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் சுகாதார அதிகாரிகளின் கடமையல்லவா? இவ்வாறான நிலையில் இவ் அதிகாரிகள் அலட்சிய போக்குடன் செயற்படுவது ஏன் என பலரும் கேள்வி கேட்கின்றனர். அதே சமயம் வைத்திய அதிகாரிகள் தமது பிரததியே க தனியார் வைத்தியசாலைக்கு சென்று அங்கு வருகை தந்திருக்கும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து விட்டே இங்கு வருவதாகவும் பொதுமக்கள் குற்றஞ் சுமத்துகின்றனர்.

எனவே கொட்டக்கலை நகரப் பகுதியில் இயங்கி வரும் பொது சுகாதார மத்திய நிலையத்தில் நிலவும் அடிப்படை பௌதீக வளப் பற்றாக்குறையை தீர்ப்பதற்கு மத்திய மாகாண சுகாதார ஆணையாளர் துரித நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் உரிய நேரத்திற்குள் வைத்திய அதிகாரிகளும் சிகிச்சை நிலையத்திற்கு வருகை தர உத்தரவிட வேண்டுமென்றும் பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

### தயாரா...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

நடைமுறைப்படுத்தும் நோக்கில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என திணைக்களம் கூறியுள்ளது.

இதன் பிரகாரம், எதிர்வரும் 25 ஆம் திகதி வரை அலுகோசு பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இதேவேளை, தூக்குத்தண்டனையை நிறைவேற்றுவதற்கான உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு தேவையான அனைத்து வசதிகளையும் உடனடியாக ஒழுங்குபடுத்துமாறு நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு விடுத்த அறிவுறுத்தலுக்கு அமைவாகவே,

இந்த பணிகள் முன்னெடுக்கபட்டு வருவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

### மழையுடனான...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

மான மிகப் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், வடமேல், தென் மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் 100 மி.மீக்கும் அதிகமான பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏனைய பிரதேசங்களில், குறிப்பாக வடமத்தியமாகாணத்திலும் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

### ஏரிஎம்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

ஈடுபடுகையில், சூழவுள்ளவர்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடுபவர்கள் குறித்து பொலிஸாருக்கு அறிவிக்குமாறும் பொலிஸார் மக்களை கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்த விடயம் குறித்து குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள வங்கிகளில் காணப்படும் ATM எனப்படும் தன்னியக்க இயந்திரங்களில், கருவியொன்றைப் பொருத்தி அதனூடாக வாடிக்கையாளர்களின் தரவுகள் குழுவொன்றினால் சேகரிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### ஊடகத்துறை...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

விஜேவர்த்தன ஊடகத்துறை அமைச்சைப் பொறுப்பேற்கவுள்ளார்.

இதன் பின்னர், அனைத்து ஊடக நிறுவனங்களும் ருவான் விஜேவர்த்தனவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவுள்ளன.

தற்போது, ஊடத்துறை அமைச்சராகவும், நிதியமைச்சராகவும் மங்கள சமரவீர பதவி வகிக்கிறார். அவரிடம் இருந்து ஊடகத்துறை அமைச்சு மீளப் பெறப்பட்டு, ருவன் விஜேவர்த்தனவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

ருவன் விஜேவர்த்தன ஐக்கிய தேசியக் கட்சியின் துணைப் பொதுச்செயலராக அண்மையில் நியமிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### 2800...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

இணைவதில்லை எனவும் அவர் மேலும் கூறினார்.

ராகலை புரூக் சைட் தமிழ் வித்தியாலயத்தில் தரம் 5 வரை கற்றல் நடவடிக்கை உள்ளதாகவும் அதன்பின்னர் 6ம் ஆண்டில் கல்வியை தொடர வேறு பாடசாலைக்கு செல்ல வேண்டியுள்ளதாகவும் அதனால் ஒரு சிலர் கடந்த 3 வருட காலமாக வேறு பாடசாலைகளில் இணைத்து கொள்ளபடாமை தேசிய குற்றசாட்டென கூறுகின்றனர்.

அதாவது குறித்த மாணவர் ஒருவரை பாடசாலைக்கு இணைத்துகொள்ள ரூபா 2800 பணம் தேவை என பாடசாலை அதிபர் கோரியுள்ள நிலையில் குறித்த மாணவனின் பெற்றோர்கள் தமது குறைந்த குடும்ப வருமானத்தில் 1000 ரூபாவை பாடசாலை அதிபரிடம் வழங்க முற்படும் போது அவர் மறுத்தமையால் குறித்த மாணவர் கடந்த 3 வருடமாக பாடசாலைக்கு செல்லமுடியாத நிலை தோன்றியுள்ளதாக ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவிக்கின்றார்.

மேலும் மாணவர்களுள் பலர் இது போன்ற பிரச்சினைகளால் தமது பாடசாலை கல்வியை தொடர முடியாத நிலையில் உள்ளார்கள். ஆகையால் ஆசிரியர் சங்கம் கடந்த நவம்பர் மாதம் 26ம் திகதி மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்ததை தொடர்ந்து குறித்த மாணவர்களின் கல்வியை மேலும் தொடர பரிசீலனை மேற்கொண்டுள்ளனர்.

மனித உரிமை பிரிவில் புகார் தொடர்ந்ததையிட்டு இருசாரார்களுக்குமிடையில் பாரிய முறுகல் நிலை தோன்றியது. அதனை தொடர்ந்து ராகல பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டதை தொடர்ந்து பாடசாலை அதிபரிடம் முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளதாகவும் ஆசிரியர் சங்க செயலாளர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் பெருந்தோட்ட மலையக பகுதிகளில் இவ்வாறான பிரச்சினையினால் பல மாணவர்கள் தமது கல்வியை தொடர முடியாது வீட்டிலையே உள்ளனர். எனவே இது தொடர்பில் பிரதேச அதிகாரிகள் மற்றும் கிராம சேவகர்கள், ஏனைய மனித உரிமை மீரள் அதிகாரிகள் கவனம் செலுத்துவதின் மூலம் இவ்வாறான பிரச்சினைகளை தீர்க்கலாம்.

### மைத்திரியின்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

மூத்த உறுப்பினருமான சந்திரிக்கா கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மையப்படுத்திய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும் என்றும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மகிந்த ராஜபக்சவின் குடும்பக் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியிடம் அடகு வைக்க முடியாதென்றும் சந்திரிக்கா கூறியதாக கட்சித் தகவல்கள் கூறுகின்றன. இது குறித்து கட்சியின் தற்போதைய தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் சந்திரிக்கா பேசியுள்ளார்.

கட்சியின் தலைவர் என்ற முறையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை தன்னிச்சையாக வழிநடத்த முடியாதென சந்திரிக்கா கடும் தொனியில் பேசியதாக கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியும் இணைந்து புதிய அரசியல் அணி ஒன்றை உருவாக்குவது தொடர்பாக மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்ச ஆகியோர் கடந்த வெள்ளிக்கிழமை கலந்துரையாடினர்.

அதனை அறிந்து கொண்ட சந்திரிக்கா மைத்திரிபால சிறிசேனவுடன் தர்க்கப்பட்டதாக கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் கூட்டில் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வேறுபடுத்தி கட்சியை பாதுகாக்க சந்திரிக்கா முற்படுவதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டங்களுக்கு சந்திரிக்காவுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை. இதனால் அதிருப்தியடைந்த சந்திரிக்கா புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்க முற்பட்டிருந்தார்.

ஆனாலும் கட்சியின் உள்ள தனக்கு நெருக்கமான மூத்த உறுப்பினர்கள் சிலரின் ஆலோசனையுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் சந்திக்கா ஈடுபட ஆரம்பித்துள்ளதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த முயற்சி பயனளிக்கவில்லையானால், புதிய கட்சி ஒன்றை சந்திரிக்கா ஆரம்பிப்பார் எனவும் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி மகிந்த ராஜபக்ச பிரதமராகப் பதவியேற்ற பின்னர் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியை அடுத்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் குழப்பங்கள், முரண்பாடுகள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### எங்கள்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

நாளை மிகவும் கோலகலமாகக் கொண்டாடி வருகின்றார்.

நாங்கள் போராடிக் கொண்டு எங்களின் தாய்மார் தெருவில் இருக்கின்றார்கள். நாங்கள் கௌரவமாக போராடிக் கொண்டிருக்கின்றோம். எங்களுக்கு ஏனைய தமிழ் மக்கள் மிகவும் பக்கபலமாக இருக்கின்றார்கள்.

ஆனால் தமிழ்த்தலைமைகள் என்று சொல்லப்படும் கூட்டமைப்பினர் எங்களை ஏமாற்றி அனைத்து மக்களையும் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். தங்களின் சுகபோகத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

தமிழர்களுக்குரிய தீர்வும் இல்லை. அரசியல்சாசனமும் வராது. எங்களின் போராட்டம் மூலம் நாங்கள் தொடர்ந்து கூறிக்கொண்டிருப்பது இலங்கை அரசாங்கத்தின் மீது எங்களுக்கு நம்பிக்கையில்லை. அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் மூலமே எங்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். ஆகவே அது சம்பந்தமான கையெழுத்து போராட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும். அதேநேரம் எதிர்வரும் மாதத்தில் ஜெனீவாவில் நடைபெறவுள்ள மனித உரிமை பேரவையின் அமர்வுக்கு எங்களின் போராட்டக்குழு சார்பாக மகஜர் ஒன்றை அவர்களுக்கு மின்னஞ்சலில் அனுப்பவுள்ளோம்.

ஐ.நா.காலநீடிப்பு வழங்குமானால் ஸ்ரீலங்காவை குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையையும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிடம் உங்களுக்கு என்ன தீர்வு வேண்டும் என்ற வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைக்கவுள்ளோம்.

அதேநேரம் வடகிழக்கில் போர்க்குற்றம் மற்றும் பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபட்ட இராணுவத்தினரை அகற்றி ஐ.நா.அமைதிகாக்கும் படையை அனுப்ப வேண்டும். அதுவே தமிழர்களின் கல்வி மற்றும் பெண்களின் பாதுகாப்புக்கும் உறுதுணையாகவிருக்கும்.

இதுவே எங்கள் மகஜரின் சாரம்சம்.

தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுத் தருவேன் என்று கூறிய சுமந்திரன் அதைச் செய்யாமல் தன்பிறந்தநாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றார். தன்னுடைய எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இழந்துள்ளதால் தற்சமயம் சம்பந்தன் ஐயா சுய நினைவை இழந்துள்ளதாக அவரின் கட்சி முக்கியஸ்தர்கள் கூறியுள்ளார்கள். இது சம்பந்தமாக சுமந்திரனும், ஸ்ரீதரனும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்கள்.

தமிழ் மக்கள் இன்றும் விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் தொடர்ந்தும் சுட்டிக்காட்டிய விடயங்கள் இன்று அம்பலத்திற்கு வந்துள்ளது. அண்மையில் ஈபிஆர்எல்எவ் மாநாட்டிலே ஆவணங்கள் வெளியிடப்பட்டது. தாங்கள் செய்த குற்றங்களை மறைத்து அதை வெளியிட்டு விக்னேஸ்வரன் ஐயாவை நெருக்கடியில் தள்ளியுள்ளார்கள்.

இந்தியாவின் உதவியோடு தாங்கள் செய்த குற்றங்களை மறைத்து இங்கு நடைபெற்ற போராட்டங்களை கொச்சைப்படுத்திய ஈபிஆர்எல்எவ்வின் முகம் அம்பலத்திற்கு வந்துள்ளது.

### வடக்கு...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து கொண்டு ஆளுந்தரப்புடன் இணங்கிப் போன தலைவராக சம்பந்தன் மட்டுமே உலகில் இருக்கின்றார். தமிழர்களுக்கு எதிராக மோசமான வரவு-செலவுத் திட்டங்கள் வந்தபோதெல்லாம் அதை ஆதரிக்கும் மனநிலையில்தான் அவர் இருந்திருக்கின்றார்.

இன்று போர் முடிந்து பத்து வருடங்கள் கடந்தும் முன்னாள் போராளிகளுக்கு சரியான வாழ்வாதரங்கள் இல்லாமல் அல்லற்படுகின்றார்கள். அவர்களுக்கான எந்த வாழ்வாதாரங்களையும் சம்பந்தனால் அளிக்க முடியவில்லை. மாற்றுத்திறனாளிகளுக்கு எதுவித உதவிகளும் செய்ய முடியவில்லை. இதற்கு அவருக்கு உண்மையில் மனம்இல்லை. போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நியமத்தின் அடிப்படையில் நட்டஈடு வழங்க முடியவில்லை.

இப்படியெல்லாவற்றையும் செய்து கொண்டு இராணுவத்தினருக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் வழங்கப்படும் பெருமளவு நிதிக்கான வரவு-செலவுத் திட்டத்தை ஆதரிக்கும் மனநிலையிலேயே அவர் இருந்துள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு நன்றாகத் தெரியும் தீர்வுத் திட்டம் வரவே வராது என்று. இது பொய்யான, ஏமாற்று வேலை என்றும் தெரியும். தெரிந்து கொண்டும் மக்களை ஏமாற்றிக்கொண்டு தங்களின் சுயலாபங்களுக்காக இயங்கிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் சம்பந்தன் கடந்த 2015ஆம் ஆண்டிலிருந்து கூறிக்கொண்டே வருகின்றார் தீர்வு வரும் தீர்வு என்று. பல தீபாவளிகள், பொங்கல்கள் கழிந்ததுதான் மிச்சம். இற்றைவரை தீர்வு மட்டும் வரவேயில்லை.

ரணில் அரசு காலம்காலமாக ஏமாற்றிக் கொண்டே இருக்கின்றது. ஏனென்றால் தாங்கள் தீர்வுத் திட்டத்தை தருவதாகக் கூறுவார்கள். ஆனால் தங்களின் ஆட்களைத் தூண்டிவிட்டு அதைக் குழப்புவார்கள். பிறகு சொல்வார்கள் இப்படியெல்லாம் எதிர்ப்பு இருப்பதால் எங்களால் தீர்வுத் திட்டத்தை வழங்க முடியவில்லை என்று.

ஒற்றையாட்சிக்குள் தீர்வு, பொலிஸ் அதிகாரமில்லை, காணி அதிகாரமில்லை, பௌத்தத்திற்கு முன்னுரிமை என்று கூறுகிறார்கள். அப்படியென்றால் இந்தத் தீர்வால் எங்களுக்கு என்ன பயன். வெளிப்படையாகவே மக்களுக்கு தெரியும் எங்களுக்கு தீர்வு கிடைக்காது. உண்மையில் எங்களுக்குரியதை அவர்கள் எந்தக் காலத்திலும் தரப்போவதில்லை. இதுவே உண்மை என்றும் அவர் தெரிவித்தார்.



நுவரெலியா மாவட்டத்தில் நு/சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியானது பாடசாலை மைதானத்தில் வெகு விமர்சையாக இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் திருமதி தமிழரசி தலைமையில், மேலதிக கல்விப்பணிப்பாளர் திரு மோகன்ராஜ், சுகாதார கல்விப்பணிப்பாளர் திரு சுசந்த வீரசேன, ஆசிரியர் ஆலோசகர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

படம்: வி.பிரசாந்தன்

## விசமிகளால் மாசடையும் டெவன் நீர்வீழ்ச்சி

**மஸ்கெலியா நிருபர்**

உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாச பயணிகளை கவரும் வண்ணம் எழில் பொருந்திய இயற்கையின் கொடையே டெவன் நீர்வீழ்ச்சியாகும். இங்கு, மாட்டு பண்ணையாளர்களினால் பண்ணையின் கழிவுகள் அனைத்தும் சட்ட விரோதமான முறையிலும் மிக தந்திரமான முறையிலும் இவ்வாற்றில் கலக்கப்படுகின்றது. ஹட்டன், கொட்டகல பிரதேசங்களை உள்ளடக்கிய பிரதேச மக்களே இவ்வாறான செயல்களை மேற்கொள்வதாக கொட்டகல பிரதேச சபையின் பொது சுகாதார அதிகாரி தெரிவித்தார்.

கொட்டகல நகரிலிருந்து 3 கிலோ மீட்டர் தூரம் உள்ள கங்கையின் மூலம் டெவன் நீர் விழ்ச்சி மிக ரம்மியமான முறையில் காட்சி தருகின்றது. இந்த ஆற்றிலேயே இவ்வாறான பண்ணைகளின் கழிவு நீர் மற்றும் கழிவு பொருட்கள் என்பன மிக சூத்திரமான கலக்கப்படுவதால் சுற்று சூழல் மாசு அடைந்து துர்நாற்றம் வீசுவதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

கொட்டகல பொது சுகாதார அதிகாரி அப்பகுதிக்கு சென்று பண்ணைகளின் கழிவு பற்றி ஆராய்ந்த போது கிடைக்கபெற்ற தகவல்களின் படி இவ்வாறு பண்ணைகளில் கடந்த பருவகாலங்களாக தொழில் நடவடிக்கைகளை மேற்கொண்ட போது முறையான கழிவகற்றல் நடவடிக்கையை இடம்பெறாததே இதற்கு காரணமாகும் என தெரிவித்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள வரட்சியின் காரணமாக ஆற்று நீர் வற்றிபோய் உள்ள நிலையில் அவ் ஆற்றில் பண்ணை கழிவுகள் கலந்துள்ளதால் அவ் ஆற்றில் நிராட சென்றவர்கள் மிகவும் அசௌகரியங்களுக்கு உட்படுகின்றனர். மேலும் இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை தலவாகல நகர சபையின் பொது சுகாதார அதிகாரி வை.ஏ.எல்டி சில்வா அவர்கள் மேற்கொள்வதாக பொது சுகாதார அதிகாரி தெரிவித்தார்.

## தனியார் வாகன தரிப்பிடங்களில் அதிக கட்டணம் வசூலிக்கப்படுகிறது

**மஸ்கெலியா நிருபர்**



நல்லதண்ணி நகரில் காணப்படும் தனியார் வாகன தரிப்பிடத்தில், சிவனடிபாத மலைக்கு வரும் யாத்திரிகளுடைய வாகனங்களை நிறுத்துவதற்கு அதிகளவு கட்டணங்கள் அறவிடப்படுவதனால் யாத்திரிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகுவதாக யாத்திரிகள் புகார் தெரிவிக்கின்றனர். மேலும் அவ் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்படும் ஒருசில நகர வியாபாரிகளுடைய வாகனங்கள் மஸ்கெலியா பிரதேச சபையில் பதியப்படாமல் இருப்பதும் குறிப்பிடதக்கது.

இவ்வாறு வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு பேருந்து ஒன்றுக்கு ரூபா 500, சிறிய பேருந்துகளுக்கு ரூபா 450, வேன் ஒன்றுக்கு 350 ரூபா வும், முச்சக்கர வண்டிக்கு ரூபா 250 வும், மேட்டார் வாகனங்களுக்கு 200ரூபா வும் தாம் விருப்பத்திற்கு ஏற்றால் ;போல் அறவிடுவதாக யாத்திரிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

மேலும் இந்த வாகான தரிப்பிடத்தில் தரித்து வைக்கப்படும் வாகானங்களுக்கு எந்த விதமான பாதுகாப்பு வசதிகளும் இல்லை அவர்களால் பாதுகாப்பும் வழங்கப்படுவதும் இல்லை ஆகையால் அவர்களுடைய வாகானத்தில் வரும் சாரதி அல்லது வாகான உரிமையாளர்களில் யாராவது ஒருவர் கட்டாயமாக வாகானத்தில் இருக்க வேண்டும். மேலும் ஒருசில நிமிடங்கள் வாகான தரிப்பிடத்தில் வாகனங்களை தரித்து நிறுத்தினாலும் மேற்குறிப்பிட்ட கட்டணத்தையே அறவிடுவதாக கூறுகின்றனர்.

சிவனடிபாத மலைக்கு வரும் யாத்திரிகளின் நலன் கருதி மஸ்கெலியா பிரதேச சபையால் நடாத்தப்படும் வாகன தரிப்பிடத்திலும் அதிகளவு பணம் அறவிடபடுவதாகவும் சிவனடிபாத மலைக்கு வரும் யாத்திரிகளிடம் இருந்து குறைந்தளவு கட்டணம் அறவிடபட வேண்டும் என யாத்திரிகளும், வாகான சாரதிகளும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இந்த பிரச்சினை சம்பந்தமாக நாம் மஸ்கெலியா பிரதேச சபை பொலிஸாரிடம் வினவிய போது அதன் செயலாளர் எம்.ராஜவீரன் கூறுகையில் எமது பிரதேச சபையால் நடாத்தப்படும் வாகன தரிப்பிடத்தில் அதிகளவு கட்டணம் அறவிட்டால் அது தொடர்பாக உடன் நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் நல்லதண்ணி நகரில் இயங்கும் ஏனைய வாகன தரிப்பிடங்களுக்கு எமது பிரதேச சபையில் பதிவு இல்லை எனவும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய மாகாண ஆளுனர் மற்றும் மத்திய மாகாணத்திற்கு பொறுப்பான அதிகாரியுடன் கலந்தாலோசித்து அதனை சுற்று நிருபமாக்கி அதனை வர்த்தமாணியாக்கிய பின்னர் நடைமுறைபடுத்த உள்ளதாகவும் அவர் கூறினார்.

## உலகமுடிவு தேசிய பூங்காவில் சமூகவிரோத செயற்பாடுகள்

**மஸ்கெலியா நிருபர்**



உலக அதிசயங்களில் ஒன்றான உலக முடிவு தேசிய பூங்காவினுள் கடந்த ஒரு வருடத்தினுள் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது 23 லட்சம் ரூபா தண்டபணமாக பெறப்பட்டுள்ளது. இவ் சுற்றி வளைப்பின் போது, வன விலங்குகளை வேட்டையாடுதல், போதை பொருள் பாவனை, புகைத்தல் மற்றும் அங்குள்ள இயற்கை வளங்களுக்கு தீங்கு விளைவித்தல் போன்றவற்றுக்கான தண்ட பணமே இவையாகும் என தெரிய வந்துள்ளது.

இவ்வருடத்தில் முதல் மாத பகுதியில் சுமார் 1 லட்சம் ரூபா பணம் இவ்வாறான குற்ற செயல் புரிந்தோருக்கு எதிராக அறவிடப்பட்டுள்ளது. மேலும் உலக முடிவை பார்வையிட வரும் உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாச பயணிகளுக்கு இது தொடர்பில் முறையான துண்டுபிரசுரங்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் மேலும் இவ்வாறான குற்றசெயல்களில் ஈடுபட்டுள்ளதாக, வன விலங்குகள் முகாமையாளரான பிரதீப் அவர்கள் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் பூங்காவினை சுற்றி பார்க்க வரும் உல்லாச பயணிகள் குற்றம் இளைக்கப்பட்டு அகப்பட்டால் குற்றவாளிகளுக்கு எதிராக 2009 இலக்க 11ம் சட்டத்தின் கீழ் தண்ட பணம் அறவிடுவதாகவும், இதற்காக ஆக குறைந்த தண்ட பணமாக 15 ஆயிரம் ரூபா பணம் அறவிடப்படும்.

ஆகையால் இந்த உலக முடிவில் பூங்கா எழிலுடன் திகல அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதனை விடுத்து தகாத செயல்களில் ஈடுபட்டால் எதிர்வரும் காலங்களில் அடுத்த சந்ததியினர் பூங்காவை இரசிக்கும் வாய்ப்பு கிடைக்காது போவதுடன், உலக இதிசயங்களில் ஒன்றாக கருதப்படாது போகும் நிலை ஏற்படும் என வன முகாமையாளர் பிரதீபன் கூறினார்.

## ராகு-கேது பெயர்ச்சி விசேட பூஜை

**மஸ்கெலியா நிருபர்**

மஸ்கெலியா நோட்டன் வீதியில் அமைந்துள்ள கிராப்பு தோட்டத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சுப்பரமணிய சுவாமி ஆலயத்தில் எதிர்வரும் 13.02.2019 புதன் கிழமை ராகு-கேது பெயர்ச்சி விசேட பூஜை நடைபெறவுள்ளது. அதனை தொடர்ந்து அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு நவகிரக ஹோமம், விசேட அபிசேகமும் நடைபெற உள்ளது.

இவ்விசேட பூஜையில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஆலயபரிபாலன சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## உலக யூனானி தினம் இலங்கையில் முதல் முறையாக தென்கழக்கு பல்கலைக் கழக வளாகத்தில் கொண்டாட ஏற்பாடு

**மீனோடைக்கட்டு நிருபர்**

உலக யூனானி தினம் வருடாவரும் பெப்ரவரி 11 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுகின்றது. இத்தினத்தை இலங்கையில் முதல் முறையாக கிழக்கு மாகாணத்தில் ஒலுவில் தென்கழக்கு பல்கலைக் கழக வளாகத்தில் மிகச் சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.

அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலையின் ஏற்பாட்டின் கீழ் கல்முனை பிராந்தி ஆயுர்வேத இணைப்பாளரும், நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான வைத்திய கலாநிதி எம்.ஏ.நபீலின் வழி காட்டலில் அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகரும், ஆயுர்வேத வைத்திய நிபுணருமான வைத்திய கலாநிதி கே.எம். அஸ்லம் தலைமையில் இத்தினம் கொண்டாடப்படவுள்ளது.

இந்நிகழ்வுக்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.எல்.அலாவுதீன் பிரதம அதிதியாகவும், பேராசிரியர் எம்.பி.எம்.இஸ்மாயில் விஷேட அதிதியாகவும், கல்முனை மாநகர சபையின் செயலாளர் எம்.ஐ.பிர்னாஸ், நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கே.எல்.எம்.நக்பர் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்துகொண்டு விஷேட உரையினையும் நிகழ்த்தி வைக்கவுள்ளனர்.

கிழக்கு மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றுகின்ற வைத்தியசாலையின் வைத்திய பொறுப்பதிகாரிகள், வைத்தியர்கள் உள்ளிட்ட பல யூனானி வைத்தியர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளதாகவும், இதில் 10 வருடகால வைத்திய சேவையை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ் மற்றும் ஞாபகச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாகவும் அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகரும், ஆயுர்வேத வைத்தியநிபுணருமான வைத்திய கலாநிதி கே.எம்.அஸ்லம் தெரிவித்தார்.

## மூதூரில் சமூர்த்தி பெறுவோர் தொடர்பாக மீளாய்வு

**மூதூர் நிருபர்**

மூதூர் பிரதேசத்தில் பொருத்தமற்றவர்கள் சமூர்த்தி பயனாளியாக தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அதுபோல் பொருத்தமானவர்கள் தெரிவுசெய்யப்படவில்லை என்பதாகவும் மக்களினால் பிரதேச செயலாளருக்கு பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.



அதற்கமைவாக, மூதூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட 42 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் கடந்த இரு வாரங்களாக தொடர்ந்தும் இம்மீளாய்வு நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பிரதேச செயலாளரின் பணிப்புரைக்கமைய இம்மீளாய்வு நடவடிக்கைகளில் பிரசே செயலக உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர். இதன் மூலம் 2019ஆம் ஆண்டிற்காண சமூர்த்தி முத்திரைகள் வழங்கும்போது தகுதியுடையவர்களுக்கு சமூர்த்தி முத்திரைகள் வழங்க முடியும். இம்மீளாய்வுக்காக பொது மக்களினுடைய வீடுகளுக்கு வருகின்ற குழுவினர்களுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு பிரதேச செயலாளர் எம். முபாரக் அவர்கள் வேண்டிககொள்கின்றார்.

## பலாங்கொடை நகர சபையின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ள கழிவு பொருட்களை மீள்சுழற்சி செய்யும் வேலைத்திட்டம்

**இரத்தினபுரி நிருபர்**



பலாங்கொடை நகர சபையின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ள கழிவு பொருட்களை மீள்சுழற்சி செய்யும் வேலைத்திட்டமானது இம்மாகாணத்தில் உள்ள ஏனைய உள்ளுராட்சி சபைகளுக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்;குவதோடு, ஏனைய உள்ளுராட்சி சபைகளில் இவ்வேலைத்திட்டத்தை விரைவில் அரம்பிக் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் தம்ம திசாநாயக்க தெரிவித்தார்.

பலாங்கொடை நகர சபையின் மூலம் பலாங்கொடை பெங்கியவத்த பிரதேசத்தில் நடைமுறைபடுத்தப்பட்டுள்ள கழிவு பொருட்களை மீள்சுழற்சி செய்யும் வேலைத்திட்டத்தை ே நேரில் சென்று பார்வையிட்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில் கழிவு பொருட்களை மீள் சுழற்சி செய்யு சிறந்த இடமாக பலாங்கொடை நகர சபை விளங்கி வருகின்றது.

பாலங்கொடை நகர சபையின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ள கழிவு பொருட்களை மீள்சுழற்சி செய்யும் வேலைத்திட்டம் இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் உள்ள எம்பிலிபிட்டிய, கேகாலை ஆகிய இரண்டு நகர சபைகள் உட்பட 25 பிரதேச சபைகளிலும் உள்ளடக்கி விரைவில் அரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் தம்ம திசாநாயக்க மேலும் தெரிவித்தார்.

பலாங்கொடை நகர சபையின் மூலம் நடைமுறைபடுத்தப்பட்டுள்ள மேற்படி வேலைத் திட்டத்தின் மூலம் நாலாந்தம் 15 டொன் கழிவு பொருட்கள் மற்றும் 15000 மலசல கழிவுகள் மீள் சுழற்சி செய்யப்பட்டு அதன் தயாரிக்கப் பட்டு வரும் கொம்போஸ் உரத்தின் மூலம் வருடத்திற்கு 25 இலட்சம் ரூபா ஆதாயத்தை பலாங்கொடை நகர சபை பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதன்போது பலாங்கொடை நகர சபை தலைவர் சம்பிக்க விமலசென, பலாங்கொடை நகர சபை உறுப்பினர்கள், மாகாண பிரதான செயலாளர் டி.எம்.மாலணி, மாகாண உள்ளுராட்சி நிறுவனங்களின் உதவி ஆணையாளர் சமன் குமார மற்றும் சுகாதார பரிசோதகர்கள் உட்பட அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தற்கொலைகளை தடுக்க தீர்மானம்

**மண்டூர் நிருபர்**

மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்ற தற்கொலைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் சில முன்மொழிவுகள் மட்டக்களப்பு முதல்வாரால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அது ஏகமனதாக சபையினாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

கல்லடிப் பாலத்தில் உல்லாசப் பயணத்துறை சார்ந்த கடைகளை அமைத்து கொடுப்பதன் ஊடாக அவ்விடத்தை தொடர்ச்சியான பாதுகாப்பிற்கும் பயன்பாட்டிற்குமான இடமாக மாற்றுவதென்றும், இவ்வாறு தற்கொலை முயற்சியில் ஈடுபடுபவர்களை உடன் காப்பாற்றுவதற்கு வசதியாக 24 மணி நேர படகு ரோந்து சேவையை அப்பகுதியில் ஆரம்பிப்பதற்கும் சபையினால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.



# எந்த கட்சியுடனும் கூட்டணி அமையவில்லை



எந்தக் கட்சியுடனும் இதுவரை கூட்டணி அமையவில்லை என்று, அதிமுக மாவட்ட செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டத்துக்கு பிறகு அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்தார்.

நாடாளுமன்ற தேர்தல் பணிகள்,வெற்றி தோல்வி வாய்ப்பு உள்ள தொகுதிகள் குறித்து ஆலோசிக்க, மாவட்ட செயலாளர்கள், எம்எல்ஏக்கள் கூட்டத்துக்கு அதிமுக தலைமை ஏற்பாடு செய்தது.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் இக்கூட்டம் நடந்தது. கட்சி ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளரான முதல்வர் பழனிசாமி தலைமை வகித்தனர். இதில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாள் விழாகொண்டாட்டம், தேர்தல் உத்திகள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. இதுபற்றி அமைச்சர்டி.ஜெயக்குமார் கூறியதாவது:மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் 71-வது பிறந்த தினம் வரும் 24-ம் தேதி கொண்டாடப்பட உள்ளது. இதை பட்டிதொட்டி எங்கும் கொண்டாட வேண்டும் என்று ஒருங்கிணைப்பாளர், இணைஒருங்கிணைப்பாளர் தெரிவித்தனர். பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி அவரது பிறந்தநினம் கொண்டாடப்படும்.

நாடாளுமன்ற தேர்தலையொட்டி, கட்சியினரின் பணிகள்ஜெகனவே முடுக்கி விடப்பட்டுள் ளன. 'நாற்பதும் நமதே' என் பது ஜெயலலிதாவின் முழக்கம், இலக்கு. அந்த இலக்கை அடைய வேண்டும். மக்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும். பூத் கமிட்டி அமைப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தினர்.

இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்ந்து செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்தார்.

ஆலோசனைக் கூட்டத்தில் கூட்டணி குறித்து பேசப்பட்டதா?கூட்டணி குறித்து இன்று பேசவில்லை. கற்பனையாகவே பல கதைகள் புனையப்படுகின்றன. எந்தக் கட்சி வந்தாலும் அதிமுகவின் தலைமையில்தான் கூட்டணி அமைக்கப்படும். தற்போது வரை எந்தக் கூட்டணியும் அமையவில்லை. அமைந்தால் அதுமெகா கூட்டணியாக இருக்கும்.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட வுடன் கூட்டணி குறித்து முறையாக அறிவிக்கப்படும். தனித்து போட்டியிட வேண்டும் என்று கூட்டத்தில் சிலர் வலியுறுத்தியதாக கூறப்படுகிறதே?அதிமுக கட்டுக்கோப்பானஇயக்கம். ஜெயலலிதா இருக்கும்போது நடந்துகொண்டதுபோல, தற்போதும் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட செயலாளர்கள் முழு ஒத்துழைப்பு அளித்தனர்.

கூட்டணி குறித்து அவர்களிடம் கருத்து கேட்கப்பட்டதா?அதற்கான அவசியம் எழவில்லை. கட்சி எந்த முடிவு எடுத்தாலும் கட்டுப்படும்போது விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஹம்பி தூண்களை அடித்து உடைத்த இளைஞர்கள்: வீடியோ வைரலான பின்னர் கைது



பாரம்பரியச் சின்னங்களில் ஒன்றான ஹம்பியில் உள்ள விஷ்ணு கோயிலின் தூண்களை உடைத்து சேதப்படுத்திய இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

யுனெஸ்கோவின் பாதுகாக்கப்பட்ட பாரம்பரியச் சின்னங்களில் ஒன்றான ஹம்பி கர்நாடக மாநிலத்தில் உள்ளது. இங்குள்ள விஷ்ணு கோயிலின் தூண்களை சில இளைஞர்கள் எட்டி உதைப்பது, அடித்து உடைப்பது போன்ற வீடியோ இணையத்தில் வைரலானது.

இதைத் தொடர்ந்து இந்தியத் தொல்லியல் ஆய்வகம், ஹம்பி காவல்துறையிடம் பிப்ரவரி 2-ம் தேதி புகார் அளித்தது. இதுகுறித்து தீவிர விசாரணையில் ஈடுபட்ட போலீஸார் 4 இளைஞர்களைக் கைது செய்தனர்.

இதுகுறித்து பல்லாரி எஸ்.பி. அருண் ரங்கராஜன் கூறும்போது, விசாரணையில் இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் ராஜ்பாபு, ராஜா, ராஜேஷ் சவுத்ரி மற்றும் ஆயுஷ் சாஹூ ஆகியோர் எனத் தெரியவந்துள்ளது. இதில் ராஜ்பாபுவும், ராஜேஷ் சவுத்ரியும் தினக்கூலிகள். இவர்கள் பிஹாரைச் சேர்ந்தவர்கள். டிஜிட்டல் மார்க்கெட்டிங் துறையில் பணிபுரியும் ஆயுஷ் சாஹூ பெங்களூருவைச் சேர்ந்தவர். ராஜா பொறியியல் மாணவர்.

இவர்களுடன் ஐந்தாவதாக ஒரு நபரும் சேர்ந்து ஹம்பிக்கு சுற்றுலா வந்துள்ளார். அங்கிருந்து விஷ்ணு கோயிலுக்கு வந்தவர்கள் அங்கிருந்த தூண்களில் ஏறியுள்ளனர். உற்சாக மிகுதியில் அவற்றை உடைத்து சேதப்படுத்தியுள்ளனர். ஐந்தாவது நபர் இது எதிலும் ஈடுபடாமல் மற்ற இடங்களில் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் கைது செய்யப்படவில்லை. ஆயுஷ் சாஹூ வீடியோ எடுக்க மற்ற மூவரும் நினைவுச் சின்னங்களை அழித்துள்ளனர். அவற்றின் மதிப்பை அறியாமல், விளையாட்டாகத் தூண்களைச் சேதப்படுத்தியுள்ளனர். இவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றார்.

# 6ஆம் வகுப்பு பழங்குடியின மாணவி கர்ப்பம்: பாலியல் பலாத்கார குற்றச்சாட்டில் சக மாணவன் கைது

ஒடிசா மாநிலத்தில் மாநில அரசு நடத்தி வரும் உண்டு உறைவிடப் பள்ளியொன்றில் 6 ஆம் வகுப்பு படித்து வந்த சக மாணவியை பலாத்காரம் செய்த குற்றத்திற்காக 6ஆம் வகுப்பு மாணவன் கைது செய்யப்பட்டு தற்போது சீர்திருத்தப்பள்ளிக்கு அனுப்பப்பட்டுள்ளான். அம்மாணவி தற்போது கர்ப்பமாகியுள்ளதாக உயரதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

இதுகுறித்து காவல்துறை அதிகாரிகள் தெரிவித்த விவரம்:

உண்டுஉறைவிடப் பள்ளியொன்றில் ஆறாம் வகுப்பு படித்து வந்த பழங்குடியின மாணவி ஒருவர் கர்ப்பமடைந்து உள்ளதை தற்போதுதான் கவனித்தகாக பள்ளியின் தலைமை ஆசிரியை காவல்நிலையத்தில் புகார் செய்தார். இப்பள்ளி மாயூர்பஞ்ச் மாவட்டத்தில் உள்ளது.

14 வயதுள்ள அம்மாணவி உடனடியாக உள்ளூர் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டார். அங்கு நடந்த பரிசோதனையில் அப்பெண் கர்ப்பமடைந்துள்ள கரு உருவாகி ஆறுமாதங்கள் கடந்துள்ளதை உறுதி செய்துள்ளனர்.

கர்ப்பமடைந்த மாணவி அளித்த வாக்குமூலத்தில், தன் வயதுள்ள தனது வகுப்பு மாணவன் ஒருவன் தன்னை பலாத்காரம் செய்ததாகத் தெரிவித்துள்ளார்.

நேற்று அம்மாணவன் கைதுசெய்யப்பட்டு மாவட்ட சிறார்நீதி மன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

விசாரணையில் உண்மையை ஒப்புக்கொண்டதற்கு பிறகு அம்மாணவன் ஆங்கூல் மாவட்டத்தில் உள்ள சிறார் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பப்பட்டுள்ளார். அந்த சிறார் காப்பகம் இங்கிருந்து 315 கி.மீ.தொலைவில் உள்ளது.

ஒடிசாவில் டீன்ஏஜ் கர்ப்ப சம்பவங்கள் அரசை உலுக்கிய ஒரு மாதத்திற்கு பிறகு இந்த சம்பவம் நடந்துள்ளது. தென்கனால் மாவட்டத்தில் 8ஆம் வகுப்பைச் சேர்ந்த பழங்குடியின மாணவி கர்ப்பமானது கண்டுபிடிக்கப்பட்டது.

காலஹந்தி மாவட்டத்தில் கடந்த மாதம் இன்னொரு சம்பவத்தில் மாணவி ஒருவர் கருக்கலைப்பு மாத்திரைகள் உட்கொண்டதாக சந்தேகிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

# என் அனுமதி இல்லாமல் என்னை ஏன் பெற்றீர்கள்? பெற்றோரின் மீது வழக்கு தொடுப்பதாக அறிவித்த இளைஞர்

என் அனுமதி இல்லாமல் என்னை ஏன் பெற்றீர்கள் என்று பெற்றோரின் மீது வழக்கு தொடுக்க உள்ளதாக மும்பையைச் சேர்ந்த 27 வயது இளைஞர் ரஃபேல் சாமுவேல் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள யூடியூப் வீடியோவில், இந்த உலகத்துக்கு வரவேண்டுமா இல்லையா என்பதை முடிவெடுக்க குழந்தைகளுக்கு அதிகாரம் அளிக்கப்படுவதில்லை. இதனால் குழந்தைகளின் வாழ்க்கைக்கு பெற்றோர்கள்தான் உதவவேண்டும்.

என்னுடைய போராட்டம் பூமிக்கு பாரத்தை அளிக்கும் இனப்பெருக்கத்துக்கு எதிரானது. இதனால் சூழலியல் சமநிலை பாதிக்கப்படுகிறது.

இந்தியா மற்றும் உலகில் வாழும் அனைவரும் தங்களின் அனுமதி இல்லாமலேயே அவர்கள் இந்த உலகத்துக்கு வந்ததை உணரவேண்டும். இதனால் எக்காலத்திலும் குழந்தைகள் பெற்றோருக்குக் கடமைப்பட்டவர்கள் அல்ல. இதனால் நாம் வாழ்வதற்கு நம்முடைய பெற்றோர்தான் பணம் தரவேண்டும்.

இதுதொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க உள்ளேன். என்னுடைய பெற்றோர் என்னுடன் நெருக்கமான உறவில்தான் இருக்கின்றனர். அவர்களின் முழு ஆதரவும் எனக்கு இருக்கிறது. ஆனால் நான் எழுப்பும் பிரச்சினை உலகளாவிய ஒன்று என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இதன் பின்னணியில் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவது, சூழலியல் சமநிலையை உறுதிப்படுத்துவது ஆகியவையும் உள்ளது என்று தெரிவித்துள்ளார்.



குளிர் கண்ணாடி, போலி தாடி, மீசையோடு வீடியோவில் தோன்றும் சாமுவேல், ஏதோ ஒரு நேரத்தில், உங்களின் பெற்றோர் நல்லவிதமாக நேரத்தை செலவழித்ததால்தான் நீங்கள் பிறந்திருக்கிறீர்கள். உங்களின் பெற்றோருக்கு எதுவும் செய்யக்கூடாது என்று தோன்றினால் எதையும் செய்யாதீர்கள். உண்மையாகவே அவர்களைக் கவனிக்க வேண்டும் என்றால் மட்டும் பார்த்துக் கொள்ளுங்கள். பெற்றோர் தங்களின் குழந்தைகளை முதலீடுகளாகவோ காப்பீட்டுத் திட்டங்களாகவோ நடத்தக்கூடாது என்று தெரிவித்திருந்தார்.

இதே விவகாரம் தொடர்பாக தனது ஃபேஸ்புக் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவுக்கு ஏராளமானோர் கண்டனம் தெரிவித்துள்ளனர். ஒருவர், சாமுவேலை மனநல மருத்துவமனைக்கு அனுப்பவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# அமெரிக்கர்களை போல ஐரோப்பியர்களையும் நம்பாதீர்கள்: எச்சரிக்கும் ஈரான்



அமெரிக்கர்களை போல ஐரோப்பியர்களையும் நம்ப வேண்டாம் என்று ஈரான் மூத்த மத தலைவர் காமெனி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஈரான் மத தலைவர் அயத்துல்லா அலி காமெனி அந்நாட்டில் நடந்த அரசு விழா ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் பேசியதாவது. அமெரிக்காவுக்கு மரணம்தான் அதாவது அமெரிக்க அதிபர் ட்ரம்ப், பாதுகாப்பு அமைச்சர் மைக் பாம்பியோ, பாதுகாப்பு ஆலோசகர் ஜான் போல்டனை போன்ற அதிகாரமிக்கவர்களை குறிக்கிறது. அமெரிக்கர்களை போல் நாம் ஐரோப்பியர்களையும் நம்பக்கூடாது. நாங்கள் அவர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம் என்று கூறவில்லை. இருப்பினும் அவர்களிடம் நம்பகத்தன்மை இல்லை என்றார்.

அமெரிக்க அதிபராக டொனால்டு ட்ரம்ப் பதவியேற்ற பிறகு, ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்தை முறிப்பேன் என்றும் ஈரானுடனான அணு ஆயுத ஒப்பந்தம் பைத்தியக்காரத்தனமானது என்றும் ட்ரம்ப் கடுமையாக விமர்சித்து வந்தார்.

இந்த நிலையில் ஈரானுடனான ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகியது. ஆனால் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்த பிற நாடுகள் ஈரானுக்கு ஆதரவு தெரிவித்தன.

ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து வெளியேறியவுடன் அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா விதித்து வருகிறது.

இந்த நிலையில் இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா மிரட்டல் விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஜமால் கொலை திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளது: ஐ.நா. அறிக்கை

பத்திரிகையாளர் ஜமால் கொலை சவுதி அதிகாரிகளால் திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளதாக ஐ.நா.குழு நடத்திய விசாரணையில் வெளியிட்ட முதல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவுதி பத்திரிகையாளர் ஜமால் துருக்கியில் உள்ள சவுதி தூதரகத்தில் கொல்லப்பட்டது தொடர்பாக விசாரணை நடத்திய ஐக்கிய நாடுகள் சபை தனது முதல் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட அறிக்கையில், சவுதி அரேபியாவின் அதிகாரிகள் திட்டமிட்டு மிருகத்தனமாக ஜமாலைக் கொலை செய்துள்ளனர். மேலும் சவுதி, துருக்கி அரசு இந்தக் கொலை குற்றத்தை விசாரிக்க அனுமதி அளிக்காமல் 13 நாட்கள் தாமதப்படுத்தியுள்ளன என்று தெரிவித்துள்ளது. இந்த நிலையில் ஜமால் கஷோகி கொல்லப்படுவதற்கு முன்னரே சவுதி இளவரசர் முகமது பின் சல்மான், அவரைக் கொல்லத் திட்டமிட்டிருந்ததாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதில் ஜமால் தனது சொந்த நாட்டுக்குத் திரும்பி சவுதி அரசை விமர்சிப்பதை நிறுத்த வேண்டும். இல்லையேல் அவர் மீது புல்லட் பயன்படுத்த இருப்பதாக முகமது பின் சல்மான் கூறியதாக செய்திகள் வெளியாகின. ஜமால் கஷோகிஜி சவுதியின் புகழ்பெற்ற பத்திரிகையாளர். 1980களில் அல்கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடனின் வளர்ச்சியிலிருந்து தனது எழுத்துப் பணியைத் தொடங்கியவர். அமெரிக்காவின் வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகையின் பத்தி எழுத்தாளராக இருந்து சவுதி அரசையும், அதன் மன்னர் மற்றும் இளவரசர்களை விமர்சித்து ஆங்கிலத்திலும், அரபிக் மொழியிலும் கட்டுரை எழுதி வந்தவர்.

இந்த நிலையில் அவர் துருக்கியில் சவுதி தூதரக அலுவலகத்தில் மிகக் கொடூரமான முறையில் கொல்லப்பட்டார். இந்தக் கொலை சம்பவத்தில் சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுவதால் உலக அளவில் சவுதிக்கு எதிரான அதிர்வலை ஏற்பட்டது.

முதலில் இந்தக் கொலைக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லை என்று கூறிய சவுதி பின்னர் சாட்சியங்கள் வலுவாக இருந்ததைத் தொடர்ந்து ஒப்புக்கொண்டது.

# விசா அதிகாரியின் கன்னத்தில் அறைந்த லண்டன் பெண்மணி: 6 மாதம் சிறை



இந்தோனேசிய விசா அதிகாரியின் கன்னத்தில் அறைந்த லண்டன் பெண்மணிக்கு 6 மாதம் சிறை தண்டனை அளித்து, அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. முன்னதாகக் கடந்த ஆண்டு, அவுஜ்-இ-தகதாஸ் என்னும் பிரிட்டிஷ் பெண்மணி சுற்றுலா விசாவில் இந்தோனேசியா வந்துள்ளார். 43 வயதான அவர் மருத்துவ ஆராய்ச்சியாளர் ஆவார். தன்னுடைய விசாவுக்கான கெடு முடிந்தும் லண்டன் அவர் திரும்பிச் செல்லாததாகக் கூறப்படுகிறது.

விசா காலாவதியான பிறகும் அதிக நாட்கள் தங்கியிருந்ததால் 4 ஆயிரம் டாலர்கள் அபராதத்தைச் செலுத்தும்படி விசா வழங்கும் அதிகாரி கேட்டுள்ளார். இதில் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அப்போது கெட்ட வார்த்தைகளைச் சொல்லி வசைபாடினார் லண்டன் பெண்.

இதனிடையே வாக்குவாதம் முற்றிய நிலையில், விசா அதிகாரியின் கன்னத்தில் பளாரென அறைந்தார் அவுஜ். இதுதொடர்பான வீடியோ இணையத்தில் வைரலானது.

இதனிடையே இதுகுறித்து விசாரித்த இந்தோனேசிய நீதிமன்றம், அரசு அதிகாரிக்கு எதிராக வன்முறையாக நடந்துகொண்டால், அவுஜுக்கு 6 மாதம் சிறை தண்டனை அளித்து உத்தரவிட்டது.


ஆனால் நீதிமன்றத்தில் ஆஜராக மறுத்த அவுஜ், காரசாரமான வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதனால் இரண்டு அதிகாரிகள் அவரின் கைகளில் விலங்கிட்டு, வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றனர். இந்த வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

# இறந்துபோகும் என தெரிந்தும் குழந்தையை பெற்றெடுத்து உறுப்பு தானம் செய்த தாய்

அமெரிக்காவில் டேவிஸ் லோவட் - கிறிஸ்டா டேவிஸ் தம்பதிக்கு கடந்த ஆண்டு டிசம்பர் 25ம் தேதி பெண் குழந்தை பிறந்தது. இதற்கு ரைலே ஆர்கேடியா டயன் லோவட் என பெயரிட்டனர்.

கிறிஸ்டா கருவுற்று 18 வாரங்கள் ஆகியிருந்த நிலையில், அவரது வயிற்றில் இருக்கும் குழந்தை குறைபாடுகளுடன் உள்ளது என மருத்துவர்கள் கூறியுள்ளனர். அதன்படி பிறக்கும் போதே மிகவும் அரிதான சில பாகங்கள் மூளையில் இல்லாமல் பிறந்துள்ளது.

இதனால் மருத்துவர்கள் பெற்றோரிடம், குழந்தை 30 நிமிடத்திற்கு மேல் உயிருடன் இருக்காது என தெரிவித்துள்ளனர். இதனால் இருவரும் கடும் அதிர்ச்சிக்குள்ளாகினர். ஆனால், அனைவரையும் ஆச்சரியப்படுத்தும் வகையில் மருத்துவர்களின் முயற்சியால் ஒரு வாரம் வரை உயிருடன் இருந்தாள். குழந்தை இறந்த பின்பு உடல் உறுப்புகளை தானம் செய்ய நினைத்தால் தானம் செய்யலாம் என மருத்துவர்கள் அறிவுறுத்தினர். இந்நிலையில் டேவிஸ், லோவட் இருவரும் ஒரு வாரம் மருத்துவமனையிலேயே தங்கி, குழந்தை ரைலே உயிர் பிரியும் வரை கூடவே இருந்தனர். மேலும் டேவிஸ் குழந்தையை தொடர்ந்து கண்காணிக்கையில், ரைலே அந்த ஒரு வாரத்தில் ஒரு முறை கூட அழவே இல்லை எனவும், இறப்பதற்கு சற்று முன் லேசாக அழுததை கண்டதாகவும் மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்தார். பின்னர் ஆக்ஸிஜனின் அளவு கணிசமாக குறைந்து குழந்தையின் உயிர் பிரிந்தது.



இதையடுத்து மருத்துவரின் அறிவுரையின் படி, உயிரிழந்த குழந்தையின் இதயவால்வுகள் இரண்டு குழந்தைகளுக்கு பொருத்தப்பட்டன. கிட்னி மற்றும் பிற உறுப்புகள் மருத்துவ ஆராய்ச்சிக்கு வழங்கப்பட்டன.

# இந்த ஆண்டு புதிதாக 230 எமோஜிக்கள் அறிமுகம்

2019-ல் புதிதாக 230 எமோஜிக்களை அறிமுகப்படுத்த யுனிகோட் கன்சார்டியம் முடிவு செய்திருக்கிறது.

யுனிகோட் கன்சார்டியம் என்பது உலக அளவில் கம்ப்யூட்டர் பயன்பாட்டு முறைகளை சீரமைத்து ஒழுங்குபடுத்தும் பன்னாட்டு அமைப்பு.

இந்த அமைப்பு, புதிதாக அறிமுகப்படுத்தப்படும் 230 எமோஜிக்களில் 59 எமோஜிக்கள் வெவ்வேறு உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையிலும் 171 எமோஜிக்கள் பாலினம் சார்ந்ததாகவும், தோல் நிறம் சார்ந்ததாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்திருக்கிறது.

இயந்திர கை, செவித்திறன் சாதனம் உடையவர், ரத்தத் துளி, வேபிள் பிஸ்கட், ஐஸ் க்யூப், கொட்டாவி விடும் முகம், கிள்ளும் கை என வித்தியாசமான எமோஜிக்கள் தயாராகி இருக்கின்றனவாம்.

இதுதவிர எமோஜிக்களை பன்முகத்தன்மை கொண்டதாக உருவாக்கும் விதத்தில், சக்கர நாற்காலியில் இருக்கும் ஆண் அல்லது பெண், கைகட்டி நிற்கும் உருவகங்கள், மோட்டாரைஸ்டு சக்கர நாற்காலிகள், வழிகாட்டும் நாய் ஆகியனவும் இந்த எமோஜி பட்டியலில் இணைக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆண்டு செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் செல்போன் உபகரணங்களில் இந்த எமோஜிக்கள் பயன்பாட்டுக்கு வரும் எனக் கூறப்படுகிறது.

எமோஜிக்கள் வரலாறு..

1997-ல் ஜப்பானின் ஜெ-ஃபோன் என்ற தொலைதொடர்பு நிறுவனம் 90 வகையான எமோஜிக்களை அறிமுகப்படுத்தியது. இவை பின்னர் யுனிகோட் தரத்துக்கு மறுசீரமைப்பு செய்யப்பட்டன. ஆனால் அந்தக் காலகட்டத்தில் இந்த வகை மொபைல் போன்கள் மிகவும் விலை உயர்ந்ததாக இருந்ததால் அவை அதிகமாக விற்கவில்லை.

பின்னர் 1999-ல் ஷிகேடகா குரிட்டா என்பவர் அதிகம் பேரைச் சென்றடையும் வகையில் எமோஜிக்களை உருவாக்கினார். இவர் ஜப்பான் என்டிடி டொகொமோ நிறுவனத்தில் இருந்தார்.

ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட எமோஜி 176ல12ல12 என்ற பிக்ஸல் அளவில் இருந்தன. இப்போது தொழில்நுட்ப மேம்பாட்டால் எமோஜிக்கள் எளிதாகச் சாத்தியமாகிவிட்டன.

THAMILTHANTHI தமிழ்த்தந்தி
உண்மையாய். உரிமையாய். உணர்வாய்.
ஞாயிற்றுக்கிழமை 10.02.2019
இல. 146,டோசன் வீதி, கொழும்பு2
தொலைபேசி: 0114369412 பக்ஸ்: 0114641294
மின்னஞ்சல்: thamilthanthi@gmail.com

# தமிழ் அரசியல் தலைமைகளை நம்பலாமா?

இலங்கைத் தமிழரின் அரசியல் போராட்டம், அரசியல் தீர்வு முயற்சி, அரசியல் விடிவுக்கான செயற்பாடு என்பவை எத்திசை நோக்கி இப்போது செல்கின்றன என்ற கேள்வி கடந்த சில நாட்களாக மேலோங்கி வருகிறது. தமிழ் மக்கள் சார்பில் குரல் கொடுப்பவர்கள், பேச்சுவார்த்தை நடத்துபவர்கள், தீர்வை நோக்கி காய்களை நகர்த்துபவர்கள் இப்போது யார்? தாம் சார்ந்த சமூகம், தாம் பிரதிநிதித்துவம் செய்யும் இனம், தாம் சார்ந்த அரசியல் கட்சி என்பவற்றைவிட யாரோ ஒருவருக்காக அவர்களின் இயந்திரத்தின் சக்கரமாக சிலர் செயற்படுவது கண்கூடாகத் தெரிகிறது. கடந்த சில நாட்களாக பொன்னாடைகள் (பன்னாடைகள்), மலர்மாலைகள், சந்தன மாலைகள், மேளதாள வாத்திய சமேத ஊர்வலங்கள் என்ற முன்னைய அரசியல் கலாசாரம் மீண்டும் மெதுமெதுவாக தலையெடுக்க ஆரம்பித்துள்ளது.

வழிபாட்டுத்தலங்களையும், வி ளை ய ாட் டு மைதானங்களையும், வெள்ளம் வழிந்த திடல்களையும் மையப்படுத்தி ஒளிப்பட பரப்புரைகள் ஒருபுறம். தங்களுக்குத் தாங்களே கூட்டங்களை ஏற்பாடு செய்து அட்டகாச அறிவிப்புகளை வெளிப்படுத்துவது இன்னொருபுறம். விரைவில் தேர்தல்கள் வரப்போகின்றன என்பதை வடக்கு மக்கள் அறிய ஆரம்பித்து விட்டனர்.

இந்தத் திருவிளையாடல்களுக்கு மத்தியில் சில ஊடகங்கள் அகப்பட்டு நெரிபடுவதையும் காண முடிகிறது. இந்த வகையில், வடக்கில் பவனி வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எல்லாமாகத் தம்மை முன்னிலைப்படுத்தி வரும் சுமந்திரன் என்னும் நாடாளுமன்ற உறுப்பினர். கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் வடபகுதித் தமிழரின் வாக்குகளை கூட்டமைப்பினரே மைத்திரிக்கும் ரணிலுக்கும் பெற்றுக் கொடுத்தனர் என்று அவர்களே பலதடவை கூறியுள்ளனர். இப்போது கூட்டமைப்பினர் மைத்திரி பக்கம் இல்லை. ரணிலுடன் அவர்கள் இரண்டறக் கலந்துவிட்டனர். சுமந்திரனின் அண்மைக்கால செயற்பாடுகளை அணுகலாம். இவரது அரசியல் வாழ்க்கை முதல் பத்தாண்டை இன்னமும் பூர்த்தி செய்யவில்லையென்பதை இங்கு முதலிலேயே குறிப்பிட வேண்டும். கூட்டமைப்பில் எல்லோரும் தமக்குப் பின்னால் தானென்று படம் காட்டும் போக்கில் இவரது அரசியல் வியாக்கியானங்கள் அமைந்துள்ளன. கூட்டமைப்புக்கு சம்பந்தன் என்றொரு தலைவர் இருப்பதை மறக்கும் வகையில் இவருக்கு கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

ஒற்றையாட்சிக்கும் ஒருமித்த நாட்டுக்கும் ரணிலுக்கோ, மைத்திரிக்கோ, மகிந்தாவுக்கோ தெரியாத அல்லது புரியாத அரசியல் விளக்கங்களை அதிமேதாவித்தனமாகக் கூறி வருகிறார். இந்த மாதம் (பெப்ரவரி)-4ம் திகதிக்கு முன்னர் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு வரப்போவதாக செல்லுமிடமெங்கும் சொல்லி தமிழர் காதுகளில் பூ வைக்கிறார். அது சாத்தியமில்லையென்பதை சிங்களவர் மட்டுமன்றி தமிழரும் நன்கறிவர். மூன்றரை ஆண்டுகளாக தைப்பொங்கல், தீபாவளி, புதுவருடம் ஒவ்வொன்றின்போதும் நம்பிக்கை கூறி வந்த சம்பந்தனின் அறிவிப்புகள் காற்றோடு பறந்து விட்டன. இப்போது சுமந்திரன் சிங்கள தேசத்தின் சுதந்திர நாளை நம்பிக்கை நாளாக பிரகடனம் செய்துள்ளார். ஆனால், அவரது வட்டத்துக்குள்ளிருந்தே கருத்துகள் மோதுகின்றன. அரசாங்கம் தங்களை ஏமாற்றுகிறது என்று குழம்புகிறார் மாவை சேனாதிராஜா.

புதிய அரசியலமைப்பு ஒருபோதும் சரிவராது என்கிறார் புளொட் சித்தார்த்தன். ரெலோவின் செல்வம் அடைக்கலநாதன் கள்ள மௌனம் மேற்கொள்கிறார். ரணில் பின்வாங்க மாட்டாரென்று இன்னும் குருட்டு ஆருடம் கூறுகிறார் சம்பந்தன். புதிய அரசியலமைப்பு உருவாக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டபோது நாடாளுமன்றத்தின் 225 உறுப்பினர்களும் ஆதரவளித்தனர். இம்மாதம் முற்பகுதியில் இதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோது 56 உறுப்பினர்கள் மட்டுமே பங்குபற்றினர் என்றால் இதன் எதிர்காலத்தை உய்த்துணரலாம். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலின் ஏஜன்டாக செயற்படுவதற்கு தமக்குள்ள தகுதிகளை மக்கள் முன்னால் நிலைநாட்ட சுமந்திரன் முயற்சிக்கிறார். ஒருபுறம் வேடன் மறுபுறம் நாகம் என்பது போல, தாயகத்தமிழர் நசிபடும் நிலைமை இப்போது வியாபித்து வருவது பரிதாபத்துக்குரியது.



காலம் காலமாக உயிர்கள், உடைமைகள், உறவுகள், உரிமைகள் என யாவற்றையும் இழந்து தற்போது மீதமிருக்கும் உயிர்களாவது நிம்மதிப் பெருமூச்சு விட வேண்டும். அத்துடன் தமது எதிர்கால சந்ததிகளும் கடந்து வந்த துன்பங்களை அனுபவிக்கக்கூடாது என்ற ஒரே நோக்கத்தின் பால் பாதிக்கப்பட்ட மக்கள் வீதிக்கு வந்து போராடத் தொடங்கியுள்ளனர்

# மழைநின்றும் தூறல் நிற்காத கதையாக இலங்கை அரசியல்

மழை நின்றும் தூறல் நிற்கவில்லை என்ற கதையாக ரணில்-மைத்திரி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து நான்கு வருடங்கள் உருண்டோடிவிட்ட பின்னரும், இந்நாட்டின் ஆரம்பகால அரசியலின் தாக்கம் என்பது நின்றபாடில்லை. கடந்த மூன்று வருடத்திற்கு முன் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் சிலவே இதற்கு பிரதான காரணங்கள் எனலாம். இதன் காரணமாக நல்லாட்சி தருவோம் என்ற வாக்குறுதியுடன் அரசுக் கட்டில் ஏறிய நாட்டின் புதிய தேசிய அரசாங்கத்தின் செயற்பாடுகளால் நாட்டில் நல்லாட்சி இடம்பெறுகின்றதா என்ற கேள்வி எழும் நிலைமைக்கு அண்மைக் கால அரசியற் போக்குகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

அந்தவகையில், ஆரம்பத்தில் எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனாவை ஜனாதிபதியாக தெரிவு செய்த வாக்காளர்கள் அந்த வாக்குறுதிகளை நம்பி அவரைப் பதவியில் அமர்த்தவில்லை. தத்தமது காரணங்களுக்காக அப்போதைய ஜனாதிபதியை பதவியில் இருந்து இறக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தங்களுக்கான நீதியாய விடிவு காலம் பிறக்க வேண்டும் என்ற எண்ணப்பாங்குமே அவர்களுக்கு இருந்தது. ஆனால் இவ்வாட்சி கட்டில் ஏறியதிலிருந்து அதன் பங்காளிகளாக உள்ள அரசியற் தலைமைகள் தங்களையும் குழப்பிக்கொண்டு , வாக்களித்த மக்களையும் குழப்பிக்கொண்டு இல்லாத ஓர் ஊருக்கு இனியும் வழி தேடிக்கொண்டு, இருப்பதையும் நடப்பதையும் இல்லாததாகவே காட்டிவருகின்றார்கள். அதனையே அண்மைக்காலங்களில் மக்கள் உணர்வுபூர்வமாக சிந்திக்கத் தொடங்கி இன்று, சிவில் சமூகம் வெகுண்ட எழுச்சிகளாக பல்வேறு பிரதேசங்களிலும் போராட்டங்கள் மலினப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

இருப்பினும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தின் ஊடாகவும், மகாணசபைகள் ஊடாகவும் செய்ய முடியாத ஒரு விடயத்தை எந்தகைய இழப்புக்களும் இன்றி தங்களை வருத்திக் கொண்டு பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியிலும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்கிறார்கள். நாட்கள் செல்லச் செல்லத் தான் அந்தப் போராட்டம் வலிமை பெறுவதுடன் அந்தப் போராட்டத்தின் நியாயம் உணரப்பட்டு ஆதரவும் பெருகிவருகின்றமையை காணக்கூடியதாக உள்ளது. இங்கு இவ்விடத்தில் அந்த மக்களின் மனவுறுதியை பாராட்டியே ஆகவேண்டும்.

எனினும் ரணில்- மைத்திரி அரசாங்கம் தாம் அளித்த வாக்குறுதிகளை ஓரளவு திருப்தியளிக்கின்ற வகையில் நிறைவேற்றியிருந்தாலும் கூட இன்றளவும் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வினைத் தொட்டும் தொடாமலும்; இருப்பது தமிழ் மக்களிடையே அதிருப்தியையே ஏற்படுத்தியுள்ளது. வடகிழக்கு வாழ் மக்களின் தேவையாக, இன்று தமிழ் மக்கள் அன்றாடம் அனுபவிக்கும் இராணுவத்தினரின் கைவசமிருக்கின்ற காணிகளை மீளப்பெறல், தங்களது சொந்தக் காணிகளில் மீள் குடியேறல், வாழ்வாதாரப் பிரச்சினை, இராணுவத் தலையீடற்ற சுதந்திர வாழ்வு, சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோருக்கான விடுதலை, வேலையில்லாப் பிரச்சினை முதலான நடைமுறைப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே முக்கிய தேவைகளாகக் காணப்படுகின்றன.

மேற்படி தமிழ் மக்கள் குறித்த பிரச்சினைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உரிய தீர்ப்பினைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் பல சந்தர்ப்பங்களில் பேச்சுவார்த்தைகளை நடத்தியும் அவை முற்றுப் பெறாத முடிவாகவே காணப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கான நிரந்தரத் தீர்வினைப் பெற்றுக் கொள்ளும் வகையில் நடத்திவரும் பேச்சுவார்த்தைகளுக்கு செவி சாய்ப்பதுடன், இதனைப் பொறுப்பேற்று உடன் தீர்த்துவைப்பது இன்றைய அரசின் கையில் தங்கியுள்ளது. உடனடித் தீர்வைப் பெறுவதே அவர்களது இன்றைய ஆட்சிமாற்றத்தின் பிரதான தேவையாக உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அண்மைக்காலமாக தமிழரின் தாயகப் பிரதேசமான வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டியும், தமது காணிகளில் குடியேறுவதற்கான உரிமைகளுக்காகவும் போராடிவருகின்றனர். முல்லைத்தீவின் பிலக்குடியிருப்பு மற்றும் கிளிநொச்சியின் பரவிப்பாஞ்சான் ஆகிய காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளதே தவிர, ஏனைய கோரிக்கைகள் இன்றுவரை முடிவுகள் இன்றியே தொடர்கின்றது. தொடர் போராட்டங்களால்



சரணியா சுப்ரமணியம்
B.A (Hons)
பேராதனை பல்கலைக்கழகம்

போராட்ட களத்தில் உள்ளவர்களும், அவர்களது குடும்பத்தினர், பிள்ளைகள் எனப் பலரும் அரசாங்கத்தின் மீதும், தமது தலைமைகள் மீதும் வெறுப்படைந்து உள்ளனர். இந்தநிலையில், கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று ஒரு பகுதியில் தொடங்கிய முழு அடைப்பு போராட்டம் கடந்த வருடம் ஒட்டுமொத்த வடக்கு, கிழக்கின் முழு அடைப்பிற்கு வித்திட்டது. இவ்வட கிழக்கு முழு அடைப்புப் போராட்டம் குறித்து அமைச்சரைவயின் பேச்சாளரின் கருத்து மிக முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டி விடயமாக அன்றைய சூழலில் அமைந்திருந்தது.

நல்லாட்சி அரசாங்கத்தில் மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடுவதற்கான ஜனநாயகம் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு மக்கள் நன்றி தெரிவிக்க வேண்டும். இந்த முழு அடைப்பினால் அரசாங்கத்திற்கு எந்தவித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. தேவையேற்பட்டால் இன்னுமொரு முழு அடைப்பு போராட்டத்தை முன்னெடுக்க முடியும். அதற்கான சூழலை ஏற்படுத்தியுள்ளோம் என்றும் தெரிவித்திருந்தார். அமைச்சரின் இந்தக்கூற்றில் இருந்து அரசாங்கம் பிரச்சினைகளை இன்னும் தீர்ப்பதற்கு தயாரில்லை என்பது தெரிகிறது. அதேநேரத்தில் தமிழ்த் தலைமைகள் அரசாங்கத்தை மக்கள் பால் திருப்புவதற்கு போதிய அழுத்தம் வழங்கவில்லை என்பதும் நிரூபணமாகியது.

இதுதவிர அமைச்சரின் கூற்றில் இருந்து, அழுத்தம் இருந்தால் தான் தீர்வு கிடைக்கும் என்றும் தெரிகிறது. அரசாங்கம் மக்களின் பிரச்சினைகளை உணர்ந்து தீர்வளிக்க வேண்டிய கடப்பாடு உடையது. அந்தக் கடமையில் இருந்து தவறும் போது அதனை சுட்டிக் காட்ட வேண்டிய பொறுப்பு பாதிக்கப்பட்ட தமிழ்ச் சமூகத்தின் தலைமைக்குரியது என்பதை தலைமைகள் உணர்ந்து செயற்பட வேண்டும்.

அந்தவகையில் இன்று வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. இவற்றில் கிழக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால் பிரதான பிரச்சினையாகக் காணிப் பிரச்சினை காணப்படுகின்றது. அதாவது மட்டக்களப்பு வாசிகளான தமிழ்பேசும் மக்கள் தங்களது காணிகளை மற்றவர்கள் அடாவடியாகக் கைப்பற்றியுள்ளதாகக் கூறுகின்றார்கள். முஸ்லிம்களின் காணிப் பிரச்சினை பற்றி முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் குறிப்பிட்ட கருத்தையும் மறுதலிக்க முடியாது. 'காணிப்பிரச்சினை உடனடிடகத் தீர்க்கப்படக்கூடிய சாதாரண விடயமல்ல. அவற்றில் சட்டப் பிரச்சினைகளும் இருக்கின்றன. சட்ட ஏற்பாடுகளில் சில மாற்றங்களைக் கொண்டு வந்ததன் பின்னர் இந்தக் காணிப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முடியும் என்று அமைச்சர் கூறியிருந்தார். எனினும் காலம் கடத்தாமல் இதற்குரிய தீர்வைப் பெற்றுக் கொடுப்பது உரிய தலைமைகளின் பாரிய பொறப்பல்லவா?

எனவே காலம் காலமாக உயிர்கள், உடைமைகள், உறவுகள், உரிமைகள் என யாவற்றையும் இழந்து தற்போது மீதமிருக்கும் உயிர்களாவது நிம்மதிப் பெருமூச்சு விட வேண்டும் அத்துடன் தமது எதிர்கால சந்ததிகளும் கடந்து வந்த துன்பங்களை அனுபவிக்கக் கூடாது என்ற ஒரே நோக்கத்தின் பால் பாதிக்கப்பட்ட மக்கள் வீதிக்கு வந்து போராடத் தொடங்கியுள்ளனர். இம் மக்களது கண்ணீரைத் துடைத்து எதிர்காலத்தை ஒளிமயமாக்க வேண்டிய பொறுப்பு நல்லாட்சியையே சாரும். எனவே மக்கள் மயப்பட்ட போராட்டம் அவர்களால் அவர்களுக்கான நீதி கோரப்படுகிறது.. அவர்களாகவே அரசிற்கு போராட்ட மூலமாக அழுத்தங்களை வழங்கி நீதியைப் பெற்றுக் கொள்ளட்டும் என்று பாராமுகமாக தமிழ் அரசியற் தலைமைகள் செயற்படாமல் தமது அரசியல் இலாப நட்ட கணக்குகளை புறந்தள்ளி மக்களின் வாக்குப்பலத்தால் பதவிபெற்றுள்ளதை சற்றேனும் உணர்ந்து, பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க முன்வர வேண்டும் என்பதே மக்களது எதிர்ப்பார்ப்பாக உள்ளது.



# மீண்டும் சர்ச்சைக்குள்

## வடமாகாண பொருளாதார மத்திய நிலையம்

திவியா

வடமாகாணத்திற்கான பொருளாதார மத்திய நிலையம் வவுனியா மதவுவைத்தகுளம் பகுதியில் 291 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில், குறித்த பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கான இட தெரிவு தொடர்பில் பல்வேறு குழப்ப நிலைகள் மக்கள் மற்றும் அரசியல்வாதிகள் மத்தியில் ஏற்பட்டிருந்தது. இந்த நிலையில் இறுதியாக வவுனியா, மதவுவைத்தகுளம் பகுதியில் இரண்டரை ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டு அதன் பூர்வாங்க வேலைகள் கடந்த 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அப்போதைய கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் ஹரிசன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது வடக்கிற்கான பொருளாதார மத்திய நிலையம் எங்கே அமைவது தொடர்பில் தனிப்பட்ட விரோதங்கள் குரோதங்களைப் பயன்படுத்தி ஒரே கட்சியிலுள்ளோர் இழுபறிப்படுவதும், வேறு மாகாணத்துக்குக் கொண்டு செல்வோம் என அரசதரப்பு மிரட்டிக்கொண்டிருப்பதும் வேதனைக்குரிய விடயமாகும்.

உண்மையில் இந்த பொருளாதார மத்திய நிலையமானது வடமாகாணத்திற்குரிய வதப்பிரசாதமென்றே சொல்லமுடியும். உள்ளூர் விவசாயிகளின் விவசாய உற்பத்தியை உயர்த்துவதும் அவற்றைச் சந்தைப்படுத்துவதும் வவுனியா மாவட்டத்துக்கு மட்டுமன்றி வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களுக்கும் நன்மை பயக்கத்தக்க ஒன்றே ஆகும். இதனை எங்கு அமைப்பது என்பதில்தான் இழுபறி நிலை தொடர்ந்தது சிலர் தமது சுயலாபங்களுக்காக தாண்டிக்குளம் அல்லது வவுனியா நகரை பரிந்துரை செய்திருக்கின்றனர். ஆனால் இதன் எதிர்காலப் பாதிப்புக்கள் தமிழ்மக்களை எவ்வளவுக்கு ஆக்கிரமிக்க வல்லன என்பதை மனச்சாட்சியோடு சிந்திக்கவேண்டும்.

தாண்டிக்குளமா? ஓமந்தையா? மாங்குளமா? என்ற இழுபறி நிலை தொடர்ந்ததனால் பிரதேச ரீதியான காழ்ப்புணர்வுகள் தோன்றியது இதனால் விரைவாக இதற்கொரு முடிவினைக் காண வேண்டும் எனப் ஆர்பாட்டங்கள் ஊர்வலங்கள் எனநடாத்தினர்

வடமாகாணத்துக்கான பொருளாதார மத்திய நிலயமாதலால் அது வவுனியா நகரில் அமைவது பொருத்தமாக இருக்க வாய்ப்பில்லை எனவும் ஏனெனில் வவுனியா நகர் நகரசபை தரத்திலிருந்து மாநகரசபையாக உயர்த்தப்படவுள்ள நிலையில் அங்கே இதுமாதிரியான ஒரு மத்திய நிலையம் அமைவது சூழலியல் பிரச்சினைகள் தோற்றுவிக்க வாய்ப்புக்கள் அதிகமுள்ளது. அத்துடன் ஒரு மாநகர எல்லைக்குள் இதுமாதிரியான ஒரு நிலையம் அவசியமற்றது. தமிழ் உற்பத்தியாளர்களின் உழைப்புக்கள் சுரண்டப்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் எழலாம். ஆகவே வவுனியா நகர் பொருத்தமற்ற ஒன்றாகயிருந்தது

தாண்டிக்குளம் வவுனியா நகரத்தின் ஒரு நகர நிழல் பிரதேசமாகும். எதிர்காலத்தில் நகரமாக விஸ்தரிக்கப்படும் வாய்ப்புக்கள் அதிகமுண்டு. அத்துடன் ஒரு பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கான கேந்திரத்தன்மை புவியியல் மற்றும் பௌதீக அடிப்படையில் பார்த்தால் தாண்டிக்குளத்திற்கு இல்லை. இங்கேகூட தமிழ் உற்பத்தியாளர்களின் உழைப்புக்கள் சுரண்டப்படவும் முடக்கப்படவும் சாத்தியங்கள் இருக்கின்றன.

ஓமந்தை வவுனியா நகரத்திலிருந்து வெறும் 19 கிலோமீட்டர்கள்தான். தாண்டிக்குளத்திலிருந்து பார்த்தாலும் வெறும் 12 கிலேமீட்டர்களே. ஆனால் பொருளாதார மத்திய நிலையம் அமைவதற்கான கேந்திர முக்கியத்துவம் ஓமந்தையில் உள்ளது. பல விவசாயக் கிராமங்களை ஊடறுக்க வல்ல வீதிகள் இவ்விடத்தில் யாழ்-கண்டி நெடுஞ்சாலையோடு இணைகின்றன. பரந்த விவசாயப் பிரதேசத்தைக்கொண்ட ஒரு பசுமை வலையம் இதைச்சுற்றி விஸ்தரிப்பாகும். இதனால் இப்பிரதேசம் மட்டிமல்ல ஏற்கனவே குறிப்பிட்ட தாண்டிக்குளம் மற்றும் கனகராயன்குளம் என ஒரு விசாலமான வலயம் உருவாகும். இது வடமாகாண தமிழ் உற்பத்தியாளர்களை சுரண்டல்கள் இன்றி இன்னுமின்னும் ஊக்குவிக்கக்கூடிய ஒரு நிலையைத் தோற்றுவிக்கும். அத்துடன் வவுனியா நகருக்கும் கிளிநொச்சி நகருக்குமான மிக நீண்ட சூனியப் பிரதேசம் வளர்ச்சியடையும் தன்மைகள் தோன்றும். அதேநேரம் வடமாகாணத்தின் மையப் புள்ளி எனப்படும் மாங்குளம் இதன் உப கேந்திரமாக மாறி இன்னும் ஒரு பாய்ச்சலுக்குள் உள்நுழையும். ஓமந்தைக்கும் வவுனியா நகருக்குமிடையில் ஒரு பொருளாதார நேர்கோடு உருவாகும். இதனால் வவுனியாவின் ஏனைய பிரதேசங்களுக்கோ வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களுக்கோ எவ்வித கெடுதலும் நேரப்போவதில்லை. ஒரு சமநிலைத்தன்மை பேணப்படும்.

ஆனால் இதை மீறி வவுனியா நகரில் அமைக்கப்படுவது கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் மோசமாகப் புறக்கணிக்கப்படுகின்றார்கள் வேற்றின மக்களின் பொருளாதார ஊடுருவல் தலைதூக்கும். தமிழ் உற்பத்தியாளர்களும் பொருளாதார முயற்சியாளர்களும் பாதிக்கப்படுவார்கள்

இவையெல்லாம் தேவைதானா என்று ஒரு காலத்தில் நாமே தலையில் கை வைக்கும் கந்தறு நிலை உருவாகும். இதில் அரசியல்வாதிகளுக்கு அளப்பெரும் இலாபங்கள் கிடைத்தாலும் அப்பாவித் தமிழ் மக்களே ஏமாற்றப்படுவர்.

ஓமந்தைக்கோ மாங்குளத்திற்கோ எதிரணியில் உள்ளவர்களை வைத்தே இதை மிகச்சிறப்பாக எடை போடலாம். இதை எங்கே, யாருக்காக அமைக்க கங்கணம் கட்டுகிறார்கள் என்பதைத் தெளியலாம்.

வடமாகாண மக்களுக்கான இந்த அருமருந்தன்ன வாய்ப்பை தவறான நோக்கில் பயன்படுத்த நாம் யாருமே அனுமதித்திருக்ககூடாது. முடிந்தால் ஓமந்தை அல்லது மாகாணத்தின் மத்திய புள்ளியான மாங்குளம்.அமைத்திருக்கலாம் இதுவே பலரது ஒருமித்த முடிவுவாகவும் இருந்தது பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையில் அமைப்பதே பொருத்தமானது என்று ஜனநாயக ரீதியாக முடிவெடுத்தாலும் சில சுயநலம் சார்ந்த சக்திகள் மேலும் குழப்பங்களையும் இழுபறியையும் உருவாக்கிய வண்ணம் இருந்தனர்

ஜனநாயகம் என்பது வெறுமனே புள்ளடி போடும் ஒரு விவகாரமல்ல. ஜனநாயகம் என்பது நடைமுறையில் அதற்கான மரபுகளையும், சம்பிரதாயங்களையும், பண்பாட்டையும், வாழ்க்கை முறையையும் கொண்ட அன்றாட நடைமுறையோடு பின்னிப்பிணைந்த விடயமாகும்.

பொருளாதார மத்திய நிலையத்தை எங்கு அமைப்பது என்ற இழுபறி ஏற்பட்டபோது அதற்கு ஜனநாயக ரீதியாக தீர்வு காணப்போவதாகக் கூறி வடமாகாணசபை உறுப்பினர்களையும், வடமாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்த ஒரு கூட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூடிமுடிவுகள்எடுக்கப்பட்டதூ

அந்தக் கூட்டங்களில் இந்த விடயம் விரிவாக ஆராயப்பட்டு முடிவெடுக்கப்பட்டது ஆனால் ஜனநாயகரீதியில் முடிவை எட்டுவதாகக் கூறி அது முதலமைச்சரின் கையில் ஒப்படைக்கப்பட்டது.

முதலமைச்சரும் சம்பந்தனின் கருத்தினை ஏற்று, மாகாணசபை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்தினைக் கேட்டறிந்தார். இதன் பிரகாரம் ஓமந்தையில் இது அமைவதே பொருத்தமானது என பெரும்பாலானவர்கள் வாக்களித்தனர்.

இது இத்துடன் நிறைவு பெற்றிருக்க வேண்டும்.ஆனால், இதன் பின்னர் பாராளுமன்றக்குழு கூடி இந்தக் காணிகளைப் பார்வையிடுவதாகவும், ஓமந்தையிலேயே இதனை நிறுவுவதற்கும் முடிவெடுக்கப்பட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, முதலமைச்சரை சந்தித்து நீங்களே இதற்கான முடிவை எடுங்கள் என்றும் கூறியிருந்தார்.

அதேசமயம், தாண்டிக்குளத்தைத் தெரிவு செய்துள்ள அமைச்சர் றிசாத் பதியூதீன், கடந்த 15.06.2010ஆம் ஆண்டு வவுனியாவில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் அன்றைய வடமாகாண ஆளுநராக இருந்த சந்திரசிறி, பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிபர் திருமதி சாள்ஸ், நகரசபை தவிசாளர், உறுப்பினர்கள், திணைக்கள தலைவர்கள் இணைந்து முடிவுஎடுத்திருந்தனர் .

ஆட்சி மாறியவுடன் கொள்கையை மாற்றுவது பதவி ஆசை பிடித்த அரசியல் வாதிகளுக்கு கைவந்தகலை. ஆனால் அன்றைய அந்த முடிவானது ஒரு நிபுணர்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு அதனடிப்படையில் எடுக்கப்பட்டது. ஆனால் அந்தமுடிவை என்ன காரணத்திற்காக மத்திய அமைச்சர்கள் இதனை எதிர்த்தார்கள் என்பது இன்னமும் புரியாத புதிராகவே உள்ளது.இவையெல்லாம் தேவைதானா என்று ஒரு காலத்தில் நாமே தலையில் கை வைக்கும் கந்தறு நிலை உருவாகும். இதில் அரசியல்வாதிகளுக்கு அளப்பெரும் இலாபங்கள் கிடைத்தாலும் அப்பாவித் தமிழ் மக்களே ஏமாற்றப்படுவர்.

வடமாகாண மக்களுக்கான இந்த அருமருந்தன்ன வாய்ப்பை தவறான நோக்கில் பயன்படுத்த நாம் யாருமே அனுமதித்திருக்ககூடாது. தற்போது அதன் கட்டுமான பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் அதில் உள்ள வர்த்தக நிலையங்களை வழங்குவது தொடர்பாக கவனம் செலுத்தப்படுகிறது. குறித்த பொருளாதார மத்திய நிலையத்தில் 50 கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 35 கடைகளை ஏற்கனவே வவுனியா நகர்ப்பகுதியில் மொத்த மரக்கறி நிலையத்தில் வியாபாரம் செய்பவர்களுக்கு வழங்க முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டும் என மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அவற்றையும் திறந்த கேள்வி மூலம் வழங்கவுள்ளதாக கூறப்படும் நிலையில் மீண்டும் சர்ச்சையான நிலை தோன்றியுள்ளது.

இதனையடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு குறித்த விடயம் முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா அவர்களினால் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இதன்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறு தெரிவித்துள்ளதாக முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.




அவர் மேலும் தெரிவிக்கையில், வவுனியாவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையத்தின் கடைகளை வழங்கும்போது ஏற்கனவே கடந்த 40வருடங்களாக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்ற 35 வியாபாரிகள் பாதிக்கப்படாத வகையில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டுமென்று கடந்த வருடம் நடைபெற்ற வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

எனினும் இந்த தீர்மானத்திற்கு முரணாக அமைக்கப்பட்டுள்ள கடைகளை வழங்குவது தொடர்பில் கடந்தவாரம் திறந்த கேள்வி கோரப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட வியாபாரிகள் என்னைதொடர்புகொண்டதன் அடிப்படையில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா அவர்களூடாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

(6.2) நடைபெற்ற கூட்டத்தில் பிரதமரால் துறைசார்ந்த அமைச்சருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. இதில் ஏற்கனவே வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் 35 உரிமையாளர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் கடைகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் மிகுதியாகவுள்ள கடைகளை திறந்த கேள்வியில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு துறைசார் அமைச்சருக்கு பிரதமரால் மணிப்புரை வழங்கப்பட்டதாக மேலும் அவர் தெரிவித்தார் இதுவே இன்றைய வவுனியா வாழ்மக்களின்நிலை.

# யுத்தம் முடிவடைந்து பத்து வருடங்கள்

# பாதிக்கப்பட்டவர்கள் பாதிக்கப்பட்டவர்களாகவே...

அமெரிக்காவிலிருந்து
எம்.ரூபன்

இலங்கையின் 71 வது சுதந்திர தினம் வடக்கு,கிழக்கை தவிர ஏனைய பகுதிகளில் கொண்டாடப்பட்டுள்ளது. நாட்டில்,இன ஒற்றுமை,ஐக்கியம் குறித்து சகல பெரும்பான்மை தலைவர்களும், மத தலைவர்களும் வழமைபோல பேசியுள்ளனர். சில தலைவர்கள் ஊடகங்களில் இவ்வாறான அறிக்கைகள் விடுத்தனர். ஆனால்,30 வருட கொடிய யுத்தம் முடிந்த பின்னர் வடக்கு, கிழக்கு பகுதி வாழ் மக்களைப்பற்றி இவர்கள் சிந்திப்பதில்லை. யுத்தம் முடிந்து விட்டது, இனி மேல் நாடு வழமைபோல காணப்படுவதாகவே தென்பகுதி மக்களை நம்ப செயற்பட்டுவருகின்றனர். பிரித்தானியர் ஆட்சி செய்யும்போதே 1915 இல் முஸ்லிம்களுக்கு எதிரான கலவரம் இடம் பெற்றதை மறந்துவிட்டனர். அன்றே இனவாதம் பிறந்துவிட்டது. இவர்கள் இன்று சமாதானம், சகோதரம் என்று எல்லாம் பேசினாலும் இன்னும் பல இடங்களில் சந்தேகமாகவே சிறுபான்மை இனத்தவர்களை பார்க்கின்றனர்.

கொழும்பில் சில இடங்களில் மீண்டும் பொலிஸ் பதிவை தமிழர்கள் செய்யுமாறு அறிவிப்பார்கள். பின்னர், அதனை கைவிடச்சொல்வார்கள். அண்மையில் யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் பொலிஸ் பதிவு மேற்கொள்ள உத்தரவிடப்பட்டது. ஆனால், அதற்கு,ஜனாதிபதியின் வருகையால்தான் இந்த ஏற்பாடு என பொலிஸ் தரப்பில் காரணம் கூறப்பட்டது. இதில் இருந்து என்ன தெரிகிறது, தமிழர்கள் மீது இன்னமும் சந்தேகம் உள்ளது என்பதே. இதற்கு முன்பும் ஜனாதிபதி பல தடவைகள் யாழ்ப்பாணம் வந்தார். பொலிஸ் பதிவு இடம்பெறவில்லை.

இறுதி யுத்தம் முடிவடைந்து பத்து வருடங்களாகின்றன. ஆனால், இந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய உதவிகள், இழப்பீடுகள், போன்ற நிவாரணங்கள் இதுவரையும் சரியாக வழங்கப்படவில்லை என அந்த மக்கள் இன்றும் தெரிவிக்கின்றனர்.த ற்போது வழங்கப்படுகின்ற உயிரிழப்புக்கான நட்ட ஈடு, சொத்து அழிவு என்பனவற்றுக்காக இழப்பீடுகள் போதுமானதாக இல்லை என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி.செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா கடந்த ஆண்டு 52 நாட்கள் ஆட்சி மாற்றத்தின் பின் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சரான பின் யாழ்.நகரில் இடம்பெற்ற நிகழ்வில் கூறியுள்ளார். இதேபோலவே மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான வியாழேந்திரனும் கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதுமான உதவிகள் கிடக்கவில்லை என பல தடவைகள் கூறி வருகிறார்.கி ழக்கு மாகாணத்திற்கு தனியான புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் தேவை என்றும் பல தடவைகள் வலியுறுத்தி வந்தார்.

யுத் தம் காரண மாக வீடு வாசல்களை இழந்த மக்களில், படையினர் வசம் உள்ள காணிகள் கடந்த டிசம்பர் மாதம் விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி அறிவித்திருந்தார். ஆனால், இன்னமும் அவர் கூறியபடி உரிய நடவடிக்கை எடுக்கப்படாமல், அந்த மக்கள் தொடர்ந்தும் போராடிக்கொண்டே உள்ளதை காணலாம். மக்களின் விவசாய நிலங்களில் படையினர் விவசாயம் செய்கின்றனர் என அந்த நிலங்களின் உரிமைக்காரர் தெரிவிக்கின்றனர்.

புதிய அரசு பதவி ஏற்றதும் வடக்கின் புனர்வாழ்வு , புனரமைப்பு அமைச்சு பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால்,அவரோ அந்த அமைச்சை பொறுப்பேற்ற பின்னர் வடபகுதிக்கு சென்று அமைச்சின் பணிகள் குறித்து எதுவுமே செய்யவில்லை என அந்த மக்கள் தெரிவிக்கின்றனர். தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களின் கோரிக்கையின்படியே பிரதமரிடம் இப்பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.அதற்கு முன்னர் டீ.எம்.சுவாமிநாதன் இந்த அமைச்சை நிர்வகித்தார். அவரின் பொருத்து வீட்டு திட்டம், ஒரு பிரச்சினையானது. இதுவரையும் அந்த வீட்டுத்திட்டம் பாதிக்கப்பட்ட மக்களை சென்றடையவில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர். கடந்த மூன்று வருடங்களாக இந்த மக்களின் நிவாரண உதவிகளுக்காக வருடம் தோறும் பல மில்லியன் ரூபா வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுவருகிறது. அதை விட வடக்கு,கிழக்கு எம்.பிமாருக்கும் நிதி வழங்கப்பட்டு வருகிறது.



கடந்த வருடம் பிரதமர் ரணில் விக்ரமசிங்க கிளிநொச்சிக்கு விஜயம் செய்தபோது, ஒரு பாடசாலையின் நிலைமை குறித்து அந்த மக்கள் அவரின் கவனத்துக்கு கொண்டு வந்து, புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தனர். அப்போது, பிரதமர் மரங்களுக்கு கீழே இருந்து படிக்கலாம் என கூறியதுக்கு பல விமர்சனங்கள் எழுந்தன. அத்துடன் சில தேவைகளை முன்வைத்து அவரிடம் பொது மக்கள் கொடுத்த மகஜர்கள், விண்ணப்பங்கள் அவரால் நிலத்தில் வீசப்பட்டன. இவை ஊடகங்களில் கண்பிக்கப்பட்டிருந்தன. இவரிடம் தற்போது வடக்கு புனரமைப்பு, புனர்வாழ்வு அமைச்சு வழங்கியிருப்பதால் கிளிநொச்சி சம்பவத்தை நினைவுபடுத்துகின்றனர்.

சில தினங்களுக்கு முன்னர் சாவகச்சேரியில் வெள்ள நிவாரண உதவிக்கு விண்ணப்பித்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி வரவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர். கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வயல்களுக்கான காப்புறுதிக்கு விவசாயிகள் அலைந்து திரிகின்றனர். ஒரு இடத்தில் காப்புறுதி பிரிவு சிங்கள அதிகாரி ஒரு விவசாயியை தாக்கியுள்ளார். இப்படியாக விவசாயிகள் தமக்கான உதவிகளை பெற அடி உதையும் வாங்கவேண்டியுள்ளது.

## நிவாரண உதவிக்கு லஞ்சம் கோரும் அதிகாரிகள்

நிவாரண உதவிக்கு தகுதியான மக்கள் தமது விண்ணப்பங்களை பிரதேச செயலகங்களில் சமர்ப்பிக்கவோ,அல்லது தத்தமது பகுதி கிராம சேவையாளர்களிடம் சென்று உறுதிப்படுத்தவோ அலைந்து திரிகின்றனர். யாழ்ப்பாணத்தில் ஒரு கிராம சேவையாளர் பல ஆயிரம் ரூபாவை லஞ்சமாக கேட்டுள்ளது அரசாங்க அதிபருக்கு முறையிடப்பட்டு, அவர் பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். கிளிநொச்சி பகுதியில் ஒரு பெண் அதிகாரி பயனாளியிடம் லஞ்சம் வாங்கியதால் கைது செய்ப்பட்டுள்ளார். ஆனால், பலர் லஞ்சம் கொடுத்தே தமது நிவாரண உதவிகளை பெறவேண்டிய நிலைமையை காணமுடிகிறது. பாதிக்கப்பட்ட பெண்கள், அதாவது கணவனை யுத்தத்தில் இழந்த பெண்களிடம் லஞ்சமாக பாலியலை சில அதிகாரிகள் கேட்கின்றனர் என்று ஊடகங்கள் பல தடவைகள் தெரிவித்தன. ஒரு பிரபல தொண்டர் நிறுவனம் இவ்வாறு பெண்களிடம் பாலியல் லஞ்சம் கேட்டதாக விசாரணைகளும் நடைபெற்றன.

14 ஆம் பக்கம் பார்க்க....



# தமிழ் மக்களின் வாழ்வில் எழுதப்பட்ட விதியாக ‘ஏமாற்றம்’

நக்கீரர்



இலங்கையில் தமிழ் இனம், தனது இன விடுதலைக்காக சுமார் எழுபது வருடங்களாக ஒப்பற்ற தியாகங்களைச் செய்து போராடி வருகின்றது. இதனால் போராட்டம் என்பது தமிழ் மக்களின் வாழ்க்கையில் எழுதப்பட்ட விதியாக பரிணமித்துக்கொண்டிருக்கிறது. இதற்கு காலம் காலமாக தமிழ் மக்கள் தமது உரிமைக்காக போராடிவருகின்ற நிலவரமே சான்று பகர்கின்றது. அத்துடன் தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்கு பொறுப்பு வாய்ந்த தமிழரசுக் கட்சி இன்று பல்வேறு இழுத்தடிப்புக்களையும் அசமந்தப் போக்குகளையும் கடைப்பிடிப்பதால் இன்று தமிழர்கள் வாழ்வில் எஞ்சப்போவது வெறும் ஏமாற்றமாகவே இருக்கப்போகின்றது. இப்பின்னணியில் தமிழர்களின் விடுதலை காண பல அரசியல் கட்சிகள், விடுதலை அமைப்புக்கள் தோற்றம் பெற்றன. விடுதலைப் புலிகளின் நேரடியான பங்குபற்றல் மற்றும் ஒப்புதலுடன் 2001 ஒக்டோபர் 20 ஆம் திகதி பிரசவித்ததே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகும்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (இ.த.அ.க), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ( EPRLF) தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO ), அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (ACTC) என நான்கு கட்சிகள் ஒன்றிணைந்து தோற்றம் பெற்றதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அந்த வகையில், 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 15 ஆசனங்களையும் 2004 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 22 ஆசனங்களையும் 2010 ஆம் ஆண்டில் 14 இடங்களையும் 2015 ஆம் ஆண்டு தேர்தலில் 16 இடங்களையும் கைப்பற்றியது. அமோக வெற்றி வாகை சூடியது. 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அகில வதால் பிரச்சினைகளும் பிடுங்குப்பாடுகளும் பஞ்சமில்லாமல் நிலவுகின்றன.

த.தே.கூ என்பது வெறுமனே ஓர் அரசியல் செய்யும் கட்சி அல்ல. மாறாக வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களால், தமிழ் தேசியத்தால் ஆணை வழங்கப்பட்ட அமைப்பு. ஆயுதப் போராட்டம் மௌனித்த பின்னர், தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழுவதற்கான தமது உரிமைகளைப் பெற்றுத் தரும் பொறுப்பு தமிழ் மக்களால் தமிழ்க் கூட்டமைப்பிடம் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, இத்தகைய பெரும் பொறுப்பு வாய்ந்த அமைப்பிடம் ‘நீ பெரிதா, நான் பெரிதா’ என்ற பொறாமைக் குணம் சற்றேனும் எழக் கூடாது. தற்போதைய நிலையில் தமிழ் மக்களுக்கு நிலையான நிம்மதி, நிலையான தீர்வு வேண்டும்.

மேலும், 2016,17 ஆம் ஆண்டுக்குள் ஏன் இப்போது தமிழ் மக்கள் கருதக் கூடாது. வடக்கு, கிழக்கு இணைப்பு, தமிழரின் இறைமை, சுயநிர்னயம், சம;டி என எல்லா கோசங்களும் தேர்தல் மேடையில் முழங்கியது. அது தற்போதும் உயிர்ப்புடன் தமிழர் இதயங்களில் உள்ள வேளை அரசியல் தலைவர்கள் அது தொடர்பாக என்ன நிலைப்பாட்டில் உள்ளனர் என தெளிவுபடுத்த வேண்டும்.

ஏனெனில், 20.02.2017 இல் கொழும்பில் த.தே.கூ முக்கியஸ்தர்களை, இந்திய வெளியுறவுச் செயலாளர் ஜெயசங்கர் சந்தித்திருந்தார். அப் பேச்சுவார்த்தையின் நடுவே ஒரு கட்டத்தில் உங்கள் எதிர்பார்ப்பு தொடர்பில் முன்னுரிமை வரிசை என்ன? என கேட்கப்பட்டுள்ளது. அவ்வேளையில் அனைவரும் ஒருமித்து வடக்கு, கிழக்கு இணைப்பு தொடர்பில் குரல் கொடுக்கவில்லை. ஆகவே, அங்கு முன்

**எப்போதுமே தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமை ஏற்படுவதை பேரினவாத அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது. சகிக்காது என்பது எமது பட்டறிவு. ஆகவே, சிறுகருத்து வேறுபாடுகளுக்கும் இடமின்றி விவேகமாகவும் வினைத்திறன் மிக்க விளைச்சலை தரக்கூடிய பாரிய பொறுப்பு உள்ளது என தமிழர் அரசியல் ஆற்றுவோர் அறிந்திருக்க வேண்டும்**

இலங்கை தமிழ்க் காங்கிரஸ் விலகிக் கொண்டது. தமிழீழ மக்கள் விடுதலை இயக்கம் (PLOTE) இணைந்து கொண்டது.

தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல சவால்களுக்கு முகம் கொடுத்து நிற்கின்றது. த .தே. கூ உடையப் போகின்றதா? த. தே கூட்டமைப்புக்குள் பிளவு என்றெல்லாம் நாளாந்தம் பத்திரிகைச் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. த. தே. கூ உருவாக்கம் பெற்ற நாள் முதலே அரசியல் கட்சியாக அதன் பதிவு, சின்னம் எனப் பிரச்சினைகள் ஏற்பட்டாலும், அவைகள் தீர்க்கப்படாமலே கிடப்பில் போடப்பட்டு விட்டன.

தேர்தல் வேளையில் கட்சி ரீதியான ஆசன பங்கீட்டிலும் தமிழரசுக் கட்சி செல்வாக்கு செலுத்துகின்றது. தனது கட்சி அங்கத்தவர்களை அதிகப் படியாக நியமிக்கின்றது என்ற கருத்துகளும் குற்றச்சாட்டுகளும் வருவதுண்டு. உண்மையில், நான்கு கட்சிகள் ஒரு குடையின் கீழ் வந்து ஒன்றினைந்தாலும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஆதிக்கமே கூட்டமைப்பு உருவாக்கிய அன்று தொட்டு இன்று வரை, நிலவு

அரசியல் தீர்வு எட்டப்படும் என இரா. சம்பந்தன் கூறி வந்தார். ஆகவே, அது வரை நாம் பொறுமை காத்தோம். அது நடைபெறவில்லை. ஆதலால் சம்பந்தனும் ஏமாந்து, தமிழ் மக்களையும் ஏமாற்றி விட்டார் ஏமாற்றி விட்டார்கள் எனச் சுரேஸ் பிரேமசந்திரன் கூறி வருகிறார்.

எனவே, இவ்விடத்தில் சம்பந்தன், எந்தத் தகவல் அல்லது தரவு அடிப்படையில் இவ்விதம் கூறினார்? 70 வருட இனப் பிணக்கை, ஒரு வருடத்துக்குள் தீர்க்கப்பட்டுவிடும் என எழுந்தமானமாகக் கூற முடியுமா? போன்ற வினாக்கள் எழுவது நிச்சயமே.

அதுவும் இலங்கை சிங்கள ஆட்சியாளர்கள் பற்றி நன்கு அறிந்திருந்தும் இவ்வாறான உறுதியற்ற வாக்குறுதிகளை வழங்கலாமா? ஆகவே, 2015 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் வேளையில், தமிழ் மக்களது வாக்குகளை வேட்டையாடவே இவ்வாறு கூறியதாக ஆயத்தம் இன்றி, தங்களுக்குள் கலந்துரையாடல் இன்றி, கூட்டமைப்பு பேச்சுவார்த்தையில் பங்குபற்றியமை தெரிந்தது. அடுத்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, த.தே. கூட்டமைப்பை உடைக்க முற்படுகின்றார் என வடக்கு, கிழக்கு சார்ந்த கூட்டமைப்பு அரசியல்வாதிகளே கருத்துக்களைக் கூறி வருகின்றனர். ‘ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம்’ என்பார்கள். அந்த நிலை கூட்டமைப்புக்கு ஏற்பட்டால், அதன் எதிரிகளுக்குத்தான் கொண்டாட்டம்.

எப்போதுமே தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமை ஏற்படுவதை பேரினவாத அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது சகிக்காது என்பது எமது பட்டறிவு. ஆகவே, சிறுகருத்து வேறுபாடுகளுக்கும் இடமின்றி விவேகமாகவும் வினைத்திறன் மிக்க விளைச்சலை தரக்கூடிய அரசியலை செய்ய வேண்டிய பாரிய பொறுப்பு உள்ளது என தமிழர் அரசியல் ஆற்றுவோர் அறிந்திருக்க வேண்டும்.

அகிம்சை ரீதியிலும் ஆயுத ரீதியிலும்

14 ஆம் பக்கம் பார்க்க....

# அடையாள அரசியலில் இலங்கை

பகுதி II

கலாநிதி சு.சிவரெத்தினம்

டொனமூர் அரசியல் திட்டத்தினை தமிழ் உயர் குழாத்தினர் தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தாது தமது நலனை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டதை சென்ற பகுதியில் குறிப்பிட்டிருந்தேன்.

டொனமூர் அரசியல் திட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட சர்வசன வாக்குரிமையினை யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் வரவேற்ற போதிலும் அது எதிர்காலத்தில் ஏற்படுத்தவிருக்கும் தேர்தல் மைய அரசியல் தொடர்பாக விளக்கம் பெற்றவர்களாகவோ அல்லது சர்வசன வாக்குரிமையினை மக்கள்நல அரசியலுக்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது தொடர்பாக சிந்தித்தவர்களாகவோ இவர்கள் எவரும் இருக்கவில்லை;.

சர்வசனவாக்குரிமை தொடர்பாக பின்வரும் இருவித நிலைப்பாடுகள் காணப்பட்டன.

1. சர்வசன வாக்குரிமையின் ஊடாக மக்கள் நல அரசியலை முன்னெடுக்க முடியும் என்று செயற்பட்டவர்கள்.

இந்த விடயம் தொடர்பாக கரிசனை எடுத்துக் கொண்டவர்கள் மட்டக்களப்பைச் சேர்ந்த திருமதி.ஈ.ஆர்.தம்பிமுத்து அவர்களும் திருமதி சி.இ.த.சில்வா அவர்களும் ஆவர். படித்த சொத்துள்ள உயர் வர்க்க ஆண்கள் அரசியலில் பங்கு பற்றி எல்லாருடைய நலன்களையும் தீர்மானிக்கின்றவர்களாக இருந்த சூழலில், பெண்கள் அரசியலில் பங்குபற்றுவதற்கு வேண்டிய அடிப்படை உரிமையாகிய வாக்குரிமைக்காக, பல்வேறுபட்ட ஆண்மையவாத அரசியல் அமைப்புக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் ‘பெண்கள் வாக்குரிமைச் சபை’ என ஒன்றை அடிமைத்து பெண்களின் வாக்குரிமைக்காக குரல்கொடுத்து, டொனமூர் ஆணைக்குழுவினரை 1928 ஜனவரி 14 இல் சந்தித்து இலங்கையில் ஆண்களுக்குச் சமனாக பெண்களும் வாக்குரிமையினை பயன்படுத்த வேண்டும் என்பதற்கும் அப்பால் ஏன் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை பின்வரும் காரணங்களை முன் வைத்து எடுத்துக்காட்டியிருந்தனர்.

2. இலங்கையில் குழந்தை இறப்பு உயிர் விகிதம்

3. வீடமைப்பில் சீர்திருத்தத் தேவை

4. குழந்தை நலம்

5. மருத்துவம்

6. கர்ப்பிணிகளுக்கான உதவி

மேலுள்ள ஐந்து காரணங்களும் பொதுவான மனிதகுல விருத்தியின் அடிப்படைத் தேவைகளாக இருக்கின்றன. பிரதிநிதித்துவத்தின் அதிகரிப்பு, பூரண சுயாட்சி போன்றவை பற்றி ஆண்கள் ஈடுபாடுகாட்ட, பெண்களோ கிடைத்திருக்கின்ற வாய்ப்பை பொதுவான மனிதகுல அடிப்படைத் தேவைகள் தொடர்பாக எவ்வாறு பயன்படுத்தலாம் என்று சிந்தித்து செயற்பட்டிருக்கிறார்கள். அத்துடன் இவ் ஐந்து கோரிக்கைகளையும் ஒரு அரசியல் தேவைப்பாடாக எடுத்துக்காட்டியுள்ளதில் இருந்து இப் பெண்கள் அரசியலையும் சமூகவிருத்தியையும் எவ்வாறு ஒன்றோடொன்று இணைந்ததாக நோக்கியுள்ளார்கள் எனும் அவர்களின் தூர நோக்கான அரசியல் பார்வையையும் இது தெளிவுபடுத்துகின்றது. இவ்வாறு யதார்த்தத்தை புரிந்து அதற்கேற்றாற்போல் அரசியல் நகர்வுகளை எடுக்க தமிழ்த் தலைவர்கள் தவறியிருக்கின்றனர்.

டொனமூர் ஆணைக்குழுவினர் இப் பெண்களின் கோரிக்கையினை சாதகமாக அணுகினர் என்பதை அவர்களுடைய அறிக்கை எடுத்துக்காட்டுகின்றது. அவர்கள் இது பற்றி பின்வருமாறு அறிக்கை செய்துள்ளனர், பெண்கள் வாக்குரிமை பற்றிய கேள்வியை நாம் கருத்துடன் ஆராய்ந்துள்ளோம். அவர்கள் சார்பில் எடுத்துக் கூறப்படும் வழக்கமான வாதங்கள், ஆண் பெண் சமத்துவம் ஆகியவற்றைத் தவிர, இலங்கையில் குழந்தை இறப்பு உயிர் விகிதம், வீடமைப்பில் சீர்திருத்தத் தேவை, குழந்தை நலம், மருத்துவம், கர்ப்பிணிகட்கான உதவி ஆகியவற்றில் வளர்ச்சி ஏற்கப்பட வேண்டிய தேவை ஆகியன எம்மைக் கவர்ந்தன. இச் சிக்கல்கள் யாவற்றையும் தீர்ப்பதில் பெண்களின் ஆர்வமும் உதவியும் மிகுந்த பயனளிக்கும் என அவர்கள் இப் பெண்களுடைய கருத்தினைச் சார்ந்து சிந்தித்துள்ளார்கள்.

ஆயினும் அப்போதைய ஆண்மையவாத அதிகாரத்துவ அரசியல் தலைவர்கள் இந்த மக்கள்நல அரசியலை அல்லது இவர்களுடைய கோரிக்கையின் நியாயப்பாட்டினை கண்டுகொண்டதாகத் தெரியவில்லை.

சேர்.பொன்.இராமநாதன் போன்ற தலைவர்கள்; வெள்ளாளரல்லாத சாதியினருக்கும் பெண்களுக்கும் வாக்குரிமை அளிப்பது கும்பலாட்சிக்கு வழிவகுக்கும் ஒரு பாரிய பிழையென்றும் அவ்வாறு வாக்குரிமை வழங்குவது இந்து வாழ்க்கை முறைக்குப் பழிகேடு விளைவிப்பது என்றும் நம்பினர், வாதிட்டனர். ஏ.ஈ.குணசிங்காவினைத் தவிர வேறெந்தத் தலைவர்களும் சர்வசன வாக்குரிமை வேண்டுமென்று வாதிடவில்லை. இது போல மிக முக்கியமான அரசியல் செயற்பாட்டில் இருந்த இலங்கை தேசிய காங்கிரஸ், தமிழர் மகாஜன சபை, யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ், மற்றும் இடது சாரிச் சிந்தனையாளர்கள் என எவருமே சர்வசன வாக்குரிமைக்கு அல்லது பெண்கள் வாக்குரிமைக்கு சார்பாக குரல்கொடுத்ததாக பதிவுகள் எதுவும் இல்லை. இவ்வாறு இவர்கள் மௌனமாக இருந்தது அல்லது சர்வசன வாக்குரிமை வேண்டாம் என எதிர்த்தற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவது இருந்திருக்கலாம். தமது இன சகோதரிகளுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் வாக்குரிமையினை வழங்கங் கூடாது என்று சிந்தித்து செயற்பட்ட எமது தலைவர்கள் ஆங்கிலயர் தங்களுக்கு சுயாட்சியினை வழங்க வேண்டும் என எதிர்பார்ப்பது எவ்வாறு தார்மீகத்தனமுடையதாக இருக்க முடியும்.

சர்வசனவாக்குரிமையுடன் கூடிய வேறுபல திருத்தங்களுடன் இவ்வரசியல் திட்டம் சட்டநிருபணசபையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது ஒரு வாக்கினால் இவ்வரசியல் திட்டம் நிறைவேற்றப்பட்டது. அவ் ஒரு வாக்கினை திருமதி.தம்பிமுத்துவின் கணவர் இ.ஆர்.தம்பிமுத்து அவர்களே அதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அவர் ஆதரவாக வாக்களித்ததில் திருமதி தம்பிமுத்துவின் செல்வாக்கு இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் டொனமூர் அரசியல் திட்டத்தினை யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் நிராகரித்தும் சேர்.பொன். இராமநாதன், ஜி.ஜி.பொன்னம்பலம் போன்ற தமிழ் தலைவர்கள் அனைவரும் அதற்கு எதிராக வாக்களித்த சூழலில் திரு.இ.ஆர்.தம்பிமுத்து மாத்திரம் அதற்கு ஆதரவாக வாக்களித்ததிலிருந்து இதனை விளங்கிக்கொள்ளமுடியும்.

எனவே திருமதி.தம்பிமுத்து அவர்கள் பெண்களுக்கான வாக்குரிமை விடயத்தில் இனம், மதம், சாதி, பிரதேசம், என்பவற்றுக்கப்பால் சிந்தித்து மனிதகுல விருத்திக்கு பெண்களின் அரசியல் பங்கு பற்றல் அவசியம் என்ற ஒரு திடமான கொள்கையுடன் இருந்திருக்கிறார். வாக்குரிமையினை மக்களின் நலனுக்கு பாவிக்க வேண்டும் என்பதே இவர்களுடைய பிரதான நோக்கமாக இருந்திருக்கிறது. தம்மையும் தமது அதிகாரத்தினையும் மட்டும் வைத்து அரசியல் கோரிக்கைகளை முன்வைக்காமல் பொதுவான மனிதகுலவிருத்தி தொடர்பாக சிந்தித்தமையினாலேயே பெண்களுக்கான வாக்குரிமைக் கோரிக்கை வெற்றியடைந்தது எனலாம்.

2. தோட்டத்தொழிலாளர்கள் தொடர்பான அச்ச உணர்வு கொண்டு செயற்பட்டவர்கள்.

சர்வசன வாக்குரிமை என்ற பேச்சு எழும்வரைக்கும் தோட்டத்தொழிலாளர்கள் தொடர்பாக எவரும் குறிப்பிட்டு எதுவும் கூறியதில்லை. கொழும்புவாழ் மலையாள, பாகிஸ்தானிய தொழிலாளிகளைப் போல், இவர்கள் தங்களுடைய வேலைகளைப் பறித்துக் கொள்கிறார்கள் அவர்களை இந்தியாவுக்கு திருப்பி அனுப்ப வேண்டும் என எவருமே கோரிக்கை விடுக்கவும் இல்லை. ஆனால் வாக்குரிமை பெற்று அரசியல் முடிவுகளை தீர்மானிப்பவர்களாக இவர்கள் வருவதை எவருமே விரும்பவில்லை. 1928ம் ஆண்டு சட்ட நிர்வாக சபையில் தோட்டத் தொழிலாளர்களுடைய வாக்குரிமையால் சிங்களவர் சிறுபான்மையாகி விடுவர் என்ற அச்சத்தை வெளிப்படையாக முன்வைத்துள்ளனர்.

பிரான்சிஸ் மொலாமூர் ‘இந்திய அச்சுறுத்தல்’ பற்றி உரிய நேரத்தில் எச்சரிக்கிறேன் என்று கூறினார். பொதுசன வாக்குரிமை அடிப்படையிலான தேர்தலில் எதிர்காலத்தில் இனவாதத்தை ஒரு சுலோகமாக்குவதில் உள்ள அரசியலை அவர் தெளிவாகக் காட்டினார். ஆவரை விமர்சித்தவர்களுக்குப் பதிலளிக்கும் போது இன வேறுபாடுகாட்டாத கொள்கைகளை ஆதரிக்கும் வேட்பாளர்களுக்கு தேர்தலில் தோல்வி ஏற்படும் என்று கூறினார். நான் இந்தச் சவாலை விடுக்கிறேன். அவர்கள் கிராமங்களுக்குப் போய் தமது மேடைப் பிரசாரத்தில் என்னை சட்டசபைக்கு அனுப்புங்கள். நான் இலங்கையர்களுக்கும் இலங்கையர்கள் அல்லாதவர்களுக்கும் இடையே எந்த வேறுபாடும் காட்டமாட்டேன். என்று கூறட்டும் அவருடைய எதிர் வேட்பாளரோ இலங்கையருக்காக இலங்கையைக் காப்பதே என் நோக்கம் என்று சொல்லட்டும் இவ்விவாதத்தில் சி.டபிள்யூ.கன்னங்கராவும் ‘இலங்கையின் நிலையான மக்களை’ செயலறச் செய்யக்கூடிய இந்திய அச்சுறுத்தல் பற்றிக் கூறி இந்தியரின் வாக்குரிமையை எதிர்த்தார் துரோகிகள் என்று மறைமுகமாகக் குறிப்பிட்டார். ( மேற்கோள் குமாரி ஜயவர்த்தன)

ஏ.ஈ.குணசிங்க தொழிற்சங்கத் தலைவராக இருந்த போது தோட்டத் தொழிலாளர்களுக்கான வாக்குரிமையினை ஆதரித்துப் பேசியிருந்தார். இந்தியர்கள் சிங்களத் தொழிலாளர்களுக்குப் பெரும் அச்சுறுத்தல் எனச் சில செல்வந்தர் பேசுகின்றனர். தமது தொழிலாளர் துன்பமும் தொல்லையும் உற்றபோதும் மனச்சாட்சியும் நாட்டுப்பற்றும் உடைய இந்தச் செல்வந்தர் என்ன செய்தனர். நமது நாட்டு ஏழைகளுக்கு உதவுவதற்குப் பதில், ஏழை கிராமத்தவனை அவனது சிறுதுண்டு நிலத்திலிருந்து விரட்டி அடிப்பதில் தமது சக்தியை செலவழித்தனர். இப்போது இவர்களுக்கு நாட்டுப்பற்று வளர்ந்துள்ளது. இந்த அக்கறைக்கு காரணம் என்ன? ஏழைகளுக்கு கொடுக்கப்பட்ட வாக்குரிமையே காரணம். இதே செல்வந்தர்கள்தான் விசேட ஆணைக்குழுவுக்கு சர்வசனவாக்குரிமை வழங்குவதை எதிர்த்துக் கூறியவர்கள். தமது திட்டத்தில் தோல்வியுற்ற இவர்கள் இப்போது இந்தியர்களுக்கு வாக்குரிமை மறுப்பது பற்றிப் பேசுகின்றனர். (மேற்கோள், குமாரி ஜயவர்த்தன)

நாம் இங்கு இங்கு கவனிக்க வேண்டியது எமது தமிழ் தலைவர்கள் பிரதிநிதித்துவ அதிகரிப்புப் பற்றியும் பூரண சுயாட்சி பற்றியும் கேட்டபோது, தங்களுடைய உரையாடல் வட்டத்துக்கு அப்பால் இலங்கையிலுள்ள மற்றவர்கள் தமது இனத்துக்கான பொறிமுறைபற்றிச் சிந்தித்து செயற்பட்டுக் கொண்டிருந்திருக்கிறார்கள். தமிழர் நலன் தொடர்பாகப் பேசியவர்களுக்கு ஏ.ஈ. குணசிங்க அவர்களுடைய உரையாவது ஒரு இன உணர்வை வழங்காத அளவுக்கு மேலாதிக்க உணர்வுகளால் கட்டுண்டவர்களாக இருந்திருக்கிறார்கள்.

தொடரும்

# புதிய புதிய சிக்கல்களுக்குள் சிக்கிக் கொள்ளும் தமிழர்கள்

புதிய வருடம் ஆரம்பித்து ஒரு மாதம் கடந்தோடி இருக்கின்றது. அரைத்த மாவை அரைப்பது போன்று தமிழ் மக்களும் தாம் சார்ந்த பிரச்சினைகளை தொடர்ச்சியாக அரைத்துக்கொண்டே இருக்கின்றனர். ஆனால் எவற்றிற்கும் தீர்வு முழுமையாக கிடைத்தாகவில்லை. தமிழ் மக்கள் தாம் சார்ந்த பிரச்சினைகளுக்கான தீர்வினை வழங்க கோரி கோசமிடும் சந்தர்ப்பங்களில் எல்லாம் நாட்டில், குறிப்பாக நாடாளுமன்றத்தில் ஒவ்வொரு நாடகங்களை அரங்கேற்றி விடுகின்றனர். இதன்காரணமாக அரங்கேற்றப்பட்ட நாடகங்களே பேசுபொருளாக்கப்படுகின்றன. சர்வதேசத்திற்கும் அந்நாடகத்தினையே வெளிக்காட்டி நிற்கின்றனர். தற்போதைய ஆட்சியின் தலைவர் தமிழ் மக்களின் வாங்கு வங்கியினாலையே அரியணை ஏறினார். இதனை அவர் மறுத்துவிடவும், மறந்துவிடவும் முடியாது. இதற்கு நன்றியுள்ளவராக செயற்படுவார் என்ற நம்பிக்கை பலரிடமும் ஏற்பட்டிருந்தாலும் கூட தற்காலத்தில் அந்நம்பிக்கை செயலிழந்ததாகி வருகின்றது. நாட்டினைப்பொறுப்பேற்று ஆட்சியின் காலமும் நிறைவுகாணும் தவறுவாயில் நாட்டிலே பல மாற்றங்கள் நடந்தேறி முடிந்திருக்கின்றன. அதேவேளை நாளுக்கு நாள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் தொடர்தேர்ச்சியாக பல்வித நெருக்கடிக்கும், ஆபத்துக்குள்ளம் சிக்குண்டவர்களாக்கப்பட்டுள்ளனர்.

முனையூரான்

யுத்த காலத்தில் யுத்தம் மட்டுமே நெருக்கடியை கொடுத்திருந்தது. தற்போதைய சூழல் நுண்கடன், பெருகிவரும் போதைப் பாவனை, அத்துமீறிய குடியேற்றங்கள், வரலாறுகளை மாற்றியமைக்கின்றதான செயற்பாடு, சிறுவர் உரிமை மீறல் அதிகரிப்பு, சிறுகுழுக்களின் வாள்வெட்டுப் போன்ற பல்வேறான செயற்பாடுகளினால் மக்கள் மிகுந்த பலவீனமடைந்துள்ளதுடன், சமூக சீர்குலைவுக்கும் வழியாகியுள்ளது. இவ்விடயங்கள் தமிழ்மக்களின் இருப்பில் கூட பாரியளவிலான ஆபத்தினை ஏற்படக்கூடியதாகவும் பார்க்கப்படுகின்றது.

போதைப்பாவனை சமுகசீர்கேடுகளை உண்டு பண்ணும், சமுகசீர்கேடுகளின் உச்ச நிலை அச்சமுகத்தினையே அழித்துவிடும். ஒரு சமுகம் அழிந்துவிட்டால் அங்கே அவ்வினம் நிலைகொள்ளாது. இலங்கை நாட்டிலும் வடக்கு மாகாணத்தில் போதைப்பாவனை யுத்தத்திற்கு முன்னாரான காலப்பகுதியில் மிகக்குறைவாகவே காணப்பட்டன. தற்போது, வடக்கு மாகாணத்தில் உள்ள கடலோரங்களின் மூலமாக பல போதைப்பொருட்கள் கடத்தப்பட்டு, அப்பகுதியில் விற்பனை செய்யப்படுவதாக செய்திகள் வெளிவருகின்றன. யாழ்ப்பாணப்பகுதியில் அடிக்கடி போதைப்பொருள் பிடிக்கப்படுகின்றமையின் மூலமாக இதனை அறியக்கூடியதாகவுள்ளது. இந்நிலை தொடர்ச்சியாக அதிகரிக்குமாயின் இலங்கையின் ஆரம்பகுடிகளாக கூறப்படுகின்ற தமிழ் மக்கள் வடக்கு பகுதியிலிருந்தும், கிழக்கு பகுதியில் இருந்தும் இல்லாமல் ஆக்கப்படுவதனை தவிர்க்க முடியாது போகும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் திட்டமிடப்பட்ட குடியேற்றங்களும் காலம் காலங்களாக நடந்தேறி முடிந்திருக்கின்றன. இதன் விளைவு கிழக்கு மாகாணத்தில் இரண்டாம்தர பிரஜைகளாக தமிழ்மக்கள் மாறும் நிலை விரைவில் ஏற்படும் என்பதே. அதேபோன்று வடக்கிலும் திட்டமிட்ட முறையில் சகோதர இன மக்களின் குடியேற்றங்கள் நடந்தேறி வருவதாக ஊடகங்களில் சுட்டிக்காட்டப்படுகின்றன. அண்மையில் கூட, வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் ஊற்றுக்குளம் கிராமத்தின் அடர்ந்த காட்டுப்பகுதியில் அவசர அவசரமாக புத்தர் சிலையொன்று நிறுவப்பட்டு அதனைச் சூழவுள்ள பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றமொன்று நிறுவப்படுவதற்கான பூர்வாங்க வேலைகள் இடம்பெற்று வருகின்றதாகவும், மத்திய அரசின் கமநல சேவைத் திணைக்களம், தொல்லியல் திணைக்களம், வனவளப்பாதுகாப்புத் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்கள் இத்திட்டத்திற்கு பூரண அனுசரணை வழங்கி வருகின்றதாகவும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இப்பிரதேசத்தில் அனுராதபுர மாவட்ட கமத்தொழில் திணைக்களம் வேலைத்திட்டங்களை மேற்கொள்வது இச்செயற்பாட்டின் கபட நோக்கத்தினை வெளிக்காட்டுவதாகவும் ஊடகங்களுக்கு தமிழர் மரபுரிமை பேரவையினர் கூறியிருந்தனர். அவ்வாறு திட்டமிடப்பட்டு குடியயேற்றங்கள் நடைபெற்றால் தமிழர்கள் பகுதிகள் பறிபோகுமென்பதே விமர்சகர்களின் கருத்தாகவிருக்கின்றன.

சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள், வாள்வெட்டு சம்பவங்களும் தமிழர் பெரும்பான்மையைக் கொண்ட வடக்கு, கிழக்கு பகுதியிலும் இடம்பெற்றுவருகின்றன. இதனால் மக்கள் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை, சிறுவர்கள் சின்னஞ்சிறு வயதினில் சிறகடித்து பறக்கமுடியாத சூழலை ஏற்படுத்தியிருக்கின்றது. குறிப்பாக வடக்கு மாகாணத்தில், சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள புள்ளி விபர திணைக்களத்தின் புள்ளிவிபரத்தின் அடிப்படையில், கடந்த 2017 ஆம் ஆண்டை விட 2018 ஆம் ஆண்டு சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலே சிறுவர்களுக்கு எதிரான வன்முறைச்சம்பவங்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன. வடக்கு மாகாணத்தில் பாலியல் துஸ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டு பாதிக்கப்பட்டதாக யாழ் மாவட்டத்தில் 26 சிறுவர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 15 சிறுவர்களும், மன்னார் மாவட்டத்தில் 20 சிறுவர்களும், வவுனியா மாவட்டத்தில் 12 சிறுவர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 32 சிறுவர்களுமாக மொத்தமாக 105 சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பாலியல் துஸ்பிரயோகத்திற்கு முயற்சி மேற்கொண்டதில் யாழ் மாவட்டத்தில் 10 சிறுவர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 03 சிறுவர்களும், மன்னார் மாவட்டத்தில் 05 சிறுவர்களும், வவுனியா மாவட்டத்தில் 02 சிறுவர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 27 சிறுவர்களுமாக மொத்தம் 47 சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. உடல் ரீதியான முறைகேட்டுக்கு உட்படுத்தப்




> நுண்கடன் , பெருகிவரும் போதைப்பொருள் பாவனை, அத்துமீறிய குடியேற்றங்கள், வரலாறுகளை மாற்றியமைக்கின்றதான செயற்பாடு, சிறுவர் உரிமை மீறல் அதிகரிப்பு, சிறுகுழுக்களின் வாள்வெட்டுப் போன்ற பல்வேறான செயற்பாடுகளினால் இலங்கையின் ஆரம்பகுடிகளாக கூறப்படுகின்ற தமிழ் மக்கள் வடக்குப் பகுதியிலிருந்தும் கிழக்குப் பகுதியிலிருந்தும் இல்லாமல் ஆக்கப்படலாம்

பட்டு பாதிக்கப்பட்டதாக யாழ் மாவட்டத்தில் 11 சிறுவர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 18 சிறுவர்களும், மன்னார் மாவட்டத்தில் 12 சிறுவர்களும், வவுனியா மாவட்டத்தில் 05 சிறுவர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 45, சிறுவர்களுமாக மொத்தம் 91 சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. உள ரீதியான துஸ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டு பாதிக்கப்பட்டதாக மன்னார் மாவட்டத்தில் 06 சிறுவர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 07 சிறுவர்களுமாக மொத்தம் 19 சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்கொலைக்கு முயற்சி செய்ததாக முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவரும் மன்னார் மாவட்டத்தில் 07 சிறுவர்களும், வவுனியா மாவட்டத்தில் ஒருவரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 19 சிறுவர்களுமாக மொத்தம் 27 சிறுவர்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்தில் 03 சிறுவர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 02 சிறுவர்களும் கடந்த வருடம் தற்கொலை செய்துகொண்டதாக பதிவாகியுள்ளது. உறவினர்களால் புறக்கணிக்கப்பட்ட சிறுவர்கள் என யாழ் மாவட்டத்தில் 09 சிறுவர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 21 சிறுவர்களும், மன்னார் மாவட்டத்தில் 04 சிறுவர்களும், வவுனியா மாவட்டத்தில் 04 சிறுவர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 29 சிறுவர்களுமாக மொத்தம் 67 சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என பதிவாகியுள்ளது. மேலும் யாழ் மாவட்டத்தில் 02 சிறுவர்களும், மன்னார் மாவட்டத்தில் 04 சிறுவர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 05 சிறுவர்களுமாக 11 சிறுவர்கள் கடந்த 2018 ஆம் ஆண்டு கடத்தப்பட்டுள்ளதாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளும் சமுகத்தின் சீர்கேடுகளாவதுடன், இறுக்கமான சூழலையும் ஏற்படுத்தியிருக்கின்றது. இவ்விதமான செயற்பாடுகள் அதிகரிப்பும் தமிழ் மக்களின் இருப்பை கேள்விக்குறியாக்கிவிடும்.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு பகுதியில் பல நுண்கடன் நிதி நிறுவனங்கள் குடிகொண்டுள்ளன. இந்நிதி நிறுவனங்கள் மக்களின் வாசல்தேடிச்சென்று நுண்கடன்களை வழங்கிவிட்டு செல்கின்றனர். மக்களும் இலகுவில் கிடைத்துவிடுகின்றதன் அடிப்படையில், அதனை செலவு செய்தும்விடுகின்றனரே தவிர அவற்றினை எவ்வாறு செலுத்துவது என்பது தொடர்பில் முறாக சிந்திப்பதில்லை. இதனால் நுண்கடனை செலுத்தமுடியாது, இறப்பு நிலையை தழுவுகின்ற செயற்பாடுகளும் நடந்தேறி வருகின்றன. குறிப்பாக கிழக்கு மாகாணத்திலே நுண்கடன் மூலமாக தற்கொலை செய்து சம்பவங்களும் அரங்கேறியுள்ளன. அதேவேளை நுண்கடன் செலுத்த முடியாதவர்களுடன் பாலியல் இலஞ்சம் கோரப்படுவதாகவும் கூறப்படுகின்றது. இது தொடர்பில் அண்மையில், ஐக்கிய நாடுகள் விசேட நிபுணர் ஜுவான் ப்பலோ போல்ஸ் விகி கருத்தொன்றினை வெளியிட்டிருந்தார். இலங்கைக்கு வருகை தந்திருந்த அவர், 40 ஆவது ஐக்கிய நாடுகள் மனித உரிமை கூட்டத்தொடருக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையில், நுண்கடன் திட்டம் வறுமையை போக்குவதற்காக கொண்டுவரப்பட்டது. ஆனால் எந்ததொரு முன்னேற்றமும் இலங்கையில் தெரியவில்லை.இந்நிலையில் நுண்கடன் திட்டம், தற்போது வறுமையிலுள்ள பெண்களை குறிவைத்தே மேற்கொள்ளப்படுகின்றது. அதிலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வறுமை குடும்பங்களையே நுண்கடன் நிறுவனம் அதிகம் நாடுகின்றது. குறித்த நுண்கடன் நிறுவன ஊழியர்கள் கடனை செலுத்தாத பெண்களிடம், பாலியல் வன்முறையில் ஈடுபட முனைவதாக எங்களுக்கு தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளது. இந்நிலையில், குறித்த விடயத்தில் இலங்கை அரசாங்கம் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன் அம்மக்கள், நுண்கடன்களை மீள் செலுத்துவதனை நிறுத்த உதவ வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். நுண்கடன் மூலமாக மக்கள் அதிக வட்டிகளை செலுத்த வேண்டியுள்ளது. இதனை செலுத்தமுடியாததன் காரணமாக பல உளநெருக்கடிக்கு உள்ளாகின்றனர். அவ்வாறான உளநெருக்கடிகள் சமுகத்தின் வளர்ச்சியில் பாதிப்பினை ஏற்படுத்தும்.

ஒரு இனத்தின் இருப்பில், அதன் தொன்மையில் வரலாறுமிகவும் ஆழமான பங்களிப்பினை செய்கின்றது. ஆனாலும் இலங்கை நாட்டிலும் பாடசாலை மாணவர்களுக்கு வரலாறு பாடம் கற்பிக்கப்படுகின்றது. இவ்வரலாற்றுப் பாடப்புத்தகங்களில் திரிபுகளும், இருட்டடிப்புக்களும் செய்யப்பட்டுள்ளதாகவும் புத்திஜீவிகளால் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றன. ஆனாலும் அவை இன்னமும் மாற்றப்பட்டதாகவில்லை. இதுதொடர்பில் அண்மையில், டக்ளஸ் தேவானந்த கருத்தொன்றினையும் வெளியிட்டிருந்தார், பாடசாலை மாணவர்களுக்கான வரலாற்று பாடநூல்கள் தயாரிக்கப்படும்போது சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்யப்படுவதால் அவை திரிபுபடுத்தப்படுவதுடன் இருட்டடிப்பும் செய்யப்படும் நிலை காணப்படுகின்றது. அந்தவகையில் தமிழ் மொழி மூல வரலாற்றினை மொழிபெயர்ப்பின்றி, நேரடியாகவே தமிழில் எழுதுவதற்கு தமிழ் வரலாற்று பாட நிபுணர்களை ஏன் ஈடுபடுத்த முடியாது? தற்போது பயன்பாட்டிலுள்ள தமிழ் மொழி மூல பாடசாலை வரலாற்றுப் பாடநூல்களில் பல்வேறு பிழைகள், திரிபுகள் மற்றும் மூடிமறைப்புகள் இடம்பெற்றுள்ளதாக தமிழ் வரலாற்று பேராசான்களால் தொடர்ந்து சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது என்ற கருத்தினை நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறான வரலாற்று மூடிமறைப்புக்களும் தமிழ்மக்களின் இருப்பைக் கேள்விக்குறியாக்கலாம் என புத்திஜீவிகள் கூறுகின்றனர்.

இலங்கை நாட்டில் தமிழர்கள் வடக்கு, கிழக்கு பகுதியில் அதிகளவில் வாழ்ந்தாலும் கூட இவர்களும் யுத்தத்தின் பின்னர் பல்வேறான சவால்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

அச்சவால்களில் இருந்து மீள்வதற்கு பல்வேறு வடிவில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியதேவையுள்ளது. அதேவேளை நாட்டினது ஜனாதிபதி தமிழ்மக்களுக்கான தீர்வு விடயத்தினை விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதுடன், தொடர்தேர்ச்சியாக புதிய புதிய சிக்கல்களுக்குள் தமிழ் மக்கள் அகப்படுவதை தவிர்ப்பதற்கான வழிவகைகளை செய்ய வேண்டும். அதேவேளை தமிழ் மக்களும் தாம்குறித்தும், தமது சமுகம் குறித்து பொதுநலத்துடன் சிந்திக்க வேண்டும். இதன்மூலமே தமிழ் சமுகம், தமது சமுதாயத்தில் மகிழ்ச்சிபொங்க வாழமுடியும்.



# குறுகியகால தேசிய அரசின் மூலம் மக்கள் நன்மையடைய முடியாது

**சத்தார் எம் ஜாவித்**

இன்று பரவலாக பேசப்படும் தேசிய அரசாங்கம் என்ற விடயம் பல்வேறுபட்ட கருத்தாடல்களுக்கு மத்தியில் சாதக மற்றும் பாதக விடயங்கள் தொடர்பான விளக்கங்கள் பலராலும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இருந்தாலும் கடந்த 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து தேசிய அரசாங்கம் ஒன்றின் அவசியம் ஏற்பட்டது. காரணம் 2015க்கு முன் நாட்டில் ஏற்பட்டிருந்த அரசியல் செயற்பாடுகள் நாட்டு மக்களின் பெரும்பாலானோருக்கு விரும்பத்தகுந்த ஒன்றாக இருக்க வில்லை என்தேயாகும்.

இதன் காரணமாகவே பல கட்சிகள் ஒன்றினைந்து குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பனவற்றுடன் பல சிறுபான்மைக் கட்சிகள் ஒன்றினைந்து புதியதோர் அரசாங்கத்தினை ஏற்படுத்தின. சுமார் நான்கு லருடங்கள் உருண்டோடிக் கொண்டிருந்த நிலையில் பழையகுருடி கதவத்திறடி என்றமாதிரி பிரதமர் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான கருத்தொற்றுமை விடயங்களில் ஏற்பட்ட பிணக்குகளும், விட்டுக் கொடுக்க முடியாத விடயங்களும் குறித்த தேசிய அரசின் பிரிவிற்கு வித்திட்டது எனலாம்.

மேற்படி நிலைமைகள் கடந்த 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் 26ஆம் திகதி அரசியல் மாற்ற நிலைமைகளுக்கு வழிகோலியது. இதன் காணரமாக நாட்டில் பல்வேறுபட்ட குழப்ப நிலைமைகள், பொருளாதார வீழ்ச்சிப் போக்குகள், அரசியல் குழப்ப நிலைமைகள் ஏற்பட்டு நாட்டின் ஜனநாயக ஆட்சி முறையின் வீழ்ச்சிக்கும் சர்வதேசத்தின் கண்டனங்கள், விமர்சனங்களுக்கும்கூட இலங்கை உள்ளானது எனலாம்.

இவ்வாறான குழப்ப நிலைமைகள் பாரிய சண்டையிலும், அடிதடியிலும் குறிப்பாக இந்த நாட்டின் உயர் பீடமான பாராளுமன்றத்திலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் விரும்பத்தகாத வகையில் குறிப்பாக நாட்டு மக்களோ அல்லது ஜனநாயக சமுகமோ ஏற்றுக் கொள்ளாத வகையில் நடந்து கொண்ட விதங்கள் எல்லாம் மக்கள் மனங்களில் ஒரு வகையாக மன உழைச்சல்களையும், கவலைகளையும் தோற்று வித்து தேர்தல்கள் வரும்போது வாக்களிக்கலாமா அல்லது வாக்களிக்காமல் இருந்து விடலாமா என்ற வகையில் மக்களை யோசிக்க வைத்துள்ளதையும் இங்கு சுட்டிக்காட்டலாம். அந்தளவிற்கு இலங்கையின் அரசியலானது அரசியல் இருப்புக்களை தக்கவைத்துக் கொளும் ஒரு வகையான அரசியல் சலாசாரத்தினை நோக்கி நகர்வதையே காட்டி நிற்கின்றன.

இவ்வாறான நிலையில் மீண்டும் ஒரு தேசிய அரசை அமைப்பதற்கான பிரேரணையை அமைச்சர் லக்ஷமன் கிரியல்ல பாராளுமன்றத்தில் கையளித்துள்ளமையும், அதற்கான முன்னெடுப்புக்கள் விடயத்திலும் மக்கள் அவ்வளவு நம்பிக்கையற்றவர்களாகவே இருக்கின்றனர். தேசிய அரசை மீண்டும் அமைத்து விட்டு மேலும் பல பிரச்சினைகள் வரலாம் என்றதற்கு அப்பால் பாரிய நிதிச் செலவுகளே ஏற்படும் என்ற கருத்தை அதிகமானவர்கள் முன்வைக்கின்றனர். குறிப்பாக இன்று மக்களின் வாழ்க்கைச் செலவுகள் பண்மடங்கு அதிகரித்துள்ள நிலையில் மேலும் செலவுகள் மக்களின் அன்றாட வாழ்க்கையில் அவர்களின் வாழ்க்கைச் செலவை மேலும் அதிகரிக்க வைக்கும் விடயங்களாகவும் இருக்கின்றன. உண்மையில் இன்னும் ஒருவருட காலத்திற்குள் மீண்டும் ஒரு தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டு மக்களின் அல்லது நாட்டின் பிரச்சினைகள் தீர்க்கப்படுமா? என்ற விடயத்திலும் சிந்திக்க வேண்டியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அரசாங்கத்தை அமைக்கும் விடயத்தில் ஜனாதிபதி மைத்தரிபால சிறிசேன விருப்பமற்றவராகவே இருக்கின்றார். இலங்கையின் 71வது தெசிய தின நிகழ்வில் ஜனாதிபதி தேசிய அரசாங்கத்தை எதிர்ப்பதாக பகிரங்கமாகவே தெரிவித்துள்ளார். இவ்வாறான நிலையில் தற்போதைய அரசின் நிலைப்பாட்டிலும் இருகட்சிகளுக்கு இடையிலான கருத்து வேறுபாடுகள் ஒரு வகையான குழப்ப நிலைமைகளை ஏற்படுத்தி இருக்கின்றது. தேசிய அரசாங்கம் நிறுவுவதன் பின்னால் உள்ள உண்மையான இலக்கிலும் பலவாறான மாறுபட்ட கருத்துக்களே காணப்படுகின்றன. ஐக்கிய தேசியக் கட்சி தேசிய அரசின் மூலம் நாட்டின் அபிவிருத்திக்காக அமைச்சுக்களை அதிகரித்து அதன் மூலம் நாட்டை முன்னேற்றலாம் என்ற கருத்தை முன்வைத்துள்ளனர். ஆனால் தேசிய அரசுக்க எதிரானவர்கள் தேசிய அரசை அமைத்து அமைச்சுக்களை அதிகரிப்பதன் மூலம் நாட்டுக்கு என்ன செய்யப்போகின்றார்கள் என்ற விடயத்தை சுட்டிக்காட்டுகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து நடாத்திய அரசாங்கத்தில் அவர்கள் தேர்தல்களின்போது வழங்கிய வாக்குறுதிகள், மற்றும் திட்டங்கள் உரியவாறு நிறைவேற்றப்பட வில்லை என்ற குற்றச்சாட்டுக்ளும் எழுந்துள்ளன. குறிப்பாக கடந்த அரசிலும், மஹிந்த அரசிலும் இடம்பெற்ற ஊழல் மோசடி விடயங்கள் எல்லாம் விளையாட்டாகவே கணிக்கப்பட்டுள்ளது. எதுவும் நடைபெறவில்லை. ஒருவருக்கொருவர் தம்மைப் பாதுகாப்பதில் இருப்பதாகவும் உண்மையான குற்றவாளிகள் சுதந்திரமாக சுற்றித்திரிகின்ற நிலையில் அவர்கள் மீது எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வில்லை என்ற மக்களின் குற்றச்சாட்டுகள் நிறைந்துள்ள நிலையில் மீண்டும் குறுகிய காலத்திற்கான தேசிய அரசினை அமைப்பது எந்த விதத்தில் நன்மை பயக்கும் என்பதில் சந்தேகங்களே அதிகம் எழுந்துள்ளன.

கடந்த தேசிய அரசில் இருந்த அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள்கூட ரணில், மைத்திரி தேசிய அரசில் தாங்கள் மகிழ்ச்சியுடன் இருக்க வில்லை என்றும் தாம் பாரிய அதிர்ப்தியுடன் இருப்பதாகவும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா அப்போதே தெரிவித்திருந்தார். அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேசிய அரசாங்கத்திற்கு வழங்கும் ஆதரவின் பெறுமதியை அங்கீகரிக்காத வகையில் பிரதமர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி செயற்பட்டு வருகின்றது என்றும் தங்களை தொடர்ந்தும் புறக்கணிப்பதாகவும் குற்றஞ் சுமத்தி இருந்தார் டிலான் பெரேரா.

மேற்படி நிலைமைகளை அவதானிக்கும்போது தேசிய அரசின் மூலம் ஒரு நிலையான அரசு நிலைத்திருக்குமா? என்ற ஐயமும் ஏற்பட்டுள்ளது. தேசிய அரசை அமைக்கும்போது நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் ஏற்ற விதத்தில் தமது ஆட்சி அமையும் அதற்காக நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என்று கூறிக் கொண்டு ஆட்சிக்குள் நிழைந்து சிறிது காலத்தில் அவர்களுக்கிடையில் ஏற்படும் உட்பூஷல்களால் ஆட்சி நிருவாக விடயங்கள் முடக்க நிலைமைகளுக்கே உட்படுகின்றது. இதன் காரமாக ஒட்டுமொத்தத்தில் நாட்டு மக்களே பல அசௌகரியங்களுக்க முகங் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. கடந்த 2018 ஒக்டோபர் 26ஆம் திகதி அரசியல் மாற்றம் மக்களுக்கு மேற்குறித்த பாடத்தையே கற்பித்துள்ளது.

இவ்வாறான நிலையில் பிரதமர் ரணில் விக்ரம சிங்கவின் ஐக்கி தேசிய கட்சியுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீமுடன் இணைந்து தேசிய அரசு ஒன்றை மீண்டும் அமைக்க இருப்பதான கருத்துக்கள் மக்கள் மத்தியில் ஆக்கபூர்வமான செயற்பாடாக தெரிய வில்லை என்ற விடயம் இன்று பரவலாக பேசப்படுகின்றது. எந்த அரசு வந்தாலும் சிறுபான்மை என்ற வகையில் இந்த நாட்டு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு எதவும் நிறைவாக கிடைத்துவிடப் போவதில்லை என்பதே பொதுவான கருத்தாகும்.

கடந்த பல தஸாப்தங்களாக தமிழ், முஸ்லிம் மக்களின் பல பிரச்சினைகள் எவராலும் கண்டு கொள்ளப்படாது தட்டிக்களித்தும், புறக்கணிக்கப்பட்டுமே வந்திருக்கின்றன. ஏத்தனையோ அழுத்தங்களை அரசுக்கும், சம்பந்தப்பட்டவர்களுக்கும் வழங்கிய நிலையில் அது எதுவும் சரியான முறையில் கவனத்திற் கொள்ளப்பட வில்லை. குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை மீள் குடியேற்றும் விடயத்திலும், காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டறியப்படும் விடயத்திலும் எதுவித ஆக்கபூர்வமான விடயங்கள் இடம் பெறவில்லை. இது இந்த பாதிக்கப்பட்ட மக்கள் விடயத்தில் ஒருவகையான

12 ஆம் பக்கம் பார்க்க....

# தலைமைகள் சீரற்றுக் காணப்படும் ஒரு சமூகத்தின் கதை

**தந்திமகன்**

ஒரு சமூகம் தலைநிமிர்ந்து வாழவேண்டுமாக இருந்தால் அந்த சமூகத்தின் தலைமைகள் சிறப்பான முறையில் அவர்களை வழிநடாத்த வேண்டும். ஒன்றுபட்டால் உண்டுவாழ்வர் என்பதற்கேற்ப தனித்தனியாக சிந்திக்கத் தொடங்கினால் அதனை முழுமைப்படுத்த முடியாது. கூட்டுறவே நாட்டுயர்வு என்பதுபோல சிந்தனைகளும், புதிய புதிய கருத்துக்களும், பழைமையைப்பேணி பின்னணித்துவ சிந்தனைகளும், சீரான வழிமுறைகளும், முன்னோரின் கடமையுணவுர்வுகளும், சீர்திருத்தவாதிகளின் கீர்த்திமிக்க கருத்துரைகளும் அந்த சமூகத்தின் எழுச்சிக்கு வழிகோலும். ஆனால் இதனையெல்லாம் தூக்கிவீசிவிட்டு தான் நினைத்தவாறு சமூகம் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என்று பிரபல சட்டத்தரணி சிறாஜ்போன்றவர்கள் நினைத்திருந்தால் கிரலாகல புராதன தூபியில் ஏறி புகைப்படம் எடுத்து வெளியான செய்தி தொடர்பில் கைதாகிய மாணவர்கள் எதிர்கால சமூகத்தின் பொறியியலாளர்களாக வெளியேறி அவர்கள் இந்த சமூகத்தின் கட்டமைப்பினை சீர்செய்யக் கூடிய தலைமைகளை ஒரேயடியாக ஒடித்துவிட துடிக்கும் பேரினவாதத்தின் பிடியிலிருந்து கழட்டி விடுவிக்கப்பட்டமையானது பாராட்ட வேண்டிய ஒன்று. அதன் பின்னணியிலான உழைப்புக்கள் பாராட்டப்பட வேண்டும்.

ஆனால் சமூகத்தை நாம்தான் ஆழ்கிறோம் என்று மார்தட்டி தேர்தலின்போது வாக்குப்பிச்சை கேட்கின்ற முஸ்லிம் தலைமைகள் பேச்சளவில் மௌனமாகிவிட்டனர். ஒருசிலர் கொடியைத் தூக்கியபோதிலும் இறுதியில் வெற்றிபெறாமல் பேரினவாதிகளின் கதைகளை கேட்டு பதவியே சரணம் அப்பா என்று மௌனமாகியமை சமூகத்தின் பேரால் வாகுப்பிச்சையை இனிமேலாவது கேட்டு வராமல் இருக்க வேண்டும் என்பதே இப்போது இவ்விளைஞர்கள் விடயத்தில் பேசப்படுகின்ற ஒரு வெட்டுமுக அறிவிப்பாக நாம் பார்க்கிறோம். மனிதன் என்பவன் தவறுக்கும் மறதிக்கும் மத்தியில் படைக்கப்பட்டுள்ளான் என்று இறைவன் கூறுகின்றான். ஆனால் அந்த மறதியும், தவறும் அடிக்கடி செய்யக் கூடாது என்பதை பலரும் மறந்துவிடுகின்றனர். இந்த எட்டு மாணவர்கள் என்கிற விடயத்தில் அவர்கள் அவ்வாறு செய்திருந்தால் அதுபிழை. ஆனால் அந்தப் பிழையை உண்மையிலேயே அவர்கள் அறியாமல் செய்திருந்தால் அதனை மன்னிக்க வேண்டிய ஒரு வழக்கமும் உண்டு. இந்த விடயத்தில் இவர்கள் சார்ந்த மக்கள் சமூகத் தலைவர்கள் என்கிறவர்கள் ஏன் நீதிமன்றம் ஏறவில்லை.

அமைச்சுப் பதவிகள் இரவோடு இரவாக பறிக்கப்பட்டபோது நீதிமன்ற வாசலை நாடிய அந்த மக்களின் தலைவர்கள் பேரினவாதத்தோடு போட்டியிட்டால் தமது பதவிகள் பறிக்கப்பட்டு விடும் என்கிற அச்சம் காரணமாக மௌனமாகிவிட்டர். யாரை எங்கே வைப்பது என்று யாருக்கும் தெரியலே என்கிற சினிமாப்பாட்டுப் போல யாரையோ அந்த சமூகம் தலைவர்கள் என்றும், அமைச்சர்கள் என்றும், நம்மை விற்று பணம் சம்பமாதிப்பவர்களின் கைகளுக்குள் அடங்கியிருப்பதுதான் கவலையான விடயமாகும். நாட்டில் சமூகத்தில் ஆயிரம் பிரச்சினைகள் இருக்கின்ற நிலையில் நாம் அனுப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து தேசிய அரசை அமைப்பதா இல்லையா? அமைச்சர் பதவிக்கு ஆசைப்படுவதுமாக இருக்கின்ற நிலையில் ஒரு தடவை பாராளுமன்றத்தை கூட்டினால் ஏற்படுகின்ற செலவுகளைத் தவிர்த்து, எத்தனையோ இல்லாத ஏழைகளுக்கு உணவு வழங்கலாம் என்பதையெல்லாம் மறந்து பாராளுமன்றத்தில் விவாதம் செய்ய யோசிப்பதானது பசிக்கிறவனுக்கு மண்ணுக்குள் சீனியைப்போட்டு உண்ணக் கொடுப்பதுபோலாகுமல்லா.

பொதுவாக நாம் கூறுகின்ற அல்லது நல்லதே நடக்க வேண்டும் என்று நாம் கோருகின்ற தலைமைகள் பற்றிய விடயங்களில் சற்று பின்நோக்கிப்



பார்க்க வேண்டியிருக்கிறது. அன்று தலைமைகள் என்பது என்ன? என்பதைப் பற்றியெல்லாம் அறிஞர்கள் இவ்வாறு கூறியிருக்கின்றனர். அதாவது, தலைமைத்துவம் என்பது ஒரு பொதுவான விஷயத்தை செய்து முடிப்பதில், மற்றவர்களிடமிருந்து கிடைக்கின்ற உதவி மற்றும் ஆதரவைப் பயன்படுத்தி ஒருவர் சமூக தாக்கத்திற்கு ஆளாகின்ற நிகழ்முறை என்பதாக இதற்கு வரைவிலக்கணம் கூறுகின்றனர். கிரீன்டெக்கின் ஆலன் கீத் அவர்கள் தலைமைத்துவம் என்பது அசாதாரணமான ஒரு விஷயத்தை நிகழ்த்திக்காட்டும் பொருட்டு மக்கள் பங்களிப்பதற்கான வழியை உருவாக்குவது பற்றியதே என கூறுகின்றார். அதேவேளை கென் ஆக்போனியா என்பார் நிறுவன அல்லது சமூக இலக்குகளை அடையச்செய்வதற்கான உட்புற மற்றும் வெளிப்புற சூழலுக்குள்ளாக கிடைக்கக்கூடிய மூலாதாரங்களை வெற்றிகரமாக ஒருங்கிணைத்து அதிகப்படுத்தச் செய்கின்ற திறனே ஆற்றல்மிக்க தலைமைத்துவம் என்பதாகக் கூறுகின்றார். அந்த அடிப்படையில் இச் சமூகத்தின் வெளிப்படுத்தல்களைக் கூட சிந்தக்கக் வேண்டிய தருனமிதுவாகும்.

இன்று தலைமைகள் ஒன்றுபட்டு சமூகத்தின் பிரச்சினைகளை பேசித் தீர்வுகாணுவதற்குப் பதிலாக பேரினதவாதிகள் தம்மோடு உறவினை கழற்றிவிடுவினமோ என்று யோசித்துக் கொண்டு பிதற்றுகின்ற தலைமைகளால் எப்படி ஐயா தேசியத்துவத்தை பேசவேண்டியிருக்கிறது. அண்மையில் அனுஷ்டிக்கப்பட்ட இலங்கையின் 71வது சுதந்திரதினத்தை இந்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வாழ்கின்ற குறிப்பாக முஸ்லிம்கள் மிகப்பெரியளவில் கொண்டாடி மகிழ்ச்சியடைந்தனர். பள்ளிவாசல்கள், கிராமிய இயக்கங்கள், சிறிய சிறிய அமைப்புக்கள்கூட ஒன்றிணைந்து தேசியக் கொடிகளை ஏற்றி விழாக்களை அரங்கேற்றியிருந்தனர். ஏன் இவ்வாறெல்லாம் செய்ய வேண்டும் என்கிற ஒரு கேள்வியும் என்னுள்ளே எழுந்தது. முஸ்லிம் சமூகத்திலிருந்து பலர் தேசியத்துவதத்தினை காப்பாற்ற பேராடிய வரலாற்று சுவடிகள் எம் சமூகத்திலிருந்து ஒழிக்கப்பட்டு விட்டன. அவ்வாறான பின்னணியிலிருந்து நாடும் சமூகமும், அயலவர்களும் ஒன்று என்று நினைத்திருந்த முஸ்லிம்களின் ஒற்றுமையை குலைத்து, அவர்களது பொருளாதாரத்தை சீரழிக்கின்றவர்களுக்குப் பின்னால் இருக்கின்ற அரசியல்வாதிகளை என்னவென்று கூறுவது.

அன்று ஊவா வெல்லஸ்ஸ பிரதேசத்தில் உள்ளநாட்டுக்கான தேசியவாதம் அறங்கேற்றப்பட்டபோது அப்பிராந்தியத்தில் வாழ்ந்த முஸ்லிம் இளைஞர்கள் பலர் நாட்டின் விடுதலையில் இவர்களோடு இணைந்து கடும் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். தேசியவாதிகள் என அடையாளப்படுத்தப்பட்டு வெள்ளையின ஆட்சியாளர்களால் கொல்லப்பட்ட கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஏழு இளைஞர்கள் அன்று உயிரை கொடுத்திருக்காவிட்டால் சிலவேளைகளில் கிழக்கில் முஸ்லிம்கள் வாழ்ந்திருக்கவே மாட்டார்கள். அந்த ஏழு இளைஞர்களின் வரலாற்று ஆவணம் எதுவுமின்றி அதனை ஒழுங்கு படுத்தப்படுத்தப்படுவதற்குக்கூட யாருமே முன்வராத ஒரு சமூகமாவே நாம் பார்க்க வேண்டியிருக்கிறது.

ஒரு சமூகக் கட்டுக்கோப்பு அன்றும்சரி இன்றும் சரி தேசியவாதிகள் என்று நாம் யாரை அழைக்க வேண்டும். இந்நாட்டின் தேசியவாதிகள் மூவின மக்களும்தான். எல்லோருமே ஏதோர்விதத்தில் நாட்டைக் காப்பாற்ற புறப்பட்டிருக்கின்றனர். ஆனால் தனித்துவமாக முஸ்லிம்கள் ஆண்டாண்டுகாலமாக குடியிருப்பவர்களின் எல்லைக்குள் சிலைகளை வைக்க முறப்படுவதும், பள்ளிவாசலை அழுகியவற்றை வீசி சேதப்படுத்துவமாக இருந்தால் கேவலப்படுத்தும் ஆட்சிணீயார்மீது நம்பிக்கையை வைக்காது விடை கொடுக்க வேண்டிய தருணத்தில் வெறுமனே வீட்டுக்குள் அடைபட்டுக் கிடைப்பதுபோன்று தேசியத்துவத்தை ஒரு எல்லைக்குள் முடக்குவதன் மூலம் நாமே நமது தலையில் மண்ணைவாரி போடுவது பேன்ற பிரமையில்தான் இப்போது தேசியத்தைப் பற்றி எண்ணியும் கூறியும் வருகின்றனர். தேசியவாதம் என்பது ஒரு மக்கள் கூட்டத்தின் குறித்த தனித்துவத்தின் அடிப்படையில் சமூக ஒருமைப்பாடு சம வாய்ப்பு சம சந்தர்ப்பம் சம நீதி பாதுகாப்பு என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்கான ஒரு ஜனநாயக அரசியல் பொருளாதார சமூக பண்பாட்டுகட்டமைப்பே தேசியவாதம் என்கிற கருத்தும் ஒன்று உண்டு.

பாருங்கள் தேசியத்துவத்தை முன்னிலைப்படுத்தி நாம் நமது முன்னோரின் தத்துவங்களை, படைப்புக்களை, வீரதீரங்களை, நாட்டுக்குழைத்தவர்களை ஏன் முன்னிலைப்படுத்தமால் ஒதுங்கியிருக்கிறோம். கேவலம் சாய்ந்தமருதினை தனியாகப் பிரித்து உரிய பிரதேச சபையை வழங்காமல் யார் தடையாக இருக்கின்றனர். இரண்டு முஸ்லிம் ஊர்களும் பிரித்தாளும் தந்திரத்தை முன்மொழிந்து பெற்றோல் ஊற்றி எரித்து, பிரச்சினைகளை பூதாகரமாக்கியவர்கள் யார்? இன்று போதைப் பொருளுக்கு எதிரான நடவடிக்கைகளை முற்றாக ஒழிக்க வேண்டும் என்கிற ஆர்வத்தினால் நமது ஜனாதிபதி கடுமையாக உழைக்கின்றார். ஆனால் நமது வடபுலத்திலிருந்து பல நூற்றுக்கணக்கான கிலோ போதைப்பொருள்கள் நாட்டுக்குள் கொண்டு வரப்படுகின்றன. இது எங்கிருந்து கொண்டுவரப்படுகின்றது. யார் மூலமாக வருகின்றனர். இதில்கூட முஸ்லிம்கள் தொடர்புபட்டிருப்பதானது கடும் கவலையை ஏற்படுத்துவதாக அன்பர் ஒருவர் கூறியது ஞாபமிருக்கிறது.

ஆதலால்தான் என்னவோ இன்று

12 ஆம் பக்கம் பார்க்க....

# அரசியலமைப்பு சூழ்ச்சியில் கற்றுக்கொண்ட பாடங்கள்

நான்கு வருடங்களுக்கு முன்னர் இந்த நாட்டு மக்களில் பெரும்பான்மையானோர் மைத்திரிபால சிறிசேனவை நிறைவேற்று ஜனாதிபதியாக தெரிவு செய்தனர். இன்றிலிருந்து சுமார் ஒரு வருட காலப் பகுதிக்குள் அடுத்த நிறைவேற்று ஜனாதிபதியும் தெரிவு செய்யப்படவிருக்கிறார்.

கடந்த காலத்தில் செய்த தவறுகளை எதிர்காலத்தில் செய்யாதிருக்க எம்மால் முடியுமா?கடந்த காலத்தில் செய்த தவறுகள்தான் யாவை? அண்மையில் கட்டவிழ்த்து விடப்பட்ட அரசியலமைப்பிற்கு எதிரான சூழ்ச்சியின் சூடு இன்னும் தணிந்து போகாத சூழ்நிலையில் கூட மனதில் எழுகின்ற பதில் என்னவெனில், ஜனாதிபதி பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவை தெரிவு செய்து கொள்வதேயாகும்.

ஏதேனும் ஒன்று இடம்பெற்ற பிறகு அது தொடர்பில் தெளிவினை ஏற்படுத்திக் கொள்ளல் எனப்படுகின்ற பிந்திய ஞானம் எமக்கு நிறைய விடயங்களை கற்றுத் தருகின்றது. அதேபோல் சில குறைபாடுகளும் அங்கு இடம்பெறும். 2015இல் எமக்கிருந்த தெரிவு மிக சரலமானதொன்று. மஹிந்த ராஜபக்ஷவிற்கு மூன்றாவது தடவையும் வழங்குவதா, இல்லையா என்பதுதான் அது. மஹிந்த ராஜபக்ஷவை ஜனநாயக ரீதியாக அதிகாரத்திலிருந்து அகற்றுவதுதான் அன்று எமது தேவைப்பாடாக இருந்திருந்தால், 2015 என்பது அதற்காக எமக்கு கிடைத்த இறுதி சந்தர்ப்பமாகும். ராஜபக்ஷக்கள் இன்னும் ஆறு வருடங்கள் ஆட்சியில் இருந்திருந்தால் இலங்கையில் ஜனநாயகம் குழிதோண்டி புதைக்கப்பட்டிருக்கும். அன்று அநுரகுமார திசாநாயக்க தெரிவித்ததைப் போல மஹிந்த ராஜபக்ஷவினது ஏகாதிபத்திய வெறியினை இந்த சந்தர்ப்பத்தில் தோற்கடிக்கவில்லையெனில் மீண்டும் திருப்பம் ஒன்றினைக் காண்பதற்கு இலங்கைக்கான வாய்ப்பு இல்லாது போகும்.

ஜனாதிபதி பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன தெரிவு செய்யப்படுவதற்கான தர்க்கரீதியான காரணம் இதுவேயாகும். ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகளூடாக அந்த தர்க்கத்தின் உண்மைத் தன்மை உறுதிப்படுத்தப்பட்டது.

மைத்திரிபால சிறிசேனவை தெரிவு செய்து கொள்வதில் அல்ல தவறு நடந்தது. உண்மையாகவே 2014இல் செய்யக்கூடியதாக இருந்த மிகச் சரியான தெரிவு அதுதான். தவறு யாதெனில், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாக அவர் வழங்கிய உறுதிமொழியை மையப்படுத்தி அவரைக் கட்டுக்குள் வைப்பதில் நாம் அடைந்த தோல்வியே ஆகும்.

தமது ஒன்பது வருட ஆட்சிக் காலப்பகுதிக்குள், இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையினுள் சட்டரீதியாக அமையப்பெற்ற சர்வாதிகார ஆபத்து யாதென்பது தொடர்பில் மஹிந்த ராஜபக்ஷ வெளிப்படுத்தி இருந்தார். 2014ஆம் ஆண்டின் போது எதிர்க்கட்சித் தரப்பினர் பெரும் விரிசலில் இருந்ததோடு அந்த பயங்கரமான அவதானமிக்க நிமைமையை மிகத்தெளிவாக அடையாளம் கண்டும் இருந்தனர். அதன் பிரதிபலனாகவே நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோள் எதிர்த்தரப்பு அரசியலில் அன்று முக்கியமானதொரு




தலைப்பாக அமைந்தது.

மைத்திரிபால சிறிசேன ராஜபக்ஷ அரசிலிருந்து வெளியே வந்தது 2014 நவம்பர் 21ஆம் திகதியே. ஜனாதிபதி பொது வேட்பாளராக போட்டியிடுவதை ஏற்றுக் கொண்டார். அதனுடன் இணைந்ததாக நடந்த ஊடக சந்திப்பின் போது, தாம் நாட்டுக்குப் பெற்றுக் கொடுக்கவுள்ள விடயங்கள் தொடர்பாக அவர் அங்கு தெளிவுபடுத்தினார். அவற்றுள் மிக முக்கியமான முதலாவது விடயமாக அமைந்தது நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாகும். அந்த முறைமையானது அரசியல் ரீதியாகவும் ஒழுக்க ரீதியாகவும் நாட்டுக்கு பெரும் தீங்கானது எனவும், அநீதி மற்றும் பாரபட்சத்தின் உறைவிடம் என்பதனையும் அவர் அங்கு தெரிவித்தது மட்டுமல்ல அதனை தோலுரிக்கும் வகையில் தெரிவித்து நின்றார். ஐக்கிய தேசியக் கட்சியுடன் மிகத் தெளிவான இணக்கப்பாட்டுக்கு வந்தது, இந்த முறைமையை முடித்து விட வேண்டும் என்பதற்காகத் தான் என்றும் அவர் அங்கு தெரிவித்தார். எனவே நான் நாட்டு மக்களிடம் வேண்டி நிற்பது, 100 நாட்களுக்குள் அதனை நிறைவேற்றுவதற்கான அதிகாரத்தை எனக்கு பெற்றுக் கொடுங்கள் என்று அவர் மேலும் தெரிவித்துக் கொண்டார்.

தாம் வழங்கிய உறுதிமொழி, வெற்றியினைத் தொடர்ந்து பின்வழியாக வீசி எரியப்படும் நிலைமை ஏற்படும் வரையில் இடமளித்தமையே தவறு நடப்பதற்கு வாய்ப்பாக அமைந்தது. 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்துடன் நாம் திருப்தி அடைந்தமையே தவறு நடப்பதற்கு காரணமாக அமைந்தது. அதனைத் தொடர்ந்து, நிறைவேற்று ஜனாதிபதி முறைமையினால் ஜனநாயகத்திற்கு தீங்கு விளைவிக்கப்பட மாட்டாது என நாம் நம்பிக்கை வைத்தமையே தவறு நடப்பதற்கு வாய்ப்பாக அமைந்தது.

அந்த தவறுக்கான ஒட்டுமொத்த பொறுப்பையும் சிறிசேன மீது மட்டும் ஒப்படைத்து விட முடியாது. அதற்கிணையான தவறும் பொறுப்பும் ஐக்கிய தேசியக் கட்சியையும் சாரும்.

இலங்கை சுதந்திரக் கட்சியை இரண்டாக பிளவுபடுத்தி அடுத்த ஜனாதிபதித் தேர்தலை மிக இலகுவாக வெற்றி கொள்வதே ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாக இருந்தது. அவ்வாறானதொரு இலகுவான வெற்றியைப் பற்றி அவர் எந்தளவு நம்பிக்கை கொண்டிருந்தார் என்று கூறுவதாயின், நாட்டு மக்களது பொது எதிர்பார்ப்பினையும் கூட மறந்தே அவர் செயற்பட்டார். நல்லாட்சியின் தரங்களை தொடர்ச்சியாக மீறிச் செயற்பட்டார். சஜித் பிரேமதாஸ (ரவி கருணாநாயக்கவும் கூட) ரணில் விக்கிரமசிங்கவை தலைமையிலிருந்து அகற்றிவிட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடவே காத்திருந்தனர். அதனடிப்படையில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் போராட்டத்திற்கு தலைமை தாங்குவதனை ஐக்கிய தேசியக் கட்சி தவிர்த்துக் கொண்டது.

இதற்கிடையில், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையின் விஷம் மைத்திரிபால சிறிசேனவையையும் தொற்றிக் கொண்டது. அந்த முறைமையை ஒழிக்கும் தலைப்பிலிருந்து லாவகமாக விலகிச் சென்ற அவர், ஒரு தடவை மட்டுமே ஜனாதிபதியாக பதவி வகிக்கும் தமது எண்ணத்தையும் மெதுவாக புறந்தள்ளி வைத்தார். அவரையும் நோய் தொற்றிக் கொண்டது. அதாவது மீண்டும் எவ்வாறு ஜனாதிபதியாக வருவது என்ற நோயே அது.

மாதுலுவாவே சோபித்த தேரர் உயிருடன் இருந்திருந்தால், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையினை ஒழிக்கும் உறுதிமொழி எமது அரசியல் கலந்துரையாடலில் இருந்தும் சமூக சிந்தனையிலிருந்தும் மறைந்து போவதற்கான வாய்ப்பு உருவாகியிருக்க மாட்டாது. அவர் இல்லாத இந்த சமூகத்தில் அந்த செங்கோலை தாங்கிச் செல்வதற்கான தேசிய மட்டத்திலான வரவேற்பினைப் பெற்ற ஒரு கதாபாத்திரம் நாட்டுக்குள் இல்லாது போனது.

(இந்த கட்டுரையாளர் உட்பட) நாம் செய்த ஒரு தவறுதான், 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்துடன் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையின் விஷப்பல் அகற்றப்பட்டு விட்டதெனவும், இனிமேலும் அது பெரும் தீங்கினை விளைவிக்காது எனவும் நம்பிக்கையை கட்டியெழுப்பிக் கொண்டமையாகும்.

அதன்படி அதுவரையில் காணப்பட்ட ஒட்டுமொத்த அடித்தளமும் மாற்றம் கண்டன. அதனூடாக 2018 ஒக்டோபரில் கட்டவிழ்த்து விடப்பட்ட அரசியலமைப்பிற்கு எதிரான சூழ்ச்சிக்கு பாதை உருவாக்கப்பட்டது.

முகமூடி அணிந்தவொரு ஆசிர்வாதமாக அரசியலமைப்பு சூழ்ச்சி அமைந்தது.

சூழ்ச்சி நடைபெறுவதற்கு முதல் நாள் அதாவது ஒக்டோபர் 24ஆம் திகதி நாடு எங்கிருந்தது? 2015இல் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றமையானது உண்மையான இலங்கையின் ஒத்துழைப்பின் - ஒரு கூட்டு முயற்சியின் பிரதிபலனாகவே. 2018இல் அந்தக் கூட்டு ஒத்துழைப்பு சுக்கு நூறாக சிதைந்து போயிருந்தது.

அரசாங்கம் செய்தவைகள் ஊடாகவும் செய்யாதவைகள் ஊடாகவும் தமது பழைய தோழமைகளுடன் மனஸ்தாபத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அவ்வாறான பல தோல்விகளை உண்மையாகவே தவிர்த்துக் கொள்ளக் கூடிய நிலைமை இருந்தது. தேசிய பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வினை பெற்றுக் கொடுப்பது கடினமானதொரு விடயமாக இருக்கலாம். ஆயினும், வடக்கு கிழக்கு இரு மாகாணங்களிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை போதுமானளவு அமைத்துக் கொடுக்க முடியாமல் போனது ஏன்? கண்டியில் முஸ்லிம் எதிர்ப்பு கலவரம் அரசாங்கம் எதிர்பார்த்திராத, திடீரென உருவாகிய ஒரு நிலையாக இருக்கலாம். ஆயினும், அதன் சந்தேக நபர்களை சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களுக்கெதிராக தண்டனை வழங்க முடியாமல் போனது ஏன்? ரூபாவின் வீழ்ச்சியை முழுமையாக கட்டப்படுத்த முடியாத விடயமாக இருக்கலாம். ஆனாலும் அதனால் சாதராண பொது மக்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்களை கவனத்தில் கொள்ளாதது ஏன்? தம்மவர்கள் ஊழலில் ஈடுபட்ட போதும் கூட அரசாங்கம் மௌனம் காத்தது எதனால்? அரசியல் கொலைக் குற்றவாளிகள் ஒருவரையேனும் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்குவதில் தோல்வி கண்டது ஏன்? லசந்த விக்கிரமதுங்க கொலைசெய்யப்பட்டு பத்தாண்டு நினைவு கூறப்படுகின்ற இச்சந்தர்ப்பத்தில், மேலே கூறப்பட்ட இறுதியானது மீண்டும் எமக்கு பழைய விடயங்களை நினைவுபடுத்தி இன்றும் அச்சம் கொள்ளவைக்கின்றது.

கடந்த பெப்ரவரியில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் படுதோல்வி கண்டாலும், தற்போதுள்ள நிலைமையின் விபரீதத் தன்மையைப் புரிந்து கொள்வதில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வி கண்டுள்ளது. எரிபொருள் தொடர்பில் கொண்டு வரப்பட்ட விலைச் சூத்திரமானது வாக்காளர்கள் மீதான அரசாங்கத்தின் செயற்திறன்

12 ஆம் பக்கம் பார்க்க....



# விடுதலைப்புலிகளை நேசித்த எம்ஜிஆர்

விடுதலைப்புலிகளையும், அந்த இயக்கத்தினது தலைமையையும் வெகுவாக நேசித்தார் முன்னாள் தமிழக முதல்வரும், அதிமுக நிறுவருமான எம்ஜிஆர். அதற்கு எம்ஜிஆருக்கு ஆயிரம் அரசியல் ரீதியிலான காரணங்கள் இருந்திருக்கலாம் என சிலர் கூறலாம். ஆனால், அவற்றையெல்லாம் கடந்து உணர்வு ரீதியான தார்மீக ஆதரவினை அவர் புலிகளுக்கு அளித்து வந்தார் எம்ஜிஆர் - புலிகளுக்கு இடையேயான உறவினை விவரிக்கும் உலக தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் அவர்கள்.

அதற்கு உதாரணமாக பல சம்பவங்களை கூறலாமென தெரிவிக்கும் நெடுமாறன், எம்ஜிஆர் - புலிகள் மீது கொண்டிருந்த பற்றினை பின்வருமாறு விவரிக்கிறார். தமது இறுதி ஆட்சி காலத்தின் போது விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ரூ.5 கோடி நிதியளிக்கப்போவதாக சட்டமன்றத்திலேயே அறிவித்தார் எம்ஜிஆர். ஏற்கனவே,



புலிகள் இயக்கத்தினை தமிழகத்தில் சுதந்திரமாக உலாவ விடுவதாக தமிழக அரசின் மேல் அதிருப்தியில் இருந்த மத்திய அரசுக்கு எம்ஜிஆரின் இந்த செய்கை ஆவேசத்தை உண்டாக்கியது.

எம்ஜிஆரின் அறிவிப்பினை கேட்ட இலங்கை அரசாங்கமும் மத்திய அரசிடம் இதை தடுத்து நிறுத்த வேண்டுமென கோரிக்கை வைக்கவே, புலிகளுக்கு உதவிட வேண்டாமென தகவல் அனுப்பினார் ராஜீவ். முன்னமே மத்திய அரசின் மீது அதிருப்தியில் இருந்த எம்ஜிஆர், நான் இனி புலிகளுக்கு நிதியளிக்க போவதில்லை ; முன்னமே அளித்துவிட்டேன் என்றார்.

ஆனால், உண்மையில் அவ்வாறு தெரிவித்த இரு நாட்களுக்கு பின்புதான் நிதியளித்தார் எம்ஜிஆர். இந்த தகவலை தமது உதவியாளர் பார்த்தசாரதி அய்யங்கார் மூலம் அறிந்துகொண்ட ராஜீவ், உடன் எம்ஜிஆரை டெல்லிக்கு அழைத்தார். அங்கே, ராஜீவ் முன்னிலையில் எம்ஜிஆரை கேள்விக்கணைகளால் துளைத்தெடுத்துள்ளனர் நடுவண் அரசு அதிகாரிகள்.

இத்தகைய தடைகள் மற்றும் அழுத்தங்களையெல்லாம் கடந்தே அவர் புலிகளுக்கு உதவினார் என தமது அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார் பழ.நெடுமாறன்.

## குறுகியகால...

10 ஆம் பக்கத் தொடர்ச்சி

வெறுப்புணர்வுகளை ஏற்படுத்தியிருக்கின்றன. காரணம் மேற்படி இரு விடயங்களும் மிக முக்கியமான விடயங்களாகவே இருக்கின்றன.

தேசிய அரசாங்கத்தின் சரியான வரையறைகளை அறிந்து கொண்டு அதன்படி செயற்பட முடியுமானால் அது விடயத்தில் மக்களுக்கு ஆட்சேபனை இருக்காது.

ஆனால் கடந்த காலத்தில் தேசிய அரசின் சரியான புரிதல்கள் இல்லாது அரசியல் தலைமைகள் செயற்பட்ட விதங்கள் இன்று மக்களை தேசிய அரசின் கருத்திலிருந்து விலகிச் செல்ல வைத்துள்ளது என்பதே கண்டறியப்பட்ட யதார்த்தனமான உண்மைகளாகும்.

எனவே தேசிய அரசின் புதிய யோசனைகளை ஒருபுறம் வைத்து விட்டு தற்போதுள்ள அரசு இன்னும் ஒருவருட காலத்திற்கு மட்டும் இருப்பதால் அது முடியம் வரை தற்போதைய அரசு மக்களுக்குச் செய்ய வேண்டிய சேவைகளை செய்வதே நல்ல விடயங்களாக அமையும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## அரசியலமைப்பு...

11 ஆம் பக்கத் தொடர்ச்சி

அற்ற வெளிப்பாட்டின் ஒரு நிலைமையே ஆகும். புவி வெப்பமடைதல் இலங்கைக்கு எவ்வாறு தாக்கத்தினை செலுத்தும் என்பது தொடர்பாகவோ அல்லது சீனாவுக்கு துரித வேகத்தில் அடிமையாகிக் கொண்டிருப்பது தொடர்பிலோ (அரசாங்கத்தின் அபிவிருத்தி கருத்திட்டங்கள் தொடர்பான பாரிய பதாகைகள் சிங்கள, ஆங்கில மற்றும் சீன மொழிகளைத் தவிர தமிழ் மொழியில் காட்சிப்படுத்தப்படாத தன்மை சுட்டிக்காட்டப்படுகின்ற நிலைமையினுள்) அன்றாடம் கொன்றழிக்கப்படுகின்ற யானைகள் பற்றியோ அல்லது நுரைச்சோலை நிலக்கரி மின் ஆலையில் ஏற்பட்ட நிலைமைகள் தொடர்பாகவோ வன்புணர்வுகள் பற்றியோ சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பிலோ அரசாங்கத்திற்கு எவ்வித கரிசனையும் காணப்படவில்லை. அண்மையில் நீர்கொழும்பு பிரதேசத்தில் நபரொருவரால் நாயொன்று தீயிட்டு கொல்லப்பட்ட சம்பவம் கூட அரசாங்கத்தின் இயலாமையை வெளிப்படுத்திய இன்னுமொரு சம்பவமே அது. விலங்குகள் நல சட்டம் தொடர்பில் அரசாங்கம் கவனத்தில் கொள்ளாமையே அதற்கான காரணமாகும்.

மிக முக்கியமாக ‘அரசியலமைப்புச் சபைக்கு’ சமல் ராஜபக்ஷவை முன்மொழிவதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு எடுத்த (தவறான) முடிவு, சில வேளைகளில், அரசியலமைப்புக்கு எதிரான சூழ்ச்சி கட்டவிழ்த்து விடப்படுவதற்கு முன்னதாக நாமிருந்த நிலைமையை மிகத் தெளிவாக புலப்படுத்திய ஒரு சந்தர்ப்பமாக அமையலாம். அரசாங்கத்தின் முட்டாள்தனத்திற்கு நன்றியாக அமையட்டும், பன்மைத்துவ இலங்கை தொடர்பான எண்ணக்கரு விடயத்தில் ராஜபக்ஷக்களினால் ஏற்படுத்தக் கூடிய அவதானமிக்க சூழ்நிலையை நாட்டிலிருக்கும் சிறுபான்மை இன கட்சிகள் கூட மறந்து போயிருந்தது.

மைத்திரிபால சிறிசேனவினது சூழ்ச்சியானது எந்தளவு பேரிடியாக இருந்தாலும், அது நித்திரையில் நடந்து திரிந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு அவசியமான நேரத்தில் கன்னத்தில் அறைய வேண்டியிருந்த ஒரு அடியாகும். ராஜபக்ஷக்கள் மீண்டும் பேயாட்டம் ஆடும் நிலைமையின் யதார்த்த நிலையானது யாவருடைய கண்களையும் திறந்து விடும் நிலைக்கு தள்ளப்பட்டது. ரணில் விக்கிரமசிங்க தமக்கு பழக்கமே இல்லாத ஒரு பலத்தை அங்கு நிரூபித்துக் காட்டினார். ஐக்கிய தேசியக் கட்சியும் குறைந்த அளவில் அவரைச் சுற்றி ஒன்று கூடியது.

ஜனநாயகத்திற்கு விடுக்கப்பட்ட அம் மாபெரும் மிரட்டலுக்கு முன்னால் 2015 குழுவானது மீண்டும் எழுந்து நின்றது. ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கென தமிழ் தேசிய கூட்டமைப்பும், மக்கள் விடுதலை முன்னணியும் துணிவுடன் எழுந்து நின்றமையானது, சிறிசேன சூனியக் குழுவினரால் உருவாக்கி விடப்பட்ட மிகச் சிறந்த பிரதிபலனாக கவனத்திற் கொள்ள முடியும். உதாரணமாக, எம்.ஏ. சுமந்திரன் மற்றும் அநுரகுமார திசாநாயக்க அது தொடர்பில் பேசிய பேச்சுக்கள், அவசியமானதொரு கற்கையாக கொள்ள முடியும். ஏனெனில், அவர்கள் இந்தப் பிரச்சினையை வெறுமனே தமது கட்சி சார்ந்த கோணத்திற்கு அப்பால் சென்று தேசிய நோக்கக் கோணத்தில் வைத்து ஆய்வுக்குட்படுத்தியமையே அதற்கான காரணமாகும்.

ஜனநாயகத்தினைப் பாதுகாப்பதற்காகவும், சட்டத்தின் ஆளுமையை நிலைநாட்டுவதற்காகவும் சாதாரண மக்கள் சுயமாகவே எழுந்து நிற்கின்றமையானது கடந்த சில மாதங்களில் இடம்பெற்ற சம்பவங்களினால் ஊக்கம் அளிக்கப்பட்ட மற்றுமொரு சாதகமான விடயமாகும். ஐக்கிய தேசியக் முன்னணி அரசாங்கத்தின் தவறுகள், வெளிவேசங்கள் காரணமாக, 2015இல் மஹிந்த ராஜபக்ஷவை இரண்டு தடவைகள் தோற்கடித்த மக்கள் அரசாங்கத்தை விட்டு விலகி நின்றனர். ராஜபக்ஷவுக்கு எதிரான ஜனநாயக குழுக்களும் சோர்ந்து போயின, செயலிழந்து நின்றன. காரணமின்றி சிதறிப் போய், அவ்வாறான குழுக்களின் செயற்பாடு கூட நிலையில்லாத நிலைமைக்கு ஆளாயின. ஆயினும், அரசியலமைப்பிற்கு எதிரான சூழ்ச்சியுடன் அவ் அனைத்தும் மாற்றம் பெற்றன. நாடு உண்மையிலேயே எதனால் வீழ்ச்சியடைந்துள்ளது என்ற விடயம் தெளிவாகியது. சாதாரண மக்கள் அவ்வாறு ஏற்படுத்தப்பட்டு வந்த ஜனநாயக -எதிர்ப்பு செயற்பாட்டுக்கு எதிராக தம்மால் முடிந்த வகையில், ஒரு சந்தர்ப்பத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடாத்தியும், மற்றொரு சந்தர்ப்பத்தில் மகஜரில் கையொப்பம் பெறுதல் ஆகியவற்றின் மூலமாக ஒத்துழைப்பு நல்கி எழுந்து நின்றனர். அந்தச் சமூக எழுச்சியானது இலங்கைக்கு புதிய அனுபவமாக அமைந்தது. இந்தச் சிக்கல் நிலைமையின் பின்னரும் கூட அந்த உயிரோட்ட பண்புகள் தொடர்ச்சியாக நீடிக்கும் என்று எதிர்பார்க்கக் கூடியதாகவுள்ளது.

எவ்வாறாயினும், இந்த கதையின் வீரனாக கணிக்கப்பட்டது நீதிமன்றமே. மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்தின் அனைத்து நீதிபதிகளும் (ஈவா வனசுந்தர நீதிவான் உட்பட) இந்தச் சவாலை ஏற்றுக் கொண்டனர். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை தொடர்பிலான வழக்கினை விசாரணை செய்த உச்சநீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிட்டதன் படி, அதிகாரம் கொண்ட எவருக்கும், ஜனாதிபதி ஒருவருக்குக் கூட, வேறு அரச அதிகாரி ஒருவருக்குக் கூட, எமது சட்டத்தில் எல்லையற்ற அதிகாரங்கள் ஒப்படைக்கப்படவில்லை என இந்த நீதிமன்றம் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் சுட்டிக்காட்டியுள்ளது. சூழ்ச்சியின் காரணமாக, ஜனநாயகத்திற்கு தமது இருப்பினை தக்கவைத்துக் கொள்ள மற்றுமொரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. ராஜபக்ஷக்களினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மிரட்டல்களை ஜனநாயகவாதிகளுக்கு நினைவூட்டுவதோடு மைத்திரிபால சிறிசேனவை விட கொடூரமான தலைவரொருவரின் கைகளில் அகப்படுவதற்கு முன்னர் இந்த நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படுவதன் தேவைப்பாட்டினையும் நினைவுபடுத்தியதாகவே அத் தீர்ப்பு அமைந்தது.

### இது, நிறைவேற்று ஜனாதிபதி முறைமைக்கு ஒத்துப் போகும் நாடு அல்ல

இலங்கையின் புராதன பண்டைய காலத்தையும் நிகழ்காலத்தையும் பற்றிப் பார்க்கின்றபோது அது நிறைவேற்று அதிகாரத்திற்கு பொருத்தமல்லாத நாடு என்பது தெளிவாகின்றது. நிறைவேற்று ஜனாதிபதி முறைமை மற்றும் ஜனநாயகம் என்பன ஒன்றாக இணைந்து பொருத்தமாக காணப்படுவது அரசாட்சி முறைமை முற்காலத்தில் காணப்படாத அமெரிக்கா போன்ற நாடுகளுக்கேயாகும். நிறைவேற்று ஜனாதிபதி முறைமை காணப்படுகின்ற பிரான்சிலும் முற்காலத்தில் அரசாட்சி முறைமை காணப்பட்டதென்பதும் உண்மைதான். ஆயினும், அந்த நாடு அரசாட்சி முறைமைக்கு எதிராக குடியரசு புரட்சியினை நடாத்தியதோடு அரசரும் கூட சரியான தருணம் பார்த்து தலையறுத்து கொல்லப்பட்டார். இலங்கையின் ஆட்சி வரலாற்றிலும் அரசர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஆயினும், அது பிரான்சைப் போன்று ‘சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம்’ ஆகிய மூவகை விடயங்களின் கீழ் ஒன்று திரண்ட பொது மக்களைப் போலல்லாது அதிகார வெறி கொண்ட தரப்பினரால் தான் அவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளனர். எனவே, எமது நாட்டு மக்கள் அவ்வாறானதொரு விடயத்திற்கு ஒத்துழைப்பு நல்கியிருக்காத சூழ்நிலையில், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையொன்று தொடர்பில் கரிசனை ஏற்படுவதற்கு காரணமாயிருப்பது அரசாட்சி தொடர்பில் காணப்படும் விருப்பமாக இருக்கலாம். மறுபுறம் அடிமை எண்ணம் கொண்ட மனநிலையும் அங்கு வெளிப்படுத்தப்படுகிறது.

இலங்கையில் ஜனநாயகத்திற்கு முன்னால் இருக்கும் மிகத் தெளிவான சவால் யாதெனில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷ ஒருவர் அதிகாரத்திற்கு வருவதேயாகும். 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் காரணமாக மஹிந்த, பஸில், கோட்டபாய மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் பொருத்தமற்றவர்களாக ஆக்கப்பட்டிருப்பினும், சமல் ராஜபக்ஷ தொடர்பில் அவ்வாறானதொரு எதுவிதத் தடையும் இல்லை. ஆதரவாளர்கள் வலுவூட்டப்படுவதும், எதிர்த்தரப்பினர் வலுவிலக்கச் செய்யப்படுவதும் தொடர்பில் பார்க்கின்ற போது அவர் மிகவும் பலம்வாய்ந்த வேட்பாளராகும் வாய்ப்பு உள்ளது.

ராஜபக்ஷக்கள் தோல்வி அடைந்தாலும், வெற்றி பெறுவது யார்? அதிஷ்டத்தாலும் மைத்திரிபால சிறிசேனவால் வெற்றி பெற முடியாது. அப்போது மீதமாய் இருப்பது ரணில் விக்கிரமசிங்கதான். சஜித் பிரேமதாஸ அல்லது ரவி கருணாநாயக்கவும் பட்டியலில் இருக்கின்றனர். இங்கு சொல்லப்பட்ட தலைவர்களில் எவரேனும் ஏதேனும் வழியால் வெற்றி கொண்டாலும், மைத்திரிபால சிறிசேனவை விடவும் ஜனநாயகவாதியாக செயற்படுவார்கள் என நாம் நம்பிக்கை கொள்வதற்கு சாதகமான வேறேதும் காரணிகள் உள்ளதா?

புதிய ஜனாதிபதி யாராயினும், அதிகாரத்திற்கு வருகின்ற கையுடன் நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுவர் என்பது ஊர்ஜிதம். அவ்வாறு செய்வதற்கான காரணம் ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக் கொண்ட வெற்றியின் சூடு தணியுமுன்னர் நாடாளுமன்றத் தேர்தலையும் வெற்றி கொள்வதற்காகவே. அதாவது மார்ச் - ஏப்ரல் காலப்பகுதியில் நாடாளுமன்றத் தேர்தல் நடாத்தப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளதென்பதே. அவ்வாறான சூழ்நிலையில் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் ஒரே கட்சியை சென்றடைய வாய்ப்பு உள்ளது. எவ்வாறாயினும் 19ஆவது அரசியலமைப்பு திருத்தம் மூலமாக ஏற்படுத்தப்பட்ட இருப்பு மற்றும் மாற்றுப் பொறிமுறை எந்தளவு வெற்றி பெறும்? அவ்வாறான நிலையில் பிரதமராகும் நபர் ஜனாதிபதியின் கைப்பொம்மையாக செயற்படும் நிலைமையே உருவாகும். இலங்கையானது நிறைவேற்று ஜனாதிபதி முறைமைக்கு விசேடமாக பொருத்தமற்றதாக அமைவதற்கு ஏதுவானதொரு காரணி எமது அரசியல் முறைமையினுள் காணப்படுகின்றது. தற்போதுள்ள எந்தவொரு அரசியல் கட்சியிலும் உள்ளக ஜனநாயகம் காணப்படாமையே அதுவாகும். உதாரணமாக பார்ப்பதாயின், நிறைவேற்று ஜனாதிபதி முறைமை காணப்படுகின்ற (அமெரிக்கா, பிரான்ஸ், சிலி ஆகிய நாடுகள்) பெரும்பாலான நாடுகளில் பிரதான கட்சிகளுடைய தலைவர்களுக்கிடையில் ஜனாதிபதி வேட்பாளராக ஒருவர் தெரிவு செய்யப்படுகின்ற ஜனநாயக அல்லது சம்பிரதாய முறைமையொன்று காணப்படுகின்றது. அவ்வாறான தெரிவானது ஒட்டுமொத்த கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து பிரதிநிதிகளையும் கொண்டவொரு கொத்தணி மூலமாகவே. இலங்கையில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், எப்போதும் கட்சித் தலைவர்களே, அவர்களது தலைமைத்துவ அதிகாரத்தையோ அல்லது கொள்கைகளையோ சவாலுக்குட்படுத்தக் கூடிய ஜனநாயக சூழல் எமது கட்சி முறைமையினுள் காண்பதற்கும் இல்லை. கட்சியில் உள்ளக ஜனநாயகம் காணப்படாமையானது 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் நியாயமான வெற்றிகளை அர்த்தமற்றதாக்கி விடுவதற்கு ஏதுவான காரணியாக அமையலாம்.

டிசம்பர் 13ஆம் திகதி உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை மைத்திரிபால சிறிசேன ஏற்றுக் கொண்டார். அது மிக முக்கியமானதொரு விடயமாகும். சில சிங்கள ஊடகங்கள் (விசேடமாக 'ஞாயிறு லங்காதீப) வெளியிட்ட செய்திகளின் படி, அவரது புதிய அரசியல் தோழமையாகிய மஹிந்த ராஜபக்ஷ அவருக்கு ஆலோசனை வழங்கியிருப்பது உச்சநீதிமன்ற தீர்ப்பினை கவனத்திற் கொள்ளாது நாடாளுமன்ற தேர்தலொன்றுக்கு செல்லுமாறுதான். மைத்திரிபால சிறிசேனவும் அந்த ஆலோசனையின் படி செயற்பட்டிருந்தால் ஏற்படவிருந்த விபரீதத்தின் அழிவினை அளவிட முடியாது. ஆயினும், அவர் அவ்வாறு செய்யவில்லை. அப்படி எனில், அதாவது தமக்கு பாரியளவில் சாதகமற்றதாக வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பிற்கு அடிபணியத் தயாரான ஜனாதிபதியாக அவர் செயற்பட்டமையானது, கடந்த இரண்டு -மூன்று மாத காலப்பகுதியில் பல குழப்ப நிலைகளை தோற்றுவித்தாலும் 2015இல் மேற்கொண்ட தெரிவானது சரியானது என்பதனையே சுட்டிக் காட்டுகின்றது.

அடுத்த ஜனாதிபதியை தெரிவு செய்கின்ற காலம் நெருங்கி வரும் வேளையில் இந்த பிரச்சினையானது மேலும் முக்கியமான விடயமாக எம் கண்முன் காணப்படும். அவ்வேளையில் நாம் ஒத்தழைப்பு நல்கும் வேட்பாளர் இன்னுமொரு மைத்திரிபால சிறிசேன ஒருவரோ அல்லது அவரையும் மிஞ்சிய ஒரு நபராக இருக்கமாட்டார் என சொல்வதற்கு உள்ள உறுதிப்பாடு தான் என்ன?

அதன்போது எம் கண்முன் இருப்பது ஒரேயொரு பாதுகாப்பான மாற்றுவழி மாத்திரமே: நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிக்கவும்.

இந்த முறைமையை ஒழிப்பதற்கு அவசியமான அழுத்தம் சமூகத்தினுள் காணப்படுமாயின் மேலும் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகிய கட்சிகளுக்கு அந்த வேண்டுகோளுக்கு தலைமைத்துவத்தினை வழங்க முடியுமாயின், ஐக்கிய தேசியக் கட்சியினால் அதனை நிராகரிக்க முடியாமல் போகும். ஜனாதிபதியானவர், நேரடியாக தேர்தலொன்றின் மூலமாக தெரிவு செய்யப்படுவதற்கு பதிலாக நாடாளுமன்றத்தின் மூலமாக தெரிவு செய்யப்படுகின்றவரும், அரசாங்கத்தின் தலைவரல்லாத ஒருவராகவும் கட்சியொன்றின் தலைவருமல்லாத ஒருவராக இருப்பது தொடர்பான முன்மொழிவுகளை உள்ளடக்கிய மக்கள் விடுதலை முன்னணியின் 20ஆவது அரசியலமைப்பு திருத்தம் இந்த விடயம் தொடர்பிலான மிகச் சிறந்த ஆரம்பமாக சுட்டிக் காட்ட முடியும்.

அந்த முயற்சியானது வெற்றியடையலாம் அல்லது தோல்வியடையலாம். ஆயினும், அது மேற்கொள்ளப்பட வேண்டிய பெருமுயற்சியாகும். அரசியலமைப்பு சூழ்ச்சியானது இந்நதளவு பாடங்களைக் கற்றுக் கொடுத்துள்ள சூழ்நிலையினுள்ளும் அதனை செய்யாதிருப்பது முட்டால்தனமான ஒரு கொடுமையாகும்.

**What the coup taught us** என்ற தலைப்பில் திசரணி குணசேகர எழுதி கிரவுண்ட்விவ்ஸ் தளத்தில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம்.

## தலைமைகள்...

10 ஆம் பக்கத் தொடர்ச்சி

எங்குபார்த்தாலும் தொல்லியல், புராதனம் அது எங்களுக்குத்தான் சொந்தம் என்று தேசியவாதம் பேசுகின்ற தேசியவாதிகள் மாத்திரம்தான் இந்நாட்டு தொல்லியலுக்குச் சொந்தக்காரர்கள் என்று கூவுவதும் நமது தலைமைகள் இதோ வருகிறேன் என்று ஆளும் அரசியல்வாதிகளோடு ஒத்து கும்மாளம் இடுவதும் ஒரு பொழுபோக்காக இருந்தாலும் நமக்கென்று பல தொல்லியலை விட்டுவிட்டு அலைய வேண்டிய இக்கட்டான தருணத்தில் தலைமைகள் ஒன்றுபட்டு இவற்றை காப்பாற்ற பணியாற்றுவார்களாக இருந்தால் நாம் ஜெயம் பெற்றவர்களாகவே மாறுவோம். ஆனால் முஸ்லிம் அரசியல் தலைமைகள் வெறுமையாக இருப்பதுதான் நமது இருப்புக்கு ஆபத்து வந்து விட்டது என்பதையே காட்டி நிற்கின்ற கதைகூட நமது மாந்தருக்குத் தெரியாது என்பதுதான் கவலையான விடயமாகும்.

அண்மையில்கூட பேராதனையை பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் தன் முகநூலில் எழுதியிருந்த விடயம் சிந்திக்க வேண்டிய ஒன்றாக இருந்தது. அதாவது, தொல்லியல், முஸ்லிம்களுக்கு தொல்லை தருகின்றதா...எனும் தலைப்பில் எழுதியிருந்தார். தொல்லியல் சார் பிரச்சினைகள் இன்று முஸ்லிம் சமூகத்தில் முழுமையான பிரச்சினையாக மாறியுள்ளது, பல்கலைக்கழக பொறியியல்பீட மாணவர் கைதின் பின்னர், இலங்கைத் தொல்லியல் துறையும் அதுசார் சட்டம், நிர்வாகம் என்பனவற்றின் மீது பலரும் தமது குற்றச்சாட்டு கருத்துக்களை முன்வைக்கின்றனர், ஆனால் குறித்த விடயம், எந்தளவு ஆழமானது, அதில் எமது, கடந்தகால, எதிர்காலப் பங்களிப்பு என்ன என்பது தொடர்பில் பார்க்க வேண்டியிருக்கிறது.

தொல்லியல் துறை, காலனித்துவ வாதிகளால் ஆரம்பிக்கப்பட்டாலும், தொல்லியல் துறையின் ஒரு பிரிவான, இரசாயனப்பகுதி, மிக முக்கியமானது, அதன்மூலமே, ஓவியம், சிற்பம், போன்ற குறித்த துறையின் நீட்சியைப் பாதுகாக்க முடியும், அதன் தோற்றுவிப்பாளர் ஒரு முஸ்லிம், என்பது மிக முக்கியமான அம்சம், அதை நம்மில் எத்தனை பேர் அறிந்திருக்கின்றோம்,? இந்திய தொல்லியல் துறை இரசாயனவியலாளரான (யுசஉடநழடழபடி உயட ஊடநஅளைவ) இவர் உலகப் புகழ்மிக்கவர், புராதன நாகரீகங்களான, ஹரப்பா, மொஹஞ்சதேரோ, போன்றவற்றை ஆய்வு செய்தவர், 1940 ல் இலங்கை சீகிரிய ஓவியங்கள் பலவீனமடைந்த போது, அதற்கான சிறப்பறிஞர்கள் இலங்கையில் எவரும் இருக்கவில்லை, 1943ம் ஆண்டு 27 ம் திகதியன்று இலங்கை வந்து அழிவடைய இருந்த புராதன ஓவியங்களை தனது அறிவையும், முயற்சியையும் கொண்டு, பாதுகாத்தார்,

அத்தோடு, தொன் அம்றூஷ் என்ற, ஆங்கிலேயரையும், குறித்த இரசாயனவியல் துறைக்காகப் பயிற்றுவித்தார், அதுவே தொல்பொருள் திணைக்களத்தின் இரசாயனப் பாதுகாப்புப் பிரிவின் ஆரம்பமாகும், அதற்கான முழுப்பங்களிப்பையும் செய்தவர் சனாஉல்லாகான், என்ற முஸ்லிம் என்பது பெருமைக்குரிய விடயமே, பின்னர், இந்திய தொல்லியல் துறையில் இருந்து ஓய்வு பெற்ற பின் 1947 ஏப்ரல் 13ம் திகதி மீண்டும் இலங்கை வந்து இலங்கையின் சுவரோவியங்களான பொலன்றுவை, லங்காதிலக்க, கல்விகாரை, புள்ளிகொட, ஹிந்தகல போன்ற இந்நாட்டின் மிக முக்கிய புராதன தலங்களைப் பாதுகாக்கும் பணியில் முழுமையாக தன்னை அர்ப்பணிப்புச் செய்தார், அந்த வகையில் இலங்கையின் , தொல்லியல் துறைசார், சிற்பங்களுக்கும், ஓவியங்களுக்கும் பணி புரிந்ததுடன், குறித்த இரசாயனத் துறை பிரிவு இன்றுவரை இயங்குவதற்கு காரணமாக அமைந்தவர் முடயண டீயாயவரச ஆழாயஅஅநனளயயெரடடயா அவர்களே ஆவார். இவ்வாறான வரலாறுகளை மறந்து போன நமது சமூகத்தின் கதை இவ்வாறு நீண்டு நெடுத்திருக்கிற செய்திகளை நமது தலைமைகள் சிறப்பான முறையில் காரியமாற்றி மக்களையும், நாட்டையும் ஒரு தேசியத்திற்குள் கொண்டுவர உதவவேண்டும் என்பதே நமது அவாவாகும்.

# திருமலையில் அமெரிக்க படைத்தளம்

தமிழ்பேசும் மக்களின் கிழக்கு மாகாணம் திருகோணமலையில் அமெரிக்கா படைத் தளங்களை அமைத்து வருவதாக கொழும்பை மையப்படுத்திய இலங்கை எதிர்க்கட்சிகளினால் குற்றம் சுமத்தப்பட்டு வரும் நிலையில், அமெரிக்காவுடன் புதிய பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திடும் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளதாக இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் தகவல்கள் கூறுகின்றன. இந்தப் பாதுகாப்பு உடன்படிக்கை தொடர்பாக ஜே.வி.பி.உறுப்பினர் பிமல் ரட்ணநாயக்கா கடந்த வாரம் இலங்கை நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருந்தார். அதற்குப் பதிலளித்த அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல அமெரிக்காவுடன் பாதுகாப்பு உடன்படிக்கைகள் செய்யப்படுவது வழமை என்று கூறினார்.

இந்த நிலையில் அமெரிக்கப் பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினென்ட் கர்னல் டக்ளஸ் சி. ஹீஸ் இலங்கைக் கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் பியல் த சில்வாவை நேற்று வியாழக்கிழமை கடற்படை தலைமையகத்தில் சந்திதித்துள்ளார்.

முல்லைத்தீவு. திருகோணமலை உள்ளிட்ட கடற் பிரதேசங்களில் இலங்கைக் கடற்படையுடன் இணைந்து செயற்படுவதை மேலும் வலுப்படுத்துவது குறித்து பேசப்பட்டதாக இலங்கைக் கடற்படைத் தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை, ஆசியக் கடல் மையத்தில் அமெரிக்கக் கடற்படை தளங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் அமெரிக்காவுக்கு இலங்கை இலக்கல்ல என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த புதன்கிழமை இலங்கை நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்.

இலங்கைத் துறைமுகங்களுக்கு அமெரிக்கக் கடற்படையின் கப்பல்கள் வந்து சொல்கின்றன. அதற்காக அமெரிக்காவுக்கு படைத் தளம் அமைப்பதற்கு இடமளிக்க வேண்டிய அவசியம் எதுவுமே இல்லையெனவும் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

இலங்கை நாடாளுமன்றத்தில் பிரதமருக்கான கேள்வி நேரத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, இலங்கையில் அமெரிக்காவின் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்துக் கேள்வி எழுப்பய போது. ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு பதிலளித்திருந்தார்.

திருகோணமலையில் கடற்படை முகாம்

## பின்னணி என்ன?

அமைக்க அமெரிக்காவுக்கு அனுமதி வழங்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும், அமைச்சரவையினதும் நாடாளுமன்றத்தினதும் அங்கீகாரம் இல்லாமல் தீர்மானம் எடுக்க முடியுமா எனவும் வாசுதேவ நாணயக்கார கேள்வி மேலும் தொடுத்தார்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க, அந்தக் கேள்வியை நிராகரித்தார். எனினும் மகிந்த ராஜபக்சவை மையப்படுத்திய எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஜே.வி.பி உறுப்பினர்களும் அமெரிக்கா, திருகோணமலையில் கடற்படைத் தளம் அமைத்து வருவதை உறுதிப்படுத்திக் கூறினர்.

அதேவேளை, இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில், தமது கவனத்தைக் கூடுதலாகச் செலுத்தி வரும் அமெரிக்கா, ஈழத் தமிழர்களின் வடக்கு - கிழக்கு தாயகத்தில் குறிப்பாக திருகோணமலைத் துறைமுகத்தை இலக்கு வைத்து செயற்படுவதாக எமது கூர்மை செய்தித் தளம் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதல் செய்திகளையும் செய்திக் கட்டுரைகளையும் வெளியிட்டு வருகிறது.

முல்லைத்தீவு - திருகோணமலை உள்ளிட்ட கிழக்கு கடற்பகுதியில் எண்ணெய்வள ஆய்வு ஒன்றை அமெரிக்கா செய்து வருகின்றது. கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி எண்ணெய்வள ஆய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கு இந்தியாவின் நரேந்திரமோடி அரசு முழுமையான ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது. சீனாவின் இலங்கை மீதான ஆதிக்கமே திருகோணமலைத் துறைமுகத்தில் அமெரிக்கா கூடுதல் கவனம் செலுத்துவதற்குக் காரணமாகும்.

ஏனெனில் தென்சீனக் கடற் பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்த சீனா முழு ஏற்பாட்டையும் செய்துள்ளது. ஆனால் இதற்குத் தடையாக இந்தியா இருப்பதை சீனா விரும்பவில்லை.

இதற்காக இந்தியாவின் கொல்லைப் புறமாகக் கருதப்படும் மியன்மார், நேபாளம், இலங்கை, வங்காளதேசம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் வர்த்தகம், மூலப்பொருள் உட்பட ஏனைய விடயங்களிலும் இருதரப்பு உறவுகளைச் சீனா உருவாக்கி இந்தியாவை அச்சுறுத்தி வருகின்றது.

இதன் காரணமாகவே தென்சீன கடற்பரப்பில் இந்தியாவின் பிரசன்னத்தை ஜப்பான் வரவேற்று



வருகின்றது.

அத்துடன் அமெரிக்காவின் டொனால்ட் ட்ரம்ப் அரசாங்கத்துடன் இந்தியாவின் நரேந்திரமோடி அரசு தற்போது உருவாகியுள்ள அரசியல் இராணுவ உறவுகளின் பின்னணியில் இந்தியா பெற்றிருக்கும் கடல் சுதந்திரத்தினால் சீனா அச்சமடைந்துள்ளது.

இந்த நிலையில் நாற்பத்து நான்கு நாடுகளின் கடற்படையினர் பங்குபற்றும் அமான் 2019 என்ற பெயரிலான மிகப்பெரிய கூட்டுப் பயிற்சி எதிர்வரும் எட்டாம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை பாகிஸ்தானில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டுப் பயிற்சியில், இலங்கைக் கடற்படையும் பங்குகொள்ளவுள்ளது. ஆனால் அமெரிக்க இந்தியக் கடற்படை பங்குகொள்ளவில்லை.

அவுஸ்திரேலியா, கனடா, நைஜீரியா, பிலிப்பைன்ஸ், கட்டார், ரஷ்யா, சீனா, ஜேர்மனி, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், மலேசியா, மாலைதீவு உள்ளிட்ட 44 நாடுகளின் கடற்படை இந்தக் கூட்டுப் பயிற்சியில் இணையவுள்ளது.

ஆகவே, 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான அரசியல் சூழலே அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், சீனா போன்ற நாடுகளுக்கு இலங்கை கடற்பரப்பு உள்ளிட்ட இந்தோ பசுபிக் சமூத்திரத்தில் தமது நோக்கத்தை நிறைவேற்ற வசதியாக அமைந்து விட்டது எனலாம்.

இதற்கு மகிந்த ராஜபக்சவை மையப்படுத்திய எதிர்க்கட்சியும் ஜே.வி.பியும் எதிர்ப்பு வெளியிட்டாலும், ஈழத் தமிழர்களின் தாயகம் சுயநிர்ணயம் என்ற அரசியல் நியாயப்பாடுகளை அழிக்க இந்த நாடுகளின் நகர்வுகள் உதவலாம் என்ற மன நிலை அனைத்து சிங்கள அரசியல் கட்சிகளுக்கும் உண்டு.

ஏனெனில் இந்த நாடுகளின் உதவிகளைப் பெற்றே 2009 ஆம் ஆண்டு மே மாதம் ஈழத் தமிழர்களின் போராட்டம் அழிக்கப்பட்டமை உலகமறிந்த உண்மை.

நன்றி: இணையம்

# எரிமலை வெடிப்பால் உண்டான புதுத்தீவு



எரிமலைகளால் உருவாகும் தீவுகளே மிக எளிதாகவும் விரைவாகவும் உருவாகும் நிலப்பகுதி. அப்படி உருவானதுதான் இந்தச் சரளைக் கல் தீவும். வருத்தம் என்னவென்றால், இந்தத் தீவுக்கு ஆயுள் அவ்வளவு வலிமையாக இல்லை.

ரிமலை வெடிப்பதால் ஒரு புது நிலப்பகுதியே உருவாக வாய்ப்புண்டு. இதைப் பள்ளிப் பருவத்தில் படித்த நிலவியல் பாடங்களில் கற்றிருப்போம். ஆனால், அப்படியொரு நிகழ்வு நடக்க பல நூறு அல்லது ஆயிரம் ஆண்டுகள் ஆகும் என்பார்கள். ஒருவேளை நம் வாழ்நாளில் அப்படியொரு நிகழ்வு நடந்தால்? எரிமலை வெடிப்பால் நம் காலத்திலேயே புதிதாக ஒரு நிலப்பகுதி தோன்றினால்?

தோன்றினால் என்ன... தோன்றிவிட்டது. பசிபிக் பெருங்கடலில் நான்கு ஆண்டுகளுக்கு முன் நாம் பார்க்காத நிலப்பகுதி இப்போது உருவாகியுள்ளது. கடலுக்கடியில் நிகழ்ந்த ஓர் எரிமலை வெடிப்பு இந்தத் தீவை உருவாக்கியுள்ளது. இந்தப் புதுத் தீவு, மற்ற கிரகங்களில் இதே போன்று நடக்கக்கூடிய நிலவியல் மாற்றங்களை ஆய்வுசெய்ய உதவி செய்யுமென்று நம்புகின்றனர். டோங்கா என்ற தீவு நிலத்தையொட்டித்தான் இது உருவாகியுள்ளது. அதிகாரபூர்வமாக அதற்கு இன்னும் பெயர் வைக்கவில்லை. இருப்பினும், அழைப்பதற்குப் பெயர் வேண்டுமல்லவா? அதனால் டோங்கா தீவை வைத்தே ஹுங்கா டோங்கா ஹுங்கா ஹாபாய் (ஏதணஞ்ச் கூணிணஞ்ச் ஏதணஞ்ச் ஏச்'ச்ணீச்டி) என்று பெயரிட்டுள்ளார்கள் ஆய்வாளர்கள். டோங்கா ஹுங்கா என்ற தீவுகளை இணைக்கும் விதமாக இது உருவாகியிருப்பதால் தற்காலிகமாக இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

எரிமலைகளால் உருவாகும் தீவுகளே மிக எளிதாகவும் விரைவாகவும் உருவாகும் நிலப்பகுதி. மற்ற தீவுகளில் மொத்த கன பரிமாணம், நிலப்பரப்பில் ஏற்படும் மாற்றங்கள் போன்றவற்றை முதலில் ஆய்வுசெய்ய வேண்டும். பூமியின் மற்ற தீவுகளில் இதுவரை இந்த அளவுகோல்களை ஓரளவுக்கே கணக்கிட்டுள்ளனர். அதுதான் அத்தீவில் ஏற்படும் நில அரிப்புச் செயற்பாட்டின் விகிதங்களைத் துல்லியமாகக் கணக்கிட உதவும். அந்த அளவுகோல்களே எரிமலைச் சாம்பல்களால் உருவான இந்தச் சின்னஞ்சிறு தீவு எப்படித் தாக்குப்பிடித்து நிற்கிறது என்பதைப் புரிந்துகொள்ள நமக்கு உதவும்.

கடந்த ஆண்டு இந்தத் தீவைக் கண்டுபிடித்த போது விரைவில் கடல் நீரில் கரைந்து காணாமல் போய்விடுமென்று எதிர்பார்த்தனர் நாசா விஞ்ஞானிகள். அதைத் தாண்டி இன்னமும் நிற்கிறது ஹுங்கா டோங்கா ஹுங்கா ஹாபாய். பூமியில் ஒரு தீவு உருவாக நீண்டகாலம் பிடிக்கும். இந்தத்



தீவும் அதன் குழந்தைப் பருவத்திலேயே இருக்கிறது. முழுமையாக உருவாகி முடிப்பதற்குள் மழை மற்றும் வேகமான கடல் அலைகளின் காரணமாக அரிக்கப்பட்டு இல்லாமல் போய்விடும் வாய்ப்புகள் அதிகமென்று அனைவரும் நினைத்தனர். கடந்த 150 ஆண்டுகளில் இந்தப் பகுதியில் ஏற்பட்ட எரிமலை வெடிப்புதான் மாதக்கணக்கில் நீண்டது. அதன் விளைவாகவே இந்தப் புதிய தீவும் உருவாகிக் கொண்டிருக்கிறது.

கடல் மட்டத்திலிருந்து 500 அடி உயரத்துக்கு உருவாகியுள்ள இதன் மொத்த பரப்பு 1.1 மைல்கள். செயற்கைக்கோள் உதவியுடன் இதன் நிலப்பரப்பை ஆய்வுசெய்த நாசா தன் விஞ்ஞானிகளை நேரடி ஆராய்ச்சிக்காக அங்கு அனுப்பியது. இத்தகைய புதிய தீவில் அதுவும் நம் காலத்தில் தோன்றிய தீவில் கால்பதிக்க யாருக்குத்தான் ஆவல் இருக்காது. நாசா விஞ்ஞானிகளுக்கும் அப்படியே இருந்ததது.

நாங்கள் பார்ப்பதற்குப் பள்ளிக் குழந்தைகளைப் போல் காட்சியளித்தோம். இப்படியொரு சந்தர்ப்பத்தில் யாராயினும் அப்படித்தானே இருக்கும் என்று முதன்முதலில் தம் வாழ்நாளில் தோன்றிய புதுத்தீவுக்குச் செல்லும்போது ஏற்பட்ட அனுபவத்தை விவரிக்கிறார் விஞ்ஞானி டான் ஸ்லேபேக் (Dan Slayback). மேலும், அந்தத் தீவு முழுவதும் கறுப்பு சரளைக் கற்களால் ஆனது. அதை மணலென்று சொல்லமுடியாது. முழுக்க முழுக்கப் பட்டாணி அளவே இருந்த சரளைக் கற்குவியல். நாங்கள் அணிந்து சென்றிருந்த காலணிகள் அதற்குப் போதுமானதாக இல்லை. எங்கள் கால்களுக்கு உள்ளே சென்ற சரளைக் கற்களால் பாதங்கள் வலிக்கத் தொடங்கிவிட்டன. அந்தத் தீவு செயற்கைக் கோளில் பார்த்ததுபோல் சமவெளியாக இல்லை. ஓரளவுக்குச் சமமான நிலத்தைக் கொண்டிருந்தாலும், அவை அலைகளால் அங்குமிங்கும் அலைக்கழிக்கப்பட்டு மேடு பள்ளங்களாகவும் மாறியுள்ளது என்கிறார்.

கடந்த நான்கே ஆண்டுகளுக்குள் புதிய தீவொன்று உருவாகியுள்ளது என்பதே நமக்கு ஆச்சர்யமாகத்தான் உள்ளது. அங்குச் சென்றிருந்த ஆய்வுக் குழு மற்றுமோர் அதிசயத்தையும் நமக்குப் பரிசளிக்கிறார்கள். தீவு முழுக்க சரளைக் கற்களால் ஆனது என்பதால் அதற்கு நாமும் தற்காலிகமாக 'சரளைக் கல் தீவு' என்று பெயரிட்டு அழைப்போம். சரளைக் கல் தீவு முழுவதும் தற்போது தாவரங்கள் முளைக்கத் தொடங்கியுள்ளன. புதிய நிலப்பகுதியில் வேர்விடத் தொடங்கியிருக்கும் அவை அந்தத் தீவில் உருவாகத் தொடங்கியிருக்கும் பிசுபிசுப்பான சேற்று மண் பரப்பில் வளர்ந்து வருகின்றன. செயற்கைக் கோள் ஒளிப்படங்களில் அவற்றை மெல்லிய நிறங்களில் நம்மால் பார்க்கமுடியும். அவைதான் அந்தச் சேற்று மண். களிமண் நிறத்திலிருக்கும் அவற்றில்தான் தாவரங்கள் வளரத் தொடங்கியுள்ளன. அது சாம்பலல்ல. அதேசமயம் அவை எங்கிருந்து வந்தன, எப்படி அந்தத் தீவில் உருவாகின என்ற கேள்விகளுக்கும் இன்னும் விடை கிடைக்கவில்லை.

சரளைக் கல் தீவின் மேட்டுப் பகுதிகளை அளக்கும்போது அங்கு உருவாகியிருந்த பாறைகளின் மாதிரிகளைச் சேகரித்து வந்துள்ளனர் ஆய்வாளர்கள். 33 மாதங்களாகச் செயற்கைக்கோள் உதவியுடன் அவற்றைக் கவனித்ததில் கடல் அரிப்பு அந்தத் தீவில் தொடர்ச்சியாக ஏற்பட்டுக் கொண்டேயிருப்பது தெரிந்தது. அதைவிட மழை காரணமாக அதன் அரிப்பு அவர்கள் எதிர்பார்த்ததைவிட இன்னும் அதிகமாக இருக்கின்றது. கடல் அலைகள் தெற்கே அதன் கரைகளை நொறுக்கிக்கொண்டிருக்கிறது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், மொத்த தீவுமே மீண்டும் கடலுக்குள் சென்று கொண்டிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். மூன்று ஆண்டுகளுக்குமுன் அந்த இடத்தில் வெறும் கடல்தான் காட்சியளித்தது. தற்போது 2 மீட்டர் ஆழமுள்ள கடற்கரையோடு ஒரு தீவு காட்சியளிக்கிறது. இதுவே அதிசயம்தான். அந்தத் தீவு மீண்டும் மூழ்குவதற்குள் சில ஆய்வுகளை மேற்கொண்டாக வேண்டும்.

உதாரணத்துக்கு, ஒருகாலத்தில் இதேபோன்ற ஈரநிலமாக இருந்திருந்த நிலப்பகுதிகள் செவ்வாய் கிரகத்திலும் இருந்துள்ளன. இதேபோன்ற செயல்கள் அங்கும் நிகழ்ந்திருக்கின்றன. அதைப் புரிந்துகொள்ள இது நமக்கு உதவலாம். செவ்வாயில் நடக்கும் மாற்றங்களை நாம் புரிந்துகொள்ளப் பெரிதும் உதவியதே பூமியோடு அதன் மாற்றங்களை ஒப்பிட்டதன் மூலமாகத்தான். செவ்வாயிலும் இத்தகைய எரிமலை வெடிப்பு நிகழ்வுகள் நடந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. அதோடு அங்கு நீர் இருந்ததற்கான தடயங்களும் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்தப் புதிய சரளைக் கல் தீவு முழுவதும் ஆய்வு நடத்துவதன் மூலம், அதன் மாற்றங்களைக் கவனிப்பதன் மூலம் செவ்வாயில் நடைபெற்றிருக்க வாய்ப்புள்ள மாற்றங்களை நம்மால் ஓரளவுக்குக் கணிக்கமுடியும்.

இப்போது சரளைக் கல் தீவில் நடந்துகொண்டிருக்கும் அரிப்பு, அந்தத் தீவு முழுவதையும் எப்படியும் மூழ்கடித்துவிடும். அது அடுத்த பத்தாண்டுகளில்கூட நடக்கலாம். அதற்குள் இந்த ஆய்வுகளை நடத்தி நமக்குத் தேவையான தகவல்களைத் திரட்டியாக வேண்டும். இத்தகைய கன்னி நிலத்தை ஆய்வு செய்வதென்பது நாசா விஞ்ஞானிகளுக்குப் புதிய அனுபவமாக உள்ளது. அதனால் அவர்களும் மிகுந்த ஈடுபாட்டுடன் இதில் ஈடுபட்டு வருகின்றனர்.

'நம் கண்முன்னே உருவான நிலத்தில் நாமே சென்று நிற்பதென்பது எந்த அளவுக்கு மகிழ்ச்சியைத் தருமென்று நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஆகவே என் மட்டற்ற மகிழ்ச்சியை உங்களுக்கு விளக்கித்தான் தெரிய வேண்டுமென்றில்லை. நான் மிகுந்த ஆவலோடு காத்திருக்கிறேன். இங்கு இன்னும் என்னென்ன மாற்றங்கள் நடக்கப் போகின்றனவோ!' - டான் ஸ்லேபேக்.

# தினகரனை நம்பினோம்; திண்டாடுகின்றோம்!

பதவியும் கரன்சியுமாய் பொங்கிப் பெருக்கெடுத்துப் பாய்கின்ற அரசியல் ஆற்றில் உலா நடத்துவதற்கு மண்குதிரையை நம்பி ஏமாந்துவிட்டோமோ என்று மலைத்துப் போய் நிற்கிறார்கள் விழுப்புரம், அரியலூர் மாவட்டங்களின் அ.ம.மு.க. நிர்வாகிகள்.

இ.பி.எஸ்.சும், ஓ.பி.எஸ்.சும் இணைந்த பிறகு, அவர்களை எதிர்த்து ஐம்பெரும் வேளிரையும் இருபெரும் வேந்தரையும், ஆலங்கானத்தில், ஒற்றைப் பகலில் வென்று களம் கொண்ட பாண்டியன் நெடுஞ்செழியனைப் போல ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் குக்கர் சின்னம் + 20 ரூபாய் டோக்கன் துணையுடன் வென்று, தமிழக அரசியல் களத்தில் எழுந்து நின்றார் சசிகலாவின் அக்கா மகன் டி.டி.வி. தினகரன்.

அடுத்த சில நாட்களில் அரசு கவிழும். அ.தி.மு.க. கோட்டையில் தினகரன் கொடி பறக்கும் என நினைத்தோம். அம்மாவாலும், இன்றைய மா.செ.க்களாலும், ஓரம் கட்டப்பட்ட எங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்று தினகரனை நோக்கி ஓடினோம். கானல் நீரோ என இப்ப கவலைப்படுகிறோம் அரியலூர் மாவட்ட அ.ம.மு.க. நிர்வாகி ஒருவர் புலம்பியதை தொடர்ந்து, அ.ம.மு.க. மற்றும் அதன் தலைவரான தினகரன் பற்றி நிர்வாகிகள் கருத்தறிய களம் இறங்கினோம்.

ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் தினகரன் பெற்ற இமாலய வெற்றி எங்களை திக்குமுக்காட வைத்துவிட்டது. இனிமே தமிழக அரசியல் வானத்தில் தினகரன்தான் சூரியன்னு நெனைச்சோம். பணம் புழுப்புடுச்சுக் கிடக்கு. கட்சி வளர்ச்சிக்காக வாரிவாரிக் கொடுப்பார். அதைவைத்து நம்ம ஏரியாவுல கட்சியை, எளிதாக வளர்த்துவிடலாம்னு நெனைச்சோம். இப்ப எல்லாம் கரைஞ்சுபோச்சு. இப்ப தினகரன்மீது நம்பிக்கை கொள்வதற்கு ஒண்ணுமே இல்லை. அதான் ஒதுங்கிவிட்டோம் அரியலூர் அ.ம.மு.க. எக்ஸ் மா.செ. உடையார்பாளையம் முத்தையன் பின்னால் அணிவகுத்து நின்ற ஒரு நிர்வாகியின் புலம்பல் இது.

அ.ம.மு.க. ஆரம்பமானதும் அரியலூர் மாவட்ட செயலாளராக உடையார்பாளையம் முத்தையனை நியமித்தார் தினகரன். முத்தையனோடு அண்ணா தொழிற்சங்க மா.செ. ஆண்டிமடம் சண்முகம் உள்ளிட்டோரும் ஊர் ஊராகச் சென்று கிளைகளை உருவாக்கினார்கள். ஓ.பி.எஸ்.-இ.பி.எஸ். அதிருப்தியாளர்களுக்கு பதவிகளைக் கொடுத்து ஒன்றிய அளவில் கட்சிக் கூட்டங்களை போட்டு, பிரமிப்பை உண்டாக்கினார்கள். இந்த நிலையில்தான் உடையார்பாளையம் முத்தையனிடம் இருந்த மா.செ. பதவியைப் பிடுங்கி, அரியலூர் எக்ஸ் எம்.எல்.ஏ. மணிவேலிடம் கொடுத்தார் தினகரன். அதோடு நிர்வாகிகள் 100 பேரை பந்தாடினார் தினகரன். தினகரன் மீது நம்பிக்கையிழந்த முன்னாள் சேர்மனும் மா.செ.யுமான உடையார்பாளையம் முத்தையா, அண்ணா தொழிற்சங்க மா.செ. அம்மா சண்முகம், அரியலூர் ந.செ. ஜிம் கண்ணன் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் அரசு கொறடா தாமரை ராஜேந்திரன் மற்றும் முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம் முன்னிலையில் அ.தி.மு.க.வில் இணைந்துவிட்டனர்.

புதிதாக நியமிக்கப்பட்ட மணிவேல், அரியலூருக்கு தினகரனை அழைத்து வந்து பொதுக்கூட்டம் நடத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். உங்கள் பெயரைச் சொல்லி ஏகப்பட்ட வசூல் செய்துவிட்டார் மணிவேல்என்று பலரிடம் இருந்து புகார்கள் தினகரனுக்குப் பறந்தன. விழா ரத்து செய்யப்பட்டது.இப்போது மணிவேலையும் மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இல்லையில்லை. கட்சியைக் கட்டுக்கோப்பாக வைத்துள்ளேன். கட்சி அபார வளர்ச்சியை நோக்கிப் போகிறதுஎன்கிறார் மணிவேல். ஆனால், குதிரை கரைந்து கொண்டிருக்கிறது என்பதே உண்மை.

விழுப்புரம் மத்திய மா.செ.யாக எக்ஸ் எம்.எல்.ஏ. ஞானமூர்த்தியை நியமித்தார் தினகரன். தினகரனை நம்பி பல லட்சங்களை செலவு செய்த ஞானமூர்த்தியால், தொடர முடியவில்லை. தனக்கு மா.செ. பதவி வேண்டாம் ஒதுங்கிக்கொண்டார் ஞானமூர்த்தி. ஞானமூர்த்திக்குப் பதிலாக திருக்கோயிலூர் எக்ஸ் எம்.எல்.ஏ. சிவராஜை நியமித்தார் தினகரன். இந்த மாவட்டத்திற்கு ஒரு வன்னியர் மா.செ.யாக இருப்பதே சிறந்தது. எனக்கு வேண்டாம் என ஏற்க மறுத்த சிவராஜிடம், அடுத்த மா.செ.யை நீங்களே நியமிக்க வேண்டும். அதுவரை அந்தப் பொறுப்பில் இருங்கள் கட்டாயப்படுத்தியிருக்கிறார்.

தினகரனால் நீக்கப்பட்ட ஒவ்வொரு நிர்வாகியும், கையிலிருந்த லட்சங்களைச் செலவு செய்துவிட்டு, கடனாளியாகியுள்ளதாகச் சொல்கிறார்கள்.விழுப்புரம் மாவட்டத்தில் கட்சிப் பதவி பிடுங்கப்பட்ட, வி.ஐ.பி. ஒருவர் நம்மிடம், 'கட்சி நிர்வாகிகளின் நம்பிக்கையை இழந்துவிட்டார் தினகரன். வெகுவிரைவில் இ.பி.எஸ்.-ஓ.பி.எஸ். அணியோடு தினகரனும் ஐக்கியமானாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒண்ணுமில்லை. அ.ம.மு.க.வை அ.தி.மு.க.வோடு இணைத்துவிட வேண்டும். ஒருங்கிணைந்த அ.தி.மு.க.வுடன்தான் கூட்டணி வைக்கவேண்டும். இல்லையென்றால் பயனில்லை என்று பா.ஜ.க. தலைமை கருதுகிறது. அப்படி இணைந்தால், தினகரன் மட்டுமே பயன் பெறுவார். நம்பிச்சென்ற என்னைப் போன்ற எல்லாரும் தத்தளித்து முழுக வேண்டியதுதான் என்றார்.

மொத்தத்தில், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம், கடலூர் என இம்மாவட்டங்களில் தினகரனோடு இணைந்த பெரும்பாலான வி.ஐ.பி.கள், தவறு செய்துவிட்டோமோ என்ற தத்தளிப்பில் இருப்பதை புரிந்துகொள்ள முடிகிறது.

# வலியார்முன் தன்னை நினைக்க... காவல்துறைக்கு ஒரு கேள்வி

பிப்ரவரி 1ஆம் தேதி, திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி பகுதியில் போக்குவரத்து காவல் துறையினர் சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியே இருசக்கர வாகனத்தில் வந்த இளைஞர் நிற்காமல் சென்றதால் காவலர் துரத்தி சென்று லத்தியால் தாக்கினார். அதில் அவர் வண்டியோடு கீழே விழுந்து பலத்த காயமடைந்தார். சோதனைக்கு ஒத்துழைக்காமல் செல்பவரை தாக்கியாவது நிறுத்த வேண்டும் என்பதன் நிர்பந்தம் என்ன ? விபத்துக்களை தடுப்பதற்காக சோதனையில் ஈடுபடும் காவல்துறையினர் வாகனம் ஓட்டிக்கொண்டிருப்பவரை தாக்கினால் விபத்து ஏற்படும் என்பதை உணர்ந்திருக்கவில்லையா ? அல்லது ஒரு சாமானியன் தன்னை மதிக்காது செல்கிறான் என்ற அதிகாரம் கொண்டவருக்கான கோவமா ?

சில நாட்களுக்கு முன்பு, பிரபல ஐடி நிறுவனம் ஒன்றில் வாகன ஓட்டுநராக பணிபுரியும் ராஜேஷ் தனது மரணத்துக்கு முன் அவர் எடுத்த வீடியோ வெளியானது அதில் சொல்லப்பட்டிருக்கும் அவரின் ஆதங்கம் பார்ப்போர் அனைவருக்குள்ளும் இருப்பதை உணர முடிகிறது. பாடியிலிருந்து பெண் ஊழியரை ஏற்றிக்கொண்டு அண்ணா நகரில் அடுத்த ஊழியருக்காக சாலையோரமாக வாகனத்தை நிறுத்தி காத்திருந்த ராஜேஷை அங்கு வந்த போலீசார் அது நோ பார்க்கிங் என்றுக் கூறி தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளனர். வண்டியில் பெண் ஊழியர் இருக்கிறார் நாகரீகமா பேசுங்கள் என்று கூறியும் அதை பொருட்படுத்தாத போலீசார் அவரது வீட்டில் இருக்கும் பெண்களை பற்றியும் தரக்குறைவாக பேசியுள்ளார். இதற்கு முன் திருவொற்றியூரில் சர்விஸ் ரோடு ஓரமாக வண்டியை நிறுத்திவிட்டு உறங்கிய ராஜேஷின் காரை போலீசார் லாக் செய்துவிட்டு 500 ரூபாய் கேட்டு தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளனர். இதுமாதிரி சம்பவங்களால் மிகவும் மனம் உடைந்த ராஜேஷ் போலீசார் ஏற்படுத்திய அவமானத்தால் தற்கொலை நோக்கி நகர்த்தப்பட்டுள்ளார். தான் மட்டும் அல்லாது தன்னை போன்ற எளிய வாகன ஓட்டிகள் போலீசாரின் அதிகாரத்தால் பலியாவதையும் தனது சாவுக்கு முழு காரணம் சென்னை காவல் துறைதான் எனவும் ஒரு வீடியோவில் பதிவு செய்துள்ளார். காக்கி சட்டை போட்டிருப்பதால்தான் இதையெல்லாம் பொறுத்துக்கொண்டு போலீசுக்கு மரியாதை கொடுக்கிறோம், அது இல்லாமல் இப்படியெல்லாம் பேசியிருந்தால் நாங்கள் யார் என காட்டியிருப்போம். என் சாவுக்கு பிறகாவது இதுபோல் நடக்காமல் நடவடிக்கை எடுக்கவேண்டும் என தன் ஆதங்கத்தையெல்லாம் கொட்டிவிட்டு மறைமலை நகர் அருகில் இரயில் தண்டவாளத்தில் தலைவைத்து உயிரைவிட்டிருக்கிறார். காவல்துறையின் அத்துமீறலுக்கு அடுத்த பலியாக ராஜேஷ் மரணம் கருதப்படுகிறது.



தமிழகத்தில் இது புதிதல்ல. குற்றவாளிகள் முன்பு,ம் சமூக விரோதிகள் முன்பும் மட்டுமே ஓங்கப்பட வேண்டிய காவல்துறை லத்திகள் சாமானிய மக்கள் மீதும் சமூகநல போராளிகள் மீதும் ஓங்கி அடிக்கும் என்பது காவல் துறையின் இயல்பான அடையாளமாய் உள்ளது. பெரும்பாலான காவல்துறையினர் காக்கிச்சட்டை அணியும்போதே மனிதம் என்ற உணர்வை உரித்து பத்திரமாக வீட்டில் வைத்துவிடுகின்றனர் போலும். 2017 ஆம் ஆண்டு திருப்பூர் அருகே சாமளாபுரத்தில் இயங்கிவந்த மதுக்கடையை மூடக்கூறி பெண்கள் நடத்திய போராட்டதை களைப்பதற்காக போலீசார் பெண்கள், வயதானவர்கள், குழந்தைகள் என்றும் பாராமல் சரமாரியாக தாக்குதல் நடத்தினர். கணவனின், மகனின், தந்தையின் குடிப்பழக்கத்தால் வேதனை தாங்காமல் தெருவில் இறங்கி போராடிய அப்பாவி பெண்கள் தலை உடைந்து, கை முறிந்து ஜனநாயகம் செத்துவிட்டது என குமுறினர். சமூகம் சார்ந்த போராட்டங்களின் மீது காவல்துறையின் தடியடிகளும், துப்பாக்கிச்சூடும் ஒருபுறம் இருக்க தன் அன்றாட வாழ்க்கையில் பிழைப்புக்காக போராடும் சாமானிய மக்கள் போலீசின் மனிதநேயமற்ற செயல்களுக்கு பலியாவதும் நடக்கிறது.

நீதிமன்றங்கள் மக்கள் நலனுக்காக விதிக்கும் சட்டங்கள் காவல்துறைக்கு லஞ்சம் வாங்கும் வாய்ப்பாக மாறிப் போகிறது. சட்டங்கள் என்னவாக இருந்தாலும் போலீசுக்கு தேவையெல்லாம் ஸ்பாட் ஃபைன் 100, 500தான். திருச்சியில் கடந்த ஆண்டு உஷாவின் உயிருக்கு காவல்துறை விதித்திருந்த விலை இதுதான் போலும். பாவம் ராஜாவுக்கு இது புரியாமல் காவல்துறையின் அதிகாரத்திற்கு தன் மனைவி உஷாவையும், அவர் வயிற்றில் இருந்த குழந்தையையும் பறிகொடுத்துவிட்டார். தஞ்சாவூரை சேர்ந்த ராஜா, கர்ப்பிணியாக இருந்த தன் மனைவி உஷாவுடன் இருசக்கர வாகனத்தில் நண்பரின் திருமண நிச்சய விழாவிற்காக சென்றுவரும்போது திருச்சியிலிருந்து தஞ்சாவூர் போகும் வழியில் துவாக்குடியில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த காவல்துறை ஆய்வாளர் காமராஜ் ராஜாவின் வாகனத்தை நிறுத்தி பணம் வாங்க முயற்சித்துள்ளார். அதை புரிந்துகொள்ளாத ராஜா வண்டியை எடுத்துக் கொண்டு கிளம்பிய போது ஆய்வாளர் காமராஜ் வேறொரு வாகனத்தில் துரத்திவந்து கோவமாக உதைத்துள்ளார். இதனால் நிலைதடுமாறி விழுந்ததில் உஷா பலத்தகாயமடைந்தார். சிறிது நேரத்துலயே அவரும் அவர் வயிற்றில் இருந்த குழந்தையும் உயிரிழந்தனர். மாற்றுத்திறனாளி பள்ளியில் ஆசிரியராக பணியாற்றிய உஷாவை மிகுந்த கனவுகளுடன் திருமணம் செய்த ராஜா அவரின் வாழ்க்கையையே காவல்துறையினால் அழித்துவிட்டது என கதறிய கதறல் கல் இதயம் கொண்டவரையும் கண் கலங்க செய்தது. இதற்கு காரணமான காவல் ஆய்வாளர் காமராஜ் மீது கொலைவழக்கு பதிவு செய்யவேண்டும் என கோரிக்கை வைத்தாலும் அவருக்கு கொடுக்கப்பட்ட தண்டனை பணியிடை நீக்கம் மட்டுமே.

காவல்துறைக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரமும், நீதிமன்றத்தால் உருவாக்கப்பட்டிருக்கும் சட்டங்களும் குற்றங்களை தடுப்பதற்காகவும், குற்றவாளிகளை பிடிப்பதற்காகவும் மட்டுமே. அனால் தற்போது காவல்துறையினர் சட்டங்களை நிறைவேற்றுவதில் பாரபட்சம் காட்டுகின்றனர். பணம் படைத்தவர்கள் குற்றவாளியாகவே இருந்தாலும் அவர்களுக்கு விதிவிலக்களிப்பதும், சாதாரண மக்கள் குற்றமற்றவராய் இருந்தாலும் சந்தேகத்தின் பேரில் இன்னலுக்கு ஆளாவதும் வாடிக்கையே. போக்குவரத்துக் காவல்துறையினர் வாகனங்களை நிறுத்தி லஞ்சம் வாங்குவது போன்றும் நிற்காதவர்களை துரத்தி அடிப்பது போன்றும் வீடியோக்கள் அவ்வப்போது சமூக வலைத்தளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்திகின்றன. தன் சொந்த செலவில் தலைக்கவசம் வாங்கி இலவசமாக தருகிற மிக நேர்மையான காவல் அதிகாரிகள் இருக்கிற போதும், பெருவாரியான அதிகாரிகளின் சுயநல போக்கினால் ஏற்படும் விளைவுகள் ராஜேஷின் மரணம் போன்று ஈடுசெய்யமுடியாதவை. ஸ்டெர்லைட் போராட்டத்தில் 13 அப்பாவிகள் கொல்லப்பட்டபோதும், ஜல்லிக்கட்டு போராட்டத்தில் மாணவர்கள் தாக்கப்பட்டபோதும் நேர்மையான அதிகாரிகள் இருந்தும் பயனில்லை என்பது கசக்கும் உண்மை!!!

வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்

மெலியார்மேல் செல்லும் இடத்து

இது வள்ளுவரின் வார்த்தைகள். காவல்துறையினர் வலியவர்களுக்கு தாங்கள் எப்படி அனுகூலம் செய்கிறோம் என்பதை, மெலியவர்களின் முன் அராஜகம் செய்யும்போது நினைக்க வேண்டும்.

## தமிழ்...

08 ஆம் பக்கத் தொடர்ச்சி

விடுதலைக்காக போராடிய வேளை, தமிழ் மக்களுக்குள் தோற்றுவிக்கப்பட்ட பிளவுகள், அந்தப் போராட்டங்களை வெற்றியை நோக்கி நகர்த்தவிடாமல் பின்னாலேயே பிடித்து இழுத்து விழுத்திவிட்டன. அதுபோன்ற நிலை மீண்டும் ஏற்படாதவாறு நம்மவர்கள் நடந்து கொள்ள வேண்டும்.

அடுத்து, முல்லைத்தீவு கேப்பாபுலவு மக்கள் தமது வாழ்விடங்களைப் படையினரின் பிடியிலிருந்து விடுவிக்குமாறு கோரி நடத்திய போராட்டங்கள் ஓரளவு வெற்றி பெற்றுள்ளன. சிறுவர், பெண்கள், முதியோர் என அனைவரும் பனி, வெய்யில், மழை என எதனையும் பொருட்படுத்தாமல், ஒற்றுமையுடன் போராடி, குறிப்பிடத்தக்க சிறு வெற்றியை அடைந்தும் தோல்வியில் சிலர் இன்றும் போராடி வருகின்ற சூழல் காணப்படுகின்றது.

நோயால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் தங்கி இருந்து சிகிச்சை பெறும் நண்பர் அல்லது உறவினரைச் சென்று நலம் விசாரிப்பது போல அமைப்புகளும் அரசியல்வாதிகளும் ஆங்காங்கே போராட்டத்தில் ஈடுபடும் மக்களின் சுகநலம் விசாரிப்பதற்குச் சென்றுவருகிறார்கள். அவ்வாறு செல்பவர்கள் வெறுங்கையுடன் செல்லாது சில உணவுப் பொருட்கள், உணவுப் பொதிகள் மற்றும் சில பொருட்களை வழங்குகின்றனர். சில மணித்துளிகள் அவர்களுடன் உரையாடுகின்றனர்; போராடும் மக்களுடன் நின்று புகைப்படங்களை எடுத்து பத்திரிகைகளிலும் சமூகவலைத்தளங்களிலும் பிரசாரப்படுத்துகின்றனர். மீண்டும் தங்கள் சொகுசு வாகனங்களில் வீடு திரும்புகின்றனர். அங்கு போராட்டத்தில் பங்குபற்றும் மக்கள் கூட இவ்வாறாகத் தங்களுடன் வந்து வீணாக நேரத்தை விரையமாக்காது ஆக்கபூர்வமாக ஏதாவது செய்யுமாறுதான் கோரி நிற்கின்றனர்.

அடுத்து, தமிழ் மக்கள் பேரவை ஒரு மக்கள் அமைப்பே அன்றி ஓர் அரசியல் கட்சி இல்லை. அத்துடன் அதற்கான ஏற்பாடுகளும் இல்லை என அதிலுள்ள கட்சி சாரா முக்கியஸ்தர்கள் அவ்வப்போது கூறி வருகின்றனர். ஆனால், கஜேந்திரகுமாரின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரனின் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகியோர் த. ம. பேரவையை கட்சி என்பது போலவே கருதி தமது கருத்துக்களைக் கூறி வருவது போல காட்சி அளிக்கின்றது.

மேலும், 2015 ஜனவரியில் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கு உருப்படியாக குறிப்பிட்டு சொல்லும்படியாக ஒன்றும் செய்யவில்லை. இந்நிலையில் அதனையிட்டுத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமையை மாற்ற வேண்டும், புதிய தலைமை வரவேண்டும் என கஜேந்திரகுமார், சுரேஸ் பிரேமச்சந்திரன் இவர்களுடன் ஆனந்தசங்கரியும் சேர்ந்து எதிர்ப்புக் கோசமிடுவது, 'நித்திரை வரவில்லை என்பதற்காக தலையனையை மாற்றும் வேலை'யாகும். தமிழர் தலைமை மாறினால் அல்லது மாற்றப்பட்டால் பேரினவாத அரசாங்கம் யாவற்றையும் தருமா? கள நிலவரம் மாறுமா? என்பது கேள்விக்குறியே.

வட்டுக்கோட்டை தீர்மானத்தை (1977) மேற்கொண்ட வேளை பிழையான தலைவர்களால் எடுத்த சரியான தீர்மானம் என கூறப்பட்டது. ஆகவே தற்போதைய முக்கிய கட்டத்தில் கூட்டமைப்பை உடைப்பது உடைக்க எத்தனிப்பது சரியான தலைவர்களால் எடுத்த சரியான முடிவா? பிழையான தலைவர்களால் எடுத்த பிழையான முடிவா? ஏனெனில், தாங்கள் கூட்டமைப்பிலிருந்து வெளியேறுவது தொடர்பில் சரியான நேரத்தில் சரியான முடிவு எடுப்பதாகவும் அதனால் கூட்டமைப்பை சின்னாபின்னமாக்கிய பொறுப்பு தலைமையையே சாரும் எனவும் காட்டமான கருத்தாடலை சிலர் வெளிப்படுத்தி வருகின்றனர். மேலும் ஆரம்பம் ஈறாக கஜேந்திரகுமார் தேசியம் தாயகம் சுயநிர்னயம் ஆகியவற்றை ஏற்றுக் கொண்டால் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மற்றும் புளொட் என்பன தம்முடன் இணையலாம் என்றும், அவர்கள் இரு தோணியில் கால் வைத்துக் கொண்டு நிற்க முடியாது எனவும் தெரிவித்துள்ளமையானது என்ன விதத்திலாவது கூட்டமைப்பை கலைக்க வேண்டும் என எண்ணுவது போல உள்ளதாகவே அரசியல் ஆலோசகர்கள் தெரிவித்து வருகின்றனர்.

ஆகவே, மீண்டும் தமிழர் நலன் என்ற தலைப்பின் கீழ் அனைவரும் அவரவர் தனிப்பட்ட 'ஈகோ' களைந்து ஒன்றுபட வேண்டும். 'அடம்பன் கொடியும் திரண்டால் தான் மிடுக்கு'. அதுவே வடக்கு, கிழக்கு மக்களது இணைப்பே முக்கியம். அதுவே நிரந்தர, நீடித்த அரசியல் தீர்வு கிடைக்க எளிதான வழியாக புத்திஜீவிகளால் நம்பப் படுகின்றது. இவ்விடத்தில் சராசரி தமிழ் பொது மகன் இவ்வாறாக எண்ணுகின்றான். ஆதாவது, ஓயாத யுத்தத்தால் முற்றாக முடமான வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக கூறும் ஓர் அண்ணளவாக பத்துப் பேரைத் தலைவர்களாகக் கொண்ட தமிழ் தலைவர்கள், ஒரு புள்ளியில் ஒன்றுபட முடியாது என்றால் எவ்வாறு முஸ்லிம் மக்களையும் இணைத்துக் கொண்டு கடும் போக்கு சிங்கள ஆட்சியாரையும் அரவணைத்துத் தமிழ் மக்களது இனப் பிரச்சினைகளுக்கு தீர்வை தரப்போகின்றனர் என்பதே நிரந்தரப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் தற்போது எழுந்துள்ள பாரிய சிக்கலாகும்.

## யுத்தம்..

07 ஆம் பக்கத் தொடர்ச்சி

நுண் கடன் திட்டத்திலும் பாலியல் லஞ்சம் கேட்டதை ஐ.நா.அதிகாரியே குற்றம்சாட்டியுள்ளார்.

### யுத்தத்தில் காயமடைந்தவர்களின் நிவாரணம்

போரினால் படுகாயமடைந்து, அவயவங்களை இழந்த குடும்பத்தலைவர்கள், பெண்கள், போராளிகள் நிலைமகளோ மிக மோசமாக காணப்படுகிறது. ஒரு சில தொண்டர் அமைப்புகள் இவர்களுக்கு சில, சில நிவாரண உதவிகளை செய்வதாக அவர்கள் கூறுகின்றனர். காயமடைந்த போராளிகளில் கணவனும், மனைவியும் அடங்குவர். கோழிப்பண்ணை, சிறிய கடை, தையல் வேலை தெரிந்தால் தையல் இயந்திரம் போன்ற உதவிகளை இந்த தொண்டர் அமைப்புகள் செய்து தருவதாக அவர்கள் கூறுகின்றனர். இவர்களின் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கும் உதவுமாறு கேட்கின்றனர். இவர்களின் வீடுகளின் நிலைமை மிக மோசமாக காணப்படுகிறது.

தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் தம்மிடம் வாக்கு கேட்டு வந்தனர். அதன் பின்னர் தம்மை பார்ப்பதே இல்லை என்கின்றனர். அரச அலுவலகங்களுக்கு தாம் சென்று வருவதில் காணப்படும் பிரச்சினைகளை பல ஊடகங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. தம்மை அதிகாரிகள் உரிய முறையில் கவனிப்பதில்லை என கவலை தெரிவிக்கின்றனர். பாராளுமன்ற உறுப்பினர்களும் தம்மை கவனிக்கவில்லை. மாகாணசபை உறுப்பினர்களும் தமக்கு ஏதாவது செய்வார்கள் என்றால், அவர்கள் தமக்குள் சண்டை பிடித்து நீதிமன்றம் செல்கின்றனர். தேவையில்லாத விடயங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்கின்றனர்.

உதாரணமாக திலீபன் நினைவுத் தூபிக்கு, ஆலயங்களுக்கு, சன சமூக நிலையங்களுக்கு பல லட்சம் ரூபாவை செலவிடுகின்றனர். அவற்றை மக்களிடம் இருந்து பெறலாமே. சில நிதி செலவு செய்யாமல் திரும்பி மத்திய அரசுக்கு செல்வதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

வடக்கு மாகாண சபை தேர்தல், யுத்தம் முடிந்த பின் நடைபெற்று, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆட்சியை பிடித்தது. ஆட்சிக்காலத்தில் இந்த மாகாண சபையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எத்தனையோ உதவி திட்டங்களை செய்திருக்கலாம். சில தேவையில்லாத பணிகளுக்கு பல லட்சம் ரூபா நிதி செலவிடப்பட்டு வீணாக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, உல்லாசப்பயணிகள் வருகைக்காக சில இடங்களில் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இன்று அவை பயன்படுத்தப்படாது காணப்படுகின்றன.

வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களின் கொடுப்பனவுகள் குறித்த கணக்கு விபரம் ஊடகங்களில் அண்மையில் வெளியாகியுள்ளன. இவர்களினால் என்ன சேவைகள் செய்யப்பட்டன. சொகுசான வாழ்க்கைக்கு உரிய பல கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளது. இப்போது அடுத்த தேர்தல்களுக்கு ஆயத்தம் செய்கின்றனர். கட்சிகளுக்குள் பிளவுகள், ஒற்றுமையில்லை, ஒருவர் மீது ஒருவர் விமர்சித்து வருகின்றனர். இவர்களை மீண்டும் தெரிவு செய்தால் என்ன தான் செய்யப்போகிறார்கள் எனக்கூறுகின்றனர். முன்னாள் ஆளுநர் றெஜினோல்ட் கூரே லண்டன், சுவிஸ் சென்று இவர்களுக்கு உதவுமாறு அங்கு வாழும் புலம்பெயர்ந்த மக்களிடம் கேட்டிருந்தார். லண்டனில் இவர் கலந்துகொண்ட கூட்ட மண்டபத்தின் முன் ஆரப்பாட்டம். விடுதலைப்புலிகளுக்கு எதிரானவர்களே அவரை அங்கு அழைத்திருந்தாக கூறப்பட்டது. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாகாணசபையின் பணிகளில் இவர் தலையிடுவதை கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் என்றும், எமது மக்களுக்கு வடமாகாண சபை பணிசெய்யும் எனவும் அவர்கள் கூறினார்கள். இன்று அவரின் பதவியும் பறிக்கப்பட்டுவிட்டது.

இறுதி யுத்தம் மட்டுமல்ல அதற்கு முன்னர் இடம்பெற்ற இந்திய படை நடவடிக்கை உட்பட சகல யுத்த நடவடிக்கைகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டு, பலர் விண்ணப்பித்திருந்தனர். ஆனால்,அதற்கு உரிய உதவிகள் எதுவுமே கிடைக்கவில்லை என இதனால் பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இன்னமும் எட்டு மாதங்களே இந்த ஆட்சி. அதற்குள் வடக்கு,கிழக்கு பகுதிகளில் இடம்பெற்ற யுத்தத்தால் பாகிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரண உதவிகள் கிடைக்குமா? பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# எடப்பாடி விருப்பத்திற்கு தடைபோட்ட பன்னீர்!



அ.தி.மு.க மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் பா.ஜ.க கூட்டணியில் இணைவது குறித்து விவாதிக்கப்பட உள்ளது. பொதுக்கருத்தின் அடிப்படையில் முடிவெடுக்கலாம் என எடப்பாடி பழனிசாமி நினைக்கிறார். பா.ஜ.க கூட்டணியை அவர் விரும்பவில்லை என்கின்றனர் அ.தி.மு.க வட்டாரத்தில்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது அண்ணா தி.மு.க. இதற்காக தமிழகம் முழுவதும் பூத் கமிட்டிக்கு நிர்வாகிகளை நியமிக்கும் வேலைகள் நடந்து வருகின்றன. அ.தி.மு.க சார்பில் போட்டியிட விரும்புகிறவர்களிடமிருந்து விருப்பமனு பெறும் வேலைகளும் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாட்டில் உள்ள 39 தொகுதிகளின் பூத் கமிட்டி நிர்வாகிகளின் பெயர்ப் பட்டியலை சரிபார்க்குமாறு மாவட்டச் செயலாளர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார் அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளர் பன்னீர் செல்வம்.

பா.ஜ.க-வுடன் கூட்டணி அமைப்பது தொடர்பாக துணை முதல்வர் பன்னீர் செல்வம் உட்பட 4 அமைச்சர்கள்தான் தீவிரம் காட்டி வருகின்றனர். தேசியக் கட்சிகளோடு பேசிக்கொண்டிருக்கிறோம். கூட்டணி தொடர்பான பேச்சுவார்த்தைகள் அனைத்தும் பரம ரகசியம். கூட்டணிகள் முடிவாகும்போது முடிச்சுகள் அவிழ்க்கப்படும் என்றார் ஓ.பி.எஸ். அவரது கருத்துக்குப் பதிலளித்த மீன்வளத்துறை அமைச்சர் ஜெயக்குமார், தேசியக் கட்சி என்றால் அது பா.ஜ.க மட்டும் அல்ல என்றார். செய்தியாளர்களிடம் பேசிய தம்பிதுரையும், இதுவரையில் அ.தி.மு.க யாருடனும் கூட்டணி அமைக்கவில்லை. ஜெயலலிதா வழியில் கூட்டணி அமைப்போம் என்றார். கூட்டணி தொடர்பாக, இரு வேறுபட்ட மோதல்கள் இருப்பதையே இது சுட்டிக் காட்டுகிறது. அமைச்சர் ஜெயக்குமாரின் கருத்தில்தான் எடப்பாடி பழனிசாமியும் உறுதியாக இருக்கிறார். பா.ஜ.க தலைவர்களின் நெருக்குதல்கள் அதிகரித்து வருகின்றன' என ஆதங்கப்பட்டவர்,

நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க அல்லாத ஓர் அணியைக் கட்டமைக்க வேண்டும் என ஆசைப்படுகிறார் எடப்பாடி பழனிசாமி. இந்த அணிக்குள் பா.ம.க, தே.மு.தி.க, த.மா.கா, புதிய தமிழகம், ஜான் பாண்டியன் கட்சி ஆகியவற்றை இணைத்துக்கொண்டு தேர்தலை எதிர்கொள்ள நினைக்கிறார். இந்த முடிவை பன்னீர்செல்வம் ஏற்றுக்கொண்டால் நல்லது என்ற மனநிலையில் இருக்கிறார் எடப்பாடி பழனிசாமி. அ.தி.மு.க மாவட்டச் செயலாளர்கள், சிட்டிங் எம்.பி-க்கள், தலைமைக் கழக நிர்வாகிகள் என யாருக்குமே பா.ஜ.க கூட்டணியில் உடன்பாடில்லை. பொதுக்கருத்தின் அடிப்படையில் இதைத்தான் அனைவரும் சொல்வார்கள்.

இதற்கு மாறாக, அனைவரும் விரும்பினால் பா.ஜ.க கூட்டணியை எடப்பாடி பழனிசாமியும் ஏற்றுக்கொள்வார். இன்றைய கூட்டத்தில் எதிர்ப்பு கிளம்பலாம் என்பதால்தான்,'பா.ஜ.க உடன் கூட்டணி முடிவாகிவிட்டது'என்ற தொனியில் பன்னீர்செல்வம் தரப்பினரும் தமிழக பா.ஜ.க-வினரும் தகவல்களை வெளியிட்டு வருகின்றனர். கட்சி நிர்வாகிகள் மத்தியிலும் பொதுக் கருத்தை உருவாக்கும் முயற்சியாகவே இதைப் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் எதிர்ப்பு வந்துவிடக் கூடாது என்பதில் பன்னீர்செல்வம் உறுதியாக இருக்கிறார். இதற்காக நிர்வாகிகளை சமாதானப்படுத்தும் வேலைகளும் நடந்து வருகின்றன' என்றார் விரிவாக.

'பா.ஜ.க-வுடன் கூட்டணி அமைப்பது தொடர்பாக எடப்பாடி பழனிசாமிக்கு சில நிர்பந்தங்கள் ஏற்பட்டுள்ளன. கொடநாடு விவகாரம் தொடர்பான வீடியோ வெளிவருவதற்கு முதல்நாள் அவர் பேசும்போது, 'தமிழ்நாட்டு மக்களின் நலன்களை விரும்புகிறவர்களோடுதான் கூட்டணி வைப்போம். தமிழக மக்களைப் புறக்கணிப்பவர்களோடு சேர மாட்டோம். கஜா புயல் நிவாரண நிதியைப் பெறுவதில் தமிழகம் வஞ்சிக்கப்பட்டிருக்கிறது'’என மத்திய அரசை கடுமையாக விமர்சித்துப் பேசினார்.

கொடநாடு வீடியோ விவகாரம் வெளியானதால், அவர் அமைதியாகிவிட்டார். பா.ஜ.க-வுடன் கூட்டணி அமைந்தால், கட்சிக்குள் பன்னீர்செல்வம் கை உயர்ந்துவிட்டது என்று அர்த்தம். தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பிறகு தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தையின்போது பா.ஜ.க-வைக் கழட்டிவிட்டுவிடலாம் எனவும் எடப்பாடி ஆதரவாளர்கள் யோசனை தெரிவித்துள்ளனர். இவையெல்லாம் சாத்தியமாகுமா எனத் தெரியவில்லை. கூட்டணி யுத்தத்தில் எடப்பாடி வெல்வாரா என்பதுதான் கட்சிக்காரர்கள் மத்தியில் உள்ள மிக முக்கியமான கேள்வி என்றார் நிதானமாக.

# இந்திரா காந்திக்கும் மோடிக்கும் என்ன வேறுபாடு?



இந்தியாவின் இரும்புப் பெண்மணி என்று புகழப்பட்ட இந்திரா காந்தியின் ஆட்சியுடன், பிரதமர் மோடியின் ஆட்சியை ஒப்பிடுவது சரியல்லஎன்று காங்கிரஸ் கட்சித் தலைவர் ராகுல் காந்தி கூறியுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் தேதி எப்போது வேண்டுமானாலும் வெளியாகலாம் என்ற சூழ்நிலையில், பல்வேறு மாநிலங்களுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, அரசின் திட்டங்களைத் தொடங்கி வைப்பதுடன், பி.ஜே.பி. சார்பில் பொதுக்கூட்டங்களிலும் உரையாற்றி, பிரசாரத்தை மேற்கொண்டுள்ளார் பிரதமர் மோடி. 'ஒரே கல்லில் இரண்டு மாங்காய்' என்று கூறுவதைப் போல, அரசின் நலத்திட்டங்களைத் தொடங்கி வைப்பதுடன், அந்தந்த மாநிலங்களின் பி.ஜே.பி. சார்பில் பொதுமக்களைத் திரட்டி, மத்திய அரசின் சாதனை எடுத்துக்கூறி, நாடாளுமன்றத் தேர்தலுக்கான பிரசாரத்திலும் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார் மோடி.

'பி.ஜே.பி-க்குச் சற்றும் சளைத்தவர்கள் அல்ல' என்ற அடிப்படையில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியும், மூன்று மாநிலங்களில் பி.ஜே.பி-யிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றிய சூட்டோடு சூடாக, நாடாளுமன்றத் தேர்தலுக்கான பிரசாரத்தையும் முடுக்கி விட்டுள்ளார் ராகுல் காந்தி.

பரபரப்பான தேர்தல் பணிகளுக்கு இடையே டெல்லியில் பிரபல நாளிதழ் ஒன்றுக்குப் பேட்டியளித்த ராகுல், பிரதமர் மோடியின் சர்வாதிகாரப் போக்கால், இந்தியா முழுவதும் உள்ள அனைத்து நிறுவனங்களும் குறிப்பாக தன்னிச்சையாகச் செயல்படும் அமைப்புகள், மிகப்பெரும் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றன. மோடியைப் பொறுத்தவரை, பிரிட்டிஷார் இந்தியாவில் இருந்ததைப் போன்று, தன்னை இந்தியாவுக்கே கடவுள் என்று நம்பிக்கொண்டிருக்கிறார் என்று மோடி குறித்து கடுமையான விமர்சனத்தை முன்வைத்தார்.

மேலும், தன் பாட்டியும், மறைந்த முன்னாள் பிரதமருமான இந்திரா காந்தியை தற்போதைய பிரதமர் மோடியுடன் ஒப்பிட்டு வெளியாகக்கூடிய தகவல்களுக்கு ராகுல் கடுமையான எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளார்.

அவர் மேலும், மோடியின் பேச்சுகளைப் போன்ற அணுகுமுறையில் காங்கிரஸ் கட்சிக்கு உடன்பாடு இல்லை. அதில் நம்பிக்கையும் இல்லை. இந்திரா காந்தியை பிரதமர் நரேந்திர மோடியுடன் ஒப்பிடுவது ஏற்புடையதல்ல; அதுபோன்று ஒப்புமைப்படுத்துவது, இந்திரா காந்தியை அவமதிக்கும் செயல் என்று மறுத்தார்.

என் பாட்டி இந்திரா எடுத்த முடிவுகள் அனைத்தும், நாட்டு மக்கள் மீதான அன்பு மற்றும் பாசத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்டவை. இயற்கையை ஒன்றிணைக்கும் வகையில் அவரின் பணிகள் அமைந்திருந்தன. மக்களின் வாழ்க்கையோடு ஒன்றிணைந்து பயணித்த இந்திரா காந்தி, இந்தியாவில் ஏழை மக்களின் பிரச்னைகளைக் கவனத்தில் கொண்டு முடிவுகளை எடுத்து அறிவித்தார்.

ஆனால், மோடியின் முடிவுகளோ கோபம் மற்றும் வெறுப்புஉணர்வின் அடிப்படையில் எடுக்கப்படுகின்றன. மோடி எடுக்கும் முடிவுகள், நாட்டைப் பிளவுபடுத்துகின்றன. ஏழைகள் மற்றும் நலிவடைந்த மக்கள் மீது மோடிக்கு எந்தப் பரிவும் கிடையாது. ஆனால், மோடியின் திட்டங்கள் ஏழை மக்களை நோக்கியவை என்று அரசியல் விமர்சகர்கள் சிலர் கருத்து தெரிவித்துள்ளனர். தற்போதைய சூழலில் மத்திய அரசு நிறைவேற்றும் திட்டங்கள், இந்திரா காந்தி கொண்டுவந்த திட்டங்களுக்கு இணையானவை என்றும் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இரும்புக்கரத்துடன் இந்தியாவை ஆட்சி செய்த இந்திரா, தன் கட்சியிலும் பிரிவினை இல்லாமல் பார்த்துக்கொண்டார். இந்திராவின் ஆட்சிக் காலத்தில் பிரதமர் அலுவலகம் எவ்வாறு அதிகார மையமாகச் செயல்பட்டதோ, அதேபோன்று இப்போதும் மோடியின் ஆட்சியில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்கின்றனர். இந்திராவின் நடவடிக்கைகளைப் போன்றே, பிரதமர் மோடியின் இப்போதைய செயல்பாடுகள் இருப்பதாகக் கூறுவதில் எந்த உடன்பாடும் இல்லை. இந்திரா காந்தி பிரதமராக இருந்த காலத்தில், அவரின் விருப்பங்களை பல்வேறு சந்தர்ப்பங்களில் திணித்ததைப் போன்று, மோடியும் செயல்படுகிறார் என்று கூறப்படுவதும் தவறு என்றார் ராகுல் காந்தி.

மேலும், நாங்களும் ஆட்சியில் இருந்துள்ளோம். எதிர்க்கட்சியாகவும் இருந்துள்ளோம். இந்தியாவில் மதச்சார்பற்ற கட்டமைப்புகள் பாதிக்கப்படுவதற்கோ, அத்தகைய அமைப்புகள் சீர்குலைவதற்கோ காங்கிரஸ் கட்சி ஒருபோதும் காரணமாக இருந்ததில்லை. இந்தியாவின் மூலாதாரமாகத் திகழ்வது மதச்சார்பின்மைதான். இந்தியாவைவிட மோடி பெரியவர் அல்ல. அனைத்தையும்விட, அனைவரையும்விட இந்தியாவே மிகவும் பெரியது என்றார் ராகுல் மிகத்தெளிவாக.

இந்திராதான் இந்தியா; இந்தியாதான் இந்திரா என 1974-ம் ஆண்டில் காங்கிரஸ் மூத்தத் தலைவர் பரூவா சொன்னதை ராகுல் காந்தி மறந்துவிட்டார் போலும்

## ஒரு தாயின் கண்ணீர்ப் போர்!



இந்த ஆண்டு பொங்கலுக்கு என் மகன் வருவான் என்று காத்திருந்தேன். அது கானல் நீராகிவிட்டது. எனக்கு 71 வயது ஆகிவிட்டது. நான் கண்ணை மூடுவதற்குள் என் மகனை பார்ப்பேனா? என்று வாய்விட்டு அழுகிறார் அற்புதம்மாள்.

மதுரைக்கு வந்த அவரை நக்கீரனுக்காக சந்தித்தபோது நம்மிடம் அவர் கூறியது பேரறிவாளன் ஒப்புதல் வாக்குமூலத்தை திரித்து எழுதிவிட்டேன் என்றும், மனித வெடிகுண்டு தனு பயன்படுத்திய பெல்ட்பாம் தயாரித்தது யார் என்று கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், பேரறிவாளன் விஷயத்தில் சட்டமறியா பிழை நடந்து விட்டது என்றும் ராஜீவ் கொலையை விசாரித்த அதிகாரிகளே வெளிப்படையாக சொல்லியிருக்கிறார்கள்.

ஆனாலும் என் மகனை இதுவரை விடுதலை செய்யாமல் என் மகனைக் கேட்டு மடிப்பிச்சை ஏந்த வைக்கிறார்கள். ஒரு தாயின் ஏக்கம் ஆளும் அரசை சும்மா விடாது. நாங்கள் பெரியார் இயக்க குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். 19 வயதில் எனது மகன் சிறைக்குச் சென்றான். இப்போது 28 ஆண்டுகள் கடந்துவிட்டன. அனைத்து அரசியல் கட்சிகளும், காங்கிரஸ் கட்சியும் கூட எனது மகனை விடுதலை செய்வதில் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை. தமிழக அமைச்சரவை கூடி தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியும் ஆளுநரின் ஒரு கையெழுத்துக்காக காத்திருக்கிறது.

148 நாட்கள் ஆகியும் ஏன் ஆளுநர் தாமதிக்கிறார்? நியாயமான கோரிக்கை புறந்தள்ளப்படுகிறது. தமிழக அரசு, எங்கள் வேலை முடிந்துவிட்டது, இனி மத்திய அரசின் ஆளுநர் கையில் இருக்கிறது என்கிறது. சு.சாமியோ, பா.ஜ.க. இருக்கும்வரை பேரறிவாளனுக்கு விடுதலை கிடையாதுஎன்று ஆணவமாக சொல்கிறார். அவரைதான் விசாரணை செய்ய வேண்டும். என்ன காரணமோ பெரிய மனிதர்கள், அரசியல்வாதிகள் அனைவரும் தப்பித்துவிட்டனர். 28 வருடம் என் மகனை பலிகடா ஆக்கிவிட்டனர்.

சிறையில் அவனுடைய உடல் ஆரோக்கியமற்று இருக்கிறது. சிறுநீரக கோளாறு ஏற்பட்டிருக்கிறது. இது எனக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. சிறையிலேயே அவனை கொன்றுவிடுவார்களோ என்று பயமாக இருக்கிறது. அப்படி ஏதாவது நடந்தால் நானும் சாவதைத் தவிர வேறுவழி இல்லை. தமிழகம் மக்களிடம் சென்று ஒரு தாயாக என் கண்ணீருக்கு பதில் கேட்கப்போகிறேன். ஆளுபவர்களின் பொய் முகத்தை மக்களுக்கு எடுத்துக் காட்டப் போகிறேன். இனியேனும் குட்டியை தாயோடு சேர்த்து வையுங்கள் என்று மக்களிடம் மடிப்பிச்சை கேட்கப்போகிறேன் என்று அற்புதம்மாள் கதறியது நெஞ்சை உலுக்கியது.இந்தத் தாயின் கண்ணீரை துடைப்பாரா ஆளுநர்? தேர்தல் நெருங்கும்போது நல்ல சேதி வரும் என்பதுதான் கடைசிக்கட்ட நம்பிக்கை.

## தினகரனும் குக்கரும்

சசிகலா உறவினர்களில் முக்கியமானவர், தொடக்கத்திலிருந்தே ஜெயலலிதாவுடன் இருந்தவர், 1999-2004 வரை மக்களவை உறுப்பினர், பின் 2004 முதல் 2010 வரை மாநிலங்களவை உறுப்பினர், 2011ல் அந்நிய செலாவணி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர். ஜெயலலிதாவால் 2011ம் ஆண்டு கட்சியில் இருந்து விலக்கப்பட்டவர், ஜெயலலிதா உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் இருந்தபோது சசிகலாவால் அதிமுக துணை பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டவர்... இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். அரசியல் வாழ்வில் அவருக்கு அவ்வளவு அனுபவம் இருக்கிறது. கட்சியின் துணை பொதுச்செயலாளராக அவர் இருந்தபோது, அதிமுக சின்னத்தையும், கட்சி பெயரையும் மீட்பதற்கு லஞ்சம் அளித்ததாகக்கூறப்பட்டது. அதன்பின் அவர் கட்சியிலிருந்து ஓரங்கட்டப்பட்டார். அதிமுக ஓ.பி.எஸ். அணி, ஈ.பி.எஸ். அணி, தினகரன் அணி என பிரிந்தது. அதன்பின் ஓ.பி.எஸ். அணியும், ஈ.பி.எஸ். அணியும் இணைந்தது. இதனால் தினகரன் தனியாக பிரிந்தார். இந்நிலையில்தான் ஆர்.கே. நகர் தேர்தலும் வந்தது. இதில் சுயேட்சையாக போட்டியிடுவது என முடிவுசெய்தார் தினகரன். அதில் வென்றார், பிறகு அமமுக கட்சியை தொடங்கி நடத்திவருகிறார். தினகரனுக்கு இப்படியான நெடிய அரசியல் வரலாறு உள்ளது. இந்த வரலாற்றின் பிற்பகுதியில் முக்கியமான இடத்தை பெற்றது குக்கர் சின்னமும். ஆர்.கே. நகர் இடைத்தேர்தலும்தான்...

ஆர்.கே.நகர் இடைத்தேர்தலின்போது, தினகரன் முதலில் தொப்பி சின்னத்தைதான் கேட்டார். ஆனால் தேசிய மக்கள் சக்தி கட்சி, நமது கொங்கு முன்னேற்றக் கழகம், எழுச்சித் தமிழர் முன்னேற்றக் கழகம் என பதிவு செய்யப்பட்ட மூன்று கட்சிகளும் கோரின. இதையடுத்து, குலுக்கல் முறை பின்பற்றப்பட்டது. இதில் நமது கொங்கு முன்னேற்றக் கழக வேட்பாளர் ரமேஷுக்குத் தொப்பி சின்னம் கிடைத்தது. அடுத்ததாக தினகரன் விசில், பேட் ஆகிய சின்னங்களைக் கோரினார். ஆனால் அவையும் வெவ்வேறு வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்டன.

அதன்பின், தனது ஆதரவாளர்களான செந்தில் பாலாஜி, வெற்றிவேல், வழக்கறிஞர் ராஜாசெந்தூர் பாண்டியன் ஆகியோருடன் மாலை ஆர்.கே.நகர் தேர்தல் அலுவலகத்துக்கு சென்று தேர்தல் அலுவலருடன் சின்னம் தொடர்பாகப் பேசினார். ஏற்கனவே அவர் கேட்ட சின்னங்கள் மற்றவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்ததால், தேர்தல் ஆணையம் சுயேட்சை வேட்பாளர்களுக்கு ஒதுக்கியுள்ள சின்னங்களிலிருந்து ஒன்றைத் தேர்வு செய்யுமாறு கூறினார். அதில் ஒரு சின்னம்தான் பிரஷர் குக்கர் சின்னம். பிரஷர் குக்கர் சின்னத்தை தனக்கு ஒதுக்கும்படி தினகரன் கேட்ட தேர்தல் ஆணையம் இந்த சின்னத்தை ஒதுக்கியது. எதிரிகளுக்கு பிரஷர் கொடுக்கவே இந்த குக்கர் சின்னத்தை பெற்றேன் எனக் கூறினார். இதுதான் டிடிவி கைக்கு பிரஷர் குக்கர் வந்த கதை.

அதன்பின் அந்த சின்னத்தில் நின்று வெற்றிபெற்றார். அமமுக கட்சியை தொடங்கி குக்கர் சின்னத்தையே கட்சியின் சின்னமாக ஒதுக்க வேண்டும் என கோரிக்கை வைத்தார். அமமுக பதிவுசெய்யப்படாத கட்சி எனக்கூறி தேர்தல் ஆணையம் குக்கர் சின்னத்தை ஒதுக்கவில்லை. இதனால் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை நீதிபதி கன்வில்கர் தலைமையிலான அமர்வு விசாரித்தது. அப்போது தேர்தல் ஆணையம், டிடிவி தினகரனின் அமமுக அங்கீகரிக்கப்பட்ட கட்சி இல்லை என்பதால் குக்கர் சின்னத்தை நிரந்தரமாக ஒதுக்க முடியாது எனவும், பொது பட்டியலில் உள்ள ஒரு சின்னத்தை தனிப்பட்ட கட்சி உரிமை கோர முடியாது எனவும் கூறியிருந்தது.

தற்போதைய நிலையில் தினகரனுக்கு குக்கர் சின்னத்தை வழங்க உத்தரவிட இயலாது என்றும், டெல்லி ஹைகோர்ட்டில் நிலுவையில் உள்ள இரட்டை இலை சின்ன வழக்கை 4 வாரத்தில் முடிக்க வேண்டும் என்றும் கூறியது. மேலும் அவ்வாறு 4 வாரத்திற்குள் வழக்கை முடிக்காவிட்டால் டிடிவி தினகரனுக்கு குக்கர் சின்னம் வழங்கலாமா, வேண்டாமா என்பதை தேர்தல் ஆணையமே முடிவெடுக்கலாம் என தீர்ப்பு வழங்கியது.

இரட்டை இலையையும், அதிமுகவையும் மீட்கும் வரையிலேயே அமமுக செயல்படும் எனக்கூறிய தினகரன். இரட்டை இலையை மீட்பாரா அல்லது குக்கர் சின்னத்திற்காக அ.ம.மு.க.வை தனிக்கட்சியாக பதிவு செய்து, டெல்லி உயர் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள, இரட்டை இலை சின்னத்தை மதுசூதனனுக்கு அளித்துள்ளதை எதிர்த்து தான் தொடுத்துள்ள வழக்கிலிருந்து நீங்கிக்கொள்வாரா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# தி.மு.க. கூட்டணியில் பா.ம.க.?

நாடாளுமன்ற தேர்தல் நெருங்குவதால் கூட்டணி அமைப்பதில் ரகசியப் பேச்சுவார்த்தைகளை தொடர்ச்சியாக நடத்தி வருகின்றன தமிழக அரசியல் கட்சிகள்.

அதிமுக கூட்டணியில் பாமக இணைவதற்கான அனைத்து முயற்சிகளையும் எடப்பாடியின் நம்பிக்கைக்குரிய அமைச்சர்கள் இருவர் எடுத்த நிலையில், 90 சதவீதம் சக்சஸ் ஆனது. தொகுதிகளை அடையாளப்படுத்துவதிலும் தேர்தல் செலவுகளுக்கான எதிர்பார்ப்புகளும் இழுபறியை ஏற்படுத்தின.

இந்த நிலையில்தான், பாமக வேண்டாம் என உதறிய திமுக, தற்போது தங்கள் கூட்டணிக்குள் பாமகவை அழைத்து வரும் முயற்சிகளை எடுத்து வருகிறது. இந்த முயற்சியை எடுப்பது கனிமொழியா? சபரீசனா? என்கிற பட்டிமன்றத்தை நடத்துகின்றனர் உடன்பிறப்புகள். கனிமொழிதான் பாமகவை அழைத்து வரும் முயற்சியில் இருக்கிறார் என செய்திகள் பரவி வரும் நிலையில், கனிமொழி தரப்பில் நாம் விசாரித்த போது , கூட்டணியில் எந்தெந்த கட்சிகள் இருக்க வேண்டும் என்பதை கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின்தான் முடிவு செய்வார். இது வரை எந்த ஒரு கட்சியையும் திமுக கூட்டணிக்கு அழைத்து வரும் பொறுப்பை கனிமொழிக்கு வழங்கப்படவில்லை. அந்த வகையில், பாமகவை அழைக்கும் முயற்சியில் கனிமொழிக்கு தொடர்பில்லை. இது வரை பாமக தரப்பில் யாரிடமும் கனிமொழி பேசவும் இல்லை என்கிறார்கள் கனிமொழிக்கு நெருக்கமான திமுகவினர். தமிழகத்தில் பாஜக கூட்டணிக்கு ஒரு சீட்டும் கிடைக்கக் கூடாது என்பதில் ராகுல் காந்தி உறுதியாக இருக்கிறார். இதனை உணர்ந்துள்ள தமிழக காங்கிரஸ் தலைவர்கள், திமுக கூட்டணியில் பாமக இருந்தால் வட தமிழகத்தில் அதிமுக-பாஜக கூட்டணியை ஜீரோவாக்கி விடலாம் என தெரிவித்திருக்கிறார்கள்.

இதனையடுத்து, தன்னுடன் நெருக்கமாக இருக்கும் ஸ்டாலினின் மருமகன் சபரீசன் மற்றும் திமுகவின் ஒஎம்ஜி சுனில் மூலமாக, பாமக குறித்து பேசியிருக்கிறார் ராகுல்காந்தி. அந்த வகையில் அவர்கள் எடுக்கும் முயற்சியினால்தான் பாமகவிடம் திமுக பேசியுள்ளது என்கிறார்கள் அறிவாலய தொடர்பாளர்கள்.

# ரோஹித் சர்மா சாதனை



நியூஸிலாந்துக்கு எதிரான 2வது டி20 போட்டியில் அதிரடி அரைசதம் விளாசி இந்திய அணியை வெற்றிக்கு இட்டுச் சென்ற கேப்டன் ரோஹித் சர்மா, புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இன்று அவர் 50 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார், இந்த இன்னிங்சின் போது டி20 சர்வதேச போட்டிகளில் அதிக ரன்கள் எடுத்த வீரர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார். இதற்கு முன்பாக நம்பர் 1 இடத்தில் இருந்த மார்டின் கப்தில் ரன்களை ரோஹித் சர்மா கடந்து நம்பர் 1 இடத்துக்குச் சென்றுள்ளார்.

92 டி20 சர்வதேச போட்டிகளில் 84 இன்னிங்ஸ்களில் 2,288 ரன்களை எடுத்து அதிக டி20 ரன்கள் பட்டியலில் முதலிடம் வகிக்கிறார், மார்டின் கப்தில் 76 போட்டிகளில் 74 இன்னிங்ஸ்களில் 2,272 ரன்களுடன் 2ம் இடத்தில் இருக்கிறார்.

2263 ரன்களுடன் ஷோயப் மாலிக் 3ம் இடத்திலும் 2167 ரன்களுடன் கிங் கோலி 4ம் இடத்திலும், 2140 ரன்களுடன் பிரண்டன் மெக்கல்லம் 5ம் இடத்திலும் உள்ளனர். 6ம் இடத்தில் 1936 ரன்களுடன் ஆப்கானிஸ்தானின் மொகமது ஷஜாத் உள்ளார்.

மேலும் ரோஹித் சர்மா 20 முறை 50+ ஸ்கோர்களை அடித்த விதத்திலும் முதலிடம் பிடித்துள்ளார். விராட் கோலி 19 அரைசத ஸ்கோர்களை எடுத்துள்ளார் அதனையும் இன்று முறியடித்தார் ரோஹித் சர்மா.

மேலும் டி20 சர்வதேசப் போட்டிகளில் 100 சிக்சர்கள் அடித்த 3வது வீரரானார் ரோஹித் சர்மா. இப்போது 102 சிக்சர்களில் இருக்கிறார் ரோஹித். கிறிஸ் கெய்ல், மார்டின் கப்தில் இருவரும் 103 சிக்சர்கள் அடித்துள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட்டில் அதிக சிக்சர்களை அடித்தவர்கள் பட்டியலில் 349 சிக்சர்களுடன் 4ம் இடத்தில் உள்ளார் ரோஹித். ஷாகித் அப்ரீடி, கிறிஸ் கெயில் இருவரும் 476 சிக்சர்களை அடித்துள்ளனர். பிரெண்டன் மெக்கல்லம் 398 சிக்சர்களையும் ஜெயசூரியா 352 சிக்சர்களையும் அடித்துள்ளனர்.

# பீல்டிங்கிற்காக ஆட்ட நாயகன் விருது பெற்ற தெ.ஆப்பிரிக்காவின் டேவிட் மில்லர்



பாகிஸ்தான் அணிக்கு எதிரான முதல் டி 20 ஆட்டத்தில் தென் ஆப்பிரிக்க அணி 6 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் பீல்டிங்கில் சிறப்பாக செயல்பட்ட தென் ஆப்பிரிக்க வீரர் டேவிட் மில்லர் ஆட்ட நாயகனாக தேர்வானார்.

கேப்டவுனில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் பேட் செய்த தென் ஆப்பிரிக்க அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 192 ரன்கள் குவித்தது. தொடக்க வீரரான ஹென்ட்ரிக்ஸ் 41 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகளுடன் 74, கப்டன் டுபிளெஸ்ஸிஸ் 45 பந்துகளில், 4 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகளுடன் 78 ரன்கள் விளாசினர்.

193 ரன்கள் இலக்குடன் பேட் செய்த பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 186 ரன்கள் எடுத்து 6 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. அதிகபட்ச மாக கேப்டன் ஷோயிப் மாலிக் 49, ஹூசைன் தலத் 40, பாபர் அசாம் 38 ரன்கள் சேர்த்தனர்.

கிறிஸ் மோரிஸ் வீசிய கடைசி ஓவரில் வெற்றிக்கு 16 ரன்கள் தேவைப்பட்ட நிலையில் பாகிஸ்தான் அணியால் 9 ரன்கள் மட்டுமே எடுக்க முடிந்தது.

தென் ஆப்பிரிக்க அணியின் வெற்றிக்கு டேவிட் மில்லரின் அற்புதமான பீல்டிங் முக்கிய காரணமாக அமைந்தது. 4 கேட்ச்கள் மற்றும் இரு ரன் அவுட்கள் செய்த அவர், ஆட்ட நாயகனாக தேர்வானார். இதன் மூலம் டி 20 ஆட்டத்தில் பீல்டிங்குக்காக ஆட்ட நாயகன் விருது வென்ற முதல் வீரர் என்ற பெருமையை அவர், பெற்றார்.

இதற்கு முன்னர் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் 1986-ல் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட் டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் வீரர் கஸ் லோகியும் ( 3 கேட்ச், 2 ரன் அவுட்), 1989-ல் இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் ரிச்சர்ட்ஸும் ( 3 கேட்ச் ), 1993-ல் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஆட்டத்தில் தென் ஆப்பிரிக்காவின் ஜான்டி ரோட்ஸும் (5 கேட்ச்கள்) சிறந்த பீல்டிங்குக்காக ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டிருந்தனர்.

# ஆஸி.அணிக்குள் மீண்டும் பொண்டிங்

டேவிட் சாகெர் பதவியை ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து உலகக்கோப்பை ஆஸ்திரேலிய அணியின் உதவிப்பயிற்சியாளராக ரிக்கி பாண்டிங் நியமிக்கப் பட்டுள்ளார். இவர் தன் அணியின் முந்தைய சகாவான ஜஸ்டின் லாங்கருடன் இணைந்து பணியாற்றவுள்ளார்.

2003 மற்றும் 2007 ஆகிய உலகக் கோப்பையை பாண்டிங் தலைமையில் ஆஸ்திரேலியா வென்றது. வரவிருக்கும் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய அணிகளுக்கு எதிரான ஆஸ்திரேலிய தொடருக்குப் பிறகு பாண்டிங் உதவிப்பயிற்சியாளராகப் பொறுப்பேற்கிறார். இது குறித்து பாண்டிங் கூறிய போது, உலகக்கோப்பைக்காக மீண்டும் அணியுடன் இணைவது உற்சாகமூட்டுகிறது, முன்பு ஒருநாள் மற்றும் டி20 அணிகளுடன் குறுகிய காலத்திற்காக பயிற்சியாளராக இருந்திருக்கிறேன். ஆனால் உலகக்கோப்பை என்பது எனக்கு வேறு பொருள் தருகிறது, தேர்வாளர்களுக்கு தற்போது தேர்வு செய்ய கிடைத்திருக்கும் வீரர்கள் மீது எனக்கு அசையாத நம்பிக்கை உள்ளது இந்த உலகக்கோப்பையில் எங்களை வீழ்த்துவது கடினம். தலைமைப் பயிற்சியாளர் ஜஸ்டின் லாங்கர் தன் மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் போது, உலகக்கோப்பையை வெல்வதற்கு என்ன தேவை என்பதை ரிக்கி அறிவார். உலகக் கோப்பை சாம்பியன் பட்டத்தைத் தக்க வைக்க விரும்புகிறோம். கிரிக்கெட் ஆட்டம் பற்றிய பாண்டிங்கின் புரிதல் அலாதியானது. அவர் அணியுடன் விரைவில் களத்தில் இறங்குவதை ஆவலுடன் எதிர் நோக்குகிறேன் என்றார்.

# பெனால்டியில் சொதப்பல்... பொருஷியா டார்ட்மண்ட் அதிர்ச்சித் தோல்வி!



வெர்டர் ப்ரேமன் அணியுடனான போட்டியில், பெனால்டி ஷூட் அவுட்டில் சொதப்பியதால் டி.எஃப்.பி போகல் தொடரிலிருந்து வெளியேறியது பொருஷியா டார்ட்மண்ட். கடந்த ஆண்டு ரவுண்ட் ஆஃப் 16 சுற்றில் பேயர்ன் மூனிச் அணியிடம் தோற்றிருந்த டார்ட்மண்ட், இந்த முறையும் அதே சுற்றில் வெளியேறியுள்ளது.

ஜெர்மன் கால்பந்தைப் பொறுத்தவரை எப்போதுமே பேயர்ன் மூனிச், பொருஷியா டார்ட்மண்ட் அணிகள்தான் பெரும் ஆதிக்கம் செலுத்தும். இவர்கள்தான் பெரும்பாலான கோப்பைகளை வெல்வார்கள். குறிப்பாக பேயர்ன் மூனிச், டார்ட்மண்ட் க்ளப்பைவிட பெரும் ஆதிக்கம் செலுத்தும். நன்றாக விளையாடும் டார்ட்மண்ட் வீரர்களைக் கூட பெரும் தொகைக்கு, விரைவில் ஒப்பந்தம் செய்து, வைரியைப் பலவீனமாக்கிவிடும். அதிலும், முன்னாள் டார்ட்மண்ட் பயிற்சியாளர் ஜோர்ஜன் கிளாப் வெளியேறியபிறகு, அந்த அணி பெரும் சரிவைச் சந்தித்தது.

இந்த சீசன், டார்ட்மண்ட் அணிக்கு மிகவும் சாதகமாக அமைந்தது. புதிய பயிற்சியாளர், சீனியர் வீரர்களின் வயது, முக்கிய வீரர்களின் காயம், டிஃபண்டர்களின் ஃபார்ம் அவுட் எனத் தொடர்ந்து பல பிரச்னைகளைச் சந்தித்தது பேயர்ன் மூனிச். இந்தச் சந்தர்ப்பத்தை டார்ட்மண்ட் மிகச் சிறப்பாகப் பயன்படுத்தி, புண்டஸ்லிகாவில் ஆதிக்கம் செலுத்தியது. இந்த சீசனில், 20 போட்டிகள் முடிந்துள்ள நிலையில் பேயர்ன் அணியைவிட 7 புள்ளிகள் முன்னிலை பெற்றுள்ளது. சில பேயர்ன் வீரர்கள் இந்த சீசனுடன் ஓய்வு பெற்றுவிடுவார்கள் என்பதால், அடுத்த சீசன் அந்த அணி புதிய வீரர்களுடன் களமிறங்கும். இந்த சீசன் கப் அடிச்சாதான் உண்டு என்பதுதான் டார்ட்மண்ட் ரசிகர்கள் பலரின் மைண்ட் வாய்ஸாக இருந்துவருகிறது. அதுவும் டி.எஃப்.பி போகல் ஜெயிச்சி டபுள் அடிக்கணும் என்றுதான் பலரும் நினைத்திருந்தனர். இந்த ஆண்டுதான் அதற்கான சரியான வாய்ப்பாகவும் கருதப்பட்டது. இந்த நிலையில், அந்த வாய்ப்பைக் கோட்டை விட்டிருக்கிறது டார்ட்மண்ட். வெர்டர் ப்ரேமன் அணியுடனான அந்தப் போட்டியில் டார்ட்மண்ட் அணியின் டிஃபன்ஸ் சற்று மோசமாகவே இருந்தது.

ஆட்டம் தொடங்கிய 5-வது நிமிடத்திலேயே கோல் வாங்கி, நெருக்கடி ஏற்படுத்திக்கொண்டவர்கள், கூடுதல் நேரத்தின் கடைசி நிமிடத்திலும் கோல் வாங்கி வெற்றியை நழுவவிட்டனர். இங்கிலாந்தைச் சேர்ந்த இளம் நட்சத்திர வீரர் ஜேடன் சான்சோ ஆடாதது அவர்களுக்குச் சற்றுப் பின்னடைவாக அமைந்துவிட்டது.



90 நிமிடங்கள் முடிவில் இரு அணிகளும் 1-1 எனச் சமநிலையில் இருக்க, கூடுதலாக வழங்கப்பட்ட 30 நிமிடங்களில், இரு அணிகளும் தலா 2 கோல்கள் அடித்தன. 3-3 எனப் போட்டி முடிய, பெனால்டி ஷூட் அவுட் நடந்தது. வழக்கமாக டார்ட்மண்ட் அணி ஏதேனும் இக்கட்டில் இருந்தால், அணியைக் கரைசேர்ப்பது பகோ அல்கசர்தான். சப்ஸ்டிட்யூட்டாக வந்து கோல் அடித்தே, பல போட்டிகளில் அணியை வெற்றி பெறவைத்துள்ளார். சில போட்டிகளில் தோல்விகளைத் தவிர்க்க உதவியுள்ளார். அதனால், கடந்த சில மாதங்களாக எல்லோரும் அவரை ஐரோப்பாவின் சூப்பர் சப் என்றே பாராட்டிவந்தனர். ஆனால், நேற்று... தன் அணிக்கு எமனாக மாறினார் அல்கசர்.

முதல் பெனால்டி... வலது புறம் அடித்தார். போஸ்டின் கார்னருக்கும் செல்லாமல், கோல் கீப்பருக்கு மேலேவும் செல்லாமல், டைவ் அடித்த கோல் கீப்பரின் கைகளுக்கு மெதுவாகச் சென்றது. அதை எளிதாகத் தடுத்தார் வெர்டர் கோல் கீப்பர் பாவ்லென்கா. டார்ட்மண்ட் மீது உச்சகட்ட நெருக்கடி. வெர்டர் அணியின் முதல் வாய்ப்பில் கோல். அடுத்த வந்த டார்ட்மண்ட் வீரர் மேக்சிமிலியன் பில்ப்ஸ், அல்கசர் போலவே அடிக்க, அதுவும் தடுக்கப்பட்டது. டார்ட்மண்ட் அணியின் வெற்றிக் கனவு அங்கேயே முடிந்தது. இரு அணிகளும் 4 பெனால்டிகள் அடித்த நிலையில் 2-4 எனத் தோற்றது டார்ட்மண்ட்.

இந்தத் தோல்வியை எதிர்பார்த்திராத டார்ட்மண்ட் ரசிகர்கள், சொந்த மைதானத்தில் விரக்தியின் உச்சத்துக்கே சென்றனர். இனி புண்டஸ்லிகா மட்டுமே அவர்களுக்கான மருந்து!

## சமநிலையில் பார்சிலோனா, றியல் மட்ரிட் போட்டி

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான விலகல் முறையிலான கோப்பா டெல் ரே தொடரின் பார்சிலோனா, றியல் மட்ரிட் அணிகளுக்கிடையிலான முதலாவது சுற்று அரையிறுதிப் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

பார்சிலோனாவின் மைதானத்தில், இடம்பெற்ற குறித்த போட்டியில், சக முன்கள வீரரான கரிம் பென்ஸூமாவிடம் றியல் மட்ரிட்டின் இளம் முன்கள வீரரான வின்சியஸ் ஜூனியர் கொடுத்த பந்தை அவர் சக வீரர் லூகாஸ் வஸ்கூஸிடம் கொடுக்க, அவரதை போட்டியின் ஆறாவது நிமிடத்தில் கோலாக்க ஆரம்பத்திலேயே றியல் மட்ரிட் முன்னை பெற்றது.

தொடர்ந்த போட்டியின் 31ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் முன்கள வீரர் மல்கொம், அபாரமாக உதைந்த பிறீகிக்கை தலையால் முட்டிக் கோலாக்க அவரின் சக மத்தியகள வீரர் இவான் றகிட்டிச் முயன்றபோதும் அது கோல் கம்பத்தில் பட்டு வெளியே சென்றிருந்தது.

பின்னர், 57ஆவது நிமிடத்தில் பார்சிலோனாவின் முன்கள வீரர் லூயிஸ் சுவாரஸ் கோல் கம்பத்தை நோக்கி உதைந்த பந்து, றியல் மட்ரிட்டின் கோல் காப்பாளர் கெய்லர் நவாஸால் தடுக்கப்பட்டு மீண்டும் வர அதை மல்கொம் கோலாக்கியதோடு பெற்ற கோலுடன் 1-1 என்ற கோல் கணக்கில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.



இப்போட்டியில், பார்சிலோனாவின் நட்சத்திர முன்கள வீரரான லியனல் மெஸ்ஸி 63ஆவது நிமிடத்திலும் றியல் மட்ரிட்டின் நட்சத்திர முன்கள வீரரான கரெத் பேல் 64ஆவது நிமிடத்திலுமே களமிறங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒரு பந்தில் 17 ஓட்டங்கள்!



பிக்பேஷ் தொடரின் லீக் போட்டி ஒன்றில் மெல்போர்ன் ரெனிகேட்ஸ் - ஹோபர்ட் ஹரிக்கேன்ஸ் அணிகள் மோதிய போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற ரெனிகேட்ஸ் அணி, ஃபீல்டிங் தேர்வு செய்தது. இதையடுத்து, முதலில் களமிறங்கிய ஹரிக்கேன்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 183 ரன்கள் சேர்த்தது. 184 ரன்கள் இலக்குடன் களமிறங்கிய ரெனிகேட்ஸ் அணியால், 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 167 ரன்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. இதன் மூலம் 16 ரன்கள் வித்தியாசத்தில் ஹரிக்கேன்ஸ் அணி வெற்றிபெற்றது.

இந்தப் போட்டியின் ரெனிகேட்ஸ் அணி சேசிங்கைத் தொடங்கியபோது, ஹரிக்கேன்ஸ் அணி வீரர் ரைலி மெர்டித் முதல் ஓவரை வீசினார். முதல் மூன்று பந்துகளை சிறப்பாக வீசிய மெர்டித், ஒரு ரன் மட்டுமே கொடுத்தார். நான்காவது பந்தை ரெனிகேட்ஸ் அணியின் கேப்டன் ஆரோன் பின்ச் எதிர்கொண்டார். அந்தப் பந்தை மெர்டித் நோபாலாக வீசவே, ஃப்ரீ ஹிட் கொடுக்கப்பட்டது. ஃப்ரீ ஹிட் பந்தை அவர் வொய்டாக வீச, அது கீப்பரின் கைகளுக்குச் சிக்காமல் பவுண்டரிக்குச் சென்றது. மூன்றாவதாக அவர் வீசிய பந்தும் நோபாலாக, அந்த பந்து பின்சின் பேட்டின் இன்சைட் எட்ஜாகி ஃபைன் லெக் திசையில் பவுண்டரிக்குச் சென்றது. நான்காவது பந்தையும் மெர்டித் நோபாலாக வீச, அதை லாங்க் ஆஃப் திசையில் பின்ச் பவுண்டரியாக்கினார். இதையடுத்து, ஐந்தாவது முறையாக அவர் வீசிய பந்தில் பின்ச் ஒரு ரன் எடுத்தார். இதன்மூலம் மெர்டித் வீசிய நான்காவது பந்தில் மட்டும் 3 பவுண்டரிகள் உட்பட 17 ரன்கள் எடுக்கப்பட்டது. அவர் வீசிய முதல் ஓவரில் மொத்தம் 23 ரன்கள் குவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. அந்தப் போட்டியில் 3 ஓவர்கள் பந்துவீசிய மெர்டித், 43 ரன்கள் விட்டுக்கொடுத்தார்.

## இந்தியாவுக்கெதிரான தொடரில் ஸ்டார்க் இல்லை

இந்தியாவுக்கெதிரான மட்டுப்படுத்தபட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான தொடர்களுக்கான அவுஸ்திரேலியக் குழாமில் வேகப் பந்துவீச்சாளர் மிற்செல் ஸ்டார்க் இடம்பெறவில்லை.

காயம் காரணமாகவே ஸ்டார்க் குழாமில் இடம்பெறாத நிலையில், அவுஸ்திரேலிய இறுதியாகப் பங்கேற்ற ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரான, அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற இந்தியாவுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான குழாமில் இடம்பெற்றிருந்த சகலதுறைவீரர் மிற்செல் மார்ஷ், வேகப்பந்துவீச்சாளர்கள் பீற்றர் சிடில், பில்லி ஸ்டான்லேக் ஆகியோர் தற்போதைய குழாமில் இடம்பெறவில்லை.

இதேவேளை, சிரேஷ்ட துடுப்பாட்டவீரரான ஷோண் மார்ஷ், தனது இரண்டாவது பிள்ளை பிறந்த பின்னரே குழாமில் இணைந்து கொள்ளவுள்ளார். அந்தவகையில், துடுப்பாட்ட வீரர் டார்சி ஷோர்ட், சகலதுறைவீரர் அஸ்தன் தேணர், வேகப்பந்துவீச்சாளர்கள் நேதன் கூல்டர்நைல், கேன் றிச்சர்ட்சன் ஆகியோர் குழாமுக்கு மீள அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற இந்தியாவுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் ஓய்வு வழங்கப்பட்டிருந்த வேகப்பந்துவீச்சாளர் பற் கமின்ஸ், விக்கெட் காப்பாளர் அலெக்ஸ் காரேயுடன் சேர்ந்து இணை உபதலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 10.02.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.




# வீதியை திருத்தியமைக்குமாறு மக்கள் கோரிக்கை

**பெரியகல்லாறு நிருபர்**

மண்முனை தென் எருவில் பிரதேச சபைக்குட்பட்ட பெரியகல்லாற்றில் உள்ள வீதி அபிவிருத்தித்திணைக்களத்திற்குச் சொந்தமான 1.3 கிலோ மீற்றர் நீளமான காட் றோட் என அழைக்கப்படும் ஊர்வீதியை காப்பற் வீதியாக அமைத்துத் தருமாறு இங்கள்ள பொதமக்களும் அமைப்புக்களும்சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.



தற்போது நாடு தழுவிய ரீதியில் கிறவல் மற்றும் தார் வீதிகள் காப்பற் வீதிகளாக மாற்றம் பெற்று வரும்நிலையில் குறித்த தார் வீதியானது, நீண்டகாலமாக கவனிப்பாரற்று போக்குவரத்துச் செய்ய முடியாதநிலைக்கு வந்து கொண்டிருக்கின்றது. பள்ளமும் படுகுழியும் நிறைந்த வீதியாகக் காட்சியளிக்கின்றது.மழைகாலங்களில் நீர் தேங்கி நிற்கின்றது. இதனால் நோயாளிகள், பக்தர்கள். மாணவர்கள் மற்றும்பாதசாரிகளம பாதசாரிகளும் சாரதிகளும் பலத்த அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர்.

பெரியகல்லாறு பிரதான வீதிக்குச் சமாந்தரமாக கிழக்குப் பக்கமாக ஆலடிச் சந்தியில் இருந்துஆரம்பிக்கும் இவ்வீதி கிராமத்தை முழுமையாக 1.3 கி.மீ ஊடறுத்து பிரதான வீதியை ஊர் முடிவக்கு அண்மித்துச் சந்திக்கின்றது.

பிரதான வீதியிலும் பார்க்க பொது மக்களால் பாதுகாப்பிற்காக் இவ் வீதியே பயன் படுத்தப்பட்டுவருகின்றது. இவ் வீதியில் சேமக்காலை, மூன்று பிரதான பாடசாலைகள், வைத்தியசாலை, சமுர்த்திவங்கி, பொது விளையாட்டு மைதானம், பிரசித்திபெற்ற 5 இந்து ஆலயங்கள் 4 கிறிஸ்தவ ஆலயங்கள்,பொதுசந்தை மற்றும் கடற்கரைக்குச் செல்வதற்கு இந்த வீதி பொதுமக்களாலும், மாணவர்களாலும்விளையாட்டு வீரர்களாலும், பக்தர்களாலும் அதிகளவு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே அவர்கள்இவ்வீதியைப் பணன்படுத்தும்போது பலத்த அசௌகரியங்களுக்கும், சிரமங்களுக்கும் முகம் கொடுத்துவருகின்றனர்.

அயற் கிராமங்களில் இருந்து வைத்தியசாலை மற்றும் சமுர்த்தி வங்கிக்கு வரும் பொதுமக்களும்இவ் வீதியையே முழுமையாகப் பயன்படுத்துகின்றனர்.

எனவே இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இவ் வீதி இன்னமும் காப்பற் வீதியாக மாற்றப்படால் இருப்பதுகுறித்து தங்கள் அதிருப்தியை வெளியிடுகின்றனர். இவ்விடயத்தில் புதிய கௌரவ ஆளுனர் அவர்களும்தனது கவனத்தைப் பூரணமாகச் செலுத்தவேண்டுமென எதிர்பார்க்கின்றனர். புதிய நிதி ஒதுக்கீட்டில்அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பது பொதுமக்களின் நம்பிக்கை.

# அம்பாறையில் பரபரப்பை ஏற்படுத்திய குள்ள மனிதர்

**மண்டூர் நிருபர்**

அம்பாறையில் நள்ளிரவில் வந்த குள்ள மனிதரால் அந்தப் பகுதியில் அச்சநிலை காணப்படுவதாக தென்னிலங்கை ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள கிராமம் ஒன்றில் இரவு நேரத்தில் வரும் 2 அடி நபரால் மக்கள் கடும் அச்சத்தில் உள்ளனர்.

குறித்த பகுதியில் வயல்களுக்கு பல முறை இந்த அமானுஷ்ய நபர் வந்து சென்றதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2ஆம் திகதி தனது சோள பயிர்ச் செய்கைக்கு இரவு நேர பாதுகாப்பு வழங்கிய கருணாதிலக்க என்பவர் குள்ள நபரை பார்த்ததும் பயத்தில் ஓடிச் சென்றுள்ளார்.

அருகிலுள்ள விவசாயிகளையுடன் மீண்டும் அவ்விடத்திற்கு வந்த பார்த்த போது குள்ள மனிதர் மாயமாகியுள்ளார். தனது திகிலான அனுபவம் குறித்து கருணாதிலக்க கருத்து வெளியிடுகையில்,

நான் கடந்த இரண்டாடம் திகதி இரவு பயிர்களை பார்வையிடுவதற்காக வந்தேன். வந்த இடத்தில் சற்று ஓய்வு எடுக்கலாம் என நினைத்து ஓரமாக சாய்ந்து கொண்டேன். எனக்கு திடீரென சத்தம் ஒன்று கேட்டது. நான் எழுந்து லைட் அடித்து பார்க்கும் போது 2 அடியில் ஒருவர் நபர் நின்றார். தலை முடி நீளமாக வளர்ந்து காணப்பட்டது. முகம் சிவப்பு நிறமாகவும், உள்நோக்கி சென்றது போன்று காணப்பட்டது. உதடுகளும் சிவப்பு நிறமாக காணப்பட்டன. நான் லைட் ஒளியை அவரது முகத்தில் அடித்து சத்தமிட்டேன். எனினும் அந்த நபர் ஒரு அடியேனும் நகரவில்லை. பின்னர் நான் அச்சமடைந்து ஓடிச் சென்றேன். ஏனைய விவசாயிகளை அழைத்து வந்தேன். எனினும் அந்த நபரை காணவில்லை. குள்ள மனிதர் வந்து சென்றமைக்கான பாதச் சுவடுகள் ஆதாரமாக காணப்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சில மாதங்களுக்கு முன்னர் அனுராதபுரம், பொலநறுவை பகுதிகளில் வெளிச்சமான பொருள் ஒன்று தரையிறக்குவதாக செய்திகள் வெளியாகி இருந்தன. இது தொடர்பில் ஆராய்ந்த துறைசார் அதிகாரிகள் அது பறக்கும் தட்டாக இருக்கலாம் என தெரிவித்திருந்தனர். இந்நிலையில் குள்ள மனிதர் தொடர்பான தகவல் வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# களுவாஞ்சிகுடியில் டெங்கு ஒழிப்பு செயற்திட்டம்

**களுவாஞ்சிகுடி நிபர்**

களுவாஞ்சிகுடி நியூ ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தின் சிரஞ்சீவி சுகாதாரப் பிரிவின் ஏற்பாட்டில் மாபெரும் டெங்கு ஒழிப்பு செயற்திட்டம் களுவாஞ்சிகுடி சரஸ்வதி வித்தியாலயத்தில் இருந்து ஆரம்பித்து களுவாஞ்சிகுடி பூராகவும் நடைபெற்றது.





நியூ ஒலிம்பிக் கழகத் தலைவர் திரு.ந.புருஷோத்மன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர்.எஸ்.கிருஸ்ணமார் களுவாஞ்சிகுடி ஆதார வைத்திய சாலையின் வைத்தியட்சகர் டாக்டர்.கு.சுகுணன் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை உறுப்பினர் மே.வினோராஜ் அம்கோர் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் ப.முரளிதரன் செயற்திட்ட முகாமையாளர் யோ. சிவயோகராஜன் மற்றும் லிப்ட் நிறுவன பிரதிநிதிகள் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.திருச்செல்வம், களுவாஞ்சிகுடி பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.ரவிகரன் மற்றும் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர்கள் டெங்கு ஒழிப்பு அதிகாரிகள் வைத்தியசாலையின் ஊழியர்கள் கழக உறுப்பினர்கள் பொது மக்கள் என நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

களுவாஞ்சிகுடியில் உள்ள பொது இடங்கள் மற்றும் அமைப்புகள் ஆகியவற்றுக்கான கிணற்று மூடி வலைகள் வழங்கப்பட்டதுடன் பிரதேச சபையின் உதவியுடன் வீடுகளில் உள்ள பிளாஸ்ரிக், டயர்கள் மற்றும் நுளம்பு பெருகுவதற்கு ஏதுவாக உள்ள பொருட்கள் அகற்றப்பட்டதுடன் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் இணைந்து கிணறுகளில் மீன்குஞ்சுகள் இடப்பட்டு பொது இடங்கள் மற்றும் வாகனங்கள், வைத்தியசாலை ஆகியவற்றில் விழிப்புணர்வு ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டு பொது மக்களுக்கு ஆலோசனைகளும் அறிவுரைகளும் வழங்கி வைக்கப்பட்டமை சிறப்பம்சமாகும். அத்துடன் இவ் டெங்கு ஒழிப்பு செயற்திட்டத்தை மேற்கொண்ட களுவாஞ்சிகுடி பிரதேசத்தில் 52 வருடகால பழைமையைக் கொண்ட நியூ ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் இப் பிரதேசத்தில் விளையாட்டு கல்வி சுகாதாரம் ஆன்மீகம் ஆகிய பல்வேறு பட்ட துறைகளின் ஊடாக இப் பிரதேச மக்களுக்கு சேவையாற்றி வருகின்றமை சிறப்பம்சமாகும்.

# தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு அரசாங்கம் அனுமதியளிக்க கூடாது!

**க.விஜயரெத்தினம்**

தமிழ் கிராமங்களின் பெயர்களை சிங்கள பெயர்களாக மாற்றுவது,வடகிழக்கில் புத்த சிலைகளை நிறுவுவது போன்ற தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு அரசாங்கம் அனுமதியளிக்க கூடாது என தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா ஒக்டோபர் சதியை முறிகியடித்து ஆட்சியைத் தக்க வைப்பதற்கு உதவியவர்கள் யார் என்பதை சிந்தித்துப்பார்க்க வேண்டும் என்றும் கூறினார்.

மட்டக்களப்பு வாகரையில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொங்கல் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஒன்று இல்லாது விட்டிருந்தால் இன்று தேர்தல் காலமாக இருந்திருக்கும் அல்லது தேர்தல் நடைபெற்று முடிந்திருக்கும். ஐக்கிய தேசிக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூட களைத்துப் போய் இனி ஒன்றும் செய்ய முடியாது தேர்தலுக்கு ஆயத்தமாம் எனும் நிலை ஏற்பட்டிருக்கும்.



இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா, மாவை சேனாதிராஜா, ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் சட்டதரணி கனகீஸ்வரன் ஆகியோர் ஒன்று கூடி இந்த நாடு மட்டுமல்ல சர்வதேசமே வியக்கத்தக்க வகையில் வழக்கை நடாத்தி வழக்கில் வென்று தற்போது இருக்கும் அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றார்கள்.

இன்றைய இந்த அரசாங்கம் இந்த நாட்டை ஆழ்வதற்கு வழிவகுத்துக் கொடுத்தது. எமது தமிழ்த் தலைவர்கள் தான் என்று சொன்னால் மிகையாகாது. அந்த அளவிற்கு அறிவும், ஆற்றலும் மிக்க தமிழ்த் தலைவர்களைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இலங்கையிலே எந்த அரசியல்வாதியும் விரட்ட முடியாது என்பதை ஒக்டோபர் சதிப் புரட்சி எடுத்தியம்பியிருக்கின்றது.

இந்த நிலையில் நாங்கள் கட்சியின் செயற்பாடுகளை மற்றவர்கள் ஏற்றுக் கொள்கின்ற அளவிற்கு செயற்படுத்திக் கொண்டிருக்கின்ற கால காட்டத்திலே நம்மவர்கள் அதற்கு எதிராகக் கோசமிடுவதும். அதனை எப்படிக் கலைத்து விடலாம் என்று யோசிப்பதுமான விடயங்களைப் பார்க்கின்ற போது அவர்கள் அவர்களையே ஏமாற்றிக் கொள்ளும் அளிவிற்குத் தான் இருக்கின்றார்களே தவிர தமிழ்த் தலைமைகளையும், அறிவாற்றல்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து ஒருபோதும் பிரித்து விட முடியாது.

தமிழ்த் தலைமைகளை சட்டத்திலே வென்று விட முடியாது என்று சிங்களத் தலைவர்களுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும், ஒரு சிலவற்றைக் கொடுத்து விட்டு அவற்றின் மூலம் பலவற்றை நாங்கள் சாதித்து விடலாம் என்று அரசாங்கம் யோசித்தால் அது அவர்களது மடமைத்தனம் என்றுதான் கொள்வோம்.

ஏனெனில் எம்மால் இன்று ஆட்சியைப் பெற்றுக் கொண்டிருக்கின்ற ஜனாதிபதியாக இருந்தாலும், பிரதமராக இருந்தாலும், அல்லது எந்த அமைச்சராக இருந்தாலும் அவர்கள் தமிழர்களை விலத்தி நடந்துகொள்ள முடியாது.

ஆனால் இன்றை சூழ்நிலையிலே எம்மை விரட்டிவிடலாம் என்று சிலபேர் நினைக்கின்றார்கள். ஆனால் அது ஒருபோதும் முடியாது. அண்மையில் முல்லைத் தீவிலே ஒரு புத்தர் சிலை அமைக்கப்பட்டது. காரசாரமான விவாதங்கள் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கின்ற அதே நேரத்தில் இன்று வவுனியாவிலும் ஒரு புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல அந்தப் பிரதேசத்தின் பெயரையே சிங்களப் பெயராக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதையிட்டு நாங்கள் மனம் வருந்துகின்றோம். இந்த செயற்பாட்டை இன்றைய அரசாங்கம் சற்றுச் சிந்திக்க வேண்டும். வருகின்ற ஒரு வருடகாலத்தை தாங்கள் ஆள்வதற்கு வழிவகுத்தவர்கள் தமிழர்கள் என்பதை எண்ணிக் கொள்ளாமல் இவ்வாறான கவலைக்கிடமான விடயங்களை முன்னெடுத்துச் செல்வது தமிழ் மக்களுக்கு எதிரானதொரு செயற்பாடாகவே நான் நினைக்கின்றேன்.

இவ்வாறான சில்லறைத்தனமான சேட்டடைகளை அரசாங்கம் மேற்கொள்ளக் கூடாது. தங்களிடம் இருந்து நாங்கள் ஒரு பெரிய வேலையை எதிர்பார்த்திருக்கின்றோம். அதற்கிடையிலே தமிழர்களுடன் மனக்சகப்பை ஏற்படுத்துகின்ற அளவிற்கு எந்த அரசாங்கமாக இருந்தாலும் செயற்படக் கூடாது என்பதை நாங்கள் திட்டவட்டமாகக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம். நாங்கள் கோருகின்ற கோரிக்கை எமக்குத் தேவையான எமது அபிலாசகைளைப் பூர்த்தி செய்கின்ற அரசியலமைப்பை இந்த நாட்டிலே கொண்டு வர வேண்டும். அதில் சிலர் சட்டவாதங்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள். சிலர் அதில் ஒன்றுமில்லை என்று சொல்கின்றார்கள்.

இது இறுதி வடிவம் பெறுவதற்கு இன்னும் இரண்டு மூன்று தடைகளைத் தாண்டவேண்டி இருக்கின்றது. இருக்கின்ற தடைகளைத் தாண்டி வருகின்ற போதுதான் அது ஒரு முழுமையான சட்டவாக்கமாக இருக்குமே தவிர அறைகுறைப் பிரசவத்தில் இருக்கின்ற பிள்ளையைக் கொஞ்சிவிட வேண்டாம் என எமது மக்களுக்கான செயற்பாடுகளில் ஆதரவளிக்காது வெறுமனே அரசியலமைப்பு வெறும்குடம் என்று சொல்பவர்களை நாங்கள் வேண்டிநிற்கின்றோம் என்றார்.

# பூரண விசாரணைக்கு உத்தரவு

காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பாக பூரண விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு கிழக்கு மாகாண ஆளுனர் கலாநிதி எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா உத்தரவிட்டு உள்ளார்.

தவிசாளர் ஜெயசிறில் மீது நீதி விசாரணை நடத்த வேண்டும் என்று கோரி கிடைக்க பெற்ற முறைப்பாடுகளை கருத்தில் கொண்டே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

ஆளுனரின் உத்தரவை உள்ளூராட்சி ஆணையாளருக்கு முதல் அமைச்சின் செயலாளர் யூ. எல். ஏ. அஸீஸ் எழுத்துமூலம் அறிவித்து உள்ளார்.

2019 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தை பிரதேச சபை சட்ட திட்டங்களுக்கு மாறாகவும், கபடத்தனமாகவும் எழுந்தமானமாக நிறைவேற்றினார் என்பது உட்பட 10 குற்றச்சாட்டுகள் முறைப்பாடுகளில் சுமத்தப்பட்டு உள்ளன.



**காரைதீவு கமு/சண்முகா மகா வித்தியாலயத்திற்கு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் அவர்களின் 2018 ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ரூபாய் இரண்டு லட்சம் பெறுமதியான மாணவர்களுக்கான பான்ட் வாத்தியக் கருவிகள் காரைதீவு பிரதேச செயலாளர் திரு.வேதநாயகம் ஜெகதீசன் அவர்களின் தலைமையில் வழங்கிவைக்கப்பட்டது.**

**படம்: காரைதீவு நிருபர்**



**ஆரையம்பதியைச் சேர்ந்த திருமதி.நல்லம்மா-பூபாலரட்ணம் அவர்களின் 10 ஆம் ஆண்டு நினைவையொட்டி இலவச கண் பரிசோதனை மற்றும் இலவச கண் சத்திர சிசிச்சை முகாம் மட்டக்களப்பு ஆரையம்பதி நந்தகோபன் கலாச்சார மண்டபத்தில் ஆரம்பமானது. கண் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி பூபாலரட்ணம் ஸ்ரீகரநாதன் அவர்கள் தலைமையிலும் ஏற்பாட்டிலும் நடைபெற்ற இம் முகாமில் அதிதிகளாக மாநகர சபை தலைவர் தி.சரவணபவன்,ஆரையம்பதி பிரதேச சபை தலைவர் எஸ்.மகேந்திரலிங்கம் மற்றும் இராமகிருஷ்ண மிஷன் உறுப்பினர் பத்மநாதன் ஆகியோர் கலந்து கொண்டதுடன் மாநகர சபைத்தலைவர் இம்முகாமை ஆரம்பித்து வைத்தார்.இலவச வைத்தியமுகாமில் நாற்பது வயதிற்கு மேற்பட்ட ஆரையம்பதி பிரதேசத்தை சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டதுடன் அவர்களுக்கான கண் சத்திர சிசிச்சை மட்டக்களப்பு GV தனியார் வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.**

**படம்: க.விஜயரெத்தினம்**




## அம்கோர் நிறுவனத்தின் பெண்களின் வினைத்திறன் நடவடிக்கைகளை மேம்படுத்தல் தொடர்பான கூட்டம்

**க.விஜயரெத்தினம்**

சமூக பொருளாதார அபிவிருத்தியை நோக்கமாக கொண்டு இயங்கும் அரச சார்பற்ற நிறுவனமான அம்கோர் நிறுவனத்தின் பெண்கள் மேம்பாட்டு மற்றும் பெண்களின் வினைத்திறன் நடவடிக்கைகளை மேம்படுத்தல் தொடர்பான கூட்டம் )மட்டக்களப்பு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.



இந்நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் மா.உதயக்குமார், உதவி அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சினி ஸ்ரீகாந், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.சசிகலா புண்ணியமூர்த்தி,அம்கோர் நிறுவனத்தின் இயக்குனர் பரமசிவம் முரளிதரன், அவ்வமைப்பின் ஊழியர்கள், அரச அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பெண்களின் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்கு காத்திரமான பங்கினை வளங்குதல்,நுண்கடன், புத்தாக்க விழிப்புணர்வுகள்,சுயதொழில் ஊக்கப்படுத்தல்கள், சமூகத்தில் பெண்களுக்கு ஏற்படும் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளல் சம்பந்தமான பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் பெண்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் சவால்களை சமாளிப்பதற்கான சமூக அறிவூட்டல்கள் பற்றியும் ‘சமூக பொருளாதார அபிவிருத்திற்கான செயற்திட்டம் 2019’ என்ற திட்டத்தின் கீழ் பெண்களின் வாழ்வாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

கோரளைப்பற்று (வாழைச்சேனை) மற்றும் கோரளைப்பற்று தெற்கு (கிரான்) ஆகிய இடங்களிளே இத்திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன. இத்திட்டத்தின் கால அளவானது மூன்று வருடங்களாகும்

சிறிய தொழில் பயிற்சி நெறிகள்,வாழ்க்கைத்திரனை மேம்படுத்தும் செயலமர்வுகள், போன்றன தெரிவு செய்யப்பட்ட குடும்ப பெண்களிடையே செயற்படுத்தப்படவுள்ளன.

கிட்டத்தட்ட 930 குடும்பங்களை சேர்ந்த பெண்கள் இதனால் நன்மை அடையவுள்ளனர். தெரிவுசெய்யப்பட்ட பிரதேசங்களிலே நிரந்தரமாக வாழும் குடும்பங்களிலே உள்ள பெண்கள் , பொருளாதார ரீதியாக நலிவடைந்துள்ள குடும்பங்களை சேர்ந்த பெண்கள், பெண்களை தலைமைகளாக கொண்ட குடும்பங்கள் மற்றும் அதிக அங்கத்தவர்களை கொண்ட குடும்பங்கள் இத்திட்டத்தின் மூலம் நன்மையடையவுள்ளது.



**மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் வருடாந்த இல்லவிளையாட்டுப் போட்டி வெபர் மைதானத்தில் அதிபர் பயஸ் ஆனந்தராஜா தலைமையில் நடைபெற்றபோது நிகழ்வில்வெற்றிபெற்ற இல்லப் பொறுப்பாசிரியருக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் எம்.கே.எம்.மன்சூர் வெற்றிக்கிண்ணம் வழங்கி வைப்பதனையும் படங்களில் காணலாம்.**

**படம்: க.விஜயரெத்தினம்**

## மட்டக்களப்பு மாநகரசபையால் வசதி குறைந்த மாணவர்களுக்கு இலவச நீச்சல் பயிற்சிகள்

**க.விஜயரெத்தினம்**

மட்டக்களப்பு மாநகர எல்லைக்குள் வதியும் வசதி குறைந்த மாணவர்களின் நலன் கருதி வெபர் விளையாட்டு மைதானத்தில் இலவச நீச்சல் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படுள்ளதாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்தார்.

பிள்ளையாரடி நல்லையா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டு விழா பாடசாலை அதிபர் வே.பிரபாகரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் அனைவரும் கல்வியில் சாதிக்கவேண்டும் என்ற உணர்வுடன் கற்க வேண்டும். இன்று பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் கையடக்க தொலைபேசி, சினிமா, உள்ளிட்ட தகவல் தொழிநுட்ப யுகத்திற்குள் மூழ்கிக்கொண்டு மீளமுடியாமல் தத்தளிக்கின்றார்கள். இதனால் மாணவர்களின் கல்வியும், விளையாட்டின் மீதான ஆர்வமும் வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளன.

எமது மாவட்டத்தின் விளையாட்டு வீரர்களை இனங்கண்டு அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். வசதிகுறைந்த பல மாணவர்கள் திறமையிருந்தும் பயிற்சிகளை மேற்கொள்ள முடியாமல் இருக்கின்றார்கள். இவ்விடயத்தில் எமது மாநகரசபையானது விளையாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் ஓர் நிலையியற் குழுவினை ஸ்தாபித்துள்ளது. அக்குழுவானது மாநகர எல்லைக்குள் பல செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

குறிப்பாக எமது பிரதேசத்தில் நீச்சல் விளையாட்டு வீரர்களை உருவாக்கும் பொருட்டு மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் இலவச நீச்சல் பயிற்சியை ஆரம்பித்துள்ளோம். அதற்காக அனுபவம் வாய்ந்த திறமையான பயிற்சியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இதன்படி திங்கள்,



செவ்வாய், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் 4மணி தொடக்கம் 6மணி வரை இவ் இலவச நீச்சல் பயிற்சியானது இடம்பெற்று வருகின்றது. இதனையும் இப்பிரதேசத்தில் உள்ள மாணவர்கள் பயன்படுத்தலாம் எனத்தெரிவித்தார்.

## கிண்ணியா வைத்தியாலை அபிவிருத்திக் கூட்டம்

**சேனையூர் நிருபர்**

கிண்ணியா தளவைத்தியசாலையின் எதிர்கால அபிவிருத்தி மற்றும் தற்போதைய குறைபாடுகள் தொடர்பிலான கலந்துரையாடலொன்று வைத்தியசாலையில் உள்ள கட்டிடமொன்றில் இடம் பெற்றது.

திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத்தலைவரும் துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை பிரதியமைச்சருமான அப்துல்லா மஹரூப் அவர்களின் விசேட தலைமையின் கீழ் குறித்த கலந்துரையாடல் இடம் பெற்றது.

கிண்ணியா தளவைத்தியசாலையில் தற்போது நிலவி வரும் ஆளனிப் பற்றாக்குறை தொடர்பாகவும் கடந்த காலங்களில் டெங்கு நோயினால் 23 உயிர்கள் பழியாக்கப்பட்டன இவ்வாறான விடயங்கள் இனிமேலும் இடம்பெறா வண்ணம் பாதுகாக்கப்பட வேண்டும் ஆளணி பற்றாக்குறை தீர்க்கப்பட்டு வைத்திய அதிகாரிகள் உடனடியாக நியமனம் செய்யப்பட வேண்டும் என கலந்துரையாடலில் பல கோரிக்கைகளை முன்வைத்து துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை பிரதியமைச்சர் அப்துல்லா மஹரூப் இதன் போது தெரிவித்தார்.

வைத்தியசாலைக்கான இடப் பற்றாக்குறை தொடர்பாகவும் மேலும் பேசப்பட்டது இதற்கான தீர்வினை முன்வைப்பதற்கான சகல ஏற்பாடுகளும் இடம் பெறுவதற்கான சாத்தியங்கள் காணப்படுவதாகவும் எதிர்பார்க்கப்படுகிறது

எதிர்கால அபிவிருத்திகளை உரிய அமைச்சுக்களின் உயரதிகாரிகளின் உதவியூடாக வைத்தியசாலைக்கான அபிவிருத்திகளை பெற்றுத் தரவுள்ளதாகவும் பிரதியமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண மாகாண சுகாதார திணைக்களப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.அருள்குமரன்,திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கயல்விழி ,பிரதியமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் டாக்டர் ஹில்மி முகைதீன் பாவா,வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஏ.பி.மஸ்ஹூத்,பிரதியமைச்சரின் இணைப்பாளர் ஈ.எல்.அனீஸ், வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்,கிண்ணியா நகர சபை உறுப்பினர் எம்.எம்.மஹ்தி உட்பட பலர் பங்கேற்றார்கள்.

## சுயதொழிலுக்கான நிதியுதவியளித்தல் தொடர்பான செயலமர்வு

**சேனையூர் நிருபர்**

ஐரோப்பிய ஒன்றியம்,யூ.என்.டி.பி.மற்றும் பீஸ் வின்ஸ் யப்பான் ஆகிய நிறுவனங்களின் நிதியுதவியுடன் திருகோணமலை மாவட்டத்தின் மீள்குடியமர்த்தப்பட்ட மூதூர், கிண்ணியா மற்றும் குச்சவெளி போன்ற பிரதேசங்களி



லுள்ள தெரிவு செய்யப்பட்ட 53 இளைஞர் யுவதிகளுக்கு வங்கிகளுனுடாக சுயதொழிலுக்கான நிதியுதவியளித்தல் தொடர்பான செயலமர்வு இன்று(6)திருகோணமலை சர்வோதய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வங்கிகளின் திட்ட பிரச்சார அமர்வு எனும் தொனிப் பொருளில் நடைபெற்ற இந்நிகழ்வில் மீள்குடியமர்த்தப்பட்ட கிண்ணியா,மூதூர் மற்றும் குச்சவெளி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த சுயதொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற தெரிவு செய்யப்பட்ட 53 இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டார்கள்.

இவர்களுக்கு வங்கிகள் ஊடாக சுயதொழிலுக்கான நிதியுதவிக்கான வழிகாட்டல்கள் மற்றும் சுயதொழிலை இலாபமூட்டும் வகையில் எவ்வாறு மேற்கொள்வது,தொழிலை கையாளும் முறைகள் அத்தோடு வங்களின் செயற்பாடுகள் தொழிலுக்கான முக்கியத்துவம் தொடர்பாகவும் இதன் போது தெளிவுபடுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் யூ.என்.டி.பி.திட்டப்பணிப்பாளர்கே.பார்தீபன்,பீஸ் வின்ஸ் யப்பான் வதிவிட பிரதிநிதி யோகோகவாசி,இலங்கை மத்திய வங்கியின் கிழக்கு மாகாண முகாமையாளர்பிரபாகரன்,மற்றும் கொமர்ஷல்,இலங்கை வங்கி,செலான் வங்கி,மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் முகாமையாளர்களும் கலந்து கொண்டார்கள்.

## வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழக வளாகத்தின் முன் வலிந்து காணமால் ஆக்கப்பட்ட உறவுகள் ஆர்ப்பாட்டம்

**கே.சுபஜன்**

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் உறவுகளின கண்ணீருக்கு முடிவு என்ன என்ற வாசகத்துடன் வலிந்து காணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கவனயீர்பு போராட்டமொன்றினை முன்னெடுத்தனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 40வது கூட்ட தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் இலங்கை அரசுக்கு மேலும் கால அவகாரம் கொடுகாமல் சர்வதேசம் நேரடியாக தலையீடு செய்து எமது பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுத்தர வேண்டும்.

மன்னாரிலே மனித புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டும் அவற்றை மூடி மறைப்பதற்கான வேலைகள் நடைபெறுகின்றன இது தொடர்பான விரிவான விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும்.

நெடுங்காலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டவேண்டும் தமிழர் தாயகத்தில் பாதுகாப்புத் தரப்பினால் முகாம் அமைகப்பட்டு ஊயர்பாதுகாப்பு வலயங்கள் என பிரகடணப்படுத்தப்பட்டுள்ள எமது உறவுகளின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அரசு வெளியிட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து கவனயீர்ப்பு போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வடக்கு கிழக்கு வலிந்து காணமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தில் கிழக்கு மண்ணிலிருந்து உறவுகளை தொலைத்த தாய், தந்தை, சகோதரர்கள், உறவினர்கள் மற்றும் கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் பங்கேற்றனர்.

கிழக்குப் பல்கலைக் கழக வந்தாறுமூலை வளாக முன்றலில் ஒன்றுகூடிய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஐநாவே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் காணாமல் போனோர்க்கான அலுவலகத்தை நிராகரிக்கின்றோம், இலங்கை அரசே எமது அன்புக்குரியவர்கள் எங்கே?, ஐநாவே பதில் கூறு, புதைத்தது யார்? புதைக்கப்பட்டது யார்? சோந்த மண்ணில் புதைகுழியா எந்த மண்ணில் நாம் வாழ்வது, உறவுகளை மீட்டெடுப்போம் உண்மைக்காய் குரல்கொடுப்போம். சுதந்திரம் இல்லை வாழ்வில் தந்திரவாதிகள் இருக்கும்வரை எம் வலிகள் ஆறாது, நிலம் தருவர் வீடு தருவார் கண்கட்டி கூட்டி சென்றவர் வருவார் என்று காத்திருந்து உயிர்போயிற்று, சாந்த நாட்டிற்குள் அகதி வாழ்கை இதுவா சுதந்திரம்இ போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.









**ஆங்கில ஆசிரியர் ஆர். என். பிரதீபன் எமுதிய ஈசி லேர்னிங் இங்கிலிஸ் கிரமர் (Easy Learning English Grammar) எனும் நூல் வெளியீட்டு விழா திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரி கலை மண்டபத்தில் ‘நீங்களும் எமுதலாம்’ ஆசிரியர் கவிஞர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.ஆரம்ப நிகழ்வாக அதிதிகள் வரவேற்கப்படுவதையும், நூலின் முதல் பிரதியை நூலாசிரியர் பிரதீபன் முதன்மை அதிதிக்கு வழங்கி வெளியீட்டு வைப்பதையும், சிறப்பு பிரதியை கவிஞர். மு.யாழவனுக்கு தனபாலசிங்கம் வழங்கி வெளியீட்டு வைப்பதையும் படங்களில் காணலாம்.**

**படம்: சேனையூர் நிருபர்**

# கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி அணி வெற்றி



**கல்லடி நிருபர்**

தேசிய ரீதியில் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட கூடைப்பந்தாட்ட அழைப்புச் சுற்றுப்போட்டியில் மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி அணி வெற்றிபெற்று இவ்வாண்டுக்கான சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் அகில இலங்கை ரீதியில் 14வயதுக்குட்பட்ட பாடசாலைமாணவர்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி கடந்த இரண்டாம் திகதி ஆரம்பமானது.

இந்த சுற்றுப்போட்டியில் கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், பதுளை, திருகோணமலை,மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் இருந்துசுமார் 12 அணிகள் பங்குகொண்டன.

இறுதிப்போட்டி மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியின் உள்ளக அரங்கில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் திருகோணமலை புனித ஜோசப் கல்லூரி அணியும் மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி அணியும்மோதிக்கொண்டது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப்போட்டியில் 56-35 என்ற ரீதியில் புள்ளிகளைப்பெற்று புனித மைக்கேல் கல்லூரிஅணி வெற்றிபெற்று இந்த ஆண்டுக்கான சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.

இதனடிப்படையில் நடைபெற்று சுற்றுப்போட்டியில் முதல் இடத்தினை மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி அணியும்இரண்டாம் இடத்தினை திருகோணமலை புனித ஜோசப் கல்லூரி அணியும் மூன்றாம் இடத்தினை யாழ்ப்பாணம்இந்துக்கல்லூரி அணியும் பெற்றுக்கொண்டது.

இறுதி பரிசளிப்பு நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் பிரதம அதிதியாககலந்துகொண்டதுடன் சிறப்பு அதிதியாக மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வி.ஈஸ்பரன் உட்பட பலர்கலந்து கொண்டனர்.

இதன்போது வெற்றிபெற்ற பாடசாலைகளுக்கு வெற்றிக்கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டதுடன் சிறந்தவீரர்களுக்கும் வெற்றிக்கேடயங்கள் வழங்கப்பட்டன.




# கல்லடி புனித.அந்தோனியார் திருவிழா

**கல்லடி நிருபர்**



மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் கல்லடி - டச்பார் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா பங்குத்தந்தை அருட்பணி சுவைக்கீன் ரொசான் அடிகளார் தலைமையில் கொடியேற்றத்துடன்ஆரம்பமாகி விமர்சையாக நடைபெற்றது.

கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய திருவிழாவில் இரண்டு நவ நாட்களாக திருவிழாக்கள் இடம் பெற்று அதனைத் தொடர்ந்து திருவிழா கூட்டு திருப்பலியானது அருட்தந்தை றெறன்ஸ் ராகல் அடிகளார் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

திருவிழா திருப்பலியில் பங்குத்தந்தை சு.ரொசான் அடிகளார், கிறைட்டன் அவுஸ்கோன் அடிகளார், அருட் தந்தை லோ.லோகநாதன் அடிகளார் மற்றும் அருட்சகேதரிகள் என பெருமளவிலானோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது பெருமளவிலான அந்தோனியார் பக்தர்கள் கலந்து கொண்டு புனிதரின் ஆசீரை பெற்றுக் கொள்ள வருகை தந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# போதை பொருளை சமூகத்திலிருந்து ஒழிக்க பெண்கள் முன்வரவேண்டும்

**பெரியநீலாவணை நிருபர்**

அம்பாறை மாவட்டத்தின் மிக பிரமாண்டமான போதை பொருள் ஒழிப்பு விழிப்பூட்டல் வீதி பேரணி கல்முனை தமிழ் பிரதேச செயலக பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்டு கொட்டும் மழைக்கு மத்தியில்கல்முனையில் நடைபெற்றது.

போதை பொருளை ஒழிப்போம், புதிய யுகத்தை படைப்போம் எனும் மகுடத்திலான இப்பேரணி கல்முனை தமிழ் பிரதேச செயலகம், கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை, கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிலையமாணவர்களின் பங்கேற்புடனும் வெகுசிறப்பாக நடைபெற்றது.



அழகியல் கற்கைகள் நிலைய மாணவர்களின் தெருக்கூத்து, போதை பொருள் பாவனைக்கு எதிரான சத்திய பிரமாணம், போதை அரக்கனின் சவப்பெட்டி எரிப்பு ஆகிய அம்சங்கள் இந்த விழிப்பூட்டல் பேரணிக்கு உரம் சேர்த்தன.

கல்முனை தமிழ் பிரிவு பிரதேச செயலாளர் ரி.ஜெ.அதிசயராஜ், கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்தியர் டாக்டர் என். ரமேஸ் அடங்கலான பேராளர்கள் போதை பொருள் பாவனையை முற்றாக ஒழிக்க வேண்டும் என்று பேரணியின் நிறைவு கூட்டத்தில் உரையாற்றினார்கள்

பிரதேச செயலாளர் பேசுகையில் புற்று நோயை போல சமுதாயத்தை அரித்து கொண்டிருக்கும் போதை பொருள் பாவனையை முற்றாக ஒழிக்க பெண்கள் முன்வர வேண்டும். கொட்டும் மழைக்கு மத்தியில் இரட்டிப்பு வெற்றியுடன் எமது பேரணி பிரமாண்டமாக இடம் பெற்று உள்ளது, பெண்கள் கூடுதலாக பங்கேற்று உள்ளனர், இவ்வாறான விழிப்பூட்டல் பேரணிகளால் எந்த பயனும் உண்மையில் இல்லை என்று சொல்பவர்களின் வாய்களை பூட்டி இருக்கின்றோம், ஜனாதிபதி செயலகம் மெச்சி பாராட்டுகின்ற அளவுக்கு வெகுசிறப்பாக பேரணி நடந்தேறி உள்ளது. ஒவ்வொரு ஆண்களுக்கு பின்னாலும் ஒவ்வொரு பெண்கள் இருக்கிறார்கள் எனத் தெரிவித்தார்.

# அரசியலமைப்பு சாத்தியமில்லை என ஜனாதிபதி கூறுவதை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்

**வெல்லாவெளி நிருபர்**

அரசியலமைப்பு சாத்தியமில்லை என ஜனாதிபதி கூறுவதை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.அவர் நாட்டு மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை மறந்து செயற்பட்டாலும் நாங்கள் அதனைக் கைவிடப் போவதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாகரையில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொங்கல் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

நாங்கள் ஒரு இருண்ட அரசியல் சூழ்நிலைக்குள்ளே சென்று அதிலிருந்து விடுபட்டு ஒரு நல்ல எதிர்காலத்தை எதிர் நோக்கலாம் என்கின்ற சூழ்நிலையிலே தான் இந்தத் தை பிறந்திருக்கின்றது. தை பிறந்ததால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கை திரும்பவும் துளிர்விடுவதான ஒரு நம்பிக்கை இருக்கின்றது.

எங்களைத் தலைநிமிர்ந்து வாழ விடுங்கள், எங்களையும் சமமாக மதியுங்கள், எங்களுக்கான அரசியல் உரித்துக்களை நாங்கள் எடுத்துக் கொள்ள விடுங்கள். எங்களை நாங்களே ஆள விடுங்கள், அப்படிச் செய்கின்ற போது நீங்களும் இந்த தேசத்திலே சுயமாக, நிம்மதியாக, சமாதானமாக வாழக் கூடிய சூழ்நிலை ஏற்படும் என இந்த நாட்டிலுள்ள அனைவருக்கும் கூற விரும்புகிறோம்.

ஒரு இனம் இன்னுமொரு இனத்தை அடக்குவதனால் அந்தத் தேசத்திலே சமாதானம் ஏற்படாது. அடக்குதல் என்று சொல்லும் போது குண்டு மழை பொழிந்து அடக்குவது மட்டுமல்ல ஜனநாயகத்தின் மூலமாகவும் அடக்கலாம்.

ஆட்சி முறையை மாற்றுங்கள் என்று சொல்லுகின்றோம். அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுங்கள், ஓரிடத்தில் வைத்திருக்க வேண்டாம் என்று கூறுகின்றோம். அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்ற போது முழு நாட்டிலும் எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருந்தாலும் கூட வெவ்வேறு இடங்களில் நாங்கள் பெரும்பான்மைப் பலத்தை வைத்து நாங்களே தீர்மானத்தை எடுக்கக் கூடியதாக இருக்கும். அப்டியான ஒரு ஆட்சி முறைக்கு மாற்று மாறு தான் நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றோம்.அதற்காக நீண்ட தூரம் வந்தும் இருக்கின்றோம்.

இந்த நாட்டிலே சிறிய கட்சிகள் தங்களுடைய பெறுமதிக்கு மேலாக செல்வாக்கைப் பயன்படுத்துகின்ற போது அது ஒரு நிலையான ஆட்சி இல்லை என்று சொல்லுகின்றார்கள்.

எண்ணிக்கையிலே சிறுபான்மையினத்தவர் தங்கள் வாக்கினால் தங்கள் செல்வாக்கினால் ஆட்சியை நிர்ணயிக்கின்ற போது யார் ஆட்சி செய்வார்கள் என்று அவர்கள் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கின்ற போது இதனைச் செய்ய முடியாது என்றே சொல்லுகின்றார்.

ஜனாதிபதி தேர்தலிலே வெற்றி பெற்ற போது தீர்மானிக்கும் சக்தியாக இருந்தவர்கள் யார்? ஏன்பதை மறந்து செயற்படக் கூடாது

ஜனாதிபதி அவர்களுக்கு மிகவும் தாழ்மையாக நாங்கள் ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம். நீங்கள் அந்தத் தேர்தலிலே வெற்றி பெற்ற காரணத்தினால் தான் இன்று ஜனாதிபதி கதிரையிலே இருக்கின்றீர்கள். ஒரு தடைவ மட்டும் தான் நான் ஜனாதிபதியாக இருப்பேன். இன்னுமொரு தடவை போட்டியிட மாட்டேன் என்று வாக்குறுதி கொடுத்த நீங்கள் இன்றைக்கு இரண்டாம் தரம் ஜனாதிபதியாவதைக் கனவாகக் கொண்டு செயற்படுகின்ற காரணத்தினாலே உங்கள் போக்கு மாறியிருக்கின்றது. அதனைச் சுட்டிக் காட்டுகின்ற உரித்து எங்களிடத்திலே இருக்கின்றது.

உங்களை ஜனாதிபதியாக்குகின்ற போது எமது இனப் பிரச்சனைக்கான தீர்வை எழுத்திலே கொடுக்கத் தயாராக இருந்தீர்கள். அதற்கு நானே சாட்சி. இன்னும் பலபேர் அங்கே இருந்தோம். ஆனால் நீங்கள் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக அதனை எழுத்திலே நாங்கள் கேட்கவில்லை. பின்னர் நீங்களும் அதனை ஊர்ஜிதம் செய்திருக்கின்றீர்கள். கொடுத்த வாக்குறுதிகளை தவறாமல் நிறைவேற்ற வேண்டிய தார்மிகப் பொறுப்பு இன்னமும் உங்களிடம் இருக்கின்றது.

இந்த அரசலமைப்புப் பேரவை உருவாக்கப்பட்ட அன்று அதற்கான முன்மொழிவு பாராளுமன்றத்திலே 2016ம் ஆண்டு ஜனவரி மாதம் 09ம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட போது நீங்கள் ஆற்றிய உரையை மீண்டும் ஒருமுறை செவிமடுத்துப் பாருங்கள். ஏன் இந்த நாட்டுக்கு ஒரு அரசியலமைப்புத் தேவை என்பதை நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள். பண்டா செல்வா, டட்லி செல்வா ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தால் இந்த நாட்டில் ஒரு இரத்தக் களரி ஏற்பட்டிருக்காது நானும் அந்த வேளையிலே தவறாக அதனை விமர்சித்தேன் என்று சொன்னீர்கள். இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருந்தால் கூட இந்த நாட்டில் பிரச்சினை ஏற்பட்டிருக்காது என்று நீங்கள் அன்று சொன்னீர்கள்.

தெற்கில் இருக்கின்றவர்களுக்கு சமஷ்டி என்றால் பயம் ஏற்படுகிறது. வடக்கில் இருப்பவர்களுக்கு ஒற்றையாட்சி என்று சொன்னால் பீதி ஏற்படுகின்றது. நாட்டு மக்கள் பாடத்துப் பயப்படுகின்ற ஒரு விடயமாக அரசியலமைப்புச் சட்டம் இருக்கக் கூடாது என்று நீங்கள் தான் சொன்னீர்கள். இந்தச் சொற்களையெல்லாம் விடுத்து நாங்கள் ஒரு நவீன அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் என்று சொன்னீர்களா இல்லையா? எங்கே சென்றது இந்த வாக்குறுதிகள்.

ஒரு விடயத்தை நாங்கள் சொல்லி வைக்க விரும்புகின்றோம். ஜனாதிபதி அவர்கள் தன்னுடைய முழு நாட்டுக்கும் கொடுத்த வாக்குறுதியை மறந்து செயற்பட்டாலும் கூட நாங்கள் அதனைக் கைவிடப் போவதில்லை. ஒக்டோபர் 26ல் அவர் சதிப் புரட்சி வலைக்குள்ளே சிக்கி செயற்பட்ட போதும் கூட நாங்கள் அவரைச் சந்தித்து அவரது முகத்திற்கு நேரே சில உண்மைகளை மரியாதையோடு சொல்லி வைத்தோம்.

புதியதொரு அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இதுவரை தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்ட அரசியலமைப்பு இந்த நாட்டிலே கிடையாது. அது ஒரு உண்மையான சமூக ஒப்பந்தமாக இருக்க வேண்டும் என்றார்.

# மண்முனைப்பற்று பிரதேச பொங்கல் விழா - 2019

**உ.உதயகாந்**

மண்முனைப்பற்று பிரதேச பொங்கல் விழா - 2019 மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய முன்றலில் வெகு விமர்சையாக இடம்பெற்றது.

மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி.ந.சத்தியானந்தி அவர்களது தலைமையில் நடைபெற்ற இவ் விழாவிற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்டச் செயலாளருமாகிய மா.உதயகுமார் கலந்து சிறப்பித்தார்.

இதன் முதல் நிகழ்வாக புதுக்குடியிருப்பு ஸ்ரீ கண்ணாமுனை பிள்ளையார் ஆலயத்திலிருந்து பாரம்பரிய கலை அம்சங்களுடனான தைப் பவனியானது ஆரம்பிக்கப்பட்டு அதிதிகள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர்.

ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய முன்றலை சென்றடைந்ததும் அதிதிகளினால் பொங்கல் பானையினை அடிப்பில் ஏற்றும் நிகழ்வானது இடம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து பிரதேசத்தின் அரச திணைக்களகங்கள், கிராமிய சமூக மட்ட அமைப்புக்கள் மற்றும் தனியார் நிறுவனங்களினால் பல் வேறுபட்ட வகையான பொங்கல்களை பொங்குவதற்கு ஆயத்தமாகவிருந்த 48 பொங்கல் பானைகளையும், அலங்காரங்களையும் அதிதிகள் பார்வையிட்டனர்.

பிரதான அரங்கில் மங்கள விளக்கு ஏற்றப்பட்டு, அதிதிகளின் உரை நிகழ்த்தப்பட்டதனை தொடர்ந்து சிறார்களின் அழகிய கண்கவர் கலையம்சங்கள் அரங்கேற்றப்பட்டதுடன், கதிரவன் கலைக் கழகத்தின் சிறப்பு பட்டிமன்றமும், ஆரையூர் மண்ணிற்கு பெருமை சேர்க்கும் இராவணேசன் இசைக்குழுவினரின் இசை மழையும் அரங்கை அதிரவைத்திருந்தது.

மண்முனைப்பற்று பிரதேச செயலக கலாசார பிரிவின் ஒருங்கமைப்பில் நடைபெற்று இவ்விழாவிற்கு பிரதேசஅரச திணைக்கள நிறுவனங்களும், ஆலய நிருவாக சபைகளும், அரச சாரா நிறுவனங்கள் மற்றும் கிராமிய சங்கங்களும் இதன்போது பாரிய பங்களிப்பினை வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.
















# கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் விடுதலை; முன்னாள் அமைச்சர் சுபைர் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிப்பு

**கல்முனை நிருபர்**

வரலாற்றுச் சிறப்புமிக்க பிரலாகல தூபி மீது ஏறி புகைப்படங்களை எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டமைக்காக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் இன்று கெப்பிட்டிகொல்லாவ நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பாக குறித்த பிரச்சினையில் சம்பந்தப்பட்ட மாணவர்களை கருணை அடிப்படையில் விடுவிக்குமாறு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற முஸ்லிம் பிரதிநிதிகள் அமையம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

குறித்த கோரிக்கை அடங்கிய எழுத்துமூல கடிதத்தினை அமைச்சின் செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ்.சுபைர் ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்தார். அதனைத் தொடர்ந்து கடந்த 2ஆம் திகதி ஜனாதிபதியினால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறிலங்கா சுதந்திர கட்சி அமைப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்களுடனான கூட்டத்தில் மேலும் குறித்த சம்பவத்தில் சிக்கி கொண்ட மாணவர்களை விடுதலை செய்யுமாறு முன்னாள் அமைச்சர் சுபைர் ஜனாதிபதியிடம் கூறியிருந்தார்.

குறித்த விடயத்தினை கருத்தில் கொண்ட ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்பு கொண்டு பல்கலைக்கழக மாணவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் கூறியிருந்தார். அதன் பிரகாரம் கைது செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த மாணவர்களின் விடுதலை தொடர்பில் கரிசனை கொண்டு செயற்பட்ட ஜனாதிபதிக்கு முன்னாள் அமைச்சர் சுபைர் நன்றி தெரிவித்துள்ளார். அத்துடன் மாணவர்களின் விடுதலை தொடர்பில் கரிசனை கொண்டு செயற்பட்ட கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா மற்றும் அரசியல்வாதிகள், உயர் அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவிப்பதாக முன்னாள் அமைச்சர் சுபைர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பௌதீக வசதிகளின்றி இயங்கும் பாடசாலை

**காரைதீவு நிருபர்**



இலவசக் கல்வியை மேலும் அர்த்தமுள்ளதாக்க அரசு பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வரும்நிலையில் கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட நீண்டவரலாற்றை கொண்ட தமிழ் பாடசாலை காரைதீவு இராம கிருஷ்ணா ஆண்கள் பாடசாலை ஆகும் இப் பாடசாலை பல்வேறுபட்ட குறைப்பாட்டுடன் இயங்கி வருவதாக பிரதேச மக்கள் பெற்றோர்கள் ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மாணவர்களுக்கான தளபாடம் இல்லாமல் இருப்பதால் மாணவர்கள் பெரும் நெருக்கடி நிலையை எதிர்கொண்டுள்ளனர். சேதமடைந்த தளபாடங்கள் நீண்ட காலமாக எவ்வித அபிவிருத்தியும் மறுசீரமைப்பும் காணப்படாத பாடசாலை ஆராதனை மண்டபம் மாணவர்களின் ஒன்றுகூடல் மண்டபம் மற்றும் கட்டிட தொகுதிகளுடன் கல்வி நடவடிக்கைளை முன்னெடுத்துச் செல்வதாக பாடசாலை சமூகம் தெரிவிக்கின்றன.

இப்பாடசாலையானது அப்பகுதி ஏழை மற்றும் நடுத்தர மாணவர்களின் பிரதான பாடசாலை என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த பாடசாலையின் தளபாடங்கள் அவசியமாக தேவைப்படுவதால் மாணவர்களின் கல்வி மேம்பாட்டை கவனத்தில் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் துரிதமாக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும் எனவும் கூடிய விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு செயலாளர் மாகாணக் கல்விப்பணிப்பாளர் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆகியோரிடம் மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சுதந்திரதினத்தை முன்னிட்டு மரம்நடுகை

**காத்தான்குடி நிருபர்**

இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் காத்தான்குடி மன்றத்தினால் பல்வேறு சமூக அபிவிருத்தி செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது.

இதன் ஓர் அங்கமாக மட்டக்களப்பு -மஞ்சந்தொடுவாய் ஹுஸைனியா வித்தியாலயத்தில் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் காத்தான்குடி மன்றப் பிரதிநிதிகளினால் கொட்டும் மழையிலும் சிரமதான நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து காத்தான்குடி முஸ்லிம் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் மாணவர்களுக்கு இலவசமாக கண் பரிசோதனை செய்து, மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் காத்தான்குடி மன்ற இமாரா பொறுப்பாளர் எம்.எம்.எம்.மாஹிர் தலைமையில் இடம்பெற்ற மேற்படி மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வில் அதிதிகளாக இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் காத்தான்குடி மன்றத்தின் தலைவர் ஆசிரியர் எம்.ஏ.நிஹால் அஹமட், முன்னாள் மட்டக்களப்பு பிராந்தியத் தலைவர் ஆசிரியர் ஏ.எல்.ஏ.சிப்லி, சமூக விவகார பொறுப்பாளர் டாக்டர் எல்.எம். சனீஜ்,மன்றத்தின் செயலாளர் எம்.ரீ.எம்.அஸ்மி தாஜூதீன் ,ஜமாஅத்தே இஸ்லாமியின் காத்தான்குடி மன்றத்தின் முன்னாள் தலைவர் இஸட்.எம்.சஜி உட்பட ஜமாஅத்தே இஸ்லாமியின் காத்தான்குடி மன்ற பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு முஸ்லிம் சிறுவர் அபிவிருத்தி நிலைய வளாகத்தில் பயன்





தரும் மரக்கன்றுகளும் நடப்பட்டது.

குறித்த முஸ்லிம் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் மூக்குக் கண்ணாடி தேவையான மாணவர்களுக்கு அதிதிகளினால் இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கல்வி ஒன்றே சமூக மாற்றத்திற்கான ஆயுதமாகும்

**சாய்ந்தமருது நிருபர்**



இன்றைய சூழ்நிலையில் கல்வி ஒன்றேதான் சமூக மாற்றத்திற்கான ஆயுதமாகும். அதன் மூலமே தாய் நாட்டுக்கும் சமூகத்திற்கும் எம்மால் பங்காற்ற முடியும் என கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.

ஒரே மொழியைப் பேசுகின்ற தமிழ், முஸ்லிம் சமூகத்தினரிடையே பிரச்சினை வருகிறது என்றால் அது திட்டமிட்டே உருவாக்கப்படுகிறது என்பதை எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எக்ஸலன்ஸ் சர்வதேச பாடசாலையின் கல்முனை கிளைக் கல்லூரி திறப்பு விழா அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.ஆர். எம்.ஜுபிர் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் பற்றியும் அதற்காக சர்வதேச பாடசாலைகள் ஆற்றி வருகின்ற பங்களிப்பு தொடர்பிலும் தனதுரையில் எடுத்துரைத்த முதல்வர் றகீப் மேலும் தெரிவிக்கையில்;

நாங்கள் சிறுவர்களாக இருந்த காலப் பகுதியில் இப்பகுதியில் ஆங்கில மொழி மூலமான முன் பள்ளிகளோ சர்வதேச பாடசாலைகளோ இருக்கவில்லை. அதனால் எமக்கு ஆங்கிலத்தில் கற்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. பல்கலைக்கழக அனுமதி கிடைத்த பின்னரே கொழும்பு சென்று அக்கியூனாஸில் ஆங்கில புலமைக்கான ஒரு வருட பாட நெறியை இரண்டு வருடங்கள் கற்றேன். சிறு பராயத்தில் எமக்கு ஆங்கிலக் கல்வி கிடைத்திருக்குமாயின் நாம் இன்னும் உயர்ந்த நிலைக்கு சென்றிருக்க முடியும். அதனால் தற்போது எமது காலடிக்கு வந்திருக்கின்ற சர்வதேச பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலமான கல்வியை தமது பிள்ளைகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு பெற்றோர்கள் சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என வலியுறுத்துகின்றேன்.

அதேவேளை சர்வதேச பாடசாலைகளில் கற்கின்ற வாய்ப்பு வறிய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு கிடைப்பதில்லை. பொருளாதார வசதியுள்ள அல்லது நடுத்தர வர்க்கத்தை சேர்ந்த பிள்ளைகளுக்கே அந்த வாய்ப்பு இருக்கிறது. எமது எதிர்பார்ப்பு யாதெனில் கீழ்மட்ட பிள்ளைகளுக்கும் ஆங்கில மொழி மூலமான கல்வி கிடைக்க வேண்டும் என்பதாகும். அதற்கு புலமைப்பரிசில் ரீதியாகவோ அல்லது வேறு எந்த வகையிலாவது சர்வதேச பாடசாலைகள் உதவ முன்வர வேண்டும். அதற்காக ஒரு பங்கை ஒதுக்கீடு செய்து கொள்ள வேண்டும். இந்த பங்களிப்பானது வறிய மக்களுக்கு நீங்கள் செய்கின்ற பெரும் சேவையாக அமையும் என்பதுடன் அது நிலையான தர்மமாகவும் அமையும் என்பதை மனதில் கொள்ளுங்கள்.

கல்வியில் எமது சமூகம் முன்னேறி வருகிறது. எங்களது மருதமுனையின் பொருளாதார வளமாக கல்வியே இன்று முன்னிலை வகிக்கிறது. அங்கு கல்வியியலாளர்களிடையே அடுத்த நிலைக்குப் போவதற்கான பலத்த போட்டி நிலவுகிறது. அதன் மூலம் எமது தாய் நாட்டுக்கும் சமூகத்திற்கும் எவ்வாறு பங்காற்றலாம் என்று சிந்திக்கின்றனர். நாம் எங்கு சென்றாலும் அங்கு எம்மவர்கள் இருப்பது எமக்கு பெருமையாகவும் உதவியாகவும் இருக்கிறது.

இலங்கையில் ஒவ்வொரு பிள்ளைக்கும் இலவசக் கல்வி வழங்கப்படுவது அடைப்படை உரிமையாக இருக்கிறது. ஆசியாக் கண்டத்தில் ஜப்பானுக்கு அடுத்ததாக எழுத, வாசிக்கத் தெரிந்த மக்கள் கூடிய வீதத்தில் இருக்கின்ற நாடாக எமது இலங்கை காணப்படுகிறது. எமது நாடு கடன் பழுவுக்கு மத்தியிலும் கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகளை மக்களுக்கு இலவசமாக வழங்கி வருகின்றது. அந்த வகையில் நாம் அரசாங்கத்திற்கு நன்றி கூற வேண்டும். தாய் நாட்டுக்கு கடமைப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

அதேவேளை இன்று எமது நாட்டில் இனங்களிடையே சௌஜன்யம், புரிந்துணர்வு இருக்கிறது என்று யாராவது சொன்னால் அது முற்றிலும் பொய்யான கருத்தாகும். முகத்திற்கு நேராக சிரித்து பேசினாலும் முகத்திற்குப் பின்னால் விரோதமாக நடக்கின்றனர். அடுத்தடுத்த சந்ததியினரும் அவ்வாறே உணர்வூட்டப்படுகின்றனர்.

மொழிப்பிரச்சினையில் தொடங்கிய சிங்கள, தமிழ் முரண்பாடு ஆயுதப்போர் வரை சென்றது. ஆனால் ஒரே மொழியைப் பேசுகின்ற தமிழ், முஸ்லிம் சமூகத்தினரிடையே என்ன பிரச்சினை? அவ்வாறு பிரச்சினை வருகிறது என்றால் அது திட்டமிட்டே உருவாக்கப்படுகிறது என்பதையும் அதற்கான காரணமா என்ன என்பதையும் எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும். எமது அடுத்த சந்ததியினராவது பரஸ்பரம் புரிந்துணர்வுடன் ஐக்கியமாக வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி, ஒழுக்கமும் சகிப்புத்தன்மையும் நிறைந்த சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு இவ்வாறான முன்பள்ளிகள் அத்திவாரமாக அமைதல் வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இந்நிகழ்வில் மூலோபாய அபிவிருத்தி, வெளிநாட்டு வர்த்தக அமைச்சின் மேலதிக செயலாளர் ஏ.எல்.எம்.சலீம், கல்முனை தமிழ் உப பிரதேச செயலாளர் எம்.அதிசயராஜா, தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி றமீஸ் அபூபக்கர், எக்ஸலன்ஸ் சர்வதேச பாடசாலையின் தவிசாளர் எஸ்.சிறிவைகூந்தன் உள்ளிட்டோர் விசேட அதிதிகளாக பங்கேற்றிருந்தனர். அத்துடன் சமயப் பெரியார்கள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினர்.

# புனரமைக்கப்படாத பாடசாலை வீதி



**தோப்பூர் நிருபர்**

தோப்பூர் அல்லை நகர் அல்.ஸாஹீர் வித்தியாலயத்திற்கு முன்னால் செல்லும் பாடசாலை வீதியானது நீண்டகாலமாக மிக மோசமாக சேதமடைந்து குன்றும் குழியுமாக மாறியுள்ளது இதனால் இவ் வீதியூடாக தினமும் பாடசாலைக்குச்சென்றுவரவேண்டிய பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் மற்றும் பொதுமகௌகளும் பெரிதும் சிரமங்களை எதிர்கொள்வதாக கவலை வெளியிட்டுள்ளனர்.

மாரி மழை காலத்தில் இவ் வீதிகளில் மழை நீர் தேங்கி அரை அடிவரைக்கும் வீதி வழியே காணப்படும் பள்ளம் குழிகளில் மழை நீர் தேங்கி அது சேறும் சகதியுமாக மாறுவதால் இவ் வீதியூடாக பயணிப்போர் வீதியால் பயணிக்கமுடியித அவல நிலை காணப்படுகின்றது.

அத்துடன் பாடசாலைக்கு இவ் வீதியால் சென்றுவரவேண்டிய பாடசாலை மாணவர்கள் தங்கள் சப்பாத்துகளையும் பாதணிகளையும் கழற்றி கைகளில் எடுத்துக்கொண்டு சேற்று நீரை தாண்டியும் கடந்தும் பள்ளம் திட்டிகளில் இடறி விழுந்தும் இவ் வீதியால் பயணிக்கவேண்டிய அவல நிலையும் இங்கு தொடர்கிறது

இதன் மூலம் இவ்வீதியால் பயணிப்போர் சொல்லொணாத் துயரங்களை எதிர்கொள்கிறார்கள்.

இவ் வீதியை புனரமைத்துத்தருமாறு இப்பகுதி வாழ் மக்கள் அரசியல்வாதிகளிடமும் அதிகாரிகளிடமும் பல முறை சுட்டிக்காட்டியும் இன்னும் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லையென இப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# வடிகான்கள் சீரில்லை; மக்கள் விசனம்!

**தோப்பூர் நிருபர்**

தோப்பூர் அல்லை நகர் மேற்கு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள கிரான் குள வீதியை புனரமைத்து மழை நீர் வடிந்தோடுவதற்கான வடிகான் வசதிகளையும் செய்துதருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ் அல்லை நகர் கிரான் குள வீதியான மிக மோசமாக சேதமடைந்து காணப்படுகின்றன மழை காலத்தில் இவ் வீதிவழியே மழை நீர் பரவிச்செல்வதால் இவ் வீதி வழியாக பயணிக்கவேண்டிய பொது மக்கள் பாடசாலை மாணவர்கள் ஆகியோர் பெரிதும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன் சேறும் சகதியுமான இவ் வீதியூடாக மக்கள் பயணிக்கமுடியாது பெரும் சிரமப்படுகின்றனர்

இவ் வீதியால் மழை காலத்தில் வாகனங்களூடாக மக்கள் பயணிக்க முடியாதுள்ளது

அத்துடன் இவ் வீதியின் இரு பக்கங்களிலும் மழை நீர் வடிந்தோடுவதற்கான வடிகான் வசதிகளும் இல்லை இதனால் மழை நேரத்தில் மழை நீர் குடியிருப்பாளர்களின் வளவுகளுக்குள்ளும் வீடுகளுக்குள்ளும் செல்வதோடு இவ் வீதி முழுவதும் மழை நீர் வெள்ளக்காடாக பரவிச்செல்லும். இதனால் இவ் வீதி முழுவதும் அரிக்கப்பட்டு குன்றும் குழியுமாக மாறி சேதமடைவதோடு வீதியிலுள்ள மண்ணும் கழுவிச்செல்கிறது

இவ் வீதியூடாக பள்ளிவாசல் பாடசாலை மற்றும் ஏனைய பகுதிகளுக்கும் பொது மக்களும் மற்றும் பாடசாலை மாணவர்களும் சென்றுவரவேண்டியிருப்பதால் இவ் வீதியை புனரமைத்து வீதியின் இருபக்கமும் முறையான வடிகான் வசதிகளையும் செய்துதருமாறு இப்பகுதி வாழ் பொதுமக்கள் உருக்கமான கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பதில் பொறுப்பதிகாரியாக எம்.ஐ.அப்துல் வஹாப் நியமனம்

**கல்லடி நிருபர்**

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரியாக பொலிஸ் பரிசோதகர் எம்.ஐ.அப்துல் வஹாப் கடந்த மாதம் 31 ஆந் திகதி முதல் அமுலுக்கு வருவகையில் மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.என். மென்டிஸ் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்ட லோஜேஸ்ரிக் (கட்டுமான அபிவிருத்தி) பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய இவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலங்களில் பாரியளவில் நடைபெற்ற குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளை கண்டுபிடிப்பதற்கு பொலிஸ் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட பொலிஸ் குழுக்களிற்கு பொறுப்பானவராக நியமிக்கப்பட்டிருந்ததுடன், குற்றச்செயல்களில் ஈடுபட்டிருந்த பல குற்றவாளிகளை கைது செய்து தனது கடமையினை திறம்பட ஆற்றியிருந்த நிலையிலேயே, குறித்த பொலிஸ் பரிசோதகர் கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை கிழக்கு மாகாண பொது மக்கள் தொடர்பாடல் பிரிவின் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.அரசரெட்ணம் அவர்களின் பிரத்தியேக உதவியாளராகவும் மிகவும் திறம்பட செயலாற்றி மக்களுக்கு பாரியளவிலான சேவைகளை முன்னேடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# நட்டஈட்டை துரிதமாக வழங்க உத்தரவு



**கிண்ணியா நிருபர்**

திருகோணமலை மாவட்டம் பூராகவும் அண்மையில் கால் நடை வளர்ப்பாளர்கள் பாரிய நஷ்டங்களை எதிர் கொண்டுள்ளதுடன் தங்களது கால் நடைகள் பல நூற்றுக்கணக்கான உயிரிழப்புக்களை சந்திக்க நேரிட்டது பண்ணை உரிமையாளர்களுக்கான நஷ்ட ஈட்டுத் தொகைகளை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சம்மந்தப்பட்ட மாகாண மத்திய அரசாங்க அமைச்சுக்களிடம் துறை முகங்கள் மற்றும் கப்பல் துறை பிரதியமைச்சர் அப்துல்லா மஹரூப் அவர்கள் பணிப்புரை வழங்கியுள்ளார்.

உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

அண்மையில் கால் நடைகளுக்கு ஏற்பட்ட நோய் காரணமாக பல மாடுகள் ,ஆடுகள் இறந்துள்ளது.

இதனால் பண்னை வளர்ப்பாளர்கள் பாரிய கஷ்டங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா,மூதூர், தோப்பூர்,முள்ளிப் பொத்தானை,கந்தளாய் உள்ளிட்ட பல பிரதேசங்களில் கால் நடைகள் இறந்துள்ளன கால் நடைகளுக்கான நோய் காரணமாகவே இவ்வாறு இறப்புச் சம்பவங்கள் அதிகம் இடம் பெற்றதாக மாகாண கால் நடைகள் திணைக்களம் அறிவித்திருந்தது.

கடந்த ஒன்றரை மாத காலமாக கால் நடைகள் இறப்புச் சம்பவங்கள் திருகோணமலையில் பதிவாகிய நிலையில் தொடர்ந்து வந்தது ஒவ்வொரு பண்ணையாளர்களுக்கும் இரண்டுக்கு மேற்பட்ட என்ற விகிதத்தில் கால் நடைகள் இறப்புச் சம்பவங்கள் அதிகரித்து காணப்பட்டது எனவே பண்னை வளர்ப்பாளர்களின் நலன் கருதி நஷ்ட ஈட்டுத் தொகைகளை வழங்க உரிய அதிகாரிகள் முன்வருமாறும் இதற்கான நடவடிக்கைகளை துரிதமாக கொண்டு செயற்படுமாறும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சந்தை வளாகத்தை புனரமைக்க கோரிக்கை

**தோப்பூர் நிருபர்**



மூதூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட தோப்பூர் பொதுச்சந்தை வளாகமானது மாரி மழை காலத்தில் நீர் நிரம்பி சேறும் சகதியுமாக மாறுவதால் இவ் வாராந்த பொதுச் சந்தைக்கு வந்துசெல்லும் யொது மக்களும் சந்தை வியாபாரிகளும் பெரிதும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இங்கு சந்தைக்கான நிரந்தர சந்தை கட்டிட வசதிகள் ஏதும் இல்லை.இதனால் தரையிலே இவர்கள் பொருட்களை பரப்பிவைத்தும் தற்காலிக கொட்டில்களை அமைத்தும் பொருட்களை வைத்து விற்பனை செய்துவருகின்றனர்.

அத்துடன் சந்தை வளாகம் மாரி மழை காலத்தில் சேறும் சகதியுமாக மாறுவதால் சந்தைக்கு வரும் பொதுமக்களும் சிரமப்படுகின்றனர் இதனை கருத்திற்கொண்டு தோப்பூர் பொதுச்சந்தை வளாகத்தை புனரமைத்து சந்தைக்கட்டிட வசதிகளையும் ஏற்படுத்திதருமாறும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




# முன்னாள் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸுக்கு கிளிநொச்சியில் அஞ்சலி

மறைந்த பாரதத்தின் முன்னாள் பாதுகாப்பமைச்சர் ஜோர்ஜ் பெர்னான்டசின் அஞ்சலி நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது. கிளிநொச்சியில் அமைந்துள்ள இலங்கை தமிழரசு கட்சி அலுவலகத்தில் குறித் நிகழ்வு கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலமையில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் பா.ம உறுப்பினர் சிறிதரன், முன்னால் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர், மறைந்த பாரதத்தின் முன்னாள் அமைச்சர் ஈழ விடுதலை போராட்டத்திற்கு ஆற்றிய ஒத்துழைப்புக்கள் தொடர்பில் கருத்து தெரிவித்தார். இதேவேளை இவர் போன்று ஈழத்தில் படுகொலைகள் இடம்பெற்ற போது பல்வேறு தரப்பினர் ஆதரவாக செயற்பட்டனர். அரசியல் மாற்றத்தின் போது அவர் மாற்றம் பெற்றாலும், பலரது ஒத்துழைப்புக்கள் தொடர்ந்தும் இருந்தது. இந்திய நாட்டிற்கு தற்போது இலங்கை தமிழ் மக்களிற்கு உதவ வேண்டிய கடப்பாடு மீண்டும் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் போது தமிழர் தரப்பாக இந்தியாவே ஒப்பமிட்டது. அத்துடன் இவர்களின் பணி முடிந்து போகவில்லை. இன்றும் அவர்களிற்கு இலங்கையில் காணப்படும் பிரச்சினைக்கான தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டிய கடப்பாடு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இன்று ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் என அனைவரும் தீர்வு வழங்குவது தொடர்பில் செயற்படவில்லை. பல அமைச்சர்கள் அபிவிருத்திதான் முக்கியம், அரசியல்தீர்வு இப்போது அவசியம் இல்லை என்பது போன்று செயற்படுகின்றனர்.

இந்த நிலையில் இந்தியா இலங்கை விடயத்தில் தலையீடு செய்து மக்களிற்கான தீர்வு விடயத்தில் பெற்று கொடுக்க வேண்டிய கடப்பாட்டில் உள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் அடிக்கல் நடும் நிகழ்வு

கிளிநொச்சியில் வீடமைப்பு அமைச்சினால் அமைக்கப்படவுள்ள 120 மேற்பட்ட வீடுகளிற்கான மற்றும் தலா 4 மில்லியன் பெறுமதியில் சமய கல்விக்கான கட்டடங்கள் இரண்டிற்குமான அடிக்கல் நாட்டும் நிகழ்வுகள் இடம்பெற்றது.



குறித்த அடிக்கல் நாட்டும் நிகழ்வுகளின்போது குறித்த வீடுகளிற்கு அடிகல் நாட்டப்பபட்டது, வீடமைப்பு அதிகார சபையின் கண்காணிப்பில் தலா 750,000 பெறுமதியான வீடுகளும், இந்து மற்றும் கிறிஸ்தவ சமய கல்வியை மேம்படுத்துவதற்காக தலா நான்கு மில்லியன் நிதியில் இரு கட்டடங்கள் அமைப்பதற்குமான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது, கிளிநொச்சி புனித திரேசா ஆலயத்தில் திருமறை கல்விக்கான கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் பா. ம உறுப்பினர் சிறிதரன், அமைச்சின் அதிகாரிகள், வீடமைப்பு அதிகார சபை அதிகாரிகள் பங்கு தந்தையர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். குறித் சமய கல்விக்கான நிதி ஒதுக்கீடுகள் இதுவரை அமைச்சினால் பௌத்த சமய கல்விக்காகவே வழங்கி வைக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது ஏனைய சமயங்களிற்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றமை குறிப்பிடதக்கதாகும்.

# கல்லுடைப்பதற்கு எதிர்புதெரிவித்து யேசுபுரம் பிரதேச மக்கள் தொடர் உண்ணாவிரதம்!



**வவுனியா நிருபர்**

வவுனியா பெரியகோமரசங்குளம், யேசுபுரம் பகுதியில் உள்ள சிறிய மலை குன்றில் கல்லுடைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த மலையின் அருகில் வசிக்கும் பொதுமக்கள் குறித்த பகுதியில் குடில் ஒன்றை அமைத்து தொடர் உண்ணாவிரத போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது கருத்து அப் பகுதி மக்கள்,

இப் பிரதேசத்தில் கல் உடைப்பதினால் பொது மக்களிற்கு பாதிப்பு ஏற்படுகின்ற நிலை ஒன்று உருவாகியுள்ளது. அருகில் உள்ள பொது மக்களின் வீடுகளில் வெடிப்புகள் உருவாகின்றது. கல்லுடைப்பதற்கு பயன்படும் வெடிபொருளில் இருந்து பரவுகின்ற நச்சு தன்மையானது குழந்தை பிள்ளைகள் சுவாசிக்கும் போது அவர்களிற்கு அசௌகரியங்களை கொடுப்பதுடன் நோய்களும் ஏற்படுகிறது.

குறித்த விடயம் தொடர்பாக அப் பகுதி மக்கள் கடந்த டிசம்பர் மாதம் ஆர்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்ததுடன், அரச அதிபருக்கும் தெரியபடுத்தியிருந்தனர். அதற்கமைய குறித்த பகுதியில் கல் உடைப்பதால் பாதிப்புகள் ஏற்படுகின்றதா என்று அதிகாரிகள் குழு ஆய்வு செய்திருந்தது. அதன் பின்னர் கல் உடைப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. எனினும் குறித்த ஆய்வு நடவடிக்கையின் போது சிறிய அளவிலான வெடிபொருட்களே பயன்படுத்தபட்டதாகவும், ஆனால் தற்போது மிகவும் சக்தி வாய்ந்த வெடிபொருட்கள் பயன்படுத்தபடுவதாகவும் குற்றம் சாட்டும் கிராமவாசிகள், குறித்த மலையில் கல்லுடைக்கும் பணிக்கு முற்றுமுழுதாக தடைவிதிக்கபடவேண்டும் என்று தெரிவித்தனர்.

இதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வவுனியா நகரசபை உறுப்பினர் சந்திரகுலசிங்கம் உள்ளிட்ட பலர் சென்று பார்வையிட்டு கலந்துரையாடியிருந்தனர்.

# காணியை விடுவிக்கக்கோரி ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்குச் சொந்தமான நுலகம் அமைந்துள்ள காணி மற்றும் விளையாட்டு மைதான காணி ஆகியவற்றை விடுவிக்க கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது



கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்குச் சொந்தமான நுலகம் அமைந்துள்ள காணி மற்றும் விளையாட்டு மைதான காணி ஆகியவற்றை விடுவிக்க கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்களின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் குறித்த காணி அமைந்தள்ள பகுதிக்கு முன்பாக இடம்பெற்றது. குறித்த காணியை 57வது படைப்பினரிவினர் தம் வசம் வைத்துள்ள நிலையில் குறித்த காணியை விடுவித்த தருமாறு கோரியே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. குறித்த போராட்டத்தில் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்கள், முன்னால் வடமாகாண சபை உறுப்பினர் குருகுலராஜா, சிவில் அமைப்புக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் 2019 ல் ஜெய்க்கா திட்டத்தின் கீழ்14 வேலைத்திட்டங்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் 2019 ஆண்டில் ஜெய்க்கா திட்டத்தின் கீழ் 513 மில்லியன் ரூபா செலவில் 14 வரையான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் பல்வேறு நிதியுதவிகளில் பல்வேறுபட்ட அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, பச்சிலைப்பள்ளி பூநகரி ஆகிய பிரதேச சபைகளின் கீழ் உள்ள பகுதிகளில் ஜெய்க்கா திட்டத்தின் கீழ் கிராம அபிவிருத்தி திட்டத்தின் அவசர செயற்பாடுகளின் அடிப்படையில் பல்வேறு வகையான அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதாவது வீதி புனரமைப்புக்கள் சிறிய பாலங்கள் அமைத்தல் உள்ளிட்ட 14 வகையான அபிவிருத்தி செயற்திட்டங்கள் சுமார் 513மில்லியன் ரூபா செலவில் மேற்படி வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவர்களின் நடைபவனி

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினால் மகா வித்தியன் தினம் சங்கத்தின் தலைவர் ப.தயாபரனின் தலைமையில் கொண்டாடப்பட்டது.

இப் பாடசாலையில் கல்வி கற்று வெளியேறிய அனைத்து பழைய மாணவர்களையும் மீண்டும் பாடசாலையில் அணி திரட்டும் நோக்குடனான ஒன்றுகூடல் நிகழ்வாக ஏற்பாடு செய்துள்ள பழைய மாணவர் சங்கமானது 'மகாவித்தியன்கள் தினம்' எனும் பெயரில் அதனை பிரமாண்டமான முறையில் நடத்தியுள்ளது.





ஆரம்ப நிகழ்வாக பாடசாலையின் அதிபர் தா.அமிர்தலிங்கம் தலைமையில் கொடியசைத்து பலூன்கள் பறக்கவிடப்பட்ட நிலையில் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. பாடசாலையிலிருந்து நடை பவனி மற்றும் வாகன பவனியாக பழைய மாணவர்கள் ஆட்டம் பாட்டத்துடன் வவுனியா பசார் வீதியினூடாக சென்று நடை பவனியானது மீண்டும் பாடசாலையை வந்தடைந்தது.

அதனையடுத்து பழைய மாணவர் அணிகளுக்கிடையேயான மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் உட்பட்ட சிநேகபூர்வ விளையாட்டு போட்டி நிகழ்வுகளும், பிள்ளைகளுக்கான விநோத விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெற்றது. இந் நிகழ்வுகள் காலை தொடக்கம் மாலை வரை இடம்பெற்றது. இப் பாடசாலையின் வரலாற்றில் முதல் தடவையாக அனைத்து பழைய மாணவர்களையும் ஒன்றுசேர்ந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உரமூட்டும் இந்த நிகழ்வில் அனைத்து பழைய மாணவர்களும் தங்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டிருந்தனர்.

# மருதங்குளம், புத்துவெட்டுவான் ஆகிய பகுதிகளில் நெல்உலர விடுவதற்கான தளங்கள் போதியளவு இல்லை



முல்லைத்தீவு மாவட்டத்தின் மருதங்குளம் புத்துவெட்டுவான் ஆகிய பகுதிகளில் நெல்உலர விடுவதற்கான தளங்கள் போதியளவு இன்மையால் வீதிகளில் நெல்லை உலர விடவேண்டிய நிலை காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள புத்துவெட்டுவான் ஐயன்கன்குளம் மருதங்குளம் போன்ற பகுதிகளில் போதியளவு நெல் உலர விடும் தளங்கள் இல்லாத நிலையில் காணப்படுகின்றன.

குறிப்பாக, புத்துவெட்டுவான் கிராமத்தில் ஒரு நெல் உலரவிடும் தளமும் ஐயன்கன்குளம் கிராமத்தில் ஒரு நெல் உலர விடும் தளமும் காணப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த பிரதேசங்களில் காலபோகத்திலும் சிறுபோகத்திலும் சகல விவசாயிகளுக்கும் ஒரே நேரத்தில் அறுவடைகள் ஆரம்பிக்கப் படுவதனால் அறுவடை செய்யும் நெல்லை உடனடியாக உலர வைக்க முடியாத நிலை ஏற்படுகின்றது என்றும் தமது கிராமங்கள் விவசாயக்கிராமங்களாக இருப்பதனால் தற்போது இருக்கின்ற நெல் உலர விடும் தளங்களைவிட மேலதிகமாகவும் தளங்கள் தேவைப்படுகின்றன.

தற்போது அறுவடை செய்யும் நெல்லை வீதிகளில் வைத்து பெரும் சிரமங்களின் மத்தியில் உலர விடுவதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

# சுயலாபத்திற்காக சமூகங்களை இன மத ரீதியாக பிரிக்கின்ற சக்திகளை மக்கள் இனங்காண வேண்டும்

**வவுனியா நிருபர்**

வடமாகாணத்தில் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களையும் சமூகக் கட்டமைப்புக்களையும் புரிந்து கொண்டு, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த மக்கள் தாங்களே தங்களை எவ்வாறு சரியான முறையில் வழிநடத்திச் செல்லலாம் என்பதை நெறிப்படுத்துவதற்கான கருத்தரங்கு, கிராம அபிவிருத்தி நிறுவனத்தின் வவுனியா குருமண்காடு வள நிலையத்தில் நடைபெற்றது.

வடமாகாணத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களை சேர்ந்தவர்களும், வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் தஞ்சமடைந்துள்ள இந்து, கிறிஸ்;தவ, இஸ்லாமிய மதங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளும், பெரியவர்களும் கலந்து கொண்ட இந்நிகழ்வானது சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரண்டு தினங்கள் நடைபெற்றது. ஆர்.டி.எவ் நிறுவனத்தின் செயலாளர் அப்துல் ரமீஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அந்த நிறுவனத்தின் மனிதவள பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அனிபா, திட்ட இணைப்பாளர் நாகரட்னம் பகீரதி. அந்த நிறுவனத்தின் மாவட்ட உத்தியோகத்தர்கள், ஆய்வு உத்தியோகத்தர்கள், பரிந்துரை உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.







**கிளிநொச்சியில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் மாவட்ட கிளையினால் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. வெள்ளம் காரணமாகவும் பல்வேறு வழிகளிலும் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கற்றலுக்கு உதவும் வகையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின்யாழ் மாவட்ட கிளையினால் கிளிநொச்சி யூனியன் குளம், பூநகரி, மட்டுவில் நாடு ஆகிய கிராமங்களில் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.**




# ஒரேஇரவில் எட்டு கடைகள் உடைப்பு





கிளிநொச்சி பொது சந்தையில் எட்டு கடைகள் உடைக்கப்பட்டுள்ளதாக பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் தமது வர்த்தக நடவடிக்கைகளை முடித்துக்கொண்டு வீடு திரும்பிய பின்னர் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

பொது சந்தையில் உள்ள தற்காலிக கடைகளில் வியாபாரம் மேற்கொள்ளும் பகுதியிலிலேயே குறித்த சம்பவம் இடம் பெற்றது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆரம்பத்தில் எமது மக்கள் ஆயுத பலத்தை விஞ்சிய அளவுக்கு கல்வி,பண பலம் பெற்றிருந்தனர்



சங்கானை பிரதேச ஆளுகைகுற்பட்ட சுழிபுரம் கலைவாணி சனசமூக நிலையத்தில், கிராமிய மேம்பாடு, மற்றும் மக்கள் குறைகேள் சந்திப்புடன் கூடிய கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

கிராம அபிவிருத்தி சங்கத்தின் உறுப்பினர் வெ.சிவசுப்ரமணியம் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், முன்னாள் விவசாய பிரதி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமனாதன் அவர்களின் பிரத்தியேக செயலாளர் சதாசிவம் இராமனாதன் அவர்கள் கலந்துரையாடலை மேற்கொண்டு கிராமிய அடிப்படை மேம்பாடுகள் தொடர்பாக ஆக்கபூர்வமான கருத்துக்களை மக்களிடம் தெரிவித்திருந்தார்.

சுழிபுரம் மத்தி கமக்கார அமைப்பின் உறுப்பினர்கள் நெல், மற்றும் தானிய செய்கைகளின் போது கால் நடை விலங்குகளினால் பயிர்கள் சேதமாக்கப்பட்டு அழிவடைவதாக தெரிவித்து முன் எல்லைப்பகுதியினை சுற்று மதிலாக அமைத்து தரும்படி கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் கிராமத்தில் உவர் நீராக காணப்படுவதனால் பொருத்தமான இடத்தை தெரிவு செய்து தருவதாகவும்,அதன் உரிய இடத்தில் குடி நீர் தேவையை நிவர்த்தி செய்வதற்காக கிணறு ஒன்றை அமைத்து தருமாறும் மக்கள் கோரிக்கையாக முன்வைத்திருந்தனர்.

கலந்துரையாடலின் போது கருத்து தெரிவித்த பிரத்தியேக செயலாளர் சதாசிவம் இராமனாதன் அவர்கள் முன்னைய காலத்தில் ஆயுத பலத்தை விஞ்சிய அளவுக்கு கல்வி மற்றும் பண பலத்துடன் ஜனநாயக முறைமையில் வாழ்க்கையை அமைத்து செயற்பட்டிருந்தோம். ஆனால் இன்று மீண்டும் ஜனநாயகத்தை நாட்டி விட்டோம் என மார்தட்டுபவர்கள் மத்தியில், மக்கள் சமூக வாழ்க்கை அபிவிருத்திகளை அடையாமல் அல்லல் படுகின்றார்கள் எனவும் சுட்டிக்காட்டி குறிப்பிட்டிருந்தார். அதற்கான நிரந்தர தீர்வுகளை நீண்டகால அடிப்படையில் பூர்த்தி செய்து வழங்குவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையிலான உயர் மட்ட குழு அதற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

கலந்துரையாடல் நிகழ்வின் போது வட்டுக்கோட்டை தொகுதி இணைப்பாளர் ரஜிகரன்,சுழிபுரம் மாதர் சங்க தலைவி இராஜதுரை ஞானசொவ்பாக்கியவதி,கலைவாணி சனசமூக நிலைய உறுப்பினர்கள் மற்றும் பிரதேச கிராம மக்கள் கலந்துரையாடலில் இணைந்திருந்தனர்.

# பெண் கிராம அலுவலருக்கு பாலியல் தொல்லை கொடுத்த கிராம அலுவலர்

**வவுனியா நிருபர்**

வவுனியாவில் 25 வருடமாக கிராம அலுவலகராக கடமையாற்றும் கிராம அலுவலகர் பெண் கிராம அலுவலகருடனான நெருக்கம் வெளியே தெரியவந்துள்ளது. வைரவப்புளியங்குளம் கிராம அலுவலகத்தில் கடமையாற்றிய கிராம அலுவலகர் வவுனியா பிரதேசத்திற்குட்பட்ட பெண் கிராம அலுவலகருடன் நீண்டகாலம் நெருக்கமாக நட்புடன் பழகி வந்துள்ளார்.

பெண் கிராம அலுவலகரை தன்னிடமுள்ள ஆதாரங்களை காட்டிப்பயமுறித்தி வந்துள்ளார். இருவருக்கும் இடையேயுள்ள நட்பு வெளியே தெரியவந்துள்ளது. உள்ளுராட்சி அமைச்சின் கவனத்திற்கு இவ்விடயம் கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் அங்கிருந்து விசாரணைகளுக்காக பிரதேச செலயகத்திற்கு பணிக்கப்பட்டுள்ளது. இருவரும் திருமணமானவர்கள் இச்சம்பவங்களையடுத்து கிராம அலுவலகர் தனக்கு இடமாற்றம் வழங்குமாறு அரசாங்க அதிபரிடம் கோரியுள்ளார். இந்நிலையில் வைரவப்புளியங்குளம் கிராம அலுவலகருக்கு செட்டிகுளம் பிரதேச செயலகப்பிரிவிலுள்ள கண்ணாட்டி கிராம அலுவலகத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பாக வவுனியா பிரதேச செயலாளருடன் தொடர்பு கொண்டு வினவிய போது,

குறித்த விடயம் தொடர்பாக எமக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம் உள்ளக விசாரணைகள் இடம்பெற்று வருவதினால் குறித்த கிராமசேவையாளரை வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் செய்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளின் பின்னரே முழுமையான விடயங்களை தெரிவிக்க முடியுமெனதெரிவித்தார்.

# ஆளுநர் தலைமையில் கிளிநொச்சியில் விசேட கலந்துரையாடல்





வடமாகாண ஆளுநர் தலைமையில் கிளிநொச்சியில் விசேட கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறித்த கலந்துரையாடல் கிளிநாச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகியது. வடமாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்ட செயலகங்களையும் உள்ளடக்கி குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்ட அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

குறித்த கலந்துரையாடல் ஆரம்பமாகும் முன்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் படையினரால் விடுவிக்கப்பட்ட 39 ஏக்கர் காணிகளில் 24 ஏக்கர் காணிகள் காணி உரிமையாளர்களிடம் வடமாகாண ஆளுநரினால் கையளிக்கப்பட்டது. குறித்த காணிகளில் அடையாளம் காணப்பட்ட 11 காணி உரிமையாளர்களுக்கே இவ்வாறு வடமாகாண ஆளுநர் காணிகளை கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத மரக்கடத்தல் விஷேட அதிரடி படையினரால் முறியடிப்பு

**வவுனியா நிருபர்**



சட்டவிரோதமான முறையில் முதிரைமர குற்றிகளை கடத்திச்சென்ற இருவரை கைது செய்துள்ளதாக புளியங்குளம் விஷேட அதிரடி படையினர் தெரிவித்துள்ளனர்.

இவ் விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்த விஷேட அதிரடி படையினர்,

ஓமந்தை, குஞ்சுக்குளம் காட்டுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மரங்கள் கடத்தப்படுவதாக கிடைத்த இரகசிய தகவலிற்கமைய அப்பகுதிக்கு சென்ற புளியங்குளம் விஷேட அதிரடி படையின் பொறுப்பதிகாரி எச்.டி.லால்ஜெயதிலக தலமையிலான குழுவினர் இவ் மரக்கடத்தல் நடவடிக்கையை முறியடித்துள்ளதாக தெரிவித்தனர்.

குறித்த மரக்கடத்தலில் இரு நபர்கள் கைது செய்யபட்டதுடன் கனரக வாகனம் ஒன்றும் விஷேட அதிரடி படையினரால் மீட்கப்பட்டது.

கைது செய்யபட்டவர்கள் மற்றும் கனரக வாகனம், மரக்குற்றிகள் அனைத்தும் ஓமந்தை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் 60 மரக்குற்றிகளும் 12லட்சம் பெறுமதியானதெனவும், விசாரணைகளின் பின்னர் நீதி மன்றில் ஆஜர்படுத்தபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் வகுப்புகளுக்கு தடை

**வவுனியா நிருபர்**

வவுனியாவில் ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் கல்வி நிலையங்கள் நடத்தக்கூடாது என வவுனியா நகரசபையின் தலைவர் இ.கௌதமன் அதிரடித் தீர்மானமொன்றினை எடுத்துள்ளார்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே இத்தீர்மானத்தினை அவர் தெரிவித்திருந்தார்.





தனியார் கல்வி நிலையங்களின் உரிமையாளர்கள்,பொலிஸ் அதிகாரிகள், நகரசபையின் உப தலைவர் சு. குமாரசாமி மற்றும் பெற்றோர் சார்பில் சிலரும் வவுனியா வர்த்தகர் சங்கத்தினர், நகரசபை தலைவரின் ஆலோசகரும் ஈழமக்கள் பரட்சகரவிடுதலை முன்னணியின் சர்வதேச இணைப்பாளருமான இ. சுஜீந்திரா உட்பட பலரும் இக் கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தனர்.

இதன் போது தனியார் வகுப்பகளுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை வழங்குவது, சுகாதார வசதிகள், காற்றோட்ட வசதிகள், நகரசபையில் பதிவு செய்தல், இரவு நேர வகுப்புகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டிருந்தது.

இதன்போது பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் இறுதித்தீர்மானமாக ஞாயிற்றுக்கிழமைகளில் உயர்தர வகுப்புகள், சாதாரண தர வகுப்புகள், புலமைப்பரிசில் பரீட்சைக்குரிய வகுப்புகள் தவிர்ந்த அனைத்து வகுப்புகளும் நடத்தப்படக்கூடாது எனவும், வவுனியா நகரசபைக்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிலையங்களும் நகரசபையில் பதிவு செய்யப்படவேண்டும், மாலை 7.30 மணிக்கு பின்னர் தனியார் கல்வி நிலையங்களில் எவ்வகையானவகுப்புகளும் நடத்தப்படக்கூடாது, காற்றோட்ட வசதிகள் மலசல கூடங்கள் உட்பட சுகாதார வசதிகள் போதுமான வகையில் ஏற்படுத்தப்படவேண்டும் எனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டு முடிவெடுக்கப் பட்டுள்ளது.

இந் நிலையில் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதியில் இரந்து இந் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்ட நகரசபை தலைவரால் அறிவிக்கப்பட்டது.

# இலங்கையின் 71வது சுதந்திரதினத்தை முன்னிட்டு பிரித்தானியாவில் ஆர்ப்பாட்டம்



இலங்கையின் சுகந்திரதினமான பிரித்தானியாவில் இலங்கை தூதரகத்தின் முன்னால் புலம்பெயர் தமிழ் அமைப்புகளால் மாபெரும் கண்டன எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது,

இதில் இந்த சுகந்திரம் எமக்கானது அல்ல இது எமது கறுப்புதினமே என கூடியிருந்த தமிழர்கள் உரத்து சொன்னார்கள் ,இலங்கை அரசு தொடர்ந்து தமிழின அழிப்பை செய்துவருகிறது எமது மக்களின் காணிகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை எமக்கான நீதி இன்னும் கிடைக்கவில்லை இராணுவ பௌத்தமயமாக்கல் தமிழர் பிரதேசங்களில் தொடர்கிறது இவ்வாறு இலங்கை அரசு தொடர்ச்சியாக திட்டமிட்ட இனப்படுகொலையை செய்து வருகின்றது மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரிற்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை மன்னார் மனிதபுதைகுழி குறித்து விசாரணை வேண்டும் போன்ற கோரிக்கை குரல்கள் போராட்டத்தில் ஒலித்தன.

மற்றும் கடும் குளிருக்கும் மத்தியிலும் புலிக்கொடி கறுப்பு கொடிகளோடு திரண்ட உணர்வாளர்கள் இலங்கை அரசின் அடக்குமுறைக்கெதிரான குரல் எழுப்பினர்.

# உதயம் கலாச்சார சங்கத்தினரின் 100ஆவது செயற்திட்டமாக கல்வி உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது



உதயம் கலாச்சார சங்கத்தினரின் 100ஆவது செயற்திட்டமாக கல்வி உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

உதயம் கலாச்சார சங்கத்தினரின் 100ஆவது செயற்திட்டமாக குறித்த சமூக பணி முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி யூனியன்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் நோக்குடன் அவர்களிற்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், அக்கிராமத்தில் உள்ள முதியோர்களுக்கு உலர் உணவுப்பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வு பாடசாலை அதிபர் தலைமயில் ஆரம்பமாகியது .இந்நிகழ்வில் உதயம் கலாச்சார சங்கத்தின் இலங்கை பிரதிநிதி மற்றும் அதன் உறுப்பினர்கள் மாணவர்கள், முதியோர்கள் பெற்றோர்களுக்கு இவ் உதவிகள் வழங்கப்பட்டன.

# படைப்புளு தாக்கம் தொடர்பில் விசேட கூட்டம்



படைப்புளு தாக்கம் தொடர்பில் கிளிநாச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் விசேட கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் கிளிநாச்சி மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், விவசாய திணைக்களங்கள் சார் அதிகாரிகள், விவசாயிகள், பொலிசார் என பலரும் கலந்து கொண்டனர். இதன்போது படைப்புளுவை கட்டுப்படுத்தல், மற்றும் அதன் தாக்கம் உள்ளிட்ட பல விடயங்கள் ஆராயப்பட்டன.

# கிளிநொச்சி மாவட்டத்தில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு



தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினால் கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது. கட்சியின் தலைவர் அடைக்கலநாதன் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ரெலோவின் சர்வ தேச கல்வி ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட கண்ணகிபுரம் கிராமத்தில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்று திங்கட்கிழமை வழங்கப்பட்டது. இந்நிகழ்வு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் மத்திய செயற்குழு உறுப்பினரும் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளருமான ச.கீதனின் தலமையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் ச.கீதன், துணை அமைப்பாளர் அ.நிரூபன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் மாணவர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




# களங்கமற்ற அன்பின் மறுபெயர்...

இளசுகளின் மனம் மறந்தவிடாது அலைபாயும் ஒரு தினம் என்றால் பெப்ரவரி 14ம் திகதி காதலர் தினம்!

காதலர் தினம் மேற்கத்திய உலகில் கலாசாரத்தின் சிந்தனையால் உருவான தினம்!

இரவு பணிரெண்டு மணிக்கு காதலர்கள் ஒன்று கூடி முத்தமிடுவதும் பூச்செண்டுகளை பறிமாறுவதும் பரிசில்களை கொடுப்பதும் உல்லாசமாக ஊர்சுற்றுவதும் தனித்து நின்றுஉறவுகொள்வதும் மிகப்பெரிய நாகரீகம். நாளொருவன்னம், பொழுதொரு மேனியாக ஆண் பெண் உறவு (காதலர் காதலி உறவு) மாறிக்கொண்டேயிருக்கும்.

தந்தை தினம் வருகிறது பல பேர்களுக்கு அது வந்து போவதே தெரிவதில்லை. தாய் தினம் வருகிறது. கொஞ்சம் தொலைக்காட்சி மூலமாய் தெரிந்தாலும்

அம்மாவென்றழைகாத உயிரில்லையே என்பது போல் ஓரிரண்டு பாட்டுக்களுடன் முடிவடைகின்றன. நம் நாட்டின் சுதந்திரத்திற்காக உயிரையும் அர்ப்பித்த பல தியாகிகளின் பிறந்தநாட்கள் பலருக்கு நினைவு வருவதில்லை; ஆனால் இந்தக் காதலர் தினம் மட்டும் ஒரு பத்து நாட்கள் முன்பாகவே சூடு பிடிக்கத் தொடங்கி ஒரு கலக்கல் கலக்கி விடுகிறது. அது ஏன்? ஏழுவயது சிறுவனும் கூட இதைப்பற்றித் தெரிந்து வைத்திருக்கிறான். ஒரு சிறுமி தன் தாயிடம் தனக்கு ஒரு பெல்ட் வாங்கும்படி அடம் பிடித்தாள் உனக்கு எதற்கு பெல்ட்? உன்பிட்ரெஸ்ஸுக்கு பெல்ட் எப்படி தேவையா என்ன? என்று அவள் அம்மா கேட்டபோது எனக்கில்லையம்மா என் பாய்பிரண்டுக்கு, காதலர்தினத்தில் கொடுக்கணும் என்றாள்.

அன்புடன் பரிசு கொடுப்பதில்லை தவறொன்றுமில்லை ஆனாலும் ஒரு வரையறும்பு மீற அங்கு அமிருதமும் விஷமாகிவிடுகிறது. சிறுமியைச்சொல்லிக் குற்றமில்லை. அவள் வளரும்சூழ்நிலை அவளைச் சுற்றியிருக்கும் சூழ்நிலை எல்லாம் சேர்ந்து இது போன்ற நிலை உண்டாகிறது.

நம் நாடு பெற்றோர்களைத் தெய்வமாக மதிக்கும் நாடு தாய் தந்தையைப் பராமரித்து கடைசி வரை அவர்களைப் பாசத்துடன் பார்த்துக் கொள்ள வேண்டியது மக்களின் கடமை. ஆகையால்தனியாக தாய்,தந்தை தினம் தேவையே இல்லை. நம் மனத்தில் தினமும் அவர்கள் குடியிருக்கிறார்கள். மேல் நாட்டினிலே மகன், மகள் 16 வயது வந்தால் தனியாக குடிபோகிறார்கள். அவர்கள் சுதந்திரத்தில் ஒரு

என்.ஹரன்

வரும் தலையிடுவதை அவர்கள் விரும்புவதில்லை. ஆகையால் இந்தத் தந்தை தினம் ...,தாய் தினம் என்று அவர்களுக்காக ஒரு நாள் ஒதுக்குகிறார்கள்.

இந்தத் தினம் அன்பை வெளிப்படுத்த. ஆனால் அதை ரசாபாசமாக உபயோகிப்பதற்கு அல்ல. இந்தக் காதலின் அர்த்தம் நம் நாட்டில் தவறாகப் புரிந்து கொண்டிருப்பார்களோ என்ற ஐயம்மனதிலே உண்டாகி றது. இந்தப் புனிதக்



காதல் பிறந்த கதையைப் பார்த்தால் ஓரளவு கட்டுப்பாட்டுடன் நடந்துக் கொள்ள முடியும்.

மூன்றாம் நூற்றாண்டில் கிளாடியஸ் என்றகொடுமை அரசன் தன் சேனையில் நிறைய பேர்கள் சேர ஒரு சட்டம் கொண்டு வந்தான் அதாவது கல்யாணம் ஆகாதவர்கள்தான் சேனையில்சேர முடியும். அவரிடம் இருந்த வலன்டேய்ண்ணுடினனு என்பவருக்கு இந்தச் சட்டம் பிடிக்கவில்லை. அவர் அரசனுக்குத் தெரியாமல் பல காதலர்களின் திருமணம் நடத்தி த்தார். இது அரசனுக்குத்தெரிந்து, பின் அந்த நல்லவர் பிடிபட்டு மரணதண்டனையும் பெற்றார். எல்லோரும் கருணையுடனும் பாசத்துடனும் அவரை வந்து பார்த்தார்கள் ஜெயிலின் அதிகாரியின் சிறு மகள் அவர்மேல் மிகவும் அன்பு காட்டினாள், பிப்ரவரி 14ந்தேதி அவருடைய கடைசி நாள் அன்று அந்தச் சிறு பெண்ணிற்கு ஒரு சின்னக் குறிப்பு எழுதிவைத்துவிட்டு மரணமடைந்தார்.

அந்த நாளிலிருந்து இந்தக் காதல் பரிமாற்றம். அவர் ஞாபகமாக நடக்கிறது. ஒரு பூக்களின் மூலமாகவோ, பொருட்களின் மூலமாகவோ இதை வெளிப்படுத்துகின் றனர். உலகம் தோன்றிய காலம் முதல் இன்று வரை பெண்ணின் கற்பைப் பற்றித் தான் இச்சமூகம் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது.

கற்புக்கு அவமரியாதையை ஏற்படுத்தும் ஏதாவது செயற்பாடுகள், அல்லது பேச்சுக்கள் இருந்தால் அது பெண்ணின் வாழ்க்கையே கேள்விக்குறியாக்கி விடும்.

கற்பு என்பது புனிதமானது. அது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொது வானது. இருவரும் கற்பை பாதுகாக்க வேண்டும் என அனைத்து மதம்களும் கூறுகின்றன அந்தநாளில் காதலர்கள்மற்றும் தம்பதியர் வாழ்த்து அட்டை, சாக்லேட், பரிசு, முத்தம் என சகலத்தையும் பரிமாறிக்கொள்வது வாடிக்கை

நம் எண்ணங்களையும், ஆசைகளையும், கனவுகளையும், தாபங்களையும், எதிர்பார்ப்புகளையும் பகிர்ந்துகொள்ள ஒரு காதலி அல்லது காதலன் கிடைத்துவிட்டால், வாழ்க்கைமுழுமையாகிவிடும்' என்கிறார்கள் உளவியல் அறிஞர்கள். வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டவர்களுக்கே காதலின் சக்தி புரியும். ஒருவருக்கொருவர் உடமையாவதும், உரிமை கொண்டாடுவதும், ஆளுமை செலுத்துவதும் அல்ல காதல் இரு உள்ளங்கள் சங்கமிக்கும் நிகழ்வு

அது. உண்மையில், காதலுக்காக சுயநலத்தையும், அகந்தையையும் இழப்பதில்தான் வாழ்க்கையின் ரகசியமே அடங்கியிருக்கிறது. காதலின் ஆச்சரியங்களில் ஒன்று சரணாகதி. எல்லாவற்றையும் காதலுக்கு அர்ப்பணிக்கும்போது காதலர்கள் புதுப்பிறவி எடுக்கிறார்கள். இதைப் புரிந்தவர்கள் புளகாங்கிதம் அடைகிறார்கள். தோற்றவர்கள் சபிக்கிறார்கள்.

ஒரு ஆணும், பெண்ணும் வாழ்க்கைப்பந்தம் ஏற்படுத்தி, ஒருவருக்கு ஒருவர் என வாழ, மற்ற உயிரினங்களில் இருந்து வேறுபட, அன்பின் அடிப்படையில் உருவான பந்தம் தான் காதல். ஆனால் இனக்கிளர்ச்சியை காதல் என உள்ளர்த்தம் செய்து கொண்டு இளைய சமுதாயம் பயணித்து வருகிறது. தமக்கு பாய் பிரண்ட் கேர்ள் பிரண்ட் இல்லையென்றால், நண்பர்கள்மத்தியில் சமூக அங்கீகாரம் கிடைக்காதோ என்ற ஏக்கத்தில் காதல் உருவாகி வளர்ந்து வருகிறது. இது திருமணம் வரை செல்வதில்லை. ஆபத்தில்லாமல் இருக்கும் வரை இக்காதலைகண்டு கொள்ளாமல் விட்டுவிடலாம். கதையில், கவிதையில், சினிமாவில் ரசிக்க மட்டுமே இவ்வகை காதல். இவை வாழ்வின் கனவுக் காட்சிகள் ஆனால், வாழ்க்கைக்கு உதவாது.வாழ்க்கை என்பது ரியாலிட்டி. காதல் உணர்வை இயற்கை அளித்திருந்தாலும், அறிவைக் கொண்டு ஆராய்ந்து வாழ்க்கை முழுவதும் நிலையான இன்பம் துய்க்க ஏற்றவாறுமுறைப்படுத்திக் கொள்வது அவசியம். ஆணோ, பெண்ணோ பொருளாதார சுதந்திரம் பெற்ற பின் காதலியுங்கள். அப்போது உங்களுக்கு ஓரளவு அனுபவம் ஏற்பட்டிருக்கும்.

திருமணம் ஒரு முடிவு அல்ல, ஆரம்பம் என்கிற நம்பிக்கை வந்தால் திருமணத்திற்கு பிறகும் காதலை தொடர முடியும். திருமணத்திற்கு முந்தைய காதலும், பிந்தைய காதலும் ஒன்றுஎன்கிற தவறான எண்ணம்தான் பிரச்னைக்குக் காரணம். தற்போதுள்ள பணிச்சுமை, பொருளாதார நெருக்கடி, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு இல்லாமைதான் காதல் மணமுறிவிற்குஅடிப்படை காரணம். கணவன், மனைவியான பிறகு தங்களின் மன அழுத்தங்களையும் வெறுப்புகளையும் வெளியேற்றும் வடிகாலாக ஒருவரையொருவர் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

இவ்வாறு செய்வது காதலுக்கு தரும் மரியாதை அல்ல. சுதந்திரமான ரொமான்டிக்' காதல் வேறு. இல்லறத்தில் புதுப்பிறவி எடுக்கும் காதல் வேறு என்பதைப் புரிந்துகொண்டாலே உங்கள்வாழ்க்கையில் குளிர்ச்சியான தென்றல் வீசும். நம்நாட்டுக்கலாசாரம். காதலைப் புனிதமாக மதிக்கிறது. இலைமறைவு தலை மறைவு என்பார்கள் ஆரோக்கியமாக உண்மையான அன்புதன்னலமில்லாத அன்பைச் செலுத்தி கொண்டாட அதைவிடச் சிறந்தது வேறில்லை.

எதிர்பார்ப்பு இல்லாத அன்பை வாரி வாரி வழங்குவோம். உண்மைக் காதலுக்கு நாமும் காட்டுவோம்.பச்சைக் கொடி அன்பை பரிமாறுவோருக்கு எமது காதலர் தின நல் வாழ்த்துகள்.

# கலாசார சீரழிவு எதனால்?

பண்டைய காலம் தொட்டு இன்றைய காலம் வரை மக்களும் சரி பண்பாடுகளும் சரி நாகரீகமும் சரி முன்னேற்ற பாதையை நோக்கியே,

முன்னேற்றம் என்பது அவசியமான ஒன்று ஆராயுங்கால். நன்மையும் தீமையும் கலந்தே நம்மிடையே இவற்றின் ஊடுருவல்.

எத்தனையோ வளர்ச்சி எத்தனையோ மாற்றம் அன்று குரங்கிலிருந்து மனிதன் பிறந்தான் பறவையைக்கண்டு விமானம் படைத்தான் என பல வளர்ச்



சிப்படி அம்மண மனிதன் ஆடை போட தெரியாத காலத்திலும் இலைகுழை வைத்து தன் உறுப்புக்களை மறைத்தான், அது அடிப்படை பண்பு

வளர்ந்த பயிலை பண்பாட்டு விழுமியங்கள் காலத்தோடு போட்டியிட்டே ஒடின.

ஆடைகள் பலவடிவங்களில் அலங்கரித்தன இனமதபேத அடிப்படையில் ஆடைகளும் வகுக்கப்பட்டன பண்பாடுகள் பகுக்கப்பட்டன, எதிலும் எழுச்சிபெற்றுவந்த நாகரீகம் எல்லையும் தாண்டியது.

நாம் குறிப்பாக ஆடையில் நாகரீக வளர்ச்சியை சற்று உற்றுநோக்குவோமாயின் .இல்லாமல் இருந்த காலம் போய் அழகு அழகா சேலை வேட்டி சல்வார் ஜீன்ஸ் சட்டை பாவாடை என அணிந்தனர். அதுமாற பெண்கள் ஆண்கள் ஆடையும் போட அதுவும் மாறி ஆடை அளவு குறைந்து கைக்குட்டையளவு துணியே கன்னியின் அங்கம் மறைத்ததாம். அதிலும் அழகிய ஆடைகளும் கிழிக்கப்பட்டநிலையில்.போடுவது நவநாகரீகமாம். அது தான் நம் பண்பாடுகளும் மீறப்படுவதற்கு காரணம்.

நாகரீக வளர்ச்சியும் தேவை தான் என்பது மிகையில்லை. அது அளவு இருக்கையில். நாகரீக வளர்ச்சி தொழில் நுட்ப வசதி பொருளாதார மேன்மை என பல காரணிகள் தோன்றிவிட்டன, கைகளுக்குள் உலகம் என்பதுபோல இன்று ஒரு கைபேசியில் உலகத்தை உலக செய்திகளை தகவல் பரிமாற்றங்களை செய்து கொள்கிறோம்..அது தேவையும் ஆகிறது அத்தோடு எம் சமூகத்திற்கு பல தீங்கையும் விளைவிக்கிறது. உதாரணமாக அந்தரங்கம் அரங்கேற பலர் வாழ்க்கைப்பாடம் இருள்பாகம் முகம் காட்ட, கெட்டது மட்டும் வேர்விட சமூக அநீதிகள் தளிர்விடுகின்றன.

வந்தாரை உபசரிப்பதும் எள் ஆனாலும் ஏழாய்ப் பகிர்ந்து உண்பதும். அடுத்தவர் துன்பம் கண்டு அழுவது, உற்றார் உறவினர் சுற்றம் சூழலோடு ஒத்துவாழ்வதும் நம் பண்பாடாய் இருந்தது அதனாலேயே தமிழர்க்கு தனிப்பெருமையும் இருந்தது. அடுத்த வீட்டில் ஆபத்தானாலும் தெரியாது உதவி தேடினும் கிடைக்காது. தொலைக்காட்சி நாடகங்களிலும் தொலைபேசியிலும்.முகநூல் . வாட்சாப். வைபர் என இளம் சந்ததி தங்களை மறந்து செயல்திறனைக் குறைத்துக்கொள்வதும். இன்றைய நிலையாய் உள்ளது,



பண்பாடுகள் பேணப்பட வேண்டும். அடுத்த தலைமுறைக்கு நல்லதை புகட்டி நலிந்துவரும் கலாச்சாரத்தை காக்கமுயல வேண்டும் . கலாச்சார சீரழிவு உலகமயம். மேலைத்தேய நாகரீகங்களை நம்மவர் பின்பற்ற முனைகையில் முரணாவது உண்மையே..! ஒருவனுக்கு ஒருத்தி. சமூக நியதி. மீறுகையில் அங்கே என்ன தோன்றும் . பண்பாடு அழியும் , அத்தோடு தவறான பாதைக்கு வழிகோலுகிறோம், வீட்டில் மது பாவனை புகையிலை பாவனை அது மழலைகளை செய்யத்தூண்டும்.அங்கே விதைக்கப்படுகிறது கலாச்சார சீரழிவு வளரும் அந்த கலை ஞன் என்ன செய்வான். பின் எல்லாகெட்டபழக்கங்களின் உறைவிடமாகிறான். அப்படி உருவாகுபவரால் தான் சார்ந்தவர்களையும் அந்த பாதையில் தான் அழைத்து செல்ல முடியும்.

மொத்தத்தில் கலாச்சார சீரழிவு ஏற்பட காரணம் பண்பாட்டு அத்துமீறலகள்.பாரம்பரியம் காக்கப்பட்டு பண்பாடுகள் ஓரளவாவது பேணப்பட்டால் நிச்சயம் கலாசார சீரழிவு மட்டுப்படுத்தப்படும்.

நல்லதை எடுத்து தீயதை விளக்கவேண்டும் இந்த முன்னேறிவரும் யுகத்தில். அதற்கு நாம் நல்வழி செல்லவேண்டும் கலாச்சார சீரழிவு எதனால் எனில்? விடை நாகரீகமாற்றம் தொழில்நுட்ப வளர்ச்சி. இவற்றின் உச்சமும் பண்பாட்டு அத்துமீறலகளும் என ஆணித்தரமாக கூறமுடியும் .

கலாச்சார சீரழிவை தடுப்போம் காலத்தை வெல்வோம்.



# ஓவியாவின் படத்திற்கு 'ஏ'

ஓவியா நடித்துள்ள '90 எம்எல்'படத்துக்கு, சென்சார் போர்டு 'ஏ' சான்றிதழ் அளித்துள்ளது.

'விசில்' படத்தில் இடம்பெற்றுள்ள 'அழகிய அசுரா' பாடலைப் பாடியவர் அனிதா உதீப். இவர் இயக்குநராக அறிமுகமாகும் படம் '90 எம்எல்'. பெண்களை மையப்படுத்தி எடுக்கப்பட்டிருக்கும் இந்தப் படத்தில், நாயகியாக ஓவியா நடித்துள்ளார்.

பெண்கள் நிஜ வாழ்க்கையில் என்னென்ன நினைக்கின்றனர், எப்படியெல்லாம் வாழ ஆசைப்படுகின்றனர், அவர்களுடைய ஃப்ரெண்ட்ஷிப் எப்படி இருக்கும், காதல் மற்றும் திருமண வாழ்க்கையில் அவர்களுடைய எதிர்பார்ப்புகள் என்ன ஆகிய விஷயங்களை வெளிப்படையாகப் பேசும் வகையில் இந்தப் படம் உருவாகியுள்ளது.

இந்தப் படத்தில், பியூட்டி பார்லரில் வேலை பார்க்கும் துணிச்சலான பெண்ணாக ஓவியா நடித்துள்ளார். இந்தப் படத்தைப் பார்த்த சென்சார் போர்டு உறுப்பினர்கள், படத்துக்கு 'ஏ' சான்றிதழ் அளித்துள்ளனர். காரணம், இரட்டை அர்த்த வசனங்கள் இந்தப் படத்தில் உள்ளன.

சிம்பு இசையமைத்துள்ள இந்தப் படத்தில், மொத்தம் 4 பாடல்கள் உள்ளன.

வருகிற 22-ம் தேதி இந்தப் படத்தை ரிலீஸ் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



# 'வர்மா' படம் ...
## தயாரி...

'அர்ஜுன் ரெட்டி'யின் தமிழ் ரீமேக்கா...
வித்துள்ளது.
விஜய் தேவரகொண்டா நடிப்பில் சூப்ப...
மிகப்பெரிய வரவேற்பால், தமிழ் மற்றும் இ...
தமிழில், 'வர்மா' என்ற பெயரில் இந்தப...
இதன்மூலம் ஹீரோவாக அறிமுகமாகிறார்....
நிறுவனம் தயாரித்துள்ள இந்தப் படத்தை, ...
இந்நிலையில், 'வர்மா'படம் திருப்தி அ...
வித்துள்ளது. இதுதொடர்பாக அறிக்கை ஒ...
அதில் கூறியிருப்பதாவது:
எங்களிடம் ஒப்படைக்கப்பட்ட 'வர்மா...
கள் இந்தப் பதிப்பை வெளியிட விரும்பவி...
தொடங்க இருக்கிறோம். ஒரிஜினல் 'அர்ஜு...
னாக வைத்து படத்தை மீண்டும் எடுக்க இ...
படத்தின் இயக்குநர், நடிக்க இருக்கும் ...
துக்காக நாங்கள் நிறைய பணத்தைச் செலவ...
முடிவில் மாற்றமில்லை. நாங்கள் ஓய்வின்...
எங்கள் பயணத்துக்கு உங்கள் ஆதரவை...



# இரட்டை வேடத்தில் தனுஷ்

தனுஷ் நடித்துவரும் 'அசுரன்' படத்தில், இரண்டு வேடங்களில் நடிப்பதாகக் கூறப்படுகிறது.


'வடசென்னை' படத்தைத் தொடர்ந்து தனுஷ் - வெற்றிமாறன் கூட்டணி 'அசுரன்' படத்தில் இணைந்து பணியாற்றி வருகிறது. பூமணி எழுதியுள்ள 'வெக்கை' நாவலை அடிப்படையாகக் கொண்டு இந்தப் படம் எடுக்கப்பட்டு வருகிறது.

வி கிரியேஷன்ஸ் சார்பில் எஸ்.தாணு இந்தப் படத்தைத் தயாரிக்கிறார்.

கடந்த மாதம் (ஜனவரி) 26-ம் தேதி முதல் இதன் படப்பிடிப்பு தொடங்கி நடைபெற்று வருகிறது. வேல்ராஜ் ஒளிப்பதிவு செய்யும் இந்தப் படத்துக்கு, ஜீ.வி.பிரகாஷ் இசையமைக்கிறார். கோவில்பட்டியில் இதன் முதற்கட்ட படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது.

இந்தப் படத்தில் தனுஷ் ஜோடியாக மஞ்சு வாரியர் நடிக்கிறார். மஞ்சு வாரியர் நடிக்கும் முதல் தமிழ்ப்படம் இது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், கருணாஸின் மகன் கென் கருணாஸ், இயக்குநர் பாலாஜி சக்திவேல் ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

இந்நிலையில், இந்தப் படத்தில் தனுஷ் இரண்டு வேடங்களில் நடிப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. துரை செந்தில்குமார் இயக்கத்தில் ஏற்கெனவே வெளியான 'கொடி' படத்தில் இரண்டு வேடங்களில் நடித்துள்ளார் தனுஷ் என்பது குறிப்பிடத்தக்கது.




# எப்போது?

'மாநாடு' படப்பிடிப்பு எப்போ...
தொடங்கப்படும் என்பதற்கு தயாரி...
பாளர் சுரேஷ் காமாட்சி விளக்கம் அளி...
துள்ளார்.
'வந்தா ராஜாவாதான் வருவே...
படத்தைத் தொடர்ந்து நடிகர் சிம்...
வெங்கட்பிரபு இயக்கத்தில் உருவா...
வுள்ள 'மாநாடு' படத்துக்கு தேதிக...
கொடுத்துள்ளார். சுரேஷ் காமாட்சி தய...
ரிக்கவுள்ளார். இப்படத்தின் முதற்கட்...
பணிகளோடு, நடிகர்கள் தேர்வும் ஒ...
சேர நடைபெற்று வருகிறது.
இப்படத்தின் பூஜை சிம்புவி...
பிறந்த நாளான பிப்ரவரி 3-ம் தேதி பிர...
மாண்டமாக நடத்த படக்குழு திட்...
மிட்டது. ஆனால், நடைபெறவில்லை...
இதனால், படப்பிடிப்பு தாமதமாகிற...
உள்ளிட்ட பல்வேறு செய்திகள் இணை...
யத்தில் வெளியாகி வருகின்றன.
ஏன் இந்த தாமதம், எப்போது பட...
பிடிப்பு உள்ளிட்ட கேள்விகளை தய...
ரிப்பாளர் சுரேஷ் காமாட்சியிடம் கேட்...
தற்கு அவர் கூறியதாவது:
எதற்கு நிறைய பணம் செலவழித்து...
படப்பூஜை எல்லாம். அதெல்லா...
வேண்டாம். படப்பிடிப்பு தொடங்க...
படும் அன்றே சின்ன பூஜை வைத்து...
கொள்ளலாம் என்று சிம்பு சொன்னா...
மேலும், அவர் தன் உடம்பைக் குறைக்...
இன்னும் ஓரிரு தினங்களில் வெளிநா...
செல்லவுள்ளார். அத்துடன், படத்து...
காக தற்காப்புக் கலைகளையும் கற்று...
கொள்ளவுள்ளார்.
அவர் வெளிநாட்டிலிருந்...
திரும்புவதற்குள், நாங்கள் இத...
நடிகர்கள் மற்றும் படப்...
டிப்புக்கான இடங்கள் தே...
வையும் முடித்துவிடுவோம்...
உடனடியாக படப்பிடிப்...
தொடங்கி, எவ்வித தங்...
தடையின்றி நடத்த...
தான் ஆயுத்தமா...
வருகிறோம்.
இவ்வா...
சுரேஷ் காமாட்...
தெரிவித்தார்.
மேலும், இப்பட...
தில் சிம்புவுடன் நடிக்...
ராஷி கண்ணாவிட...
பேச்சுவார்த்தை நட...
தியுள்ளது படக்குழு...
இப்படத்துக்கு எடிட்...
ராக பிரவீன் கே.எல்...
ஒப்பந்தம் செய்ய...
பட்டுள்ளார். இத...
தொழில் நுட்ப...
கலைஞர்கள் தே...
வும் தீவிரப்படு...
தப்பட்டுள்ளது



ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் ரஜினி நடிக்கவுள்ள படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க யோகிபாபுவிடம் பேசியுள்ளது படக்குழு.

'பேட்ட' படத்தைத் தொடர்ந்து ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் உருவாகும் படத்துக்கு தேதிகள் ஒதுக்கியுள்ளார் ரஜினி. முதற்கட்ட பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இப்படத்தை லைகா நிறுவனம் பெரும் பொருட்செலவில் தயாரிக்கவுள்ளது.

இப்படத்துக்கான நடிகர்கள் தேர்வைத் தொடங்கியுள்ளது படக்குழு. இதில் படம் முழுக்க ரஜினியுடனே வரும் முக்கிய கதாபாத்திரத்துக்கு யோகிபாபுவிடம் பேசியுள்ளனர். அவரோ 'தளபதி 63' படத்தில் மும்முரமாக நடித்து வருகிறார்.

படப்பிடிப்பு எப்போது என முடிவானவுடன், கண்டிப்பாக நடிக்கிறேன் என்று கூறியுள்ளார் யோகிபாபு. இதன் மூலம் ரஜினியுடன் முதன்முறையாக கூட்டணி போடவுள்ளார் யோகிபாபு. முன்பாகவே 'பேட்ட' படத்தில் முனீஸ்காந்த் கதாபாத்திரத்தில் நடிக்க முதலில் யோகிபாபுவிடம் தான் பேசினார்கள். தேதிகள் பிரச்சினையால் அவரால் நடிக்க முடியாமல் போனது குறிப்பிடத்தக்கது.

இம்மாத இறுதிக்குள் ஒட்டுமொத்த நடிகர்கள் தேர்வையும் முடித்துவிட்டு, மார்ச் இறுதியில் படப்பிடிப்புக்குச் செல்ல ஆயுத்தமாகி வருகிறது படக்குழு.

தற்போது திரைக்கதை வடிவத்தை இறுதி செய்யும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார் ஏ.ஆர்.முருகதாஸ்.



# மஹிமா என்றால் மகிழ்ச்சி

தமிழில் விரைவில் வெளிவர உள்ள 'ஐங்கரன்' படத்தைத் தொடர்ந்து ஆர்யா நடிப்பில் 'மகா முனி' படத்தில் நாயகியாக நடிக்கத் தயாராகிறார் மஹிமா நம்பியார். இதற்கிடையே மலையாளத்தில் 'மதுர ராஜா' படத்தில் மம்முட்டியுடன் நடிக்கிறார்.

'ஐங்கரன்' படத்தில் எனக்கு செவிலிப் பெண் பாத்திரம். செம எனர்ஜெடிக்கான படம். அதே போல 'மவுனகுரு' இயக்குநர் சாந்தகுமார் இயக்கும் 'மகா முனி' படத்திலும் அற்புதமான பாத்திரம்.

நகரப் பின்னணியில் திரில்லர் களமாக விரியும் இந்தப் படமும் எனக்கு நடிப்பில் நல்ல பெயர் வாங்கிக்கொடுக்கும் என்று நம்புகிறேன். மலையாளத்தில் மம்முட்டி சார் நடித்த 'போக்கிரி ராஜா' படத்தின் அடுத்த பாகமாக விரியும் 'மதுர ராஜா'படத்துக்கான இன்னும் ஒருநாள் படப்பிடிப்பும், டப்பிங் மட்டும்தான் இருக்கு. இந்தக் கதைக்கும் மதுரைக்கும் சம்பந்தம் இருப்பதால்தான் 'மதுர ராஜா' என்று பெயர் வெச்சிருக்காங்க. படத்தில் ஜெய் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக நான் நடித்திருக்கேன் என்கிறார் மகிழ்ச்சியுடன் மஹிமா.



# அனுமதி மறுப்பு

90களில் புதுப்பாட்டு, பெரும்புள்ளி, மாநகர காவல், குறும்புக்காரன் என பல படங்களில் நடித்து வந்த சுமா ரங்கநாத் திடீரென்று கோலிவுட் படங்களிலிருந்து காணாமல்போனார். தற்போது அவர் நடித்திருக்கும் படமொன்றுக்கு தணிக்கைகுழு சான்று அளிக்க மறுத்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கர்நாடகாவில் நடந்த ஒரு உண்மை சம்பவத்தின் அடிப்படையில் கிரைம் த்ரில்லராக 'தண்டபாலயா 4' படம் உருவாகிறது. இதில் பிரதான வேடத்தில் நடித்திருக்கும் சுமா புகைப்பிடிப்பது, ரவுடித்தனம் செய்வதுபோன்ற தடாலடி காட்சிகளில் நடித்திருக்கிறார். இப்படம் முடிந்து தணிக்கை சான்றிதழுக்காக அனுப்பப்பட்டபோது தணிக்கை குழு சான்று வழங்க மறுத்துவிட்டது. இதையடுத்து ரிவைசிங் கமிட்டிக்கு செல்ல படதரப்பு முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து பட தரப்பில் கூறும்போது,'தண்டபாலயா 4' படத்துக்கு தணிக்கை குழு ஆட்சேபம் தெரிவிப்பது ஏன் என்று தெரியவில்லை. பொதுவாக படத்தில் சில காட்சிகளை வெட்டச் சொல்வார்கள் அல்லது சில வசனங்களை சைலன்ட் செய்யச் சொல்வார்கள் ஆனால் இப்படத்துக்கு சான்றிதழ் தர மறுத்து தள்ளுபடி செய்திருக்கிறார்கள். படத்தை மார்ச் மாதம் வெளியிட திட்டமிடப்பட்டிருக்கும் நிலையில் இது கடினமான சூழலை ஏற்படுத்தி உள்ளது. முன்னதாக இப்படத்தை பார்த்த தணிக்கை அதிகாரிகள், சில காட்சிகளை வெட்ட வேண்டும் என்று என்னிடம் கூறினார்கள் ஆனால் திடீரென்று சான்றிதழே தர மறுக்கிறார்கள். இதையடுத்து தணிக்கை சான்றிதழ் கேட்டு விரைவில் ரிவைசிங் கமிட்டிக்கு செல்லவிருக்கிறோம் என்றனர்.

கிறார். அ...
லிருந்து ...
ஒரு வ...
ஸ்ருதியிட...
கள் இரு...
அவரது ...

# மீண்டும் எடுக்கப்படும்
## ப்பு நிறுவனம் அதிரடி

ன 'வர்மா' படம் மறுபடியும் எடுக்கப்பட இருப்பதாகத் தயாரிப்பு நிறுவனம் அறி

ர் ஹிட்டான தெலுங்குப் படம் 'அர்ஜுன் ரெட்டி'. இந்தப் படத்துக்குக் கிடைத்த
இந்தி உள்ளிட்ட பல மொழிகளில் இதனை ரீமேக் செய்து வருகின்றனர்.
ப் படம் ரீமேக் செய்யப்பட்டுள்ளது. பாலா இயக்க, விக்ரமின் மகன் துருவ் விக்ரம்
மேகா என்ற மாடல் ஹீரோயினாக நடித்துள்ளார். இ4 என்டெர்டெயின்மென்ட்ஸ்
பாலாவின் 'பி ஸ்டுடியோஸ்' வழங்குகிறது.
ளிக்காததால் மறுபடியும் படத்தை எடுக்க இருப்பதாகத் தயாரிப்பு நிறுவனம் அறி
ன்றை இ4 என்டெர்டெயின்மென்ட்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

' படம் எங்களுக்குப் போதுமான மகிழ்ச்சியை அளிக்கவில்லை. எனவே, நாங்
ில்லை. இதற்குப் பதிலாக 'அர்ஜுன் ரெட்டி' தமிழ் ரீமேக்கை நாங்கள் புதிதாகத்
ன் ரெட்டி' படத்தின் உயிரோட்டம் மாறாமல், துருவ்வை மீண்டும் கதாநாயக
ருக்கிறோம்.
பிற கதாபாத்திரங்கள் குறித்து புதிதாக விரைவில் அறிவிக்கப்படும். இந்தப் படத்
வழித்தோம். இருப்பினும், இப்படத்தைத் தமிழில் காண வேண்டும் என்ற எங்கள்
றி உழைத்து இப்படத்தை ஜூன் மாதம் வெளியிடுவோம்.
யும் வாழ்த்தையும் எதிர்பார்க்கிறோம்.





## எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியவில்லை

ரசிகர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய முடியாமல் போனது துரதிர்ஷ்டமே என நடிகர் ராம் சரண் தேஜா கூறியுள்ளார்.

ராம் சரண் தேஜா, பிரசாந்த், சினேகா, கியாரா அத்வானி உள்ளிட்டோர் நடிப்பில் பொங்கலுக்கு வெளியான 'வினய விதேய ராமா' திரைப்படம், ராம் சரண் ரசிகர்களுக்கு பெரிய ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் அளித்தது. விமர்சன ரீதியாக கடுமையாக சாடப்பட்ட இந்தத் திரைப்படம் வசூலிலும் சோபிக்கவில்லை. படத்தின் லாஜிக் இல்லாத காட்சிகள் சமூக வலைதளங்களில் சராமாரியாக கிண்டல் செய்யப்பட்டன. படத்தின் இயக்குநர் போயபாடி சீனுவை விமர்சித்தும் பலர் பதிவிட்டனர்.

'ரங்கஸ்தலம்' போன்ற நல்ல படத்துக்குப் பிறகு ராம் சரண் தேஜா இது போன்ற படத்திலா நடிக்க வேண்டும் என்றெல்லாம் ரசிகர்கள் கவலையுடன் பேசி வந்தனர். இந்நிலையில், 'வினய விதேய ராமா' தோல்வி குறித்து ராம் சரண் தேஜா அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில்,

'உலகம் முழுவதும் இருக்கும் என் இனிய ரசிகர்களே, பார்வையாளர்களே,

என் மீதும், என் படங்கள் மீதும் காட்டப்பட்டும் அன்பையும், ஆதரவையும் பார்த்தால் கவுரவிக்கப்பட்டதாக உணர்கிறேன்.

'வினேய விதேய ராமா' படத்துக்காக இரவு பகலாக அயராது உழைத்த ஒவ்வொரு தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும் நன்றி கூற விரும்புகிறேன். எங்கள் தயாரிப்பாளர் டிவிவி தானய்யா அவர்களின் ஆதரவை விவரிக்க வார்த்தைகளே இல்லை. எங்கள் படத்தை நம்பி, ஆதரித்த விநியோகஸ்தர்கள் மற்றும் திரையரங்க உரிமையாளர்களுக்கு நான் என்றும் கடன் பட்டுள்ளேன்.

உங்கள் அனைவருக்குமான ஒரு பொழுதுபோக்கு படத்தைக் கொடுக்க நாங்கள் கடுமையாக உழைத்தோம். துரதிர்ஷ்டவசமாக, எங்கள் நோக்கம் திரையில் சரியாக பிரதிபலிக்கவில்லை. உங்கள் எதிர்பார்ப்புகளை எங்களால் பூர்த்தி செய்ய முடியவில்லை.

ஆனால் உங்கள் அளப்பற்ற அன்பு, ஆதரவும் என்றும் என்னை மேலும் உழைக்க உற்சாகப்படுத்தும், உங்கள் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் நல்ல படங்களை கொடுக்கச் செய்யும். எனக்கு எப்போதும் ஆதரவளித்த வரும் ஊடகங்களுக்கும் நன்றி கூற விரும்புகிறேன்.




## மீண்டும் பரபரப்பாகும் இந்தியன் II

பிப்ரவரி 11-ம் தேதி அடுத்த கட்ட படப்பிடிப்பு தொடங்கவுள்ளதாக, மீண்டும் பரபரப்பாக தங்களது பணிகளைத் தொடங்கியுள்ளது 'இந்தியன் 2' படக்குழு.

கமல்ஹாசன் நடிப்பில், ஷங்கர் இயக்கத்தில் வெளியான படம் 'இந்தியன்'. தற்போது அதன் 2-ம் பாகத்தில் மீண்டும் கமல் - ஷங்கர் இணைந்து பணிபுரிந்து வருகிறார்கள். லைகா நிறுவனம் தயாரித்து வருகிறது.

சமீபத்தில் இப்படத்தின் படப்பிடிப்பு பூஜையுடன் தொடங்கப்பட்டது. அதற்குப் பிறகு சில நாட்களிலேயே நிறுத்தப்பட்டது. இதனால், படக்குழுவினரிடையே பிரச்சினை, தயாரிப்பு நிறுவனத்தில் பணமில்லை என்று பல்வேறு காரணங்கள் சொல்லப்பட்டன.

அனைத்தையும் பொய்யாக்கும் விதமாக பிப்ரவரி 11-ம் தேதி மீண்டும் சென்னையில் 'இந்தியன் 2' படப்பிடிப்பு தொடங்கப்படவுள்ளது. இதுவும் சில நாட்கள் மட்டுமே நடைபெறும். அதனைத் தொடர்ந்து பாஹமாஸ் மற்றும் பொலிவியா நாடுகளில் சில முக்கிய காட்சிகளை படமாக்க பயணப்படவுள்ளது படக்குழு.

இப்படத்தில் கமலுடன் காஜல் அகர்வால், நெடுமுடி வேணு, போமன் இரானி உள்ளிட்டோர் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். அனிருத் இசையமைக்கும் இப்படத்துக்கு ரவிவர்மன் ஒளிப்பதிவாளராக பணிபுரிந்து வருகிறார். கலை இயக்குநராக முத்துராஜ் பணியாற்றிவருகிறார்.

கமலுக்கு வில்லனாக அக்ஷய்குமார், அஜய் தேவ்கான், அபிஷேக் பச்சன் என பல்வேறு பெயர்கள் அடிபட்டு வருகின்றன. ஆனால், படக்குழுவினர் இதுவரை யாரையுமே அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தவில்லை. எழுத்தாளர்கள் ஜெயமோகன், கபிலன் வைரமுத்து, லட்சுமி சரவணகுமார் மூவரும் இணைந்து 'இந்தியன் 2'வுக்கான வசனங்களை எழுதியுள்ளனர்.



கபாலி, ஆல் இன் ஆல் அழகு ராஜா, தோனி என கோலிவுட் படங்களில் சேலைகட்டிக்கொண்டு, 'சிறப்பு' என்று சொல்லும் அளவுக்கு அடக்க ஒடுக்கமாக நடிக்கும் ராதிகா ஆப்தே, ஆங்கில படங்களிலும் அவ்வப்போது நடித்து வருகிறார். அதில் டாப்லெஸ், நிர்வாண காட்சிகளில் நடித்து அடேங்கப்பா சொல்ல வைக்கிறார். ஏற்கனவே, பதல்புர், பார்செட் ஆகிய படங்களில் டாப்லெஸ், நெருக்கமான காட்சிகளில் நடித்து ரசிகர்களை திக்குமுக்காட வைத்த ராதிகா அந்த வரிசையில் மீண்டும் கவர்ச்சி காட்டி மூச்சுமுட்ட வைக்கும்படியான காட்சிகளில் நடித்து வருகிறார்.புதிய ஆங்கில படம், 'தி வெட்டிங் கெஸ்ட்'. மைக்கேல் வின்டர்பாட்டம் இயக்குகிறார். இதில் ராதிகா ஆப்தே ஹீரோயினாக நடித்து வருகிறார். இப்படத்திற்காக அவர் நடித்திருக்கும் கவர்ச்சியான டூ பீஸ் ஸ்டில்கள் வெளியாகி கிக் ஏற்றி வருகிறது. டூ பீஸ் நீச்சல் உடை அணிந்து கடற்கரையில் ஒய்யாரமாக அவர் நடந்து செல்லும் வீடியோ காட்சிகள் நெட்டில் லீக் ஆகி ரசிகர்களை பரவசத்தில் ஆழ்த்தியிருக்கிறது. ஆக்ஷன் த்ரில்லராக உருவாகும் இப்படத்தில் ராதிகா ஆப்தே கவர்ச்சி மட்டும் காட்டுகிறாரா, ஆக்ஷன் காட்சிகளிலும் நடிக்கிறாரா என்பதுபற்றிய தகவலை பட தரப்பு தெரிவிக்கவில்லை.



## திணறும் மேகா ஆகாஷ்

'எனை நோக்கி பாயும் தோட்டா' படத்தில் தனுஷுடன் ஜோடியாக நடித்து வருகிறார் மேகா ஆகாஷ். மேகா ஆகாஷ் இணைய தள இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ரசிகர்களுடன் தொடர்பில் இருக்கிறார். இந்நிலையில் அவரது இன்ஸ்டாகிராம் பக்கத்தை சிலர் ஹேக் செய்திருப்பதுடன் அதில் உள்ள படங்கள், வீடியோக்களை திருடிவிட்டனர். இதையடுத்து தனது புதிய பெயரில் இன்ஸ்டாகிராம் அக்கவுண்ட்டை தொடங்கியிருக்கிறாராம். ஆனாலும் குறிப்பிட்ட இன்ஸ்டாகிராம் முகவரியை பதிவு செய்தால் அது ஹாலிவுட் நடிகை முகவரிக்கு செல்கிறது. இதற்கிடையில் மேகா ரசிகர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் எனது இன்ஸ்டாகிராம் கணக்கை மீட்கும் முயற்சி நடக்கிறது. இந்நிலையில் என் பெயரில் வரும் தகவல்களை யாரும் நம்பவேண்டாம் என தெரிவித்துள்ளார்.



## காயப்படுத்துவது யார்?

சின்ன குஷ்பு என்று ரசிகர்களால் பாராட்டப்படுபவர் ஹன்சிகா. உடல் வெயிட் போட்டிருந்த நிலையில் தற்போது எடை குறைத்து ஸ்லிம் தோற்றத்துக்கு மாறியிருக்கிறார். சமீபத்தில் அவர் நீச்சல் உடையில் நிற்பதுபோன்ற புகைப்படங்கள் நெட்டில் லீக் ஆனது. ஹன்சிகாவின் செல்போனை ஹேக் செய்து இப்படங்களை யாரோ வெளியிட்டதாக அவரது தரப்பில் கூறப்பட்டது. ஆனால் இப்படங்களை ஹன்சிகாவே பப்ளிசிட்டிக்காக வெளியிட்டதாக சிலர் அவரைபற்றி கலாய்த்து வருகின்றனர். இது ஹன்சிகாவின் மனதை காயப்படுத்தி உள்ளது.

இதுகுறித்து ஹன்சிகா கூறியதாவது: கடந்த சில வாரங்களுக்கு முன்பு நான் அமெரிக்காவுக்கு சென்றிருந்தேன். அப்பொழுது என் செல்போனில் பிரச்னை ஏற்பட்டது. அதன் பிறகுதான் என் அந்தரங்க புகைப்படங்கள் கசிந்துள்ளன. அதைக்கண்டு அதிர்ச்சி அடைந்தேன். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு எடுத்த புகைப்படங்கள் அவை. அதை யாரோ செல்போனை ஹேக் செய்து கசிய விட்டுள்ளனர். விளம்பரம் தேட நானே என் அந்தரங்க புகைப்படங்களை வெளியிட்டதாக சிலர் கூறுவது வேதனையாக உள்ளதுடன், சிலர் தெரிவித்துள்ள கருத்துகள் என்னை காயப்படுத்தி உள்ளது. என் செல்போன், டுவிட்டரை ஹேக் செய்தவர்கள் யார் என்பதை கண்டுபிடிக்கும் முயற்சி நடந்துகொண்டிருக்கிறது. இவ்வாறு அவர் கூறி உள்ளார்.



ஸ்ருதி ஹாசன் கடந்த ஒரு வருடமாக நடிப்பிலிருந்து விலகி இருக்கிறார். இதற்கிடையில் தந்தை கமலுடன் சபாஷ் நாயுடு படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டிருப்பதுடன் இந்தி படமொன்றிலும் நடிக்க ஒப்புக்கொண்டிருக்
னால் 2 படங்களும் படப்பிடிப்பு நடக்காமல் முடங்கி உள்ளது. முன்னதாக சுந்தர்.சி இயக்கத்தில் சங்கமித்ரா படத்தில் ஸ்ருதி நடிப்பதாக இருந்தது. படகுழுவுடன் பின்னர் ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக அப்படத்தி
விலகினார். அதன்பிறகு புதிய படங்கள் எதுவும் ஏற்காமல் இங்கிலாந்து சென்று லண்டன் நகர மேடைகளில் ஆங்கில பாப் இசை பாடகியாக அவ்வப்போது பாடல்கள் பாடி வருகிறார்.
வருட இடைவெளிக்கு பிறகு ஸ்ருதி ஹாசன் தமிழில் நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. விஜய் சேதுபதி நடிக்கும் படத்தை எஸ்.பி.ஜனநாதன் இயக்க உள்ளார். இப்படத்தில் விஜய் சேதுபதி ஜோடியாக நடிக்க
டம் பேச்சு நடந்து வருவதாக தெரிகிறது. ஏற்கனவே விஜய்சேதுபதி நடித்த புறம்போக்கு என்கிற பொதுவுடமை படத்தை ஜனநாதன் இயக்கி உள்ளார். மாறுபட்ட கதை அம்சமாக இப்படம் உருவாகியிருந்ததால் அடுத்து அவர்
வரும் இணைய உள்ள படமும் வித்தியாசமான களத்தில் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை கிளாமர் கமர்ஷியல் ஹீரோயினாக நடித்து வந்த ஸ்ருதியிடமும் மாறுபட்ட நடிப்பை வரவழைக்கும் வகையில்
கதாபாத்திரத்தை ஜனநாதன் அமைப்பார் என்றும் தெரிகிறது.

# இரத்த அழுத்தமும் கல்சியமும்

இதயம் சார்ந்த நோய் பாதிப்புகள் மற்றும் சிறுநீரக பிரச்சினைகள் ஏற்படுவதற்கு உயர் இரத்த அழுத்தம் முக்கிய காரணமாக இருக்கிறது. மற்ற நோய்களை போல இதன் பாதிப்புக்கான அறிகுறிகளை எளிதில் கண்டறிய முடியாது. உடற்பயிற்சியும், ஆரோக்கியமான உணவு பழக்க வழக்கமுமே உயர் இரத்த அழுத்த பிரச்சினைக்கு தீர்வாக அமையும்.



உயர் இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்துவதில் கால்சியம், மெக்னீசியம், பொட்டாசியம் ஆகிய மூன்று ஊட்டச்சத்துக்களுக்கு முக்கிய பங்கு இருக்கிறது. பொட்டாசியம் தசைகளின் முறையான செயல்பாட்டுக்கு வழிவகை செய்கிறது. ஒழுங்கற்ற இதய துடிப்பை சமநிலைப்படுத்தி இதயத்திற்கு சமிக்ஞைகளை கடத்தவும் உதவுகிறது. இரத்த அழுத்த பாதிப்புக்கு ஆளாகி இருப்பவர்கள் பொட்டாசியம் அதிகம் நிறைந்த ஆரஞ்சு, காளான்கள், கீரை வகைகள், பிராக்கோலி, சர்க்கரை வள்ளி கிழங்கு, முந்திரி, வாழைப்பழங்கள் போன்றவற்றை சாப்பிட்டு வர வேண்டும்.

இரத்தத்தில் சர்க்கரை அளவை கட்டுப்படுத்துவதிலும், தசைகள் மற்றும் நரம்புகளின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துவதிலும் மக்னீசியத்திற்கு முக்கிய பங்கு இருக்கிறது. எலும்புகளின் வளர்ச்சிக்கும் மெக்னீசியம் தேவையானதாக இருக்கிறது. வாழைப் பழங்கள், வெண்ணெய், கொட்டை வகைகள், விதைகள், கருப்பு பீன்ஸ், கீரை வகைகள் போன்றவற்றில் மெக்னீசியம் அதிகம் கலந்திருக்கிறது.

கல்சிய குறைபாடும் உயர் இரத்த அழுத்த பாதிப்பை அதிகரிக்கும். உடலில் ஹார்மோன்களின் சீரான செயல்பாட்டுக்கு கால்சியத்தின் பங்களிப்பு இன்றியமையாதது. இரத்த குழாய்களின் சீரான இயக்கத்திற்கும் கல்சியம் அவசியம். பால், தயிர், பாலாடை கட்டிகள், பயறு வகைகள், மீன் வகைகள், பச்சை இலை காய்கறிகள் போன்றவற்றில் கல்சியம் உள்ளது.

# ஆரோக்கியத்திற்கு உகந்த சிவப்பு அரிசி



சிவப்பு அரிசியில் நார்ச்சத்தும் (Fiber) செலினியமும் (Selenium) மிகுந்து இருக்கின்றன. இவை புற்றுநோயை ஏற்படுத்தும் காரணிகளைத் தடுத்து நிறுத்துகின்றன. இது மட்டுமல்ல, வைட்டமின் இ, நம் உடல் முழுக்க இருக்கும் ஆன்டிஆக்ஸிடன்ட்களோடு இணைந்து செயல்படுகிறது. இந்த ஆற்றல் மிகுந்த ஆன்டிஆக்ஸிடன்ட்களின் செயல்பாடு, இதய நோய்கள் வராமல் காக்கும். ஆஸ்துமாவின் தீவிரத்தைக் குறைக்கும்; மூட்டுவலி வீக்கத்தைக் (Rhemetoid Arthritis) குறைக்கும்.

முழுமையான சிவப்பு அரிசியில் இருக்கும் எண்ணெய், நம் உடலில் இருக்கும் எல்.டி.எல் (Low Density Lipoprotein) என்கிற கெட்ட கொழுப்பைக் குறைக்கவும் உதவுகிறது. அமெரிக்காவில், லூசியானா ஸ்டேட் யுனிவர்சிட்டியில் நடந்த ஓர் ஆய்வில் இது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இதில் இருந்து தயாரான எண்ணெயை (Rice Bran Oil) சிலரைப் பயன்படுத்தச் சொல்லி சோதனைக்கு உட்படுத்தியிருக்கிறார்கள். இறுதியில் எல்.டி.எல் அளவு குறைந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதோடு இந்த ரைஸ் பிரான் ஆயில், இதய ஆரோக்கியத்துக்கு செயல்படு உணவாக (Functional Food) இருந்து காக்கிறது என்கிறார்கள் மருத்துவர்கள். காரணம், இதில் இதய ஆரோக்கியத்துக்கு உதவும் வைட்டமின் பி, மக்னீசியம், நார்ச்சத்து உள்ளிட்டவை இருப்பதுதான்.

மாதவிடாய் முடியும் நிலையில் இருக்கும், முடிந்த நிலையில் இருக்கும் பெண்களுக்கு சில பிரச்சனைகள் தோன்றுவது வழக்கம். அதிகக் கொழுப்பு, உயர் ரத்த அழுத்தம், இதய நோய்கள் எல்லாம் வரும் வாய்ப்பு உண்டு. வாரத்துக்கு 6 முறை சிவப்பு அரிசியை உணவில் சேர்த்துக்கொள்வதன் மூலமாக, இந்த அபாயங்களை வெகுவாகக் குறைக்கலாம் என்கிறது ஓர் ஆய்வு.

இதில் இருக்கும் மக்னீசியம், நம் உடலில் இருக்கும் 300-க்கும் மேற்பட்ட நொதிகளுடன் (Enzymes) செயலாற்றுகிறது. குறிப்பாக, குளூக்கோஸ் மற்றும் இன்சுலின் சுரப்பில்! இதன் காரணமாக, டைப் 2 சர்க்கரை நோயாளிகளுக்கு இன்சுலின் சுரப்பில் மக்னீசியம் உதவுகிறது; நோயைத் தடுக்கிறது.

இன்னும், ஆஸ்துமா தீவிரத்தைக் கட்டுப்படுத்துவதில், உயர் ரத்த அழுத்தத்தைக் குறைப்பதில், மாரடைப்பைத் தவிர்ப்பதில், பக்கவாதம் வராமல் தடுப்பதில், பித்தப்பைக் கற்கள் உருவாகாமல் காப்பதில்... என இதன் பலன்கள் பட்டியல் வெகு நீளம்.

வெள்ளை அரிசியை சமைப்பதைவிட, சிவப்பு அரிசி அதிக நேரம் எடுத்துக்கொள்ளும். இதைக்கொண்டு சாதம் தொடங்கி தோசை, புட்டு, ரவையாக்கி உப்புமா, அடை, கொழுக்கட்டை என எத்தனையோ செய்வதற்கு வழியுண்டு. சிவப்பு அரிசியை உணவில் சேர்த்துக்கொள்வோம். ஏனெனில், அது ஆரோக்கியத்துக்கு உத்தரவாதமான தானியம்.

# சித்தரத்தையின் சிறப்பு



இதன் சிறு துண்டை வாயில் இட்டு சுவைத்தால், வாய் நாற்றம் நீங்கும். ஈறுகளில் உள்ள நோய்த்தொற்றும் சீராகும். குழந்தை பெற்ற பெண்களுக்கு வழங்கப்படும் பிரசவ லேகியத்தில் சித்தரத்தை சேர்க்கப்படுகிறது. மேலும், குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்ய கொடுக்கப்படும் உரை மாத்திரையில் சித்தரத்தை மிக முக்கியமான சேர்மானமாக இருக்கிறது. சுவாச நோய்களுக்கான மருந்துகள், இருமல் மருந்துகள், வலி நோய்களுக்கான மருந்துகளில் சித்தரத்தை சேர்க்கப்படுகிறது. உடலுக்கு சிறந்த சக்தியளிக்கும் மருந்தாகும், இந்த சித்தரத்தை என்பதில் சிறிதும் ஐயமில்லை.

# காலணித் தேர்வில் கவனம் தேவை



பாதங்கள்தான் ஒட்டுமொத்த உடலையும் தாங்கும் அஸ்திவாரம். பாதங்களில் பிரச்சனை வந்தால் உடல் ஆட்டம் கண்டுவிடும். நிற்கவோ, நடக்கவோ முடியாமல் ஒரே இடத்தில் முடங்கி விடுவோம். பாதங்களில் பாதிப்பு ஏற்பட நாம் அணியும் காலணிகளும்கூடக் காரணமாக இருக்கலாம் என்கிறார்கள் மருத்துவர்கள். ‘பொருத்தமற்ற காலணிகளை அணிவதால், கால்கள் மட்டுமல்லாமல் பாதங்களில் உள்ள நரம்புகளும் பாதிக்கப்படும். முக்கியமாக முதுகு வலிப் பிரச்சனைக்கும் வழிவகுக்கும்’.

### சியாட்டிகா

சியாட்டிகா என்பது ஒருவித அடிப்புற இடுப்புவலி. குதிகால் உயர்ந்த காலணிகளை அணிவதே இதற்கு முக்கியக் காரணம். இந்தப் பிரச்னை பாதம் முதல் தொடை, இடுப்பு மற்றும் பின்புறம் வரைக் கடுமையான வலியை ஏற்படுத்தும்; கால்கள் மரத்துப்போகும். நடக்கும் போதும் குனியும்போதும் வலி அதிகமாக உணரப்படும்.

### தட்டைப்பாதங்கள்

முன் பாதத்துக்கும் குதிகாலுக்கும் இடையே ‘ஆர்ச்’ (Arch) போன்ற இடைவெளி இல்லாமல் தட்டையாக இருப்பதைத் ‘தட்டைப் பாதம்’ என்பார்கள். இது பெரும்பாலும், குழந்தைப் பருவத்திலேயே ஏற்படுகிறது. அதற்கேற்ப ஷூ அணியாவிட்டால் சிலருக்குப் பாதத்தின் ‘ஆர்ச்’ பகுதியிலும் குதிகால்களிலும் வலி ஏற்படும். நாளடைவில் நிற்பது, நடப்பது போன்ற நிலைகளிலும் மாற்றம் ஏற்பட்டு, அது கால் மூட்டு, இடுப்பு, பின்புறப்பகுதி, முதுகு ஆகியவற்றிலும் வலியை உண்டாக்கும். பாதங்களின் ‘ஆர்ச்’ எப்படி இருக்கிறதோ அதற்கேற்ற காலணிகளை அணிய வேண்டும்.

### குதிகால் வலி

குதித்து விளையாடும் வகையிலான செயல்பாடுகளால் சிலருக்குக் குதிகால் மற்றும் கெண்டைக்கால் தசையில் வலி, வீக்கம், கணுக்காலில் தசை இறுக்கம் உண்டாகும். பெரும்பாலும் நடனக்கலைஞர்கள், டென்னிஸ் விளையாட்டு வீரர்களுக்கு இந்த வகைப் பிரச்னைகள் ஏற்பட்டாலும், பொருத்தமற்ற காலணிகளை அணிவதே முக்கியக் காரணமாகும். வலியை உணர்பவர்கள் குதிகால்களுக்கு அழுத்தம் கொடுக்கும் செயல்பாட்டினை நிறுத்த வேண்டும். கால்களுக்கு ஓய்வு கொடுக்க வேண்டும். மருத்துவரின் ஆலோசனைப்படி வலிநிவாரண மருந்துகளை எடுத்துக்கொண்டு நிவாரணம் பெறலாம்.

### காலணிகள் தேர்வில் கவனம் இருக்கட்டும்

★ காலணிகளின் உள்பகுதி பஞ்சு போன்று மிருதுவாக இருக்க வேண்டும். அதிக எடையும் அழுத்தமும் இல்லாமல் இருக்க வேண்டும்.

★ இரண்டு அங்குலத்துக்கு மேல் அதிக உயரமுள்ள காலணிகளை (ஹை ஹீல்ஸ்) அணியக் கூடாது.

★ குறுகலான அளவுள்ள (Narrow Shoes) ஷூக்களை அணியக்கூடாது.

★ தரையில் வழுக்காத செருப்புகளையே பயன்படுத்த வேண்டும்.

★ தோல் செருப்புகளும் ஷூக்களுமே சிறந்தவை. பிளாஸ்டிக் செருப்புகளைத் தவிர்க்க வேண்டும்.

★ சர்க்கரைநோய் இருந்தால் மருத்துவரின் ஆலோசனைப்படி காலணிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.




# ஆபத்தாகும் அசைவம்



அசைவம் இல்லாத வாழ்க்கையை பலரால் நினைத்துக் கூட பார்க்க முடியாது. அசைவம் இல்லாவிட்டால் சாப்பாடு இறங்காது என்கிறவர்கள் எல்லாம் உண்டு. மாமிச உணவில் தாவர உணவைவிட வைட்டமின் பி 12, வைட்டமின் டி, இரும்புச்சத்து ஆகியன அதிகளவு நிறைந்துள்ளது. இது தவிர்த்து பால், முட்டையிலும் இந்த வைட்டமின்கள் காணப்படுகின்றன. மனித உடலுக்குத் தேவையான பல ஊட்டச்சத்துக்கள் மாமிச உணவில் தாராளமாகக் கிடைக்கிறது. அதேபோல நோயாளிகளுக்கான அவசர ஊட்டச்சத்துக்கும் அசைவ உணவே சிறந்ததாக இருக்கிறது. அசைவ உணவைத் தவிர்ப்பவர்கள் அதிக அளவில் பால் எடுத்துக்கொள்வது தேவையான ஊட்டச்சத்தை நிவர்த்தி செய்யும்.

சைவ உணவாக இருந்தாலும், அசைவ உணவாக இருந்தாலும் உடல் உழைப்புக்குத் தகுந்தாற்போல் எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும், அசைவ உணவை வாரம் இருமுறை எடுத்துக்கொள்வது நல்லது. தற்போது அதிகரித்து வரும் இரைப்பை கோளாறுகளுக்கு தரமில்லாத அசைவ உணவுகளே முக்கியக் காரணமாக இருக்கிறது. அதனால், முடிந்தவரை அசைவ உணவுகளை வீட்டிலேயே சுத்தமான முறையில் சமைத்து சாப்பிடுவதே நல்லது.

ஓட்டல்களில் பரிமாறப்படும் அசைவ உணவுகள் சுத்தமானதா, ஆரோக்கியமானதா என்பது பல நேரங்களில் நமக்குத் தெரிவதில்லை. தூய்மையான முறையில்தான் உணவு தயாராகிறது என்பதை ஓட்டல்களும் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துவதில்லை. மேலும், ஓட்டல்களில் இறைச்சியைப் பதப்படுத்திவைக்கும் முறை, சுத்தம் செய்யும் முறை, உணவு தயாரிக்கும் முறை என்பது நாம் தெரிந்துகொள்ள முடியாத ஒன்றாகவே இருக்கிறது. குறிப்பாக, பெரிய ஓட்டல்களில் முன்கூட்டியே இறைச்சியை வாங்கி ஃப்ரோஸன் முறையில் வைத்து பதப்படுத்துகிறார்கள். அதாவது, இறைச்சி கெட்டுப்போகாமல் இருப்பதற்காக மைனஸ் டிகிரி குளிர்ந்த அளவில் பராமரித்து வைக்கும் முறை இது. இந்த ஃப்ரோஸன் முறை மாமிசத்தின் இயல்பான தன்மையை மாற்றக் கூடிய ஒன்று. இதேபோல, ஓட்டல்களில் அதிக எண்ணிக்கையில் பல ரசாயனங்களைச் சேர்க்கிறார்கள்.

மாமிசத்தை சீக்கிரம் வேக வைப்பதற்கு, சுவையாக இருப்பதற்கு, கெட்டுப்போகாமல் இருப்பதற்கு என பல்வேறு செயற்கை நிறமூட்டிகள், குக்கிரீம், டேஸ்டி மேக்கர் போன்ற செயற்கை மூலக்கூறுகள் சேர்க்கப்படுகின்றன.இதனால் உடனடியாகவோ அல்லது 72 மணிநேரம் கழித்தோ வாந்தி, வயிறு உப்புசம், பேதி, கல்லீரல் பாதிப்பு போன்ற வயிறு சம்பந்தமான பல பிரச்னைகளுக்கு அசைவ உணவுகள் காரணமாக ஆகிவிடுகிறது. அதனால் தவிர்க்க முடியாத பட்சத்தில் நம்பகத் தன்மை வாய்ந்த ஓட்டல்களில் அசைவ உணவு சாப்பிடுவதே சிறந்தது. அடிக்கடி அசைவ உணவு உண்ணும் பழக்கமுடையவர்கள் வீட்டிலேயே சமைத்து சாப்பிட முயற்சிக்க வேண்டும். முக்கியமாக, வயிறு சம்பந்தப்பட்ட பிரச்னை உள்ளவர்கள், குழந்தைகள், வயதானவர்கள் ஓட்டல்களில் அசைவஉணவுகளைத் தவிர்த்துவிட வேண்டும்.

# சளியை விரட்டும் கற்பூரவள்ளி



கற்பூரவள்ளி இலையை குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் சாப்பிடலாம். குறிப்பாக சளி மற்றும் இருமல் பிரச்னை உள்ளவர்களுக்கு இந்த இலை மிகவும் பலனளிக்கக் கூடியது. இந்த இலையை அப்படியே மென்றும் சாப்பிடலாம் அல்லது சாறாகவும் எடுத்துக் கொள்ளலாம். கற்பூரவள்ளி இலையை எவ்வாறு எடுத்துக் கொண்டால் என்ன பலன் கிடைக்கும் என்பதை தெரிந்து கொள்ளலாம்

★ கற்பூரவள்ளி இலையின் சாறை எடுத்து அதை தேனுடன் கலந்து அருந்தி வந்தால் சளி மற்றும் இருமல் தொல்லையிலிருந்து விடுபடலாம்.

★ மார்புச்சளி மற்றும் மூச்சுப்பிரச்னை இருக்கும் பட்சத்தில் அது ஆஸ்துமா அல்லது காசநோயாக மாறக்கூடும். குழந்தைகளுக்கு ஏற்படும் மார்புச்சளி நீங்கவும் மற்றும் மூச்சுப் பிரச்னையை போக்கவும் கற்பூரவள்ளி இலை மற்றும் துளசி இலையை சம அளவு எடுத்து சுத்தம் செய்து சாறு எடுத்து 5 மி.கி. அளவு தினமும் காலை வேளையில் கொடுத்து வந்தால் மார்புச்சளி குணமடையும், மூச்சு பிரச்னையும் நீங்கும்.

★ கற்பூரவள்ளி இலையை சாறு எடுத்து அதனுடன் தேன் கலந்து காலை வேளையில் அருந்தி வந்தால் மூக்கில் நீர்வடிதல், சளி, இருமல், தொண்டைக் கட்டு, தொண்டைக் கமறல் குணமடையும்.

★ கற்பூரவள்ளிச் சாறு 200 மில்லியுடன், சம அளவு நல்லெண்ணை கலந்து காய்ச்சி இறக்கித் தலையில் தேய்த்து வந்தால் சைனஸ், தலைபாரம், மூக்கில் நீர் கொட்டுதல் போன்றவை குணமாகும்.

★ சிறு குழந்தைகளுக்கு அடிக்கடி சளிப் பிடித்துக்கொண்டு இருமல் உண்டாகும். இது அவர்கள் உடல் நிலையை பல்வேறு வகைகளில் பாதித்து பல நோய்களை உண்டாக்கிவிடும். கற்பூர வள்ளியின் இலையைச் சாறெடுத்து அதனுடன் பனங்கற்கண்டு கலந்து குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால் இருமல் நீங்கும். மேலும் குழந்தைகளுக்கு உண்டாகும் மாந்தமும் விலகும்.

★ கற்பூரவள்ளி இலை, தூதுவளை, வல்லாரை இவற்றை சம அளவு எடுத்து காய வைத்து பொடியாக்கி காற்றுபுகாத டப்பாவில் போட்டு வைக்கவும். இந்த பொடியில் ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து 100 மி.லி தண்ணீர் விட்டு கொதிக்க வைத்து 50 மி.லியாக சுண்டக் காய்ச்சி, அதனுடன் சிறிது பனங்கற்கண்டு கலந்து அருந்தி வந்தால், நுரையீரல் பாதிப்பு நீங்கும். மூச்சுக்குழல் அடைப்பு சீராகும்.



# ஸ்மார்ட்போன்களின் பட்டரி ஆயுள் நீடிக்க...

ஆண்ட்ராய்டு ஸ்மார்ட்போனில் எப்போதும் தீராத பிரச்சனையாக இருக்கும் பட்டரி பக்கப் நேரத்தை அதிகரிக்க நீங்கள் என்ன செய்யலாம்.

ஆண்ட்ராய்டு ஸ்மார்ட்போன்களில் தீர்வு காண முடியாத பிரச்சனையாக அதன் பட்டரி பக்கப் இருக்கிறது. முந்தைய மொபைல் போன்களில் வாய்ஸ் கால், எஸ்எம்எஸ் என குறைந்த அம்சங்கள் இருந்ததால் பேட்டரி பக்கப் குறைந்தபட்சம் இரண்டு நாட்களுக்கு நீடித்தது. ஆனால் இன்றைய ஸ்மார்ட்போன்களில் தகவல் பரிமாற்றம் மட்டுமின்றி பொழுதுபோக்கு, கேமிங் என பல்வேறு வசதிகள் இடம்பெற்றுள்ளன.

ஸ்மார்ட்போன்களில் அதிகப்படியான அம்சங்கள் நமக்குத் தேவையான பல்வேறு வசதிகளை வழங்கினாலும், சில மணி நேரங்களில் ஸ்மார்ட்போனை ஆஃப் செய்துவிடுகிறது. இதை எதிர்கொள்ள பேட்டரி திறனை அதிகரிப்பது, எந்நேரமும் கையில் வைத்திருக்க கூடிய பவர் பேங்க் உள்ளிட்ட சாதனங்கள் கண்டறியப்பட்டுள்ளன. எனினும் பட்டரி பேக்கப் நேரத்தை அதிகரிக்கும் திறன் கொண்ட பேட்டரி இன்றளவும் கண்டறியப்படவில்லை.

**பட்டரி பக்கப்**

ஸ்மார்ட்போன் பட்டரி நீண்ட நேரம் நீடிக்க அதன் பட்டரி சேவர் மோடினை ஆன் செய்யலாம். இதை செய்ய ஸ்மார்ட்போனின் செட்டிங்ஸ் -- பட்டரி -- மெனுவில் உள்ள பட்டரி சேவர் மோடினை ஆன் செய்ய வேண்டும்.

பட்டரி சேவர் மோடினை ஆன் செய்ததும் ஸ்மார்ட்போன் திரையின் மேல் மற்றும் கீழ் பகுதிகளின் நிறம் இளஞ்சிவப்பு நிறத்தில் மாறியிருப்பதை காணலாம்.

ஸ்மார்ட்போன் பட்டரி நிறைவுறும் போது பட்டரி சேவர் மோடினை தானாக இயக்கச் செய்யும் வசதியும் வழங்கப்பட்டுள்ளது. இதை இயக்க 'Turn on automatically' ஆப்ஷனில் பட்டரி சதவிகிதத்தை குறித்து ஆக்டிவேட் செய்யலாம். இவ்வாறு செய்ததும் நீங்கள் ஆக்டிவேட் செய்திருந்த அளவில் பேட்டரி வரும் போது தானாக பேட்டரி சேவர் மோட் இயக்கப்பட்டு விடும்.

# வேகமாக சார்ஜ் செய்வது எப்படி?

ஸ்மார்ட்போனினை வேகமாக சார்ஜ் செய்ய ஸ்மார்ட்போனினை சார்ஜரில் வைத்து, ஸ்மார்ட்போன் செட்டிங்ஸ் -- பேட்டரி செட்டிங்ஸ் -- ரேபிட் சார்ஜிங் வசதியை இயக்க வேண்டும். இவ்வாறு செய்ததும் ஸ்மார்ட்போனில் வேகமாக சார்ஜ் ஏற்றப்படும்.

**ஸ்மார்ட்போன் பிரைட்னஸ்**

ஸ்மார்ட்போனின் செட்டிங்ஸ் -- டிவைஸ் -- டிஸ்ப்ளே ஆப்ஷனை கிளிக் செய்ய வேண்டும். இனி அடாப்டிவ் பிரைட்னஸ் (Adaptive brightness) ஆப்ஷனை கிளிக் செய்து ஆன் செய்ய வேண்டும். இந்த ஆப்ஷன் ஸ்மார்ட்போன் திரை பிரைட்னஸ் அளவை பேட்டரி பேக்கப் நேரத்திற்கு ஏற்ப தானாகவே மாற்றியமைக்கும்.

இதுதவிர ஸ்மார்ட்போன் பேட்டரியை மேம்படுத்த தேவையற்ற நேரங்களில் மொபைல் டேட்டா மற்றும் வைபை, ஜி.பி.எஸ்., ஸ்மார்ட்போன் லொகேஷனை உள்ளிட்டவற்றை ஆஃப் செய்து வைக்கலாம். ஸ்மார்ட்போன் திரையில் கருப்பு நிற வால் பேப்பர்களை வைப்பது அதன் பேட்டரி பேக்கப் நேரத்தை அதிகரிக்கும்.


# வாகன கண்காணிப்பான்

வாகனம் எந்த இடத்தில் உள்ளது என்பதை தெரிந்து கொள்ளும் ஸ்மார்ட் கருவியாக இந்த கார்நாட் வாகன கண்காணிப்பு கருவி உருவாக்கப்பட்டுள்ளது. இதை வாகனத்தில் பொருத்திவிட்டு செயலி மூலம் மொபைலில் இணைத்துக் கொள்ளவேண்டும்.

# ஸ்மார்ட் ரிமோட்




குரல் மூலம் டிவி சேனல்களை தேர்ந்தெடுக்கும் வகையிலான ஸ்மார்ட் ரிமோட் இது. இந்த கருவியை வைஃவை மூலம் டிவியுடனும் செட் ஆப் பாக்ஸ் உடனும் இணைத்து டிவிக்கு அருகில் பொருத்திவிட வேண்டும். பின்பு குரல் வழி மூலம் சேனலை தேர்வு செய்யமுடியும்.




# டைப் செய்யாமல் தகவல் அனுப்புவது எப்படி?

ஆண்ட்ராய்டு ஸ்மார்ட்போனில் டைப் செய்யாமலேயே டைப் செய்து, மற்றவர்களுக்கு குறுந்தகவல் அனுப்புவது எப்படி?

வாகனங்களை ஓட்டும் போது ஸ்மார்ட்போன்களில் பேசுவதும், டெக்ஸ்ட் செய்வதும் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றம் ஆகும். இந்த கவலையை போக்கவே ஆண்ட்ராய்டில் ஸ்பீச் டூ டெக்ஸ்ட் வசதி வழங்கப்பட்டுள்ளது. இந்த வசதியை கொண்டு ஸ்மார்ட்போனில் பேசினாலே டெக்ஸ்ட் டைப் செய்யப்படும்.

★ உங்களது ஸ்மார்ட்போனில் டைப் செய்ய வேண்டிய ஆப்ஷனில் கீபோர்டு செயலியை ஓபன் செய்ய வேண்டும்.

★ இனி கீபோர்டின் ஓரத்தில் காணப்படும் மைக்ரோபோன் பட்டனை கிளிக் செய்ய வேண்டும்.

★ இனி ஸ்பீக் நௌ (Speak Now) ஆப்ஷன் தெரிந்ததும், நீங்கள் டைப் செய்ய வேண்டியவற்றை பேச துவங்கலாம்.

★ அடுத்து சிறப்பு குறியீடுகளை டைப் செய்ய வேண்டுமெனில், அதற்கேற்ற வார்த்தைகளை கூற வேண்டும்.

★ புதிய பத்தியை துவங்க அதற்கேற்ற கட்டளையை கூற வேண்டும்.

# ஸ்மார்ட்போன்களை மால்வேர் பாதிப்பிலிருந்து பாதுகாப்பது எப்படி?

ஆண்ட்ராய்டு ஸ்மார்ட்போன்களில் எவ்வித மால்வேர் பாதிப்புகளிலும் சிக்காமல் இருக்க என்ன செய்ய வேண்டும் .

உலகம் முழுக்க மால்வேர் சார்ந்த சைபர் அச்சுறுத்தல் அதிகரித்து வருகிறது. சமீபத்திய ரான்சம்வேர் தாக்குதல்கள் இணைய உலகின் அபாயத்தை நமக்கு உணர வைத்தது. உலகின் பெரும் நிறுவனங்களும் மால்வேர் பாதிப்புகளில் சிக்கின.

கணினிகளை போன்றே, ஆண்ட்ராய்டு ஸ்மார்ட் போன்களில் இண்டர்நெட் அத்தியாவசிய தேவையாகி விட்டது. இண்டர்நெட் நமக்கு பல்வேறு வசதிகளை வழங்கினாலும் அவை நமக்கு வம்பிழுக்கவும் வாய்ப்பை ஏற்படுத்தி விடுகின்றன.

இவ்வாறு இண்டர்நெட் மூலம் ஏற்படும் அபாயங்களில் மால்வேர் தாக்குதல் முக்கியமானதாக உள்ளது.

**பிரான்ட்டெட் செயலிகள்**



ஸ்மார்ட்போன்களுக்கான செயலிகளை எப்போதும் தரமான பிளே ஸ்டோர்களில் இருந்து மட்டுமே டவுன்லோடு செய்ய வேண்டும். பொதுவாக கூகுள், அமேசான், சாம்சங் மற்றும் சில நிறுவனங்கள் தங்களது பிளே ஸ்டோர்களில் உள்ள செயலிகளை பாதுகாப்பாக வைத்து கொள்கின்றன.

இதனால் நீங்கள் டவுன்லோடு செய்யும் செயலி பாதுகாப்பானதாகவும், சாதனத்திற்கு மால்வேர் பாதிப்பை ஏற்படுத்தாமல் தடுக்கவும் செய்யும். இதற்கென செயலிகளில் சீரான இடைவெளியில் அப்டேட்கள் வழங்கப்படுகின்றன.

**போலி செயலிகள்**

ஸ்மார்ட்போன்களில் டவுன்லோடு செய்யும் செயலிகள் உண்மையானவை தானா என்பதை உறுதி செய்ய வேண்டும். போலியான செயலிகளை நம்ப முடியாத வசதிகள், குறைந்த வாடிக்கையாளர் மதிப்பீடு (ரீவியூ) உள்ளிட்டவற்றை கொண்டு அறிந்து கொள்ள முடியும்.

போலியான செயலிகளில் ஸ்மார்ட்போன் சாதனங்களை பாதிக்கும் மால்வேர்கள் அடங்கியிருக்கும். இவை எந்நேரத்திலும் நமது தனிப்பட்ட தகவல்கள் மற்றும் பாதுகாப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

**செட்டிங்ஸ்**

மால்வேர் தாக்குதல்களை எதிர்கொள்ள ஆண்ட்ராய்டு இயங்குதளம் தயாராகி வருகிறது. அந்த வகையில் ஆண்ட்ராய்டு 2.2 மற்றும் அதற்கும் அதிகமான பதிப்புகளில் இருந்தே ஆண்ட்ராய்டு சாதனங்களை பாதுகாக்கும் வசதி வழங்கப்படுகிறது.

இதனால் பிளே ஸ்டோர்களில் இருந்து டவுன்லோடு செய்யப்படும் செயலிகளில் ஏதேனும் பாதிப்பு இருக்கும் பட்சத்தில் அதனை கூகுள் ஸ்கேன் செய்து உங்களுக்கு முன்கூட்டியே தெரிவித்து விடும்.

இதே வசதியை கூகுள் செட்டிங்ஸ் பகுதிக்கு சென்றும் இயக்க முடியும். ஆண்ட்ராய்டு 4.2 மற்றும் அதற்கும் அதிகமான பதிப்புகளில் இந்த வசதியை இயக்க, செட்டிங்ஸ் -- செக்யூரிட்டி -- வெரிஃபை ஆப்ஸ் பகுதிக்கு சென்று பாதுகாப்பற்ற செயலிகளை கண்டறிய முடியும்.

**மென்பொருள் அப்டேட்**

ஆண்ட்ராய்டு ஸ்மார்ட்போன்களில் வழங்கப்படும் மென்பொருள் அப்டேட்களை சீரான இடைவெளியில் டவுன்லோடு செய்ய வேண்டும். ஸ்மார்ட்போன்களை அடிக்கடி அப்டேட் செய்யும் போது அவை அனைத்து வித மால்வேர் மற்றும் இதர பாதிப்புகளில் சிக்காமல் தவிர்க்க முடியும்.

ஸ்மார்ட்போன் மட்டுமின்றி நீங்கள் பயன்படுத்தும் பிளே ஸ்டோர்களுக்கு சென்று செயலிகளையும் அப்டேட் செய்து கொள்ள வேண்டும். உங்களது சாதனத்தை போன்றே செயலிகளும் அப்டேட் செய்யப்பட்டிருப்பது, மால்வேர் தாக்குதல்களை தவிர்க்க உதவும்.

**ஆண்டிவைரஸ் மென்பொருள்**

ஸ்மார்ட்போன்களில் ஆண்டிவைரஸ் போன்ற மென்பொருள்களை டவுன்லோடு செய்வது குறித்து பல்வேறு புரளிகள் இருந்தாலும், இவை சாதனங்களுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்பது மட்டும் உறுதியானதாகும்.

மேலும் இதுபோன்ற மென்பொருள்கள் சாதனங்கள் ஏதிர்கொள்ளும் பாதிப்புகளை, தடுத்து நிறுத்துவதோடு சாதனத்தினுள் எவ்வித வைரஸ் மற்றும் மால்வேர்களையும் அனுமதிக்காது.

ஆண்டிவைரஸ் மென்பொருள்களை தேர்வு செய்வது அவரவர் விருப்பம் தான். எனினும் பிரபலமான ஆண்டிவைரஸ் நிறுவனங்களை தேர்வு செய்வது நல்லது.

# இமோஜிகள் உங்கள் கைககளில்...




ஸ்மார்ட்போனில் வாழ்த்து செய்தி அனுப்புவதாக இருந்தாலும் சரி, சாதாரண வாட்ஸ் அப் செய்தி அனுப்புவதாக இருந்தாலும் சரி, இமோஜி எனப்படும் சித்திர எழுத்துகளை நாடுவதே பலரது வழக்கம். தேவையான இமோஜிகளை தேர்வு செய்யும் வசதி போன் விசைப் பலகையிலேயே இருக்கிறது என்றாலும், இதற்கென பிரத்யேக செயலிகளும் இல்லாமல் இல்லை. அந்த வகையில் 'டெக்ஸ்ட் டு இமோஜி' செயலி வார்த்தைகளை இமோஜிகளாக மாற்றித்தருகிறது.

இதில் உள்ள தேடல் கட்டத்தில் ஆங்கில வார்த்தைகளை டைப் செய்து அதற்கு பொருத்தமான இமோஜிகளை கண்டுபிடிக்கலாம். இது தவிர ஆயிரக்கணக்கான இமோஜிகளிலிருந்தும் தேர்வு செய்து கொள்ளலாம்.

இமோஜி வாசகங்களை விருப்பம்போல மாற்றிக்கொள்ளும் வசதியும் இருக்கிறது. இவற்றை சமூக ஊடகங்களில் பகிரும் வசதியும் இருக்கிறது. இமோஜிகளை நகலெடுக்கும் வசதியும் இருக்கிறது. இமோஜி பிரியர்களுக்கு சுவாரஸ்யமான அனுபவமாக இந்தச் செயலி அமைந்துள்ளது.

மேலும் தகவல்களுக்கு: http://bit.ly/2tBl6vn

# யூடியூப் வீடியோக்களை பின்னணியில் Play செய்வது எப்படி?




யூடியூப் பயன்படுத்தும் போது மற்ற செயலிகளை இயக்கினால் யூடியூப் செயலியும் ஸ்டாப் ஆகிடும். இங்கு யூடியூப் வீடியோக்களை பார்க்கும் போது நோட்டிபிகேஷன்களால் இடையூறு ஏற்படாமல் தடுக்க என்ன செய்ய வேண்டும்.

யூடியூப் தளம் பொழுதுபோக்கு முதல் பல்வேறு தகவல்களை வீடியோ வடிவில் பார்த்து தெரிந்து கொள்ள வழி செய்கிறது. ஸ்மார்ட் போன்களில் யூடியூப் பயன்படுத்தும் போது நோட்டிபிகேஷன் அல்லது குறுந்தகவல்களை அனுப்பும் போது வீடியோவும் நிறுத்தப்பட்டு விடும். ஆனால், யூடியூப் வீடியோ நிறுத்தப்படாமல் மற்ற செயலிகளை பயன்படுத்தவே பலரும் விரும்புவர்.

கணினிகளில் யூடியூப் வீடியோக்களை பின்னணியில் இயக்கி மற்ற செயலிகளை பயன்படுத்துவதை போன்று ஸ்மார்ட்போனிலும் வீடியோக்களை பின்னணியில் இயக்க சில வழிமுறைகள் உள்ளன. இங்கு ஸ்மார்ட்போன்களில் யூடியூப் வீடியோக்களை நிறுத்தமால் மற்ற செயலிகளை பயன்படுத்த என்ன செய்ய வேண்டும்

**ஃபயர்பாக்ஸ் பிரவுசர்**

ஸ்மார்ட்போனில் ஃபயர்பாக்ஸ் பிரவுசர் பயன்படுத்துவோருக்கு இந்த வழிமுறை தெரிந்திருக்க வாய்ப்புகள் இருக்கிறது. யூடியூப் செயலியை ஃபயர்பாக்ஸ் செயலியில் பயன்படுத்தும் போது வீடியோக்களை ஸ்கிரீன் ஆஃப் மோடில் பயன்படுத்தும் வசதியை வழங்குகிறது. இதனால் ஸ்மார்ட்போனில் மற்ற செயலிகளை பயன்படுத்தும் போதும் யூடியூப் வீடியோ இயங்கும்.

**யூடியூப் ரெட்**

அடுத்து யூடியூப் ரெட் சேவைக்கு பதிவு செய்யலாம். எனினும் யூடியூப் ரெட் சேவைக்கு மாதம் ரூ.666.83 செலுத்த வேண்டும். இந்த செயலியில் பேக்கிரவுண்டு பிளே எனும் ஆப்ஷன் வழங்கப்படுகிறது, இதனால் வீடியோக்களை பின்னணியில் இயக்கி மற்ற செயலிகளை பயன்படுத்த முடியும்.

இந்த சேவையில் யூடியூப் விளம்பரங்கள் நீக்கப்பட்டு கூகுள் பிளே மியூசிக் சேவையும் வழங்கப்படுகிறது. மேலும் ஏற்கனவே கூகுள் பிளே மியூசிக் சேவையை பயன்படுத்துவோர் யூடியூப் ரெட் சேவையை இலவசமாக பெற முடியும்.

**ஐபோனில் என்ன செய்யலாம்**

ஃஸபாரி பிரவுசரில் யூடியூப் தளம் சென்று வீடியோவை பிளே செய்ய வேண்டும். அடுத்து ஹோம் பட்டனை கிளிக் செய்து கண்ட்ரோல் சென்டரில் மீண்டும் பிளே பட்டனை கிளிக் செய்ய வேண்டும். இவ்வாறு செய்யும் போது வீடியோ மீண்டும் பிளே ஆகும். இதனால் எவ்வித மூன்றாம் தரப்பு செயலி மற்றும் கட்டண சேவைகளையும் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

# கண்டுபிடிப்பாளர்களின் பாதையில்...

பயண ஏற்பாட்டு இணையதளமான டிராவல்பேக், 'கண்டுபிடிப்பின் பாதையில்' எனும் சுவாரஸ்யமான இணைய பக்கத்தை உருவாக்கி வரலாற்றில் பின்னோக்கி பயணிக்க வைத்துள்ளது.

எளிமையாக வடிவமைக்கப்பட்ட இந்தப் பக்கத்தில் வரலாற்றின் ஆகச் சிறந்த கண்டிபிடிப்பாளராக கருதப்படும் கொலம்பசில் தொடங்கி வரலாற்று பயணியான மார்கோ போலோ வரை 13 முக்கிய கண்டுபிடிப்பாளர்கள் தொடர்பான தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்தக் கண்டுபிடிப்பாளர்கள் பயணத்தை மேற்கொண்டபோது அதற்கு தேவைப்பட்ட காலமும் தற்போது நவீன போக்குவரத்து வசதிகள் உள்ள சூழலில் அந்த பயணத்தை நிறைவேற்றக்கூடிய கால அவகாசமும் ஒப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒப்பீட்டை கூகுள் வரைபடம் மூலமும் செய்து பார்க்கலாம். கண்டுபிடிப்பாளர்கள் மேற்கொண்ட சாகசப்பயணத்தின் வழித்தடத்தை கூகுள் வரைபடம் மீது பார்க்கலாம்.

அட்லாண்டிக் பெருங்கடலை விமானம் மூலம் கடந்த வீராங்கனை அமிலி எர்ஹார்ட், கேப்டன் குக் உள்ளிட்டோரது சாகசப்பயணங்களையும் இப்படி வரைபடத்தில் ஒப்பிட்டு பார்க்கலாம்.

இணைய முகவரி: https://www.travelbag.co.uk/a-race-of-discovery/#



# இளநரைக்கு தீர்வு என்ன?

நரைமுடி என்பது மூப்பு எனும் வயது முதிர்ச்சியின் தொடக்கம். இளவயதில் நரை முடி என்பது பெரிய குமுறல். 40 வயதை கடந்து வரும் நரை முடி இப்போது 20 வயதாகும் போதே வந்து விடுகிறது. இளநரை முடி வயதான தோற்றம் அளிப்பதால் வருத்தம் அளிக்கிறது. அறிவியல் பூர்வமாக பார்த்தால் மெலனின் எனும் கருப்பு நிறத்தை தரும் நிறமிசத்து குறைவாவதே இளநரைக்கு காரணம் என்று கூறப்படுகிறது. இன்றைய நவீன உலகில் உணவு முறைகளால் அதிகமாக இளநரை ஏற்படுகிறது. மன அழுத்தம், வளர்சிதை மாற்றக்கோளாறுகள், மறந்த எண்ணெய் குளியல், மறக்கப்படும் பாரம்பரிய உணவு முறைகள், நொறுக்கு தீனிகள், குளிர்பானங்கள் இவைகளே இளநரை ஏற்பட முக்கிய காரணங்கள் ஆகும்.

புதிது புதிதாக சந்தைகளில் விற்கப்படும் செயற்கை வேதி பொருள்கள் நிறைந்த சோப்பு கட்டிகளும், ஷாம்புகளும் முடியின் இயற்கை அழகினை சிதைக்கின்றன. பரம்பரை காரணத்தாலும், தைராய்டு சுரப்பி



சரிவர செயல்படாததாலும் ரத்த சோகையாலும், அதற்கு காரணமான வைட்டமின்கள் பி 12, சி, ஏ இவற்றின் குறைபாட்டாலும், மெலனின் நிறமியை உற்பத்தி செய்யும் மெலனோசிட்ஸ் எனும் செல்கள் பாதிக்கப்படுவதால் இளநரை தோன்றுகிறது.

வாரம் இருமுறை தலைக்கு எண்ணெய் தேய்த்து குளிக்க வேண்டும். பித்தத்தை தூண்டும் உணவுகளை தவிர்க்க வேண்டும். முக்கியமாக காரசாரமான, மசாலா சேர்ந்த உணவினை தவிர்க்க வேண்டும். பாக்கெட்டுகளில் அடைக்கபட்ட தின்பண்டங்களை தொடக்கூடாது. நேரத்துக்கு சரியாக சாப்பிட வேண்டும். வைட்டமின்கள் நிறைந்த காய்கறிகள், பழங்களை அதிகம் பயன்படுத்த வேண்டும்.

வைட்டமின் சி அதிகம் உள்ள நெல்லிக்காய், கொய்யா, நார்த்தை, மாதுளை, வைட்டமின் ஏ அதிகம் உள்ள பப்பாளி, இரும்பு சத்துக்கு முருங்கை கீரை, கறிவேப்பிலை, பேரிச்சம் பழம், அத்தி பழம், சர்க்கரைக்கு பதில் இரும்பு சத்து நிறைந்த பனை வெல்லம், வைட்டமின் பி 12 அதிகம் உள்ள பால் மற்றும் மாமிச சூப் போன்ற சத்தான உணவுகளை, உட்கொள்ள வேண்டும். கல்லீரலை பலப்படுத்தும் கரிசலாங்கண்ணி கீரை, வைட்டமின் ஏ நிறைந்த சிறுகீரை, பொன்னாங்கண்ணிகீரை இவற்றை உணவில் அதிகம் சேர்த்துகொள்ளலாம். டீ காபி இவற்றை முற்றிலும் தவிர்ப்பது நல்லது. அதற்கு மாற்றாக புரதச்சத்து நிறைந்த பாதாம் பருப்பு அல்லது முளைகட்டிய தானியங்கள் இவற்றில் பனைவெல்லம் சேர்த்து உண்ணும் போது நல்ல பலன் கிடைக்கும்.

பயோட்டின் எனும் வைட்டமின் பி-7 உள்ள மீன், உப்பு சேர்த்து வறுத்த பாதம், காலி பிளவர், முட்டை கரு, காளான், பாலாடைக்கட்டி போன்ற உணவுகளை எடுத்து கொள்ளலாம். இள நரையை போக்குவதில் செம்புச்சத்து முக்கிய பங்காற்றுகிறது. சிறுகீரை, மூக்கிரட்டை, கரிசாலை, அவுரி இலைபோன்ற மூலிகைகள் செம்புச்சத்து நிறைந்தது. இவற்றை உணவில் அதிகம் சேர்ப்பதுடன் இவை சேர்ந்த உள் - வெளி மருந்துகளை பயன்படுத்தலாம். செம்பு பாத்திரத்தில் நீர் வைத்து குடிக்கலாம். உள் மருத்துவதோடு வெளி தடவும் தைலங்களை பயன்படுத்த நல்ல பயன் தரும். சித்த மருத்துவத்தில் கூறப்பட்டுள்ள கையான் தைலம், நீலி பிருங்காதி தைலம், மருதாணி தைலம், அவுரி தைலம், அரைகீரை விதை தைலம் இவற்றில் ஒன்றை வாங்கி பயன்படுத்தலாம்.

கறிவேப்பிலையை அல்லது அவுரி இலையை தேங்காய் எண்ணெயில் போட்டு மூன்று நாட்கள் வெயிலில் வைத்து தலை முடி தைலமாக பயன்படுத்தலாம். நிலாவரை இலை, மருதாணி இலை, கடுக்காய் பொடி இவற்றை வெந்நீரில் ஊற வைத்து பசையாக்கி தலையில் தேய்த்து ஊற வைத்து குளிக்கலாம். மன அழுத்தத்தையும், பித்தத்தையும் குறைக்கும் சீரக தைலம், வில்வாதி தைலம், தாமரை தைலம், நெல்லிக்காய் தைலம் இவற்றில் ஒன்றை எண்ணெய் குளியலுக்கு பயன்படுத்தலாம். இவ்வாறாக இள நரையை கண்டு அதிர்ச்சி அடையாமல் மேற்கூறிய பாரம்பரியமான உணவு முறைகளையும், பழக்க வழக்கத்தையும், தேவையான சத்துக்களையும் எடுத்து கொண்டால் நரை மட்டுமல்ல திரை, மூப்பு, பிணி போன்ற அனைத்திலும் இருந்து நம்மை காத்து கொள்ளலாம்.



# நெற்றியில் பருக்கள் வருவதற்கான காரணங்கள்

ஒருவரை சந்திக்கும் போது நேரடியாக பார்க்கும் போது சட்டென நமக்கு தெரிவது அவரது முகம் தான். அதனாலேயே முகத்தினை பராமரிக்க பலரும் மெனக்கெடுகிறார்கள். இது நம்மைப் பற்றிய அபிப்ராயத்தை ஏற்படுத்திடும். முகத்தை சரியாக பராமரிக்காவிட்டால் நம் முகத்தில் பருக்கள் தோன்றுவதுண்டு. ஆனால் இவை சரியாக பராமரிக்காவிட்டால் மட்டுமல்ல நம் உடல் ஆரோக்கியத்தை எடுத்துச் சொல்பவையாகவும் இருக்கிறது.

நெற்றியில் பருக்கள் வருவதற்கான காரணங்கள் எல்லாம் என்னென்ன அவை உங்களின் உடல் நலனைப் பற்றி என்ன சொல்கிறது என்று தெரிந்து கொள்ளுங்கள்.

### சருமத்துளைகள்

பருக்கள் ஏற்படுவதற்கு மிக முக்கியமான காரணங்களில் ஒன்று சருமத்துளைகள் அடைத்துவிடுவது. அதிகமாக எண்ணெய் சுரந்து அவை வெளியே வர முடியாமல் அவை பருக்களாக உருவாகும். எண்ணெய் அதிகம் சுரப்பதை கட்டுப்படுத்துவதால் இதனை தவிர்க்கலாம்.

### பொடுகு

தலையில் பொடுகு இருக்கிறது, அல்லது பொடுகு வருவதற்கான ஆரம்ப நிலை என்றால் கூட தலையில் பருக்கள் தோன்றும். தலையில் உருவாகும் பாக்டீரியா சருமத்தை அலர்ஜியாக்கும். அதனால் தலையில் பருக்கள் தோன்றுகிறது.

### தலைமுடி

தலையை சரியாக பராமரிக்கவில்லை, அதிக வறட்சி அல்லது அல்லது எண்ணெய் இருந்தால் அவை நெற்றியில் பருக்களாக உருவாகிடும்.

### ஜீரணக்கோளாறு

நெற்றியில் ஏற்படும் பருக்களுக்கு முக்கியக் காரணங்களில் ஒன்று இது. அதிகமான உணவு சாப்பிட்டாலோ, அல்லது எடுத்துக் கொண்ட உணவு சரியாக ஜீரணமாகவில்லை என்றால் நெற்றியில் பருக்கள் ஏற்படும்.

### மன அழுத்தம்

ஏதாவது ஒரு பிரச்சனையை குறித்து தொடர்ந்து யோசித்துக் கொண்டேயிருந்தாலோ அல்லது பயம் ஏற்பட்டாலோ நெற்றியில் பருக்கள் உண்டாகும். உடலில் உண்டாகும் பல்வேறு பிரச்சனைக்களுக்கு அடிப்படைக் காரணமாக இருப்பது மன அழுத்தம் தான். மன அழுத்தம் இருந்தால் ஹார்மோன் சுரப்பதில் மாற்றங்கள் ஏற்படுவதால் தான் உடல்நலப் பிரச்சனைகள் ஏற்படுகிறது.


### ஷாம்பு

ஷாம்புவைத் தவிர தலைக்குப் பயன்படுத்தும் எண்ணெய், சீரம், ஹேர் ஸ்ப்ரே போன்ற எந்தப் பொருட்கள் சேரவில்லை என்றாலும் நெற்றியில் பருக்கள் உண்டாகும்.

### தவிர்க்க

இதனைத் தவிர்க்க அதிக தண்ணீர் குடித்திடுங்கள், காய்கறி மற்றும் பழங்களை நிறைய எடுத்துக் கொள்ளுங்கள். செயற்கை சுவையூட்டிகளை தவிர்த்திடுங்கள்.

தினமும் உடற்பயிற்சி செய்திடுங்கள், ஸ்ட்ரஸை குறைக்க யோகா, தியானம் போன்றவற்றை செய்யலாம். தலைமுடியை முறையாக பராமரியுங்கள். விளம்பரத்தைப் பார்த்து தலைக்கு சந்தையில் கிடைக்கும் எல்லா பொருட்களை வாங்கி பயன்படுத்த வேண்டும் என்று நினைக்காதீர்கள்.



# உதடு வெடிப்பிற்கு தேங்காய் எண்ணெய்

குளிர்காலம் வந்தாலே உங்கள் சருமமும் தலைமுடியும் உதடுகளும் வறண்டு காணப்படும். இவற்றை பராமரிக்க நாம் கடைகளில் கிடைக்கும் கிரீம்களையும், லோஷன்களையும், ஷாம்புக்களையும், லிப் பாம்களையும் வாங்க வேண்டி வரும். இவற்றில் உள்ள இரசாயனப் பொருட்கள் பக்க விளைவுகளை ஏற்படுத்தும். அதனால், எளிய முறையில் வீட்டில் உள்ள பொருட்களை கொண்டே நமது சருமத்தை பராமரிக்கலாம்.

நமது உதடுகளில் எண்ணெய் சுரக்கும் சுரப்பிகள் இல்லை. அதனால், குளிர்காலங்களில் அவைகளுக்கு போதுமான எண்ணெய் அல்லது ஈரப்பதம் கிடைப்பதில்லை.

இதனால், நமது உடலில் உள்ள மற்ற சருமத்தைக்காட்டிலும் உதடுகளுக்கு அதிக கவனம் தேவைப்படுகின்றது. குளிர்காலத்தில் நமது உதடுகள் வறண்டு, வெடிப்பு ஏற்பட்டு அழகற்று காட்சியளிக்கின்றது.

இதனை போக்குவதற்கு கடைகளில் ஏராளமான மாய்ஸ்சுரைசர்களும், லிப் பாம்களும், லிப் கிரிம்களும் கிடைக்கின்றன. வறண்ட வெடித்த உதடுகளை குணமாக்க வீட்டிலேயே செய்யக்கூடிய சிகிச்சைகள் பல உள்ளன. சிலவகை இயற்கையான மாயிஸ்ச்சரைசர்கள் உங்கள் உதடுகளை மென்மையாக்கி மீண்டும் நீரேற்றல் செய்யும்.

வெண்ணெய், ஆலிவ் எண்ணெய், தேங்காய் எண்ணெய், பாலாடை போன்றவை இந்த வகையை சார்ந்தவைகளாகும். இவற்றுள் தேங்காய் எண்ணெய் உங்கள் வெடித்த உதடுகளை சரிசெய்வதற்கு சிறந்ததாகும்.

இந்த எண்ணெய் உங்கள் உதடுகள் வறண்டு போவதை குறைத்து உதடுகளுக்கு தேவையான ஈரப்பதத்தை அளிக்கும்.






# அழகாய் ஜொலிக்க அற்புதமான வழிகள்!

தன் உண்மையான வயதைவிட இளமையாகத் தெரிய வேண்டும் என்கிற ஆசை எல்லோரின் ஆழ்மனதிலும் இருப்பதுதான்.

★ உங்கள் கூந்தல் இளமையாக இருந்தால், நீங்களும் இளமையாகத் தெரிவீர்கள். இதற்கு வாரம் இருமுறையோ அல்லது ஒருமுறையாவது நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெயை கூந்தலின் வேர்க்கால்களில் ஆரம்பித்து நுனி வரைத் தடவவும். அரை மணி நேரம் கழித்து ஹேர்வாஷ் செய்யவும். எண்ணெய்ப் பசை குறைவான ஹேர்க்ரீம்கள் மார்க்கெட்டில் கிடைக்கின்றன. இவற்றையும் பயன்படுத்தலாம். எண்ணெய்க் குளியலும் ஹேர்க்ரீமும் தலைமுடியை லேசான ஈரப்பதத்துடனே வைத்திருக்கும். இந்த ஈரப்பதம், கூந்தலை ஆரோக்கியமாக வைத்திருப்பதுடன் உங்களை இளமையாகக் காண்பிக்கும்.

★ ஆஃபீஸுக்குப் போகும் அவசத்தில் தலைமுடியைச் சரியாக வாரிக் கொள்ளாமல் அள்ளிமுடிந்து போகாதீர்கள். கலைந்த கூந்தல்தான் உங்கள் வயதை அப்பட்டமாகக் காட்டும் முதல் எதிரி.

★ தொப்பை இருப்பவர்கள், இன்றைய டிரெண்ட்படி இறுக்கமாக ஆடை அணிந்தால், தொப்பை அசிங்கமாகக் காட்டிவிடும். தொளதொள டிரெஸ்ஸிங்கும் செய்யாதீர்கள். உங்கள் உடல்வாகுக்கு ஏற்றபடி ஆடை அணியுங்கள். முப்பது வயதுகளில் உடம்பு வெயிட் போட்டுவிடும் என்பதால், லாங் டாப் - லெகின் என்று மேட்ச் செய்தால் உடல் மெலிவாகவும் இளமையாகவும் தெரிவீர்கள்.

★ சில பெண்களுக்கு வயது ஏற ஏற, மேல் கை வெயிட் போட ஆரம்பிக்கும். அது அவர்களுடைய ஜீன். அதை ஒன்றும் செய்யமுடியாது. ஆனால், அதை மறைக்கும் வகையில் முட்டி வரை ஸ்லீவ் டிரெஸ் செய்தால், உண்மையான வயது வெளியில் தெரியாது.

★ மாதத்துக்கு ஒருமுறை புருவங்களை திருத்திக்கொள்ளுங்கள். இது முகத்தை பளிச்சென்றுக் காண்பித்து, இளமையைக் கூட்டும்.

★ இரண்டு மாதத்துக்கு ஒருமுறை பார்லருக்குப் போய் ஃபேஷியல் செய்துகொள்ளுங்கள். மரு, மாசு, பிளாக் ஹெட்ஸ், ஒயிட் ஹெட்ஸ் இல்லாமல் ஈவன் டோனாக இருக்கும். உதட்டுக்கு மேலே பூனை முடிகள் இருந்தால், பார்லரில் திரெட்டிங் செய்துகொள்ளுங்கள். மாசு மருவற்ற சருமம் இளமையின் அடையாளம். பார்லருக்குச் செல்ல முடியாதவர்கள், வீட்டிலேயே கடலை மாவு, பயித்தம் மாவு, முல்தானி மிட்டி, பால், தேன், தக்காளிச்சாறு எனப் பயன்படுத்தி சருமத்தில் டெட் செல்கள் இல்லாமல் சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள். சுத்தமான சருமம், லேசான எண்ணெய் பளபளப்புடன் மின்னுவது உங்களை யூத்ஃபுல்லாக காட்டும்.

★ உங்கள் ஸ்கின் டோனுக்கு ஏற்ற கலரில் ஆடை அணியுங்கள். இதைக் கண்டறிவது வெகு சுலபம். உங்கள் முகத்தின் ஒரு பக்கத்தில் தங்க கம்மலையும், இன்னொரு பக்கத்தில் ஒயிட் மெட்டல் கம்மலையும் வைத்துப் பாருங்கள். தங்க நிறம் பொருத்தமாக இருந்தால் மெரூன், கிரீன், ரெட், பிங்க், பிரவுன் போன்ற ஷேட்ஸ் பொருத்தமாக இருக்கும். ஒயிட் மெட்டல் பொருத்தமாக இருந்தால், ஸ்கை ஃப்ளூ, பேபி பிங்க், லேவண்டர், பர்பிள், லெமன் யெல்லோ போன்றவை உங்கள் ஸ்கின்னுக்கு ஒகே.

★ நிறையப் பெண்கள் முகத்துக்கும் ஆடைக்கும் முக்கியத்துவம் கொடுத்துவிட்டு, பாதங்களை உலர்வாகவும் பித்த வெடிப்புடனும் ஈரப்பதமே இல்லாமல் வைத்திருப்பார்கள். கைகளும் கால்களும் நம் உண்மை வயதைக் காட்டிக்கொடுக்கும் எட்டப்பன்கள். எனவே, நகங்களைச் சீராக வெட்டி, லேசாக ஆயில் தடவி ஈரப்பதத்துடன் மெயின்டெய்ன் பண்ணுங்கள்.

# கிச்சன் டிப்ஸ்

தொண்டை கரகரப்புடன் கூடிய வறட்டு இருமலுக்கு ஒரு டம்ளர் பாலில் ஒரு ஸ்பூன் தேன், மஞ்சள் தூள், மிளகுப்பொடி ஆகியவற்றை கலந்து அருந்தினால் உடனே குணமாகும்.

★ சிறிது சீரகம், மிளகு, இரண்டு கண்டந்திப்பிலி, ஒரு ஸ்பூன் தனியா போன்றவற்றை எண்ணெய் விடாமல் வறுத்து நைசாக அரைத்து சிறிது புளி ஜலத்தில் கொதிக்க வைத்து இருமுறை குடித்தால் உடம்பு வலி வந்த சுவடு தெரியாமல் பறந்தே போகும்.

★ எந்த மாவாக இருந்தாலும் சரி, அதில் பூச்சி பிடிக்காமலிருக்க மூன்று அல்லது நான்கு காய்ந்த மிளகாயைப் போட்டு வைத்தால் மாவில் பூச்சிப் பிடிக்காது.

★புலாவ் செய்யும்போது தண்ணீருக்குப் பதில் பால் சேர்த்தால் கூடுதல் சுவையாக இருக்கும். எந்த வகை புலாவ் என்றாலும் அரிசியை பத்து முதல் பன்னிரெண்டு நிமிடங்களுக்கு மேல் வேக வைக்கக் கூடாது. அப்போதுதான் குழையாமல் இருக்கும்.

★ சோள மாவு 2 கப் அளவுடன் கோதுமை மாவு, கடலை மாவு, பொட்டுக்கடலை மாவு, அரிசி மாவு தலா ½ கப் சேர்த்து தயிர், உப்பு, மிளகாய் விழுது, வெள்ளரிக்காய்த் துருவல், எள், எண்ணெய் சேர்த்துக் கெட்டியாகப் பிசைந்து சற்று கனமாக, சிறிய பூரிகளாகத் தயாரித்து, எண்ணெயில் பொரித்து எடுக்க வெள்ளரிக்காய் பூரி தயார்.

★ இருபது ஏலக்காயுடன் நான்கு ஸ்பூன் கசகசா சேர்த்து வாணலியில் வறுத்து பொடித்துக் கொள்ளவும். பாயசம் மற்றும் இனிப்புகள் தயாரிக்கும் போது இந்த பொடியை சேர்த்தால் வாசனையாக இருக்கும்.

★ ரசம் செய்து இறக்கி வைக்கும்போதுதான் கொத்தமல்லி இலை சேர்க்க வேண்டும். தவிர ரசத்தில் தாளிக்க நெய் பயன்படுத்தினால் ரசம் வாசனையாக இருக்கும்.



# அழகான தலைமுடிக்கு கற்றாளை

தலைமுடி, ஒவ்வொரு பெண்ணிற்கும் மிகவும் முக்கியமானது. அதை பராமரிக்கவும் ஒழுங்குப்படுத்தவும் பெண்கள் அதிக நேரத்தை செலவு செய்வது வழக்கமான ஒன்றுதான். தலைமுடி ஒருவருடைய அழகை நிர்ணயிப்பதில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. நமது உடலின் ஆரோக்கியத்தில் சில சிக்கல்கள் ஏற்படும் பொழுது அதற்கான அறிகுறிகளை நமது தலைமுடி உதிர்தல், தடிமன் குறைதல் மற்றும் நரைமுடி அதிகம் தோன்றுதல் போன்ற அறிகுறிகள் தென்படும்.

புரதம் நிறைந்துள்ள ஆலோவேரா, பருவமழை காலம் ஏற்படுத்தும் சேதங்களிலிருந்து உங்களின் தலைமுடிக்கு ஒரு பாதுகாப்பு கவசமாக இருக்கும். ஆலோவேரா தலைமுடிக்கு மட்டும் இல்லை சருமத்திற்கும் சிறந்த மருந்து.

★ பொடுகு பிரச்னைக்கு : ஒரு கப் ஆலோவேரா ஜெல்லில் இரண்டு தேக்கரண்டி ஆர்கானிக் ஆப்பிள் சிடார் வினிகரை சேர்த்து நன்றாக கலக்கவும். இந்த கலவையை மண்டையோட்டின் மீது தடவவும். 30 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரை கொண்டு மிதமான ஷாம்பூவை பயன்படுத்தி தலைமுடியை அலசவும். பொடுகு பிரச்னை இனி இல்லை.

★ பளபளப்பான தலைமுடிக்கு : இரண்டு தேக்கரண்டி ஆலோவேரா ஜெல், ஒரு தேக்கரண்டி யோகர்ட் மற்றும் இரண்டு தேக்கரண்டி தேனை ஒன்றாக கலந்து தலைமுடியின் வேர் பகுதியிலிருந்து நுனி வரை தடவவும். 10-15 நிமிடங்கள் கழித்து தலையில் நன்றாக மசாஜ் செய்யவும். அரை மணி நேரம் கழித்து மிதமான ஷாம்பூவை கொண்டு கூந்தலை அலசவும்.



## கண்டுபிடியுங்கள்!

கீழே உள்ள 10 குறிப்புகள் ஒரு குறிப்பிட்ட நாட்டைக் குறிக்கின்றன. அது எந்த நாடு என்பதைக் கண்டுபிடியுங்கள்.

1. நிலப்பரப்பில் உலகின் மிகப் பெரிய நாடு. ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் பரவியிருக்கிறது.

2. 1917-ம் ஆண்டு மக்கள் புரட்சியால் ஜார் மன்னரின் ஆட்சி அகற்றப்பட்டது. சமூக, பொருளாராத விஷயங்களில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.

3. புரட்சிக்குப் பின் ஏற்பட்ட பொதுவுடமை அரசாங்கத்தின் முதல் தலைவராக லெனின் பொறுப்பேற்றுக்கொண்டார்.

4. மட்ரியோஷிகா பொம்மைகளின் தாயகம்.

5. சைபீரியப் புலி மிகவும் பிரபலமான விலங்கு.

6. தனிம அட்டவணையை (கPeriodic table of elements) உருவாக்கிய டிமிட்ரி மெண்டெலீவ் இந்த நாட்டைச் சேர்ந்தவர்.

7. முதலில் விண்வெளியை அடைந்த யூரி ககாரினும் விண்வெளிக்குச் சென்ற முதல் பெண் வாலண்டீனா தெரஸ்கோவாவும் இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்.

8. ஒரு காலத்தில் ஒலிம்பிக் போட்டிகளில் இந்த நாட்டினரே ஆதிக்கம் செலுத்தி வந்தனர்.

9. மரியா ஷரபோவா (டென்னிஸ்), காஸ்பரோவ் (செஸ்) போன்ற உலகப் புகழ் பெற்ற விளையாட்டு வீரர்கள் இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்.

10. தனது ஆதர்ஸ எழுத்தாளராக காந்தி கருதிய எழுதிய லியோ டால்ஸ்டாயும் இந்த நாட்டுக்கார்தான்.

**விடை: ரஷ்யா**

## கோர்ன்.'.ப்ளேக்ஸ் உருவான கதை

கண்டுபிடிப்புகளால்தான் உலகம் இவ்வளவு முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது. மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட ஒவ்வொரு விஷயமும் எவ்வளவு நமக்குப் பயனுள்ளதாக இருக்கிறதோ, அதே அளவு அது கண்டுபிடித்த கதையும் சுவாரசியமானது. அப்படிப்பட்ட சில கண்டுபிடிப்புகளின் சுவையான கதையைப் பார்ப்போம்.

நூறு ஆண்டுகளுக்கு மேலாக அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் காலை உணவாக கார்ன்ஃப்ளேக்ஸ் வெற்றிகரமாக இருந்துவருகிறது. இன்று நமது உணவுப் பழக்கத்திலும் ஊடுருவி விட்டது. பாலில் போட்டு காலை உணவாகவும் சூப்பில் அலங்காரமாகவும் மிக்சரில் சுவைக்காகவும் கோர்ன் ஃப்ளேக்ஸ் சேர்க்கப்படுகிறது. குழந்தைகளின் விருப்பமான உணவுப் பொருளில் ஒன்றாக இது மாறிவிட்டது.

கண்டுபிடிப்பின் கதை

சுமார் 130 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்கர்களின் உணவு கொழுப்பு நிறைந்ததாக இருந்தது. இதனால் மக்களின் உடல்நலம் பாதிக்கப்பட்டது. அப்போதுதான் ஒரு தேவாலயம் மக்களின் நலனில் அக்கறை கொண்டு, ஆரோக்கியமான உணவு ஒன்றைத் தயாரிக்கும்படி மருத்துவரும் ஊட்டச்சத்து நிபுணருமான ஜான் கெல்லாக்கிடம் கேட்டுக்கொண்டது. இவரும் இவருடைய தம்பி வில் கெய்த் கெல்லாக்கும் இணைந்து உணவுப் பொருள் விற்பனை செய்யும் கடையை நடத்திவந்தனர். ஆரோக்கிய உணவுக்காக ஊட்டச்சத்து மிக்க ரொட்டியைத் தயாரிக்க முயற்சி செய்தனர். அது ஏனோ சரியாக வரவில்லை.

ஒருநாள் ரொட்டிக்காகத் தயாரிக்கப் பட்ட கோதுமை மாவு, காய்ந்து பாத்திரத்தில் ஒட்டியிருந்தது. வில் கெல்லாக் அந்தப் பாத்திரத்தைச் சுத்தம் செய்யும்போது சருகுகள்போல் உதிர்ந்தன. அவற்றை அருகில் இருந்த சூடான பாத்திரத்தில் போட்டார்.

சட்டென்று பொரிந்தன. ஆச்சரியமடைந்தவர், சுவைத்துப் பார்த்தார். ஓரளவு சாப்பிடக்கூடியதாகத்தான் தெரிந்தது. உடனே கோதுமை மாவை எடுத்து, இதேபோல் செய்து பார்த்தார். ஜான் கெல்லாக்கிடம் காட்டினார். அவருக்கும் பிடித்துவிடவே, வீட் ஃப்ளேக்ஸ் உருவானது. பல முயற்சிகள். பரிசோதனைகளுக்குப் பிறகு, 1906-ம் ஆண்டு கோதுமைக்குப் பதில் மக்காச்சோளத்தில் உருவான 'கோர்ன் ஃப்ளேக்ஸ்' விற்பனைக்கு வந்தது.



கெல்லாக் நிறுவனமும் உருவானது. கெல்லாக் சகோதரர்கள் தங்கள் வாழ்நாளில் நூற்றுக்கும் மேற்பட்ட உணவுகளை அறிமுகப் படுத்தியிருக்கிறார்கள். இந்த 122 ஆண்டுகளில் பல உணவுப் பொருட்களைப் புதிதாக உருவாக்கி, இன்றும் முன்னணி நிறுவனமாக இருந்துவருகிறது கெல்லாக்.




## டான்கிராம் விளையாடுவோமா?



உலகம் முழுவதுமுள்ள சிறுவர்களும் பெரியவர்களும் விரும்பி விளையாடக்கூடிய ஒரு விளையாட்டு என்றால் அது டான்கிராம்தான்! ஒரு சதுரத்தில் 5 முக்கோணங்களும் ஒரு சதுரமும் ஒரு சாய் செவ்வகமும் கிடைக்குமாறு வெட்டப்பட்ட துண்டுகள்தான் டான்கிராம். இந்த 7 துண்டுகளை வைத்து, உங்கள் கற்பனைக்கு ஏற்றவாறு விதவிதமான உருவங்களை உருவாக்கி மகிழுங்கள். இந்த விளையாட்டு மிகவும் சுவாரசியமாக இருக்கும். உங்களின் கற்பனை வளத்தை அதிகரிக்கும். சிந்தனையைத் தூண்டும். மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

**எப்படி விளையாடுவது?**

இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் சதுரத்தில் இருக்கும் துண்டுகளைக் கவனமாக வெட்டி எடுங்கள். தடிமனான அட்டையில் ஒட்டிக்கொள்ளுங்கள். மாதிரி உருவங்கள் சில கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆரம்பத்தில் இதைப் பார்த்து செய்து பாருங்கள். பிறகு நீங்களே உங்கள் கற்பனைக்கு ஏற்றவாறு உருவங்களை உருவாக்கி மகிழுங்கள்.

நீங்கள் எந்த உருவத்தை உருவாக்கினாலும் அதில் 7 துண்டுகளும் இடம்பெற வேண்டும். நண்பர்களுடன் போட்டி வைத்து, நேரம் நிர்ணயித்துக்கொண்டு உருவங்களை உருவாக்கலாம். குறிப்பிட்ட நேரத்துக்குள் யார், எத்தனை உருவங்களை உருவாக்குகிறார்களோ அவரே வெற்றி பெற்றவர்!

## கண்ணை கொத்துமா பச்சைப் பாம்பு?



பெரும்பாலான பச்சைப் பாம்புகள் விஷமற்றவை. சில வகைப் பச்சைப் பாம்புகளுக்கு மட்டும் குறைந்த வீரியம் கொண்ட நச்சுப் பற்கள் இருக்கின்றன. தவளை, பல்லி போன்ற சிறிய உயிரினங்கள் மீது நஞ்சைச் செலுத்தி, இரையாக்கிக்கொள்கின்றன. பச்சைப் பாம்பு எதிரியைக் கண்டவுடன் தன் உடலை அகலமாக்கும். அப்போது பச்சை செதிள்களுக்கு இடையே இருக்கும் கறுப்பு, வெள்ளை வண்ணங்கள் தெரியும். தலையைப் பெரிதாக்கிக் காட்டும். இதைப் பார்த்தவுடன் எதிரி பயந்து ஓடும். மனிதர்கள் கூர்மையான பச்சைப் பாம்பின் தலையைப் பார்த்து, தங்கள் கண்களை கொத்தி விடுவதாக நம்புகிறார்கள். அதனால்தான் இதைக் 'கண் குத்திப் பாம்பு' என்றும் அழைக்கிறார்கள். ஆனால் இதில் உண்மை இல்லை,

## தேனீக்களின் அறிவியல்

பொதுவாகப் பூச்சிகள் நறுமணத்தையும் நிறத்தையும் வைத்துப் பூக்களைக் கண்டுபிடிப்பதாகச் சொல்லப்பட்டு வந்தது. அதனால்தான் பகலில் மலரும் பூக்கள் கண்கவர் வண்ணங்களாகவும் இரவில் மலரும் மலர்கள் வெள்ளையாகவும் நறுமணத்துடனும் காணப்படுகின்றன.




சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வில் நிறமும் மணமும் மட்டுமின்றி, மின் சக்தியும் முக்கியப் பங்கு வகிப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது.


தேனீக்களின் உடலில் இருக்கும் முடிகளும் இறக்கைகளும் உடலிலிருந்து மின்சக்தியை வெளிவிடுகின்றன. தேனீக்கள் விடும் எதிர்மின்சாரத்துக்குப் பதில் தரும் விதத்தில் பூக்கள் நேர்மின்சாரத்தை வெளியிடுகின்றன.

இதன் மூலம் பூக்கள் இருக்கும் இடத்தைத் தேனீக்கள் கண்டுகொள்கின்றன என்கிறார்கள்.

## வர்ணம் தீட்டுவோம்



## ஆறு வித்தியாசங்கள் கண்டுபிடியுங்கள்




## நந்தனின் நட்சத்திரங்கள்

நந்தன் மற்ற குழந்தைகளைவிட வித்தியாசமானவன். அவனுடைய கண்களில் நட்சத்திரங்கள் இருந்தன. இவற்றின் உதவியால் மாதம் ஒருமுறை பிறருக்கு உதவி செய்ய முடியும்.

மீன் பிடிப்பதற்காகக் குளத்தை நோக்கிக் கிளம்பினார் அப்பா. உடனே தானும் குளத்துக்குச் செல்லவேண்டும் என்று ஆசைப்பட்டான் நந்தன். ஆனால் மழை வருகிற மாதிரி இருப்பதால் இன்று வர வேண்டாம் என்று சொன்னார் அப்பா.

ஏமாற்றமாக இருந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் விளையாட ஆரம்பித்தான். சற்று நேரத்தில் வீட்டில் வளர்த்த வாத்தைக் காணவில்லை என்றார் அம்மா. உடனே வாத்தைத் தேடிக் கிளம்பினான் நந்தன்.

வழியில் ஒரு கல் தடுக்கி விழுந்தான். வலிக்கவும் அழ ஆரம்பித்தான். அப்போது கண்களில் இருந்த நட்சத்திரங்கள் கீழே விழுந்தன.

வேகமாக வந்த சாம்பல் நாரை கீழே கிடந்த நட்சத்திரங்களைக் கொத்திச் சென்று, எதிரிலிருந்த பாறையில் அமர்ந்தது.

நாரையே, என் நட்சத்திரங்களைத் திருப்பித் தந்துவிடு என்று கெஞ்சினான் நந்தன்.

இந்த நட்சத்திரங்களை நெற்றியில் பதித்து வைத்துக்கொள்ளப் போகிறேன். கொண்டலாத்தி குருவிக்கு மிக அழகான கொண்டை இருக்கிறது என்று பெருமையடித்துக்கொள்கிறது. எனக்குக் கொண்டை இல்லாததால் இந்த நட்சத்திரங்களை வைத்துக்கொள்கிறேன் என்றது நாரை.

அவற்றை எடுத்து வைத்துக் கொண்டது.

நத்தையிடம் நட்சத்திரங்களைத் தருமாறுக் கேட்டான் நந்தன்.

ஒரு கேள்வி கேட்பேன். பதிலைச் சரியாகச் சொன்னால் தந்துவிடுகிறேன் என்றது நத்தை.

எனக்கு எத்தனை கால்கள்?

நந்தனுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. நத்தைக்கு அருகில் உட்கார்ந்து ஆராய்ச்சி செய்தான். ஆனாலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

நான் சொல்றேன். கால்களே கிடையாது. பாதம் மட்டும்தான் உண்டு. சரி, இந்தா நட்சத்திரங்களை எடுத்துக்கொள் என்று நீட்டியது நத்தை. ஒரு தவளை தாவிக்குதித்து நட்சத்திரங்களை எடுத்துக்கொண்டு, தண்ணீரில் பாய்ந்தது.

நந்தனுக்கு வருத்தமாகிவிட்டது. இனி நட்சத்திரங்கள் கிடைக்காது என்ற முடிவுக்கு வந்தான்.

தவளையே, நட்சத்திரங்கள் எனக்குச் சொந்தமானவை. தயவுசெய்து என்னிடம் தந்துவிடு.

தண்ணீரில் இருக்கும் தாமரை இலைகளைப் பார். அதில் ஒன்றில் என் மனைவி இட்ட முட்டைகளை வைத்திருக்கிறேன். முட்டைகள் பொரிந்து குஞ்சுகள் வரும்வரை கொஞ்சம் காவலுக்கு இருப்பாயா? என்று கேட்டது தவளை.

வீட்டை விட்டு வெளியே வந்து ரொம்ப நேரமாகிறது. அம்மா தேடுவார். நட்சத்திரங்களை நீயே வைத்துக்கொள் என்று கிளம்பினான் நந்தன்.

உடனே கோபத்தில் நட்சத்திரங்களைக் குளத்தில் வீசியது தவளை. நட்சத்திரங்கள் எங்கே என்று அப்பா கேட்டால் என்ன செய்வது என்று யோசித்தான். அழுகை வந்தது.



நந்தா, நந்தா என்ற குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தான் நந்தன். குளத்துக்குள் இருந்து அவனது நண்பன் வாத்து சிரித்தது. அழுகைக்கான காரணத்தைக் கேட்டது.

முதலில் முகத்தைத் தண்ணீரால் சுத்தம் செய். உன்னுடைய நட்சத்திரங்களைத் தேடித் தருகிறேன் என்று ஆறுதலாகப் பேசியது வாத்து.

நந்தன் முகம் கழுவினான். வாத்திடம் கதை பேசினான். சிறிது நேரம் கழித்து நட்சத்திரங்கள் நினைவுக்கு வந்தவுடன் மீண்டும் அழ ஆரம்பித்தான். எதுக்கு மறுபடியும் அழறே? என்றது வாத்து.

நட்சத்திரங்களைநீ இன்னும் தேடித் தரலையே? என்றான் நந்தன்.

சிரித்தது வாத்து.

நண்பன் துன்பத்தில் இருக்கும்போது சிரிப்பது தான் நட்புக்கு அழகா?

நான் உன் துன்பத்தைப் பார்த்துச் சிரிக்கலை. உன் கண்களைப் பார்த்துச் சிரித்தேன். புரிகிற மாதிரி சொல். நேரமாகிவிட்டது. அம்மா தேடுவார். நாம் இருவரும் செல்ல வேண்டும் என்றான் நந்தன். தண்ணீரில் உன் முகத்தைப் பார்.

குளத்து தண்ணீரில் முகம் பார்த்தான். அவனது கண்களில் நட்சத்திரங்கள் ஜொலித்தன. வாத்துக்கு நன்றி சொன்னான். வாத்தோடு வீட்டை நோக்கி நடந்தான்.

இவை அலங்காரத்துக்கான நட்சத்திரங்கள் இல்லை. இவற்றை வைத்து மாதம் ஒருமுறை பிறருக்கு என்னால் உதவ முடியும் என்றான் நந்தன்.

சரி, எனக்கு என்றாவது ஒருநாள் நீ உதவுவாய் என்ற நம்பிக்கையில் தருகிறேன் என்று நட்சத்திரங்களைப் போட்டுவிட்டுப் பறந்தது நாரை. நந்தன் எடுப்பதற்குள் ஒரு நண்டு நட்சத்திரங்களை எடுத்துக்கொண்டு வளையை நோக்கி ஓடியது.

நண்டே, என் நட்சத்திரங்களை இப்படி எடுக்கலாமா? என்று கேட்டான் நந்தன்.

அருகில் வராதே. வளைக்குள் ஒளிந்துகொள்வேன். என்னை உன்னால் வெளியே கொண்டு வரவே முடியாது என்றது நண்டு.

இவை சாதாரண நட்சத்திரங்கள் இல்லை. பிறருக்கு உதவக்கூடிய மாய நட்சத்திரங்கள். விளையாடாதே என்றான் சற்றுக் கோபமாக நந்தன். இந்த நீர்க்குமிழிகளை எண்ணிச் சொன்னால் நட்சத்திரங்களைத் தருகிறேன் என்று சிரித்தது நண்டு.

நீர்க்குமிழிகளை எண்ண ஆரம்பித்தான். ஆனால் முடியவில்லை. நந்தனின் வருத்தத்தைப் பார்த்த நண்டு, என்றாவது ஒருநாள் எனக்கு உதவி தேவைப்படும்போது உதவ வேண்டும். ஓடிப்போய் எடுத்துக்கொள் என்றபடி நட்சத்திரங்களைத் தூக்கி வீசியது. நட்சத்திரங்கள் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்த நத்தையின் மீது விழுந்தன. நத்தை

# இவ்வார இராசி பலன்கள்

ஜோதிடர் த.சத்தியதாஸன்




இவ்வாரம் தனலாபம், பொருள் வரவுண்டு. மனை, வாகன குடும்பம் அபிவிருத்தி அடையும். வெளிநாட்டு நிதிவந்து சேரும். உத்தியோகத்தர்கள் ஏற்றம் காண்பர். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் ஜெயமளித்து திருமணப் பேச்சுக்கள் நிலவும். வவங்கி வசதிகள் உண்டாகும். ஜென்ம சனி அதிபதி மீன இராசியில் பலமாக குரு பார்வையுண்டு. ஆசிரியர்-மாணவர் உறவு வளரும். பெண்கள், மாணவர் சௌபாக்கிய யோகம் பெறுவர்.




இவ்வாரம் களத்திர பாவத்தில் சுபர்கள் சஞ்சரிப்பதால் களத்திர சுகம் உண்டாகும். கணவன்-மனைவி ஐக்கியம், புத்திரர்களுடன் அன்பு, பாசம் நிலவும். செய்தொழில் விருத்தியுண்டு. உத்தியோகத்தருக்கு வேலைச்சுமை குறைவடையும். வியாபாரிகள் இவ்வாரம் கூட்டு வாணிபத்தையும் புதிய முதலீடுகளையும் தொடங்கலாம். விவசாயிகள் நவீன முறைகளைக் கையாண்டு புழுக்களின் தொல்லைகளிலிருந்து பயிர் பாதுகாப்புகளை மேற்கொள்ளலாம்.




சத்துரு பாவத்திலய சுபர் சஞ்சாரத்தால் சத்துரு ஜெயம் ரோக நிவர்த்தி உண்டு. சிவில் வழக்கு விடயங்களில் சாகத்தன்மை தோன்றும். செய்தொழில் விருத்தி இலாபம் மிகும். எதிலும் நிதானத்துடன் செயற்பட்டால் நன்மையுண்டு. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு குறைவடையும். சக உத்தியோகத்தர்களை அனுசரித்து நடந்தால் நன்மை பயக்கும். வியாபாரிகளுக்கு இவ்வாரம் வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். புதிய கொள்முதல் தொடங்கலாம்.




இவ்வாரம் புத்திர பாவத்தில் குரு, குஜன் சஞ்சரிப்பதால் புத்தி பலம் கூடும். மனோ தைரியம் மிகும். புத்திரர் அனுகூலம் கிட்டும். பிதாவழிச் சொத்து சேர்க்கையுண்டு. தர்ம பாவத்தை வெள்ளி நோக்குவதால் தொழில் உயர்வு விருத்தி, வங்கி வசதிகள் உண்டாகும். உத்தியோகத்தர் அதிகாரிகளின் பாராட்டையும் ஊக்குவிப்பையும் பெறுவர். வியாபாரிகளுக்கு கூட்டு வாணிபம் நல்ல ஆதாயத்தைத் தரும். விவசாயிகளுக்கு அரச மானியம் உரிய வேளையில் வந்து சேரும்.




இவ்வாரம் செய்யும் தொழிலால் உயர்வு, விருத்தி ஏற்படும். இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள் உண்டாகும். ஈடுபடும் கரும காரியங்கள் யாவும் ஜெயமளிக்கும். வெளிநாட்டு நற்செய்திகளால் நன்மை உண்டாகும். பஞ்சம ஸ்தானத்தில் சனி இருப்பதால் இடையிடையே மாதா நலம் பாதிக்கப்படும். உத்தியோகத்தருக்கு வேலைச் சுமையும் மேலதிக வேலையும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் வருகை திருப்தி தரும்.




சப்தம, களத்திர பாவத்தில் செவ்வாய் சஞ்சரிப்பதால் கணவன்-மனைவியர்க்கிடையே கருத்து மோதல்கள் அவ்வப்போது தோன்றி மறையும். 4இல் கண்டகச் சனி, 3இல் வியாழ சுகயீனம் இருப்பதால் கணவன்-மனைவி ஐக்கியமின்மை, பிள்ளைகளுடன் அன்பு, பாசம் குறையும். செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு கிட்டும். உத்தியோகத்தர் பதவிச் சிறப்பு, உத்தியோகத்தர் அதிகாரம் கொள்வர். உத்தியோகப் பெண்களும் தம் பணிகளில் ஏற்றம் காண்பர்.




தனபாவத்தில் குருவுடன் குஜன் சஞ்சாரஞ் செய்வதால் தனலாபம், பொருள் வரவுண்டு. மனை, வாகன குடும்பம் அபிவிருத்தி அடையும். அந்நிய நாட்டு நற்செய்திகள் நன்மை தரும். வெளிநாட்டு நிதி வந்து சேரும். உத்தியோகப் பெண்களும் தம் பணிகளில் ஏற்றம் காண்பர். வியாபாரிகள் புதிய கொள்முதல்களைத் தொடங்கலாம். பழைய நிலுவைகள் வந்து சேரும். குடும்பப் பெண்களுக்கு இல்லத்தில் பிள்ளைகளுடன் உறவு சீராக இருக்கும்.




இவ்வாரம் ஏழரைச்சனி கடைக்கூறு ஜென்ம வியாழன், வெள்ளி தோஷம் இருப்பதால் கிரக தோஷ நிவர்த்தி செய்தால் நன்மை ஏற்படும். செய்தொழில் விருத்தியியும் மத்திய இலாபமும் கிடைக்கும். உத்தியோகத்தருக்கு கணிசமான அளவு வேலைச்சுமையும் மேலதிக வேலையும் கிட்டும். வியாபாரிகளுக்கு புதிய முதலீடுகளை மட்டுப்படுத்தல் வேண்டும். குடும்பப் பெண்களின் நிர்வாகம் சிறப்பாக நடைபெறும்.




ஜென்மச் சனி, விரய வியாழன், வெள்ளி தோஷம் நடப்பதால் பணவிரயம், வரவுக்கு மிஞ்சிய செலவுண்டாம். அலைச்சல் மனை உளைச்சல் உண்டாகும். தனபாவத்தில் புதன், ரவி தோஷத்துடன் சஞ்சரிப்பதால் செய்யும் தொழிலால் இலாபம், சேமிப்பு, நிதி வரவு, வங்கி வசதிகள் மனநிறைவைத் தரும். கர்ம பாவத்தில் சுபர் நோக்குவதால் உத்தியோகத்தருக்கு பதவிச் சிறப்பு உத்தியோக அதிகாரம் வரும். ஆசிரியர்-மாணவர் உறவு வளரும்.




ஜென்ம ரவி சஞ்சரிப்பதால் உஷ்ண ரோகத்திற்கு இடமுண்டாம். தேகாபிமானம் அவசியம். அல்லாவிடின் வைத்தியச் செலவு ஏற்படும். குடும்பத்தில் இல்லறம் நல்லறமாக அமையும். விவேக வீரிய பாவத்தைச் சுபர் நோக்குவதால் மனோ தைரியம் தரும். நோய்கள் அகலும். தேகம் புதுப்பொலிவு பெறும். உத்தியோகத்தருக்கு பதவி உயர்வு ஏற்படும். பெண்களுக்கு மிகுந்த மரியாதை ஏற்படும். குடும்ப நிர்வாகம் நன்கு நடைபெறும்.





ஜீவன கர்ம பாவத்தில் குரு, வெள்ளி சஞ்சரிப்பதால் செய்தொழில் விருத்தி இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள் மன நிறைவைக் கொடுக்கும். உத்தியோகத்தருக்கு வேலைச்சுமையும் மேலதிக வேலையும் கிடைக்கும். வியாபாரிகள் கூட்டு வாணிபத்தால் நல்ல இலாப முன்னேற்றம் காண்பர். விவசாயிகள் நவீன முறையைக் கையாண்டு பயிர் செய்கைகளை மேற்கொள்ள முடியும். பெண்களுக்கு சௌபாக்கிய யோகம் ஏற்படும்.




ஜென்மச் செவ்வாய் சஞ்சரிப்பதால் உஷ்ண ரோகத்திற்கு இடம் ஏற்படும். தேகாபிமானம் அவசியம். தர்ம பாவத்தில் சுபர் சஞ்சரிப்பதால் தனம், பொருள், மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தி ஏற்படும். வியாபாரிகள் புதிய கொள்முதலை தொடங்கலாம். உத்தியோகத்தருக்கு மேலதிகாரிகளின் அழுத்தமும் வேலைச்சுமையும் குறையும். பெண்களின் குடும்ப நிர்வாகம் புத்திரர்களின் உதவியுடன் நன்கு இடம்பெறும். ஆசிரியர்-மாணவர் உறவு வலுவடையும்.

# எருக்கு இலை ஏன்?



மகாபாரதப் போரில் வீழ்த்தப்பட்ட பீஷ்மர் அம்பு படுக்கையில் இருந்தார். ‘நினைத்த நேரத்தில் உயிர் விடலாம்’ என்ற வரத்தினால், உத்தராயண புண்ணிய காலத்தில் உயிர் விட வேண்டி காத்திருந்தார். உரியகாலம் வந்தும் பீஷ்மரின் உயிர் பிரியவில்லை.

அப்பொழுது அவரைப் பார்க்க வந்தார் வேதவியாசர். அவரிடம், நான் என்ன பாவம் செய்தேன்? ஏன் இன்னும் என் உயிர் போகவில்லை? என்று வருந்தி கேட்டார் பீஷ்மர்.

அதற்கு வியாசர், பீஷ்மா! ஒருவர், தன் மனம், மொழி, மெய்யால் தீமை புரியாவிட்டாலும், பிறர் செய்யும் தீமைகளைத் தடுக்காமல் இருப்பதும் கூடப் பாவம் தான். அதற்கான தண்டனையை அனுபவித்தே தீர வேண்டும் என்றார்.

பீஷ்மருக்கு அப்போது தான் நினைவுக்கு வந்தது. சபையின் நடுவே பாஞ்சாலி அவமதிக்கப்பட்டபோது, தான் ஒன்றும் செய்யாமல் அப்படியே இருந்ததே இந்த துன்பத்திற்கு காரணம் என்று உணர்ந்தார்.

இதற்கு விமோசனம் இல்லையா? என்று வியாசரிடம் பீஷ்மர் கேட்டார். உடனே வியாசர், எப்பொழுது உன் பாவத்தை உணர்ந்தாயோ, அப்பொழுதே அது அகன்று விட்டாலும், அனைத்தையும் கண்டும் காணாமல் இருந்த கண்கள், செவி, வாய், தோள், கைகள், புத்தி உள்ள தலை ஆகியவை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றார்.

உடனே பீஷ்மர், சூரியனின் நெருப்பைக் கொண்டு தன்னைப் சுட்டுப் பொசுக்குமாறு வேண்டினார்..

அதற்கு மறுத்த வியாசர், எருக்க இலையை சுட்டிக்காட்டி, ‘அர்க்கம்’ என்றாலே ‘சூரியன்’ என்று பொருள். அதனால் தான் அதனை சூரியன் தலையில் சூடியிருக்கிறார். பிரம்மச்சாரியான விநாயகருக்கு உகந்தது எருக்கஇலை. அதேபோல் பிரம்மச்சாரியான உனக்கும் இந்த எருக்க இலை கொண்டு அலங்கரிக்கிறேன் என்றார். அப்படிச் செய்ததால் அவரது துன்பம் விலகி, ஏகாதசி அன்று உயிர்நீத்தார்.

# மாரீச தந்திரம்

ராவணனுக்கு மாமன் முறை கொண்டவன், மாரீசன். இவன் தாடகை என்ற அரக்கியின் மகன் ஆவான். ஆயிரம் யானைகளின் பலம் கொண்ட அசுரன். மாரீசனும் அவனது சகோதரன் சுப்பாவும் வனத்தில் இருந்த முனிவர்களிடம் இருந்து போர்க் கலையையும், மாய மந்திரங்களையும் கற்றறிந்தனர்.

ஒரு முறை ராமன் வைத்திருந்த வில்லுடைய நாணின் ஓசையைக் கேட்டு மிரண்ட மாரீசன் பல அடி தூரம் சென்று விழுந்தான். தன்னிடம் இருந்த மாரீசனை, சீதையை கடத்துவதற்காக ராவணன் பயன்படுத்தினான். அதன்படி பொன் மான் உருவம் கொண்டு, சீதையின் முன் சென்றான்.



அந்த மாய மானின் அழகில் மயங்கிய சீதை, அதைப் பிடித்து தரும்படி ராமனிடம் கேட்டாள். அவளது விருப்பத்தை நிறைவேற்ற சீதைக்கு காவலாக லட்சுமணனை நிறுத்தி விட்டு சென்றார் ராமன். தப்பி ஓடிய மானை நோக்கி ராமன் அம்பு வீசினார். அதில் மான் அடிப்பட்டு விழுந்தது.

அது இறக்கும் தருவாயில் ‘லட்சுமணா..’ என்றது. அப்போது தான் ராமனுக்கு அது மாயை என்பது புரிந்தது. அதற்குள் சீதை அச்சம் அடைந்து லட்சுமணனை அனுப்பி வைத்தாள். அந்த நேரத்தில் தான் ராவணன், சீதையை இலங்கைக்கு தூக்கிச் சென்றான். சீதையை கடத்திச் செல்வதற்கு உதவியாக இருந்தவன் மாரீசன்.

# ஆண்டவரே எங்கள் காவலர்

இந்த நூலின் ஒரிஜினல் எரேபியப் பெயர் ‘எல்லே ஹாடேபாரிம்’ என்பதாகும். ‘இவை தான் அந்த வார்த்தைகள்’ என்பது அதன் பொருள்.

இதை கிரேக்கத்தில் மொழிபெயர்த்த எழுபதின்மர் இதற்கு ‘டியூட்ரோனோமி’ என பெயர் கொடுத்தனர். அதற்கு ‘மீண்டும் கொடுக்கப்படும் சட்டங்கள்’ என்பது பொருள்.

கடவுள், மோசே வழியாக‘விடுதலைப் பயணம்’ நூலில் கொடுத்த சட்டங்களை இந்த நூலில் மீண்டும் ஒரு முறை மோசே மக்களிடம் பகிர்ந்து கொள்கிறார்.

இந்த நூலை மோசே எழுதியிருக்கிறார். ஆனால் முழுவதும் மோசே எழுதியிருக்க வாய்ப்பில்லை. காரணம் அவருடைய மரணம் சார்ந்த விஷயங்களும் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன. இந்த நூலில் கடவுளின் சட்டங்களும், பத்து கட்டளைகளும் இரண்டாம் முறை வருவதற்கு ஒரு காரணம் உண்டு.

தொடக்கத்தில் கடவுள், மோசே வழியாக சட்டங்களைக் கொடுக்கிறார். ஆனால் வாக்களிக்கப்பட்ட நாடான கானானுக்குள் இஸ்ரயேல் மக்கள் அச்சத்தினால் நுழையவில்லை. இதனால் கடவுள் இஸ்ரயேல் மக்களை சபித்தார். ‘இந்தத் தலைமுறையிலுள்ள யாருமே அந்த நாட்டுக்குள் நுழையமாட்டீர்கள்’ என்றார். அது நடந்து இப்போது ஒரு தலைமுறை கடந்து விட்டது.

இதோ கானானுக்குள் நுழையும் காலம் நெருங்கிவிட்டது. பழைய தலை முறையில் உள்ளவர்கள் எல்லோரும் இறந்து விட்டனர். எஞ்சியிருப்போரும் இறக்கும் காலம் நெருங்கிவிட்டது. மோசே இறக்கப் போகிறார். தலைமைப் பொறுப்பு யோசுவாவுக்கு அளிக்கப் படப் போகிறது. இப்போது இருப்பது புதிய தலைமுறை.

புதிய தலைமுறை நேரடியாக கடவுளின் கட்டளைகளை மோசேயிடம் இருந்து கேட்டதில்லை. இந்தத் தலைமுறைக்கு தன் வாயால் அனைத்து கட்டளைகளையும் ஒரு முறை முழுமையாய் சொல்லி விடுவது உசிதம் என யோசிக்கிறார் மோசே.

மோவாப் சமவெளியில் இஸ்ரயேல் மக்கள் வந்து விட்டனர். கண்ணுக்கெட்டும் தூரத்தில் இருக்கிறது வாக்களிக்கப்பட்ட நாடு. விடுதலை நாயகன் மோசே, விடை பெறும் கணம் இது.

அவர் நாற்பது நாட்கள் அங்கே அமர்ந்து அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை கடவுளின் இயல்பை விளக்குகிறார். கடவுள் கொடுத்த கட்டளைகளை விளக்குகிறார். கானான் நாட்டிற்குள் அவர்களுடைய வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை விளக்குகிறார்.

தொடக்க நூலில் மனிதன் படைக்கப்படுகிறான், இறைவனுக்குப் பிரியமான ஒரு இனத்தைக் கடவுள் பிரித்தெடுக்கிறார். விடுதலைப் பயணத்தில் எகிப்தில் அடிமையாயிருக்கும் தனது மக்களை விடுவிக்கிறார்.

லேவியர் நூலில் மக்களின் புனிதமும் அவர்கள் கடவுளோடு கொண்டிருக்க வேண்டிய உறவும் விளக்கப்படுகிறது. எண்ணிக்கை நூல் மக்களின் பாலைநில வாழ்க்கையைப் பேசுகிறது.

இப்போது இணைச்சட்டம் எல்லா சட்டங்களையும் வாழ்க்கை முறைகளையும் மீண்டும் ஒரு முறை மக்களுக்கு வலியுறுத்திக் கூறுகிறது. இந்த ஐந்து நூல்களையுமே மோசே எழுதுகிறார்.

பாலை நிலத்தில் இத்தனை ஆண்டுகாலம் வாழ்ந்த மக்கள் இனிமேல் தான் நிலப்பரப்பில் நிம்மதியாக வாழப் போகின்றனர். அங்கே எப்படி வாழவேண்டும், எப்படி இறைவனைப் பற்றிக் கொள்ளவேண்டும், எப்படி பிற மதங்களினால் தூய்மை இழந்துவிடக் கூடாது என்பதெல்லாம் இந்த போதனைகளில் வலியுறுத்தப்படுகின்றன.

ஆகையால் நீங்கள் உங்கள் கடவுளாகிய ஆண்டவர்மீது அன்பு கூருங்கள். அவருடைய நெறிகளையும், நியமங்களையும், முறைமைகளையும், கட்டளைகளையும் எந்நாளும் கடைப்பிடியுங்கள் என மோசே திரும்பத் திரும்ப இந்த நூலில் கூறுவதை, இயேசுவும் தனது போதனைகளின் முதன்மையாகக் கொண்டிருந்தார். உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனதோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து என இயேசு போதித்தார்.

நாற்பது ஆண்டுகள் பாலை நிலத்தில் உணவும், நீரும், பாதுகாப்பும் வழங்கிய இறைவனை நம்பி இனிவரும் வாழ்க்கையையும் நடத்தவேண்டும். பிற தெய்வங்களை நாடுவதோ, மற்ற இனத்தோடு கலந்து தங்களை கறைபடுத்திக் கொள்வதோ கூடாது, எதிர்ப்பவர்களை கடவுள் அழிப்பார் போன்ற சிந்தனைகள் மோசேயின் உரையின் மையமாக இருந்தன.

போதனைகளை எல்லாம் முடித்தபின் தனது நூற்று இருபதாவது வயதில் மோசே பிஸ்கா மலையில் ஏறினார். வலிமையும், கூர்மையும், தெளிவும் உடைய மனிதராக மலையேறினார். அங்கிருந்து வாக்களிக்கப்பட்ட கானான் நாட்டைப் பார்த்தார். அதற்குள் போகமுடியவில்லையே எனும் ஏக்கம் அவரிடம் இருந்தது.

இறைவன் அவரை எடுத்துக் கொண்டார். அவரது உடலை இறைவன் அடக்கம் செய்கிறார். அதனால் அவருடைய உடலைக் கூட யாரும் அதன் பின் கண்டுபிடிக்க முடியவில்லை.

பல நூற்றாண்டுகளுக்குப் பின் இயேசுவின் காலத்தில் கானான் நாட்டு எர்மோன் மலையின்மேல் மோசேயும், எலியாவும் இயேசுவின் முன்னால் தோன்றினர். இயேசுவின் சீடர்கள் மூன்று பேர் அவர்களோடு இருந்தனர்.

இயேசு உருமாறிய நிகழ்வாக அது விவிலியத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. சட்டங்களின் நாயகன் மோசேயும், இறைவாக்குகளின் நாயகன் ஏசாயாவும், இறைவனின் மகனாகிய இயேசுவோடு கலந்துரையாடிய பிரமிப்பு நிகழ்வு அது.

வாக்களிக்கப்பட்ட நாட்டுக்குள் விடுதலை வீரர் மோசே நுழைந்த முதல் நிகழ்வாகவும் அது அமைந்தது.

# பெற்றோர்களும் நமது குழந்தைகளே!

இஸ்லாத்தில் பெற்றோருக்கு என ஒரு தனி மரியாதை உண்டு. அந்த மரியாதை இறைவனுக்கு அடுத்தபடியான இடத்தைப் பெறுகிறது. இறைவனுக்கு அடுத்த அந்தஸ்தில் வைத்து அழகு பார்க்கப்படுவதற்கு தகுதியானவர்கள் பெற்றோரே. இறைவனுக்கு அடுத்து நாம் அதிகம் கடமைப்பட்டுள்ளது நமது பெற்றோருக்கே.

இறைவணக்கத்திற்கு பிறகு சிறந்ததொரு வணக்கம், பெற்றோருக்கு செய்யும் உபகாரமே ஆகும். இது குறித்து திருக்குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகிறது:

என்னைத்தவிர யாரையும் வணங்காதீர்கள். பெற்றோருக்கு உபகாரம் செய்யுங்கள் என்று உமது இறைவன் கட்டளையிட்டுள்ளான். உம்முடன் இருக்கும் அவ்விருவருமோ, இருவரில் ஒருவரோ முதுமையை அடைந்துவிட்டால் அவ்விருவரை நோக்கி ‘சீ’ எனக் கூறாதீர். அவ்விருவரையும் விரட்டாதீர். மரியாதையான சொல்லையே அவ்விருவரிடமும் கூறுவீராக. அன்புடன் பணிவு எனும் சிறகை அவ்விருவருக்காகவும் தாழ்த்துவீராக. ‘சிறுவனாக இருக்கும்போது என்னை இருவரும் பராமரித்தது போல இறைவா, இவ்விருவருக்கும் அருள் புரிவாயாக’ என்று கேட்பீராக (திருக்குர்ஆன் 17:23,24).

இந்த வசனத்தில் இறைவனுக்கு ஆற்ற வேண்டிய வணக்கத்தையும், பெற்றோருக்குச் செய்ய வேண்டிய உபகாரத்தையும் இறைவன் ஒரே நேர்கோட்டில் வைத்து பாவிக்கிறான். பெற்றோருக்குச் செய்யும் உபகாரமும் இறைவனுக்கு பிரியமானது என்பது இதனால் புலப்படுகிறது.

இருவரோ, இருவரில் ஒருவரோ முதுமை அடைந்து விட்டால், அவ்விருவரின் செயல்களில் சில தடுமாற்றங்கள் நிகழும். அவர்கள் குழந்தையைப் போன்று மாறிவிடுகிறார்கள். கேட்பதில், பார்ப்பதில், பேசுவதில், நடப்பதில் என அனைத்திலும் பாதிப்புகள் வருகிறது. ஒட்டு மொத்தத்தில் வயது முதிர்ந்த பெற்றோர்களும் ஒருவிதத்தில் குழந்தைகளே.

சிறுநீர் கழிப்பதிலிருந்து நோய் பீடிக்கப்படுவது வரைக்கும் குழந்தைகளின் விஷயத்தில் அக்கறையுடன் கவனிக்கிறோம். குழந்தைகளை ‘சீ’ என்றோ, ‘சனியனே’ என்றோ திட்டுவது கிடையாது. தாயின் சேலையில் சிறுநீர் கழித்ததற்குத் தண்டனையாக எந்தக் குழந்தையும் குழந்தை காப்பகத்தில் சேர்க்கப்படுவது கிடையாது.

வயது முதிர்ந்த பெற்றோருக்கு இதே நிலைமை ஏற்படும்போது மட்டும் ஏன் ‘சீ’ என்று சொல்கின்றோம்? வீட்டை விட்டு முதியோர் இல்லத்திற்கு ஏன் அனுப்புகிறோம்?, மரியாதைக்குறைவான வார்த்தையை ஏன் பிரயோகிக்கிறோம்?, ஏன் பணிவில்லாமல் காட்டு மிராண்டித்தனமாக நடந்து கொள்கிறோம்?, ஏன் அவர்களை சபிக்கிறோம்?

இன்று அவர்களுக்கு ஏற்பட்ட நிலைமை நாளைக்கு நமக்கு ஏற்படாதா?

வயதான பெற்றோருக்குச் செய்யும் பேருபகாரம் அவர்களை வா, போ, சீ என்று கூறக் கூடாது. அவர்களை சுமையாக நினைத்து வீட்டை விட்டு துரத்தக்கூடாது. மரியாதையான வார்த்தையில் பேசி, அன்பு செலுத்தி பாதுகாக்க வேண்டும். அன்பு, பண்பு, பாசம், பணிவடக்கத்துடன் அவர்களிடம் நடக்க வேண்டும்.

நாம் குழந்தையாக இருந்தபொழுது நமது தேவை குறித்து அவர்கள் இறைவனிடம் பிரார்த்தித்தது போல், முதுமையான பருவத்தில் அவர்களுக்கு என்ன தேவையோ, அது குறித்து இறைவனிடம் நாமும் பிரார்த்திக்க வேண்டும்.

குழந்தைப் பருவமும், முதுமைப் பருவமும் பலவீனமான பருவநிலைகள். அது பிறரைச் சார்ந்துள்ள பருவமாகும். குழந்தைகளுக்கு பெற்றோரின் தயவும், முதுமை அடைந்த பெற்றோருக்கு குழந்தைகளின் அரவணைப்பும் அவசியம் தேவை.

‘பலவீனமான நிலையில் உங்களை இறைவன் படைத்தான். பின்னர் பலவீனத்திற்குப் பின் பலத்தை ஏற்படுத்தினான். பின்னர் பலத்துக்குப் பின் பலவீனத்தையும், நரையையும் ஏற்படுத்தினான். அவன் நாடியதைப் படைப்பான். அவன் அறிந்தவன்; ஆற்றலுடையவன்’. (திருக்குர்ஆன் 30:54)

‘நாம் யாருக்கு வாழ்நாள் அளித்தோமோ அவரைப் படைப்பில் இறங்குமுகமாக்குகிறோம். (இதை) அவர்கள் விளங்க மாட்டார்களா’? (திருக்குர்ஆன் 36:68)

இறைவன் விதித்த வணக்க வழிபாடுகளில் சிறந்ததும், முதன்மையானதும் தொழுகையே ஆகும். அத்தகைய தொழுகைக்குப் பிறகு சிறந்த செயல் பெற்றோருக்குச் செய்யும் நன்மையான காரியங்கள் ஆகும்.

# காதலைப் பரிமாறும் சாக்லேட் தருணங்கள்!

அடிக்கடி 'ஐ லவ் யூ' சொல்லுங்க! காதல் என்ற வசந்தம் அனைவரின் வாழ்க்கையிலும் வருவதில்லை. ஆசிர்வதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே காதல் வாய்க்கும். காதல் வயப்பட்டிருப்பவர்கள் அனைவரும் இறகு முளைத்தது போல சதா வானத்தில் மிதந்து கொண்டிருப்பார்கள். காதலனிடம் இருந்து சின்ன எஸ்.எம்.எஸ் வந்தாலே அன்றைய சந்திப்பை பற்றி அந்த நொடியில் இருந்தே கனவு காண தொடங்கிவிடுவார்கள். காதல் எல்லோருக்குமே வாய்ப்பதில்லை. ஆனால் குறிஞ்சிப் பூவாய் கிடைத்த காதலை எத்தனை பேர் வெற்றிகரமாக தக்க வைத்துக் கொண்டிருக்கின்றனர் என்றால் 50 சதவிகிதம் பேர் இல்லை என்று தான் கூறுவர். படிக்கும் போது தோன்றிய காதல் பணிச்சூழல், பொருளாதார சூழ்நிலைகள் போன்ற காரணங்களினால் படிப்படியாக மறைந்து போவதும் உண்டு. அப்படியே வெற்றி பெற்று அது திருமணம் வரை கணிந்தாலும் நாளடைவில் கசந்து காதல் காணமல் போய்விடும். எனவே காதலித்து திருமணம் செய்தவர்கள் கடைசி வரை காதலை வெற்றிகரமாக தக்கவைத்துக் கொள்ள வல்லுநர்கள் கூறும் ஆலோசனைகளை பின்பற்றுங்கள்: சந்தோச பரிசுகள் திருமணம் முடிந்த உடன் முதலில் செய்ய வேண்டியது இருவரின் குடும்பத்தைப் பற்றியும், வருங்காலத்தைப்பற்றியும் பேசவேண்டும். இருவரும் இணைந்து எதிர்காலத்தை பற்றி பேசுவதன் மூலம் நம்பிக்கை அதிகரிக்கும். காதலும் உறுதிப்படும். காதலிக்கும் போது என்னென்னவோ பரிசுகள் கொடுத்திருக்கலாம் திருமணத்திற்குப் பிறகும் அது தொடரவேண்டும். பிறந்தநாள், திருமணநாள், காதலர் தினம் என சிறப்பு நாட்களில் மட்டும் தான் பரிசு கொடுக்க வேண்டும் என்பதில்லை. துணையை குஷிப்படுத்த அடிக்கடி சர்ப்ரைஸ் பரிசு கொடுங்கள். காதலிக்கு நீங்கள் வழங்கும் மிகச்சிறந்த பரிசுப்பொருள் உங்களின் பரிசுத்தமான அன்புதான். எனவே இதயப்பூர்வமாக உங்கள் அன்பை வெளிப்படுத்துங்கள். நகைச்சுவை உணர்வு பேசுவது நீங்களாக மட்டுமே இல்லாமல் கேட்பவராகவும் இருங்கள். உங்கள் காதலியை அதிகம் பேச விடுவது காதலுக்கு அதிக நன்மை பயக்கும். எப்பொழுதும் பிறரிடம் இருந்து மட்டுமே எதிர்பார்த்து கொண்டிருக்காதீர்கள். நீங்கள் கொடுப்பவராகவும் இருங்கள். உம்மென்று இருக்க வேண்டாம். அடிக்கடி சிரித்து பேசி உங்களை நீங்களே உற்சாகப்படுத்திக்கொள்ளுங்கள். அதற்காக ஜோக்கடிக்கிறேன் என்ற பெயரில் கடித்து கஷ்டப்படுத்த வேண்டாம். சாக்லேட் அவசியம் விடுமுறை தினம் என்றாலே தூங்கிதான் பொழுதை கழிக்க வேண்டும் என்பதில்லை. திட்டமிட்டு எங்காவது சென்று வாருங்கள். காதலை புத்துணர்வாக்க இது சிறந்த வழி. எப்பொழுதும் கையில் சாக்லேட் வைத்திருங்கள். அவசரகாலங்களில் ஆபத்பாந்தவனாக உதவுவது அந்த சாக்லேட்தான். சண்டையின் போது சமாதானத் தூதுவனாக உதவுவதும் அந்த சாக்லேட்தான். வாழ்க்கைத் துணையை உடல் ரீதியாக பார்க்காதீர்கள். உணர்வு ரீதியாக பார்ப்பதே காதலை வலுப்படுத்தும். அடிக்கடி பாராட்டுங்கள். அது அன்பை ஆழப்படுத்தும். எந்த சந்தர்ப்பத்திலும் மட்டம் தட்டி பேசாதீர்கள். முக்கியமாக உங்கள் துணையைப் பற்றி நட்பு வட்டாரங்களில் பகிர்ந்து கொள்ள வேண்டாம். விட்டுக்கொடுப்பதில் தவறில்லை வார விடுமுறையை கொண்டாடுங்கள், அன்பை பரிமாறுங்கள். அது இருவருக்குமிடையேயான காதலை வளர்க்கும். மனைவியோ, காதலியோ பேசும் முன்பு யோசித்து பேசவும், எந்த ஒரு வார்த்தையும் காதலுக்கு எதிராக திரும்பிவிடக்கூடாது. அலுவலகத்திற்கு இருக்கும் சமயங்களில் கூட ஐ லவ் யூ எஸ்.எம்.எஸ் அணுப்பலாம். அது அலுவலக மன உளைச்சலை சற்றே தணிக்கும். உங்கள் மீதான அன்பை அதிகரிக்கும். இருவருக்கும் பிரச்சினை என்றால் யார் விட்டுக்கொடுப்பது என்பதில் ஈகோ வேண்டாம். பிரச்சினையை தீர்க்க விட்டுக்கொடுப்பவர் நீங்களாக இருங்கள். பிரச்சினை தோன்றிய இடம் காணமல் போய்விடும்.

# காதலின் வெற்றி திருமணம் மட்டுமல்ல

காதல் என்பது எல்லோர் மனங்களிலும் உதயமாகும் ஒரு அற்புதமான பாசம். இதே பாசம் ஒரு சில நேரங்களில் பலருக்கு நோயாக மாறுகிறது. திருமணம் என்பது ஆயிரங்காலத்து பயிர் என்பர். அம்மி மிதித்து அருந்ததி பார்த்து சுப நேரத்தில், சுப முகூர்த்த நாளில் ஆண் பெண்ணின் கழுத்தில் தாளி கட்டி திருமணம் செய்யப்படுகிறது. இந்து மக்களிடையே இம் முறை காணப்படுகின்றது.

இதில் திருமணம் பெற்றோரால் நிச்சயிக்கப்பட்டு நடைபெறுவது ஒரு வழக்கம். மற்றுமொரு முறை பிள்ளைகளால் நிச்சயிக்கப்பட்டு பெற்றோர்களால் நடத்தி வைக்கப்படும் திருமணம். வேறு முறை



ஒன்றும் உண்டு. பிள்ளைகளால் நிச்சயிக்கப்பட்டு நய்பர்களால் நடத்தி வைக்கப்படும் திருமணம்.

இந்த மூன்று முறையும் ஒரே மாதிரியானதுதான். காரணம் இங்கு பிள்ளைகளின் விருப்பம் முக்கியத்துவம் பெறுகிறது.

காதல் திருமணத்தை நோக்கி பயணிக்க வேண்டும் என்பது ஒரு கதை, மறு கதை திருமணம் காதலை நோக்கி பயணிக்க வேண்டுமென்பதாகும். காரணம் எந்த திருமண முறை என்றாலும் திருமணத்தின் பின்னரும் கணவன் மனைவியிடம் காதல் தொடருமாக இருந்தால் அதுதான் சிறப்பான குடும்பமாக அமையும்.

காதலிக்கும் ஒரு சிலர் விரைவாக திருமணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கையை ஆரம்பிப்பதில் நோக்கமாக இருப்பர். இங்கே வயது மிக முக்கியம் பெறுகிறது. இளம் வயது திருமணங்கள் வெற்றி பெறுவது மிக குறைவு.

வயது இருபது இரு குழந்தைகளுக்கு தாய் கணவனை விட்டு விவாகரத்து திருமணம் முடித்து இரு வருடத்தில் இதுதான் தற்போது காணப்படும் கசப்பான உண்மை. எவ்வளவு வேகமாக திருமணம் நடைபெறுகிறதோ இதே வேகத்தில் விவாகரத்தும் இடம்பெறுகின்றது.

காதலித்து ஒரு மாதத்தில் ஒரு சிலர் திருமணம் செய்து கொள்வர். பெற்றோரின் விருப்பத்துக்கு மாறாக, சமூதாயத்தின் எதிர்போடு திருமணம் செய்து கொள்வர். அவர்கள் தமது எதிர்கால வாழ்க்கையை முறையாக திட்டமிடாது திருமணம் செய்து கொள்வது எதிர்காலத்தில் கணவன் மனைவிக்கிடையிலான உறவை பலவீனப்படுத்தும்.

தமக்கான தொழில், வீடு, ஏன் எதிர்காலத்தில் நாம் எப்படி வாழ்க்கையை நடத்தப் போகிறோம் என்பதை திட்டமிடாமல் திருமணம் செய்து கொள்பவர்கள் திருமணத்தின் பின்னர் காதலை மறந்து வெறுப்போடு வாழ்க்கையை நடத்துகின்றனர்.

காதலியுங்கள் அந்த காதல் உங்களின் மரணம் வரை நீடிக்க வேண்டும். அதற்கான சூழலை உங்கள் திருமணத்தின் பின்னரும் உருவாக்கி கொள்ளுங்கள்.

காதலிக்கும் போது பல மணி நேரம் தொலைபேசியில் உறையாடுவதும் நீ தான் என் சந்தோஷம் என்பவர்கள் காலம் செல்ல என் நிம்மதி என்னால் பறிபோய்விட்டது என்பர். இவைகள் தவறான கசப்பான சம்பவங்கள் காரணம் காதலிக்கும் போது எவ்வாறான பாசங்கள் பகிர்ந்து கொள்ளப்படுகிறதோ அதே பாசம் திருமணத்தின் பின்னரும் தொடர வேண்டும்.

திருமண வாழ்க்கை என்பது காதலோடு சுமந்த ஒரு அழகிய உறவு. பெற்றோரால் ஏற்பாடு செய்யும் திருமணமாக இருந்தாலும் வாழ்க்கை ஒன்றுதான். காதல் என்பது பணத்துக்கும், அழகுக்கும் முக்கியத்துவம் பெறுகிறது என்பது பலரின் கருத்து இது உண்மையல்ல. காதல் என்பது அழகான இதயத்தின் கருவறை. இங்கே பாசமும், அன்பும், தன்னம்பிக்கையும் காணப்படும்.

திருமணத்துக்கு முன்னர் எவ்வாறு பழகுகின்றீர்களோ அதைவிட அதிகமாக காதலித்து அன்பாய் பழகுங்கள். திருமணத்தின் பின்னரும் அதுதான் தெய்வீகமான காதல்.

சின்னச் சின்ன புன்னகை அரும்புகள் சேர்த்து கட்டிய மிகப் பெரிய மலர்ச் செண்டுதான் வாழ்க்கை. ஆக எப்போதும் சிரித்துக் கொண்டிருங்கள். குடும்பம் மகிழ்ச்சியால் காட்சியளிக்கும்.

குடும்பமானது சரியான அத்திவாரமாக காணப்பட வேண்டும். ஆணும், பெண்ணும் இணைகின்ற திருமண உறவால் உருவாக்கப்படும் குடும்பமானது சிறப்பான சமூக நிறுவனமாக விளங்க வேண்டும். எனவே நல்ல எண்ணங்களையும் நல்ல உணர்வுகளையும் கொண்டு வாழ்க்கை சிறப்பாக அமையும்.

நல்ல வாழ்க்கையில், புரிந்துணர்வு, அன்பு பகிர்ந்து கொள்ளல், ஒற்றுமை, பொறுமை, போன்ற விடங்களை உள்வாங்கி கொள்ளுங்கள்.

சந்தேகம் இல்லாது வெற்றி பெற முறையான திட்டமிடலோடு வாழ்க்கையை ஆரம்பியுங்கள். சந்தோஷமும், நிம்மதியும் உங்களை தேடிவரும் காதல் மரணத்தின் பின்னரும் உயிர் வாழும் என்பது உலக வரலாறு.

வாழ்க்கை வாழ்வதற்கே காதல். மொத்தத்தில் வாழ்க்கையை மெருகூட்டுவதற்கான வாழ்க்கையே காதல்தான்.

# காதலர் தினம்

சிறு புன்னகையால் தொடங்கிய உறவு
பெரும் புரிந்துணர்வால் சங்கமானதே
இரு இதயங்கள் இணைந்து
இளைமையும் இன்பமும் கலந்ததே

தேவதையவளும் தேனிலவாய் ஜொலிக்க
காதலர் தினமும் கனிவுடனே ஜெயிக்க
கைகோர்த்து நடைபோடும் நாட்களல்லோ
கலங்கிடும் வேளை கண் துடைத்திடும் கைகளல்ளோ

இதயத்தின் உணர்வுகளை
மௌனமாய் மொழி பேசி
பார்வையாலே புரிய வைக்கும்
ஓர் உடலில் ஈருயிர் வாழும் அதிசயமே காதல்

நான் பணத்தினால் ஏழையானாலும்
அவள் மனதில் பாசத்தினால் வள்ளலானேன்
என் இதயக் கோயிலில் குடியேற்றி பூசிக்கின்றேன்
தினமும் இரவில் கண்மூடி நேசிக்கின்றேன்

சிறு சிறு சண்டைகள் அன்பினைக் கூட்ட
சிறகுகள் இன்றியும் சொர்கத்தில் பறந்தோமே
உன்னை கைபிடிக்கும் நாளதனை என் கண்கள் தேட
என் கனவினில் தினமும் காதலர் தினம்தானடி.

**எஸ்.ஹேமராஜ்**





வெளிநாட்டு வாழ் இந்திய வம்சாவளி இளைஞர்களுக்கான 50வது இந்தியாவை அறிவோம் நிகழ்ச்சி (50th Golden Jubilee Know India Programme) ) திட்டமானது 20.01.2019 ரூ 26.01.2019 வரை இந்தியாவில் வாரனாசி மற்றும் நியுடெல்லி பகுதிகளில் இடம்பெற்றது. இலங்கை சார்பாக நுவரெலியா மாவட்டத்தை சேர்ந்த வி.பிரசாந்தன் (நு/சர்வதி த.ம.வி லிந்துல ஆசிரியர்) பங்குபற்றியிருந்தார். இவர் இதற்கு முன்னர் 2015ம் ஆண்டு 34வது இந்தியாவை அறிவோம் நிகழ்ச்சி திட்டத்தில் இலங்கை சார்பாக பங்குபற்றியிருந்தார். இந்நிகழ்ச்சியில் இலங்கை உள்ளிட்ட அமெரிக்கா, ஆர்ஜென்டினா, பிரான்ஸ், நோர்வே, கரிபியின் தீவு, தென்ஆபிரிக்கா, ரினாம், மொரிசியஸ், இஸ்ரேல், சிங்கப்பூர், அவுஸ்திரேலியா மற்றும் நியுசிலாந்து போன்ற நாடுகளிலிருந்து 50 இந்திய வம்சாவளி இளைஞர்கள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இந்நிகழ்ச்சி திட்டத்தின் நோக்கமானது இந்திய வாழ் வம்சாவளி மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதுடன் இந்தியாவுடன் எப்பொழுதும் சிநேக பூர்வமான தொடர்பை பேணுவதாக அமைந்துள்ளது.

# காதல்

உறவுகளை உடைத்து,
உணர்வுகளை தகர்த்து,
உடமைகளை தொலைத்து,
உண்மைகளை மறுத்து,
உலகை மறந்து,
உயிர்மட்டும் விழித்திருப்பதுதான்,
காதல்!

**வித்தகன்**

# என் தியாகம்....

வானளவு சிந்தித்து ஊமையாகி போன
உணர்வுகள்...
வேற்றினக் காரன் என்று
தகுதியிழந்ததால்
காதலை வெறுத்த என்னவள் ஒரு
புறம்,
இனத்தில் சேர் என்று அன்பாய்
அரவணைக்கும்
என்னை ஈன்றவள் ஒருபுறம் என்று,
காரணங்காட்டி பிரிந்துபோன
என் காதலில்
தியாகம் என்ற பெயருக்கு பின்னால்
ஒளிந்து கொள்கிறது
என் இயலாமை.

**செல்வன்**








காரைதீவு நேரு சனசமூக நிலையத்தால் அதன் கீழ் இயங்கும் ஸ்ரீ கிருஷ்ணா முன் பள்ளிச் சிறார்களுக்கு சீருடை வழங்கும் வைபவம் அண்மையில் நிலையத்தின் தலைவர் எம்.ரமணிதரன் தலைமையில் நடைபெற்றது. இதில் செயலாளர் மற்றும் போஷகர்களும் கலந்துகொண்டு சீருடைகளை வழங்கிவைத்தனர்.

படம்: கரடித்தோட்ட நிருபர்





அரசாங்கத்தின் மூலம் 570 இலட்சம் ரூபா செலவில் இரத்தினபுரி கனாந்தொல பிரதேசத்தில் கழிவு பொருட்கள் மீள்சுழற்சி செய்து அதன் மூலம் கொம்போஸ் உரம் தயாரிக்கும் மத்திய நிலையம ஒன்று மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.இரத்தினபுரி மாநகர சபை மற்றும் நிவித்திகல பிரதேச சபைக்குற்பட்ட பிரதேசங்களில் நாளாந்தம் சேர்க்கப்படும் 40 டொன் கழிவு பொருட்கள் மற்றும் 30000 மலசல கழிவுகள் என்பன மீள்சுழற்சி செய்யப்பட்டு அதன் மூலம் 8 டொன் கொம்போஸ் உரம் தயாரிக்கப்பட்டு வருடத்திற்கு 50 இலட்சம் வரை இரத்தினபுரி மாநகர சபைக்கு ஆதாயம் பெற கூடிய வழிமுறைகளும் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

படம்: இரத்தினபுரி நிருபர்





வவுனியா மாவட்ட செயலகத்தில் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் உப அலுவலகம் மாவட்ட அரசாங்க அதிபர் ஐ.எம்.ஹனீபா தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழ் இயங்கும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் அயேல இத்தவல பிரதம விருந்தினராக கலந்துகொண்டு மாவட்ட செயலகத்தின் வளாகத்தில் அமைந்துள்ள சுரங்க பணியகத்தின் உப அலுவலகத்தை திறந்து வைத்திருந்தார்.

படம்: வவுனியா நிருபர்






கிளிநொச்சி கண்டாவளை கோரக்கன் கட்டு பகுதியில் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் கண்டாவளை பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் நடாத்தப்பட்ட ஆடை வடிவமைத்தல் கண்காட்சி நிகழ்வு நடைபெற்றது. கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கண்டாவளை பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் மனோகரன் பிரதீப் அவர்களும் சிறப்பு விருந்தினராக முன்னாள் மாவட்ட கிராம உத்தியோகத்தர் திருமதி சுமித்ரா சுதாகர் அவர்களும் கலந்து கொண்டனர்.





மருதமுனை பிரதேச வைத்தியசாலை ஏற்பாடு செய்த இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 71வது சுதந்திர தின நிகழ்வை முன்னிட்டு வைத்தியசாலைக்கு அருகாமையிலுள்ள வீதியை சிரம தானமும் செப்பனிடும் நிகழ்வும் வைத்தியசாலை அபிவிருத்தி சபை தலைவர் டாக்டர் ஏ.ஆர்.எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்றது.

படம்: மருதமுனை நிருபர்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 10.02.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.